கையை விட்டு எவரும் எழுந்து செல்ல வில்லை. காங்கிரஸ் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் மட்டும்தான், ஏதோ மிரட்டுகிற தொனியில் செல்வது முறை யல்ல. இதற்கு மேல் இது குறித்து நான் அனுமதிக்க முடியாது.

(எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத் தையொட்டி, தலைவர் தீர்ப்புரைத்த தாவது) :

.. தயவுசெய்து நீங்கள் திசை திருப்ப வேண்டாம். எழுப்பிய உறுப்பினர்கள் யாரும் தாக்கப்படவில்லை. ஆனால், உங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களைத்தான் நான் கண்ணா ரப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 2 உறுப்பினர்கள் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து சென்று தாக்க முற் படுவதை எப்படி அனுமதிக்க முடியும்? அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். நான் அந்த உறுப்பினர் களிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கும் அவர்கள் முடியாது என்று உரத்த குரலில் குரல் எழுப்புகிறபோது அப்போதாவது எதிர்க் கட்சித் தலைவர் எனக்குத் துணையாக வந்திருக்க வேண்டும்.

.. நீங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பிரச்சினையைத் திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது. பேரவைத் தலைவர் இவ்வளவு சொல்லியும், ஒரு உறுப்பினரைத் தாக்க ஒரு உறுப்பினர் முற்படுகிறார். அதைக் கண்டித்து நான் ஒரு நடவடிக்கை எடுக்கிறபோது திசை திருப்பக்கூடாது. யாரையும் யாரும்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

ஒழுங்குமுறை— தொடர்ச்சி

உறுப்பினர்கள் அவையில் நடந்துகொள்ளும் முறை— தொடர்ச்சி

தாக்கிக் கொள்ளலாம் என்றால், இந்தப் பேரவை ஜனநாயக முறைப்படி நடை பெறவே முடியாது. ஒரு உறுப்பினரை இன்னொரு உறுப்பினர் தாக்கிக் கொள்ளலாம் என்கிற நிலைமையை அனுமதிப்போமேயானால் ஜனநாயக ரீதியில் இந்தப் பேரவையை நடத்தவே முடியாது. இந்தப் பிரச்சினையை இப்போது முடித்துவிட்டேன். இப்போது இன்னொரு பிரச்சினைக்கு போயாகி விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அறிக்கையை வைப்பார்கள்.

(அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் செய்த குறுக்கீடுகளையொட்டித் தலைவர் அளித்த தீர்ப்புரையாவது):

..முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான அறிவிப்பை நாட்டிற்குச் சொல்ல வேண்டிய அறிவிப்பை அறிவிக்கவேண்டும் என்று நான் அறிவித்ததற்குப் பிறகும் அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து இத்தனை பேர் சத்தம் போட்டுக் கொண்டு இருக்கும்போது அவர்களாலே அந்த அறிக்கையை எப்படி வைக்க முடியும்? இது முறையில்லை, உட்காருங்கள். அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டும், எப்படியோ ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு நீங்கள் ஆரம்பிப்பது சரியல்ல. முதல் நாளே அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும் என்ற இரண்டு உறுப்பினர்களை, மற்ற உறுப்பினர்களைத் தாக்குமாறு ஏவிவிடுவது முறையல்ல. அடிக்கச்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்கு முறை—தொடர்ச்சி

உறுப்பினர்கள் அவையில் நடந்துகொள்ளும் முறை—தொடர்ச்சி

சென்றது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஞானசேகரனும் சம்பத்தும். நான் கண்ணாரப் பார்த்து ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை அளிப்பார்கள். மற்ற உறுப்பினர்கள் எல்லாம் உட்காருங்கள்.

(காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(முதலமைச்சர் அறிக்கையை படித்துக் கொண்டிருந்தபோது எழுந்த குறுக்கீடுகளையொட்டியும், அதையொட்டி எழுப்பப்பட்டப் பிரச்சினைகளையொட்டியும் தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:)

.. நான் ஏற்கெனவே தெரிவித்துவிட்டேன். பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க முனைந்த இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து நான் வெளியேற்றியிருக்கிறேன். உறுப்பினர்களுக்கு எல்லா வகையிலேயும் பாதுகாப்பு உண்டு. இந்த அறிக்கை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லலாம். உட்காருங்கள்.

.. மாண்புமிகு முதலைச்சர் அவர்களை அறிக்கையைப் பேரவைக்கு வைக்குமாறு நான் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் அறிக்கையை வைப்பதற்கு எழுகிற சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் எழுந்து பிரச்சினையை எழுப்புவதும், தங்கள் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று ஒரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதும் நடவடிக்கை எடுக்கத் தக்க

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

ஒழுங்கு முறை— தொடர்ச்சி

உறுப்பினர்கள் அவையில் நடந்துகொள்ளும் முறை— தொடர்ச்சி

குற்றங்களா இல்லையா? நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தகைய சூழ்நிலையிலும் எந்த உறுப்பினருக்கும் எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. அப்படி ஏதேனும் ஏற்படுவதாக இருந்தால் அவர்கள் என்னிடத்திலே சொன்னால் அதை விசாரிக்கிறேன். நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுந்து ஓடி அடிக்கச் சென்றது தவிர வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை, உட்காருங்கள்.

நானே பார்த்தேன். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல நீங்கள், நிற்கிற 3 உறுப்பினர்களும் இந்தத் திசையை நோக்கி பார்த்துக் கொண்டு இருந்தவர்கள். அப்படி இருக்கிறபோது, நீங்கள் எழுந்து நின்று கொண்டு ஒரு பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிப்பது சரியல்ல. உங்கள் நான்கு பேர்களைவிட, கண்ணுக்கு நேரே பார்த்துக் கொண்டிருந்தவன் நான். திரு. விசுவநாதன் எழுந்தவுடன் நீங்கள் எந்தப் பிரச்சினையும் கொடுக்கவில்லை, உட்காருங்கள், என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு, அவர் திட்டமிட்டு ஏதோ சில குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அவர் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில்; அந்த இடத்தில் அவரவர்கள் இருக்கையில் இருந்துதான் எழுந்து நின்றுகொண்டிருந்தார்கள். எவரும் தங்கள் இருக்கையை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லவில்லை. நான் பார்த்ததைவிட நீங்கள் அதிகமாகப் பார்க்க

முடியாது. அந்த நேரத்தில் ஞானசேகரன் என்ற ஓர் உறுப்பினர் திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்று அவரைத் தாக்க முற்படுவதும், இன்னொரு உறுப்பினரும், நான் சொல்லச் சொல்ல எழுந்து ஓடுவதும் எப்படி முறையாகும்? முதலில் நீங்கள் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்ளுங்கள். நான் பார்த்ததை உங்களுக்குச் சொல்கிறேன். அதை முதலிலே ஒத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டுக் கொண்டு சிலர் செயல்படுவதை அனுமதிக்கக் கூடாது. ஞானசேகரனுக்கு என்ன வந்தது? அதைத் தான் சொல்கிறேன். அவர் தான் ஏன் போனார் என்று கேட்கிறேன். ஞானசேகரன் தன் இருப்பிடத்தை விட்டு ஏன் சென்றார் என்றுதான் கேட்கிறேன்.

பேரவை விதி 87 (vii) "பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, வேறு வகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடைமறிக்கக் கூடாது" மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு வைக்கலாம் என்று நான் அனுமதி அளித்தேன். அவர்கள் அறிக்கை வைக்கவிருந்த நேரத்தில் சிலபல பிரச்சினைகள் ஏற்பட்டு, அதிலே நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். முடிவெடுத்து இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து வெளியேற்றி இருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் அந்த அறிக்கையை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். பாதியிலே நின்று கொண்டிருக்கிறபோது, நான்கு உறுப்பினர்கள் நின்று அவர்கள் அதைப் படிக்க முடியாமல் தடுத்துக் கொண்டி

த— தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

ஒழுங்குமுறை— தொடர்ச்சி

உறுப்பினர்கள் அவையில் நடந்து கொள்ளும் முறை— தொடர்ச்சி

ருந்த சூழ்நிலையிலேதான் என்னிடத்திலே கேட்டார்கள், "என்னாலே எப்படிப் படிக்க முடியும், இப்படி நான்கு உறுப்பினர்கள் நின்று கொண்டிருக்கிறார்களே" என்று. நான் அதனால்தான் உங்களை உட்காரவும் சொன்னேன். எனவே அவர்கள் அதை முடிக்கட்டும். முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன்.

.. இவ்வளவு முக்கியமான பிரச்சினையைத்தான் பேரவைக்கும் இந்த நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள். அதற்கு அனுமதி அளித்திருந்தேன். அவ்வளவு முக்கியமான தகவலைத் தடுக்கிற முயற்சியிலேதான் இங்கே சில உறுப்பினர்கள் சிலபல நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தால் இந்த அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நடந்ததைத் திரும்பவும் பேரவைக்கு உறுதி செய்துகொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். வேறு எதையும் என் கவனத்திற்குக் கொடுக்காத பல உறுப்பினர்கள் பேரவையில் பிரச்சினையை எழுப்ப முற்பட்டபொழுது, அவர்களை அமருமாறு நான் திரும்பத் திரும்பச் சொல்லியும் கூட, அவர்கள் அமராத காரணத்தாலே பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, அத்தகைய முறையில் விதிமுறைகளுக்குப் புறம்பாக நடைபெறுவதற்கு எந்த உறுப்பினரும் எந்த வகையிலேயும் இடம் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். 299 — 300

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்கு முறை—நடைமுறைகள்—

உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை—

ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சில உறுப்பினர்கள் அவரை தொந்திரவு செய்து கொண்டிருந்ததை சுட்டிக் காட்டிய தலைவர் "உரையாற்றுகிற உறுப்பினரை தொந்திரவு செய்ய வேண்டாம்" என்று தீர்ப்புரைத்தார். 602

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் திர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் பேரவை உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற டைரியில் உள்ள படங்கள் பற்றி குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"ஆளுநர் உரைக்கும் இந்த டைரியிலே இருக்கிற படத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த டைரி உறுப்பினர்களுடைய வசதிக்காகக் கொடுக்கப்படுவது. இதிலே இன்னின்ன விவரங்கள் எங்களுக்கு வேண்டுமென்று வேண்டுமானால் நீங்கள் கேட்கலாம். இந்தப் படம் அந்தப் படம் என்று கேட்பது சரியல்ல." 667

தகவல் கோரல்—நடைமுறைகள்—

அனுமதி—

17—3—1994 ஆம் நாளன்று வினா—விடை நேரம் முடிவுற்றவுடன் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த அறிவிக்கைகளைக் குறித்து பேசத் தொடங்கிய போதும், அதை யொட்டி அவையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையொட்டியும் தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

..லவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

.. நீங்கள் கொடுத்தது பற்றி ஏற்கெனவே நான் அனுமதி மறுத்து எழுதியிருக்கிறேன். அனுமதி மறுத்ததை நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும் உட்காருங்கள். இப்போது எழுப்ப முடியாது.

.. நீங்கள் கொடுத்தது முறையாக இல்லை என்று சொன்னால் நான் அனுமதி மறுக்கிற அதிகாரத்தை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். நீங்கள் எப்படி அனுமதி மறுக்கலாம் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இல்லை. பேரவைத் தலைவரைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்பது எல்லாம் முறையல்ல. உட்காருங்கள். அனுமதி மறுத்து உங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அவ்வாறு அனுமதி மறுத்து எழுதியதற்குப் பிறகு பேரவையில் அது குறித்து எழுப்ப முடியாது.

.. ஜீரோ ஹவரில் நான் அனுமதித்தால்தான் பேச முடியும். நான் அனுமதிக்கவில்லை என்கிறபோது எதையும் எழுப்ப முடியாது. பொது விவாதம் நடைபெற இருக்கிறது. இப்போது இதைப் போன்றவற்றை அனுமதிப்பது கிடையாது. பொது விவாதத்தில் நீங்கள் பேசுகிறபோது பேசுவதற்கு உரிய வாய்ப்பை எடுத்துக் கொண்டு இதையெல்லாம் பேசலாம். எது முக்கியம் என்று கருதுகிறீர்களோ அதைப் பேசுவதற்காகத்தான் பொது விவாதத்தில் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது, உட்காருங்கள்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

..என் அனுமதி இல்லாமல் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. திரு. விசுவநாதன்தான் மற்ற உறுப்பினர்களோடு மோதுகிற சூழ்நிலைக்குச் செல்கிறார். திரு. ஞானசேகரன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு நகர்ந்து இன்னொரு உறுப்பினரோடு மோதச் செல்வது முறையல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். ஞானசேகரன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு எழுந்து சென்று இன்னொரு உறுப்பினரோடு மோதுவது கண்டிக்கத் தக்கது. திருவாளர்கள் ஞானசேகரன் மற்றும் சம்பத் தங்களுடைய இருப்பிடங்களை விட்டு எழுந்து இன்னொரு இருப்பிடத்திற்குச் சென்றார்கள். இருவரும் அவையில் மன்னிப்புக் கேட்டால் தான் அனுமதிக்க முடியும். நீங்கள் இருவரும் அவையை விட்டு வெளியேற வேண்டும். காவலர்கள் அந்த இரு உறுப்பினர்களையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன். தங்கள் இருப்பிடங்களை விட்டு எழுந்து சென்று இன்னொரு உறுப்பினரை தாக்கச் செல்வதைக் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. ஞானசேகரன் நடந்து கொள்வது முறையற்றது. அநாகரீகமானது. காவலர்களிடத்தில் நடந்து கொள்கிற முறையா இது? காவலர்களிடத்தில் இப்படி நடந்து கொள்கிற முறையற்ற போக்குகளை ஆதரிக்காதீர்கள். இது முறையற்ற செயல்.

தங்களுடைய இருக்கையை விட்டு எழுந்து சென்று கடைசி இருக்கையிலுள்ள உறுப்பினர்களை மிரட்டுவதை இந்த அவையிலே அனுமதிக்க முடியாது. உங்களுக்கு

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைக..ம்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

ஏதோ அஞ்சி நடக்க வேண்டுமென்று கருதுவீர்களேயானால் அது இந்த அவையிலே நடக்காது.

(உறுப்பினர்கள் திரு. ஞானசேகரனும் திரு. சம்பத்தும் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)

(அது குறித்து சில உறுப்பினர்கள் பேச முயன்றதையொட்டி தலைவர் அளித்த குறிப்புரையாவது)

முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது. இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். இரண்டு உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையை விட்டு பின்வரிசைக்கு எழுந்து சென்று, ஓடி, அங்கே இருக்கிற உறுப்பினர்களைத் தாக்க முயற்சிப்பது அனுமதிக்க முடியாது. வேறு எந்த உறுப்பினரும் தங்கள் இருக்கையை விட்டுச் செல்லவில்லை. அவரவர்கள் இருக்கையிலேதான் இருந்தார்கள். நீங்களாகவே சொன்னால் எப்படி? நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவரவர்களுடைய இருக்கையை விட்டு எவரும் எழுந்து செல்லவில்லை. காங்கிரஸ் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் மட்டும் தான் ஏதோ மிரட்டுகிற தொனியில் செல்வது முறையல்ல. இதற்கு மேல் இது குறித்து நான் அனுமதிக்க முடியாது.

(எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தையொட்டித் தலைவர் தீர்ப்புரைத்தாவது:)

தயவுசெய்து நீங்கள் திசை திருப்ப வேண்டாம். எழுப்பிய உறுப்பினர்கள் யாரும் தர்க்கப்பெறவில்லை, ஆனால் உ...

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களைத்தான் நான் கண்ணாரப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 2 உறுப்பினர்கள் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து சென்று தாக்க முற்படுவதை எப்படி அனுமதிக்க முடியும்? அதற்காக எதிர்க் கட்சித் தலைவர் திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள், நான் அந்த உறுப்பினர்களும் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கும் அவர்கள் முடியாது என்று உரத்த குரலில் குரல் எழுப்புகிற போது அப்போதாவது எதிர்க்கட்சித் தலைவர் எனக்குத் துணையாக வந்திருக்கவேண்டும்.

நீங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பிரச்சினையைத் திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது, பேரவைத் தலைவர் இவ்வளவு சொல்லியும். ஒரு உறுப்பினரைத்தாக்க ஒரு உறுப்பினர் முற்படுகிறார், அதை நான் கண்டித்து ஒரு நடவடிக்கை எடுக்கிறபோது திசை திருப்பக்கூடாது. யாரையும் யாரும் தாக்கிக் கொள்ளலாம் என்றால். இந்தப் பேரவை ஜனநாயக முறைப்படி நடைபெறவே முடியாது. ஒரு உறுப்பினரை இன்னொரு உறுப்பினர் தாக்கிக் கொள்ளலாம் என்கிற நிலைமையை அனுமதிப்போமேயானால் ஜனநாயக ரீதியில் இந்தப் பேரவையை நடத்தவே முடியாது, இந்தப் பிரச்சினையை இப்போது முடித்துவிட்டேன். இப்போது இன்னொரு பிரச்சினைக்கு போயாகி விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அறிக்கையை வைப்பார்கள்.

(அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் செய்த குறுக்கீடுகளையொட்டி தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :)

.. முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான அறிவிப்பை நாட்டிற்குச் சொல்ல வேண்டிய அறிவிப்பை அறிவிக்க வேண்டும் என்று நான் அறிவித்ததற்குப் பிறகும் அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து இத்தனை பேர் சத்தம் போட்டுக்கொண்டு இருக்கும் போது அவர்களாலே அந்த அறிக்கையை எப்படி வைக்க முடியும்? இது முறையில்லை, உட்காருங்கள். அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டும், எப்படியோ ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு நீங்கள் ஆரம்பிப்பது சரியல்ல. முதல் நாளே அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும் என்று இரண்டு உறுப்பினர்களை. மற்ற உறுப்பினர்களைத் தடுக்குமாறு ஏவிவிடுவது முறையல்ல, அடிக்கச் சென்றது சாங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஞானசேகரனும் சம்பத்தும், நான் கண்ணாரப் பார்த்து. ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை அளிப்பார்கள், மற்ற உறுப்பின்ர்கள் எல்லாம் உட்காருங்கள்.

(காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்,)

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

(முதலமைச்சர் அறிக்கையைப் படித்துக் கொண்டிருந்தபோது எழுந்த குறுக்கீடுகளையொட்டியும், அதையொட்டி எழுப்பப்பட்ட பிரச்சினைகளையொட்டியும் தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :)

நான் ஏற்கெனவே தெரிவித்து விட்டேன். பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க முனைந்த இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து நான் வெளியேற்றி இருக்கிறேன். உறுப்பினர்களுக்கு எல்லா வகையிலேயும் பாதுகாப்பு உண்டு. இந்த அறிக்கை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லலாம், உட்காருங்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் பேரவைக்கு வைக்குமாறு நான் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் அறிக்கையை வைப்பதற்கு எழுகிற சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் எழுந்து பிரச்சினையை எழுப்புவதும், தங்கள் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று ஒரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதும் நடவடிக்கை எடுக்கத் தக்க குற்றங்களா இல்லையா? நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தகைய சூழ்நிலையிலும் எந்த உறுப்பினருக்கும் எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. அப்படி ஏதேனும் ஏற்படுவதாக இருந்தால் அவர்கள் என்னிடத்திலே சொன்னால் அதை விசாரிக்கிறேன். நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுந்து ஓடி அடிக்கச் சென்றது தவிர வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை, உட்காருங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

..நானே பார்த்தேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல நீங்களும், நிற்கிற 3 உறுப்பினர் களும் இந்தத் திசையை நோக்கி பார்த்து கொண்டு இருந்தவர்கள். அப்படி இருக்கிற போது, நீங்கள் எழுந்து நின்று கொண்டு ஒரு பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிப்பது சரியல்ல. உங்கள் நான்கு பேர்களைவிட, கண்ணுக்கு நேரே நான் பார்த்துக் கொண்டிருந்த வன். திரு. விசுவநாதன் எழுந்தவுடன் "நீங்கள் எந்தப் பிரச்சினையும் கொடுக்க வில்லை, உட்காருங்கள்" என்று சொல்லி விட்டேன். அதற்குப் பிறகு அவர் திட்டமிட்டு ஏதோ சில குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அவர் கூச்சல் எழுப் பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த இடத்தில் அவரவர்கள் இருக்கையில் இருந்து தான் எழுந்து நின்று கொண்டிருந் தார்கள். எவரும் தங்கள் இருக்கையை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்ல வில்லை. நான் பார்த்ததைவிட நீங் கள் அதிகமாகப் பார்க்க முடியாது. அந்த நேரத்தில் ஞானசேகரன் என்ற ஓர் உறுப்பினர் திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்று அவரைத் தாக்க முற்படுவதும், இன் னொரு உறுப்பினரும், நான் சொல்லச் சொல்ல எழுந்து ஓடுவதும் எப்படி முறை யாகும்? முதலில் நீங்கள் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்ளுங்கள். நான் பார்த்ததை உங்களுக்குச் சொல்கிறேன். அதை முதலிலே ஒத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டுக் கொண்டு சிலர் செயல்படுவதை அனுமதிக்கக் கூடாது. ஞானசேகரனுக்கு என்ன வந்தது? அதைத் தான் சொல்கிறேன். அவர் தான் ஏன் போனார் என்று கேட்கிறேன். ஞான சேகரன் 'தன் இருப்பிடத்தை விட்டு ஏன் சென்றார் என்றுதான் கேட்கிறேன்.

லைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

..பேரவை விதி 87 (vi1) ''பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, வேறு வகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடையூறிக்கக் கூடாது''. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு வைக்கலாம் என்று நான் அனுமதி அளித்தேன். அவர்கள் அறிக்கை வைக்கவிருந்த நேரத்தில் சிலபல பிரச்சினைகள் ஏற்பட்டு, அதிலே நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். முடிவெடுத்து இரண்டு உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து வெளியேற்றி இருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் அந்த அறிக்கையை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். பாதியிலே நின்று கொண்டிருக்கிற போது, நான்கு உறுப்பினர்கள் நின்று அவர்கள் அதைப் படிக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்த சூழ்நிலையிலேதான் என்னிடத்திலே கேட்டார்கள்— என்னாலே எப்படிப் படிக்க முடியும், இப்படி நான்கு உறுப்பினர்கள் நின்று கொண்டிருக்கிறார்களே— என்று. நான் அதனால்தான் உங்களை உட்காரவும் சொன்னேன். எனவே, அவர்கள் அதை முடிக்கட்டும். முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன்.

..இவ்வளவு முக்கியமான பிரச்சினையைத் தான் பேரவைக்கும் இந்த நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள். அதற்கு அனுமதி அளித்திருந்தேன். அவ்வளவு முக்கியமான தகவலைத் தடுக்கிற முயற்சியிலேதான் இங்கே சில உறுப்பினர்கள் சிலபல நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தால் இந்த அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நடந்ததைத் திரும்பவும்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்—தொடர்ச்சி

அனுமதி—தொடர்ச்சி

பேரவைக்கு உறுதி செய்து கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

வேறு எதையும் என் கவனத்திற்குக் கொடுக்காத பல உறுப்பினர்கள் பேரவையில் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட பொழுது, அவர்களை அமருமாறு நான் திரும்பத் திரும்பச் சொல்லியும்கூட, அவர்கள் அமராத காரணத்தாலே பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, அத்தகைய முறையில் விதிமுறைகளுக்குப் புறம்பாக நடைபெறுவதற்கு எந்த உறுப்பினரும் எந்த வகையிலேயும் இடம் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். 288—303

19–3–1994 ஆம் நாளன்று வினா-விடை நேரம் முடிந்தவுடன் ஓர் உறுப்பினர் தாம் கொடுத்த அறிவிக்கை குறித்து மீண்டும் மீண்டும் பேசத் தொடங்கியதையொட்டி தலைவர் அளித்த குறிப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

''நீங்கள் எது குறித்தும் என்னிடத்திலே அனுமதி கேட்கவில்லை. நீங்கள் கொடுத்ததை நான் நிராகரித்து உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று நான உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்து இருக்கிறேன். நான் எழுத்து மூலம் தெரிவித்த எந்தப் பிரச்சினையையும் குறித்து நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் விளக்கம் கேட்க வேண்டும் என்று விதி இருக்கிறது. பேரவையிலே எழுப்ப முடியாது, உட்காருங்கள்.

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்— நடைமுறைகள்— தொடர்ச்சி

அனுமதி— தொடர்ச்சி

..நீங்கள் நின்று கொண்டிருக்கக் கூடாது. மற்ற உறுப்பினர்களுக்கு மறைக்கும். உட்கார வேண்டும்.

..நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இங்கே வந்து நீங்கள் கேட்க முடியாது. நீங்கள் உட்காருங்கள்.

..இடையிலே குறுக்கிட்டு மற்ற உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்கவிடாமல் செய்வது மிகவும் தவறான காரியம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். 585–586, 588

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி/அணி குறித்து—

எக்கட்சியையும் சேராத உறுப்பினர் என அறிவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் குறித்தும், அவர்கள் பேரவையில் ஒரு தனிக் குழுவாக இயங்க அங்கீகாரம் கோரி அளித்துள்ள கடிதம் குறித்தும் 18—3—1994 ஆம் நாளன்று தகவல் கோரல் என்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பியதை ஒட்டியும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களை ஒட்டியும் தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

''இருக்கைகள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கிக் கொடுப்பது என்பது பேரவைத் தலைவராலே செய்யப்படுகிற ஒன்று. எந்த எந்த உறுப்பினருக்கு எந்த எந்த இடத்தைப் பேரவைத் தலைவர் ஒதுக்குகிறாரோ அந்த இடத்தில் அவர்கள் அமர வேணடும் என்று மிகத் தெளிவாகப் பேரவை விதி 6 கூறுகிறது. இந்தப்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி / அணி குறித்து—தொடர்ச்சி

பேரவையிலே பல்வேறு காலக் கட்டங்களில் இங்கு இடம் ஒதுக்கீடு என்கிற அந்த ஒரு பிரச்சினையிலே மட்டும் எந்த உறுப்பினரும் எனக்கு இந்த இடம்தான் வேண்டும்; அந்த இடம்தான் வேண்டும் என்று கோரக்கூடிய வாய்ப்பை எந்தப் பேரவைத் தலைவரும் இங்கே வழங்கவில்லை. இதே பேரவையில் பல்வேறு பேரவைத் தலைவர்கள் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுந்த காலத்திலே எல்லாம் பேரவை விதி 6-ஐச் சுட்டிக் காட்டி, அந்தப் பிரச்சினையில் யாரும் தலையிடக் கூடாது, வேறு விவாதங்கள் இருக்கக் கூடாது என்று இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நமக்கு பழைய நடவடிக்கைக் குறிப்புகளிலே பல்வேறு குறிப்புகள் இருக்கின்றன.

தற்போது நீங்கள் தெரிவித்த உறுப்பினருடைய பிரச்சினை அவர் எந்தக் கட்சியையும் சாராதவர்,—"அன்அட்டாச்ட்" என்று நான் அறிவித்ததற்குப் பிறகு, எந்த இடத்தில் இடம் ஒதுக்க முடிகிறதோ அந்த இடத்திலேதான் என்னாலே ஒதுக்க முடியும். "அன்அட்டாச்ட்" என்ற உறுப்பினர்களுக்கு முதல் வரிசையிலேதான் இடம் ஒதுக்க வேண்டுமென்று எந்த வகையிலேயும் வற்புறுத்த முடியாது, அதற்கும் அடுத்து நீங்கள் தெரிவித்ததைப் போல் முன்னாள் அமைச்சர்கள் என்று வருகிறபோது, இன்றைக்கு நம்முடைய உறுப்பினர்களில் பலர் முன்னாள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் என்னாலே முதல் வரிசையில் இடம

கொடுக்க முடியாது, இப்பொழுது இருக்கிற இடத்திலேகூட, ரொம்ப நெருக்கடியாக முன் வரிசையிலே இருக்கிறவர்களை அமர வைத்திருக்கிறேன், ஆகையினாலே அனைவருக்கும் முன் வரிசையிலே இடம் கொடுப்பது என்பது இயலாத காரியம்.

அடுத்து நான் ''அன் அட்டாச்ட்'' என்று அறிவித்ததற்குப் பிறகு அவர்களை எந்த எந்த இடங்கள் காலியாக இருக்கிறதோ அந்த இடத்திலேதான் என்னாலே அமர வைக்க முடியும், ''அன் அட்டாச்ட்'' என்று அறிவித்த காரணத்திற்காக நான் வேறு வேறு இடங்களைத் தேடிக் கொண்டிருந்தால் எல்லா உறுப்பினர்களுடைய இருக்கைகளையும் மாற்ற வேண்டி வரும். அந்த அளவுக்கு மிகப் பெரிய ஒரு மாற்றம் இல்லாத அளவுக்குச் செய்வதற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன், விதி 6-ன்படி பேரவைத் தலைவர் செய்திருக்கிற அந்த ஏற்பாட்டில், வேறு எந்த உறுப்பினரும் பேரவைத் தலைவருடைய நடவடிக்கைக்கு மாறுதலாகப் பேசுவதற்கு எந்த வகையிலேயும் இதுவரையிலேயும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,

எனவே, இன்றைக்கு நான் அவர்களுக்கு இடம் ஒதுக்கியிருப்பது என்பது ''அன் அட்டாச்ட்'' என்று சொன்னதற்குப் பிறகு—ஒரு கட்சியின் சார்பில் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இடத்தில் கொஞ்சம் முன் வரிசையில் நான் முன்னுரிமை கொடுக்கலாம், அந்த

த— தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்-நடைமுறைகள்— தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி / அணி குறித்து— தொடர்ச்சி

மாதிரி இல்லை என்கிற போது— அது இயலாத காரியம், பேரவைத் தலைவராக இருந்தவர், முன்னாள் அமைச்சராக இருந்தவர் என்கிற காரணத்தாலேயே நீங்கள் பின்னாலே போடலாமா என்று கேட்டார்கள், இதே பேரவையில் பேரவைத் தலைவராக இருந்த அன்றைய பேரவைத் தலைவர் மாண்புமிகு மதியழகன் அவர்களை நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து வெளியேற்றியதற்குப் பிறகு, அவருக்குக் கொடுக்கப்பட்ட இடம் முன் வரிசையிலே இல்லை, 3-வது வரிசையிலே தான், அன்றைக்கு நீங்கள் சொல்கிற உறுப்பினர் இதே அவையில் அமைச்சராகக் கூட இருந்திருக்கிறார். எனக்கு அவர் எழுதியிருக்கிறார். "நான் இவ்வளவு காலம் மூத்த அமைச்சர், பேரவைத் தலைவராக இருந்தவன்", என்று எழுதி இருக்கிறார். அவர் அமைச்சராக இருந்த நேரத்தில் இருந்த பேரவைத் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட இடம் முன் வரிசையிலே அல்ல என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆகையினாலே இதிலே அதிகமாகப் பிரச்சினை வேண்டாம் என்று கருதுகிறேன்,

.. "அச்சுறுத்தல்" என்பது எல்லாம் வேண்டாம், அதற்கும் நான் பதில் சொல்லி விடுகிறேன், சென்றக் கூட்டத் தொடரில் இங்கே ஒதுக்கிவிட்டு, இப்போது ஏன் பின்னால் ஒதுக்கினீர்கள் என்று சொன்னால், பின் வரிசையிலே இருந்த திரு. பரிதி இளம்வழுதிக்கு, இப்போது நான் எடுத்திருக்கின்ற முடிவின்படி முன் வரிசையிலே இடம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது, அவர் ஒருவரை இங்கே கொண்டு வருகிறபோது, கடைசி

யிலே இருந்தார் அவர்—இந்த வரிசை யிலே கடைசி இடம் அவருக்கு ஒதுக்கப் பட்டு இருந்தது. அவரை அப்படியே அடுத்த இடத்திற்குக் கொண்டு சென் றிருக்கிறேனே தவிர, இதிலே கூட எந்த உள் நோக்கமும் இல்லை, தயவுசெய்து இந்தப் பிரச்சினை வேண்டாம்.

இன்னொரு பிரச்சினைக்கும் நான் பதில் சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் இருக்கை பற்றித் தெரிவித்த அதே பிரச்சினை தொடர்பாக அந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரிட மிருந்து எனக்குக் கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்திற்குரிய பதிலாக இப் போது நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்த அதே கருத்தினை அவர் களுக்குப் பதிலாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு இன்னொரு கடிதத்தை உறுப்பினர் கள் திரு. கே. ராசாராம், திரு. ஜி. விசுவ நாதன், திரு. அழகு திருநாவுக்கரசு ஆகிய மூவரும் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில் அன்அட்டாச்ட் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு அந்த மூவரும் "In practice, the unattached Members are treated as independent Members inside the House" என்று தெரிவித்து, அந்த வகையில் எங்கள் மூவரையும் ஒரே சட்டமன்றக் கட்சிக் குழுவாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டு, அந்த அள வுக்கு அனுமதிப்பது, பாராளுமன்றத்தின் 'Directions of the Speaker, Lok Sabha" என்கிற அந்தப் புத்தகத்தில் 120-வது பிரிவின்படி அனுமதிக்கிற வழக்கம் லோக்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்-நடைமுறைகள்— தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி / அணி குறித்து— தொடர்ச்சி

சபாவில் இருக்கிறது. அதை வைத்து தாங்கள் அமைத்திருக்கிற "MGR Mardrams Legislature Group" என்கிற அந்தச் சட்டமன்றக் குழுவை அங்கீகரித்து—அவர்கள் அமைத்திருக்கிற அந்தக் குழுவை அங்கீகரித்து—அதற்கு அவர்கள் தெரிவித்திருக்கிற தலைவர், துணைத் தலைவர், விப் ஆகிய மூவரையும் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தமட்டில் "Directions of the Speaker, Lok Sabha" என்பதில் 120-ஐ அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். "120. Directions of the Speaker, Lok Sabha" என்கிற பிரிவு என்ன சொல்கிறது என்றால், The Speaker may recognise an association of Members as a Parliamentary Party or group for the purpose of functioning in the House and his decision shall be final. அந்த அளவுக்கு தனித் தனிக் குழுக்களாக இருக்கிறவர்களை ஒரே குழுவாகப் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் இருக்கிறது. "ஏற்றுக்கொள்ளலாம்" என்று விதி 120 இருக்கிறதே தவிர, எந்த அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளலாம் என்பதற்கு 121வது விதியும் இருக்கிறது. 120ஐ மட்டும் எனக்குக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

121—"In recognising a Parliamentary Party or group, the Speaker shall take into consideration the following principles: "guide lines கூட அல்ல principles—

"(1) An association of Members who propose to form a Parliamentary Party or group (a) shall have announced at the time of the General Elections a distinct ideology and programme of Parliamentary work on which they have been returned to the House".

அவர்கள் தேர்தலுக்கு நிற்கிற காலத்திலேயே ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை ஏற்றுக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக நின்று இந்த அவைக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்களைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு "அன் அட்டாச்ட்" என்று அறிவித்திருந்தாலும், அன்றைக்குத் தேர்தல் நேரத்தில் மக்கள் மத்தியிலே சொல்லி வாக்குக் கேட்டு எந்த அனுமதியின் பேரில் இங்கே வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக ஆக்குவதற்கு எங்களுக்கு வாக்களியுங்கள் என்பதுதான் மக்களுடைய மத்தியிலே சொன்ன ஐடியாலஜி என்று நினைக்கிறேன். அதை இன்றைக்கு ஏற்றுக் கொண்டு இருக்கிறார்களா இல்லையா என்ற விவாதத்திற்குள்ளே நான் போகவில்லை.

அடுத்து (b) அதுதான் ரொம்ப முக்கியமானது.

"(b) shall have an organisation both inside and outside the House." என்கிற பிரிவு. இங்கே, உள்ளே அவர்கள் அமைத்திருக்கிற இதே அமைப்பு

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி / அணி குறித்து—தொடர்ச்சி

போல, வெளியிலேயும் ஒரு அமைப்பை அவர்கள் வைத்திருக்க வேண்டும்.

.. "and (c) shall have atleast a strength equal to the quorum fixed to constitute a sitting of the House, that is, one-tenth of the total number of Members of the House."

அது தான் முக்கியம், அது இருந்தால் தான் பேரவைத் தலைவரிடத்திலே இத்தகைய அங்கீகாரத்திற்கே வரலாம்; ஒரு அவை கூடுவதற்குரிய கோரம்; அதாவது பத்தில் ஒரு பங்கு கோரமானது அந்த கோரத்தின் எண்ணிக்கை அளவுக்காவது உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தக் கோரிக்கையோடு வரலாம், பேரவைத் தலைவர் அங்கீகரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள், அப்படியென்றால் இந்தப் பேரவையின் கோரத்துக்கு உரிய எண்ணிக்கையான 24 உறுப்பினர்கள் இருந்திருப்பார்களேயானால், இந்த "120" ஐச் சொல்லி என்னிடத்தில் அங்கீகாரம் கேட்டிருக்கலாம், எண்ணிக்கையோ 3, தேவையோ 24, எனவே, அவர்களுடைய கோரிக்கையை இந்த அளவில் என்னாலே பரிசீலிக்க இயலவில்லை, அவர்கள் இப்படி ஒரு லெஜிஸ்லேச்சர் குரூப்பை ஆரம்பித்திருக்கிறோம் என்றும், அதற்கு இன்னின்னார் தலைவர், துணைத் தலைவர், விப் என்றும் சொல்லி, அங்கீகரிக்க வேண்டுமென்று எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள், அந்தக் கடிதத்தின் அடிப்படையில் அங்கீகாரம் அளிப்பது என்பது, அந்த 120, 121-ன்படி என்னாலே இயலாமல் இருக்கிறது, இருந்தாலும், அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்-நடைமுறைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி / அணி குறித்து—தொடர்ச்சி

கள் சட்டமன்றத்திற்குள்ளே என்பதைப் பேரவையின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

. . அன்றைய பேரவைத் தலைவர், இந்தப் பேரவையிலே அறிவித்திருக்கிற ஒரு அறிவிப்பையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர், இது பற்றி பேரவைத் தலைவர் வகுக்கும் வரிசைப்படி இருக்கையில் அமர வேண்டும் என்பதுதான் பேரவை விதி 6. எல்லோரும் ஒப்புக் கொண்ட உண்மை என்னவென்றால், விதி 6-ன்படி பேரவைத் தலைவர் ஒதுக்கும் வரிசைப்படி, உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டும், அதற்கு எந்த வகையிலான கூடுதல் குறைச்சலான உள் விதிகளோ, உட்பிரிவுகளோ கண்டிப்பாக இல்லை, அதற்கு விளக்கத்திற்கு இடமே இல்லை என்பதுதான் இப்போதைய நிலை என்றாலும் நம்முடைய உறுப்பினர்களும் மற்றவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதிலே மேல் கேள்விகளுக்கு இடம் இல்லை என்ற நிபந்தனையோடு அதைச் சொல்வது என்னுடைய கடமை என்றுகூட நான் கருதவில்லை, பேரவை. முதல் முறையாக அமைக்கப்பட்டிருந்து, பொதுவாக உறுப்பினர்கள் பெயர் தமிழ் அகர வரிசைப்படி இருக்கைகள் ஒதுக்குவது வழக்கமாக இருக்கிறது. முன்னாள் அமைச்சர்களாகவும் பேரவைத் தலைவர்களாகவும் இருந்தால் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் முதல் வரிசையிலோ அல்லது அடுத்த வரிசையிலோ இருக்கை ஒதுக்குவது மரபாக இருந்து வந்தாலும். முந்தைய

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

தகவல் கோரல்-நடைமுறைகள்— தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி/அணி குறித்து— தொடர்ச்சி

நேர்வில் திரு. கே. ஏ. மதியழகன், முன்னாள் அமைச்சர் அவர்களுக்கும் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் பின் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டது. மேலும் இந்நேர்வில் உறுப்பினர்கள் எக்கட்சியையும் சாராதவர்கள் என அறிவித்துள்ளதாலும் அவர் முன்னாள் அமைச்சராக இருப்பினும் மேற்குறிப்பிட்ட மரபைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது என்று நீங்கள் தெரிவிக்கிற காலக்கட்டத்திலே இருந்த பேரவைத் தலைவர் அவர்களே அறிவித்திருக்கிற அறிவிப்பு. எனவே, இப்போதைக்கு அது பொருந்தாது.

..இடம் இருந்தால் தானே இப்போதும் நான் கொடுக்க முடியும், 'கௌல் அன்ட் ஷக்தர்'-ல் இருப்பதை நான் தெரிவித்துவிட்டேன், உட்காருங்கள்,

..தயவு செய்து இதிலே அதிகமாகப் பிரச்சினைகள் வேண்டாம். நீங்கள் தெரிவித்ததற்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

..நான் ஏற்கனவே இந்தத் தகவலை அவைக்குத் தெரிவித்து இருக்கிறேன்,

..நான் அவருக்குப் பதில் சொல்லிவிடுகிறேன், Anti-defection Act-இன் கீழ் ''டிஸ்குவாலிஃபை'' செய்ய வேண்டுமென்று சொன்னால் யாரேனும் ஒரு உறுப்பினர் பெட்டிஷன் கொடுப்பீர்களேயானால் விதிமுறைகளின்படி அதன் மீது நான் நடவடிக்கை எடுக்கிறேன்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி/அணி குறித்து—தொடர்ச்சி

..என்னுடைய முடிவை நான் அறிவித்து விட்டேன், அதாவது "may" என்று இருப்பதிலேயிருந்து முடிந்த அளவு எனக்கு எந்த அளவிற்கு வாய்ப்புக் கிடைக்கிறதோ, அந்த அளவிற்கு நான் உறுப்பினர்களுக்கு இடம் அளித்திருக்கிறேன். அப்படிச் சொல்லப் போனால், இங்கே நம்முடைய விதிமுறைகளின்படி முன் வரிசையிலே கட்சித் தலைவர்களாக அங்கீகரிக்கக்கூடிய—நம்முடைய விதிமுறைகளின்படியே நான் சொல்வதாக இருந்தால்—காங்கிரஸ் கட்சி, தி. மு. கழகம், பட்டாளி மக்கள் கட்சி தவிர, அந்தக் காலத்திலேயே கூட வேறு யாருக்கும் நான் இங்கே இடம் அளித்திருக்க முடியாது. இடம் இருக்கிற வரையிலே நான் அளித்திருக்கிறேன். அதே போல் இப்போதும் நிறைய இடம் இருந்திருக்குமானால் அளித்திருப்பேன். இடம் இல்லாதபோது நான் அன் அட்டாச்ட் என்று அறிவித்ததற்குப் பிறகு எங்கெங்கே இடம் இருக்கிறதோ அந்த அந்த இடத்திலேதான் நான் அவர்களுக்கு ஒதுக்க முடியும். ஏற்கனவே இதே அவையிலே நீங்கள் உறுப்பினராக இருந்து இருக்கிறீர்கள். அந்தக் காலத்திலே இருந்த பேரவைத் தலைவர் இந்த நடைமுறையைத்தான் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே இருந்த பேரவைத் தலைவர்கள் இதே நடைமுறையைத்தான் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். நான் சொன்னதைப்போல அந்தக் காலத்தில் பேரவைத் தலைவராக இருந்த திரு. மதியழகன் அவர்களுக்கே கூட முன் வரிசையிலே இடம் கொடுக்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

தகவல் கோரல்—நடைமுறைகள்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சி/அணி குறித்து—தொடர்ச்சி

காமல்? பின்னாலேதான் கொடுத்திருக்கிறார்கள். இவை நம்முடைய அவையிலே இருந்த சில மரபுகள்தான். எனவே, அந்த மரபுகளின் அடிப்படையிலேதான் நான் முடிவு எடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ நடவடிக்கை எடுப்பதற்கு உறுப்பினர்களிடத்திலேயிருந்து விதிமுறைகளின்படி எனக்கு 'ப்ராப்பராக்' பெட்டிசன் வர வேண்டும். அந்தப் பெட்டிசன் மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

இருக்கைகள் பற்றிய பிரச்சினை இதற்கு மேலும் வேண்டாம்.''

திருத்தம் / நடைமுறைகள்— 452—468

துணைக் கேள்வி கேட்ட ஓர் உறுப்பினர் கூறிய வார்த்தை குறித்து அமைச்சர் சுட்டிக் காட்டிய போது அதைத் திருத்திக் கொள்ளலாம் எனத் தலைவர் தீர்ப்புரைத்தார். . . 441

துணை வினா—அனுமதி—

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் மூல வினாவிற்குத் தொடர்பின்றி துணை வினா கேட்க விரும்பிய போது அனுமதி மறுத்து தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

'' நீங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லலாம். ஆனால் இந்த மாதிரி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

துணை வினா அனுமதி கேட்கும் முறை—தொடர்ச்சி

உங்களை அனுமதித்தால் மற்ற எல்லா உறுப்பினர்களையும் நான் அனுமதிக்க வேண்டியது வரும். அது வேண்டாம். ஒரு தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு, இன்னொரு உறுப்பினரைக் கேள்வி கேட்க அனுமதித்தால் பிறகு எல்லோரும் கேட்பார்கள். தனிக் கேள்வி போடவும்.'' .. 419

மூல வினாவிற்குத் தொடர்பின்றி ஓர் உறுப்பினர் கேட்ட துணை வினாவிற்கு 'இத்துணை வினா இதில் வராது' என்று குறிப்புரைக்கப் பெற்று அனுமதி மறுக்கப் பெற்றது. .. 569

துணை வினா—கேட்கும் முறை—

துணை வினா கேட்க அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் மூல வினாவை ஒட்டி ஒரு துணைக் கேள்வி கேட்டதோடு இன்னொரு இடத்தைப் பற்றியும் தொடர்ந்து துணை வினா கேட்க முனைந்தபோது தலைவர் அதற்கு தனிக் கேள்வி போடுமாறு குறிப்புரைத்தார். .. 429

துணை வினா கேட்ட உறுப்பினர் அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது போல பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்றபோது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது: ..

''நீங்கள் சொல்வது அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது போல வரும். அமைச்சர் சொல்லுகிறார் நான் நேரிடையாகப் பார்த்தேன் என்று. அப்படி இல்லை என்று நீங்கள் சொல்லலாம். அதற்கு அமைச்சர் பதில் சொல்லலாம். அதிகாரிகள் கொடுக்கிற தகவல்களுக்கு முழுப் பொறுப்பும் அமைச்சர் ஏற்றுக்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

துணை வினா—கேட்கும் முறை—

கொண்டுதான் சொல்லுகிறார். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு மாதிரி சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.'' .. 17, 19, 33

துணை வினா கேட்ட உறுப்பினர் விரிவாகப் பேசிக் கொண்டிருந்ததை யொட்டி தலைவர் கேள்வியாக கேட்கு மாறு அறிவுறுத்தினார். 480

துணை வினா—பதிலளிக்கும் முறை—

ஒரு துணை வினாவிற்கு அமைச்சர் அளித்த பதிலில் குறிப்பிட்ட ஒரு வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 10

நீக்கம்—நடைமுறைகள்—

அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் இன்னொரு மாநில முதலமைச்சரைக் குறிப்பிட்டு பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்டது. .. 335—336

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் வேறு மாநில அமைச்சர்கள் குறித்து பேசிய பகுதி அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்பட்டது. .. 637, 638

ஆதாரம் இன்றிப் பேசியது—

19—3—1994 ஆம் நாளன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத் தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் ஆதார்ம் இன்றிப் பேசிய பகுதிகள்

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஆதாரம் இன்றிப் பேசியது—

அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று தலைவர் குறிப்புரைத்த போது கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார்:

''அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம்''

என்னிடம் சில ஆதாரங்களைக் கொடுத்து விட்டு நீங்கள் பேசி இருக்க வேண்டும். எந்த அமைச்சரும் அப்படிச் சொல்ல வில்லை உங்களிடம். புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்த மறுநாள் கையெழுத் துப் போட்ட கோப்பு இன்றைக்கு வழக்கு மன்றத்தில் விசாரணையில் இருக்கிறது என்றுதான் சொன்னார். வேறு ஒன்றும் சொல்லவில்லை. அதைச் சொன்னதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் இருக்கிறது. .. 676

ஆளுநர் குறித்துப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய உறுப் பினர், ஆளுநர் குறித்து தெரிவித்த கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. .. 499, 500

ஆளுநர் குறித்துப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

''ஆளுநரைப் பற்றிய விவாதத்தை இங்கே எழுப்புவதாக அமையும். நம்முடைய விதிகளில் என்ன இருக்கிறது என்றால் ஆளுநரைப் பற்றிய ஒரு விவாதத்தை வரவழைக்கத்தக்க பிரச்சினையைக் கூட எழுப்பக்கூடாது என்றிருக்கிறது, எனவே, நீங்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன,

படம் இல்லை என்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள், அதற்கு மேல் வேண்டாம்.'' .. 686

ப—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

உட்கார்ந்து கொண்டு பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது உட்கார்ந்து கொண்டே மற்றொரு உறுப்பினர் பேசியதை இன்னொரு உறுப்பினர் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது தலைவர் கீழ்க்கண்ட வாறு தீர்ப்புரைத்தார் :

"உட்கார்ந்து கொண்டு எந்த உறுப்பினரும் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது." .. 589

உறுப்பினர்களைக் குற்றம் சாட்டிப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர், இன்னொரு உறுப்பினரை குற்றம் சாட்டிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. .. 619

கண்ணியத்திற்கு ஒவ்வாதது—

கண்ணியத்திற்கு ஒவ்வாத சில சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன. 676, 677

குற்றம் சாட்டிப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் மாநில அரசை குற்றம் சாட்டிப் பேசிய ஒரு கருத்துக்கு அமைச்சர்கள் ஆட்சேபம் தெரிவித்தபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

குற்றம் சாட்டிப் பேசியது—தொடர்ச்சி

"அமைச்சர்கள் அதற்கு தெளிவான பதிலும் வழங்கியிருக்கிறார்கள். அவர் சொன்னதும் இருக்கலாம், அமைச்சர் கொடுத்த பதிலும் இருக்கலாம்." 607

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய ஓர் உறுப்பினர் அவையில் இல்லாதோர் குறித்து குற்றம் சாட்டிப் பேசியது தொடர்பாக பின்வருமாறு தலைவர் குறிப்புரைத்தார் :

"வெளியில் உள்ளவர் மீது குற்றச்சாட்டுக் கூடாது என்று இருக்கிறது. அதைத் தான் அவர் ஆதாரம் என்று சொல்வார்களானால் அதை நீக்கலாம். இந்தப் பிரச்சினையில் வேண்டாம்.

காவல் துறை அதிகாரி உங்களிடத்தில் சொன்னதாக சொல்லுகிறீர்கள். அவரிடம் நான் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னது வரைக்கும் வேண்டுமானால் நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளலாம். அவர் உங்களிடத்தில் ஒன்றைச் சொன்னார் என்று இருப்பது, அது ஆதாரத்தோடு இருக்க வேண்டிய ஒன்று. எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. 614, 615

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஓர் உறுப்பினர் பேசியபோது குற்றம் சாட்டிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்டது. .. 512

ஓர் உறுப்பினர் குற்றம் சாட்டிப் பேசிய பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கு மாறு தலைவர் ஆணையிட்டபோது குறிப்புரைத்ததாவது :

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

குற்றம் சாட்டிப் பேசியது—தொடர்ச்சி

"இந்த மாதிரி குற்றச்சாட்டுப் பேரவை நிகழ்ச்சிகளில் இருப்பது சரியல்ல. அது நம்முடைய பண்பாட்டிற்கே உகந்தது அல்ல." .. 660, 661 662,

துணை வினா கேட்ட உறுப்பினர் அதிகாரிகள் மீது குற்றம் சாட்டிப் பேசிய பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 17

தலைவரின் தீர்ப்பு—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் கவர்னர்—முதலமைச்சர் குறித்து பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று தலைவர் ஆணையிட்டதை அடுத்து தொடர்ந்து எழுந்த குறுக்கீட்டை ஒட்டி, பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது: 514

It is the option of the Deputy Speaker who is in the Chair, it is not your option.

தவறாகப் பேசியது—

ஓர் உறுப்பினர் தெரிவித்த தவறான தகவல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. .. 293

துணை வினா கேட்கும் முறை—

துணை வினா கேட்ட உறுப்பினர் அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது போலப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்று குறிப்புரைக்கப்பெற்றபோது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

நீக்கம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

துணை வினா—கேட்கும் முறை—தொடர்ச்சி

"நீங்கள் சொன்னது அமைச்சர் மீது குற்றம் சாட்டுவதுபோல வரும். அமைச்சர் சொல்லுகிறார் நான் நேரிடையாகப் பார்த்தேன் என்று. அப்படி இல்லை என்று நீங்கள் சொல்லலாம். அதற்கு அமைச்சர் பதில் சொல்லலாம். அதிகாரிகள் கொடுக்கிற தகவல்களுக்கு முழுப் பொறுப்பும் அமைச்சர் ஏற்றுக் கொண்டுதான் சொல்கிறார். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு மாதிரி சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது." 17,19,33

தொடர்பின்றிப் பேசியது—

ஒரு துணை வினாவிற்கு அமைச்சர் அளித்த பதிலில் குறிப்பிட்ட ஒரு வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 19

நீக்கியதைப் பேசியது—

ஏற்கனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதியை ஓர் உறுப்பினர் மீண்டும் பேசியபோது அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று தலைவர் குறிப்புரைத்தார். 679

பேரவைத் தலைவர் குறித்துப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர் குறுக்கிட்டு பேரவைத் தலைவரை ஒருமையில் பேசிய பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடப்பட்டன. 314—315

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

பேரவைப் பணியினின்று சில உறுப்பினர்கள் தற்காலிமாக நீக்கி வைக்கப்பெறுதல்—

17—3—1994 ஆம் நாளன்று வினா விடை நேரம் முடிவுற்றவுடன் எதிர்க் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த அறிவிக்கைகளைக் குறித்துப் பேசத் தொடங்கியபோதும் அதையொட்டி அவையில் நிகழ்ந்த நிகழ்ச் சிகளையொட்டியும் தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

"நீங்கள் கொடுத்தது பற்றி ஏற்கெனவே நான் அனுமதி மறுத்து எழுதியிருக் கிறேன். அனுமதி மறுத்ததை நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். உட்காருங்கள். இப்பொழுது எழுப்ப முடியாது.

.. நீங்கள் கொடுத்தது முறையாக இல்லை என்று சொன்னால் நான் அனுமதி மறுக்கிற அதிகாரத்தை நீங்கள் வழங் கியிருக்கிறீர்கள். நீங்கள் எப்படி அனு மதி மறுக்கலாம் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இல்லை. பேர வைத் தலைவரைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்பது எல்லாம் முறையல்ல. உட் காருங்கள். அனுமதி மறுத்து உங் களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவ்வாறு அனுமதி மறுத்து எழுதிய தற்குப் பிறகு பேரவையில் அது குறித்து எழுப்ப முடியாது.

.. ஜீரோ ஹவரில் நான் அனுமதித்தால் தான் பேச முடியும். நான் அனுமதிக்க வில்லை என்கிறபோது எதையும் எழுப்ப முடியாது. பொது விவாதம் நடைபெற இருக்கிறது. இப்போது இதைப் போன்றவற்றை அனுமதிப்பது கிடையாது. பொது விவாதத்தில் நீங்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பேரவை பணியினின்று சில உறுப்பினர்கள் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி

கள் பேசுகிறபோது பேசுவதற்கு உரிய வாய்ப்பை எடுத்துக் கொண்டு இதையெல்லாம் பேசலாம். எது முக்கியம் என்று கருதுகிறீர்களோ அதைப் பேசுவதற்காகத்தான் பொது விவாதத்தில் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. உட்காருங்கள்.

..என் அனுமதி இல்லாமல் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. திரு. விசுவநாதன்தான் மற்ற உறுப்பினர்களோடு மோதுகிற சூழ்நிலைக்குச் செல்கிறார். திரு. ஞானசேகரன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு நகர்ந்து இன்னொரு உறுப்பினரோடு மோதச் செல்வது முறையல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், ஞானசேகரன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு எழுந்து சென்று இன்னொரு உறுப்பினரோடு மோதுவது கண்டிக்கத் தக்கது. திருவாளர்கள் ஞானசேகரன் மற்றும் சம்பத் தங்களுடைய இருப்பிடங்களை விட்டு எழுந்து இன்னொரு இருப்பிடத்திற்குச் செல்றார்கள். இருவரும் அவையில் மன்னிப்புக் கேட்டால் தான் அனுமதிக்க முடியும். நீங்கள் இருவரும் அவையை விட்டு வெளியேற வேண்டும். காவலர்கள் அந்த இரு உறுப்பினர்களையும் வெளியேற்ற உத்தரவிடுகின்றேன். தங்கள் இருப்பிடங்களை விட்டு எழுந்து சென்று இன்னொரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதைக் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. ஞானசேகரன் நடந்து கொள்வது முறையற்றது. அநாகரீகமானது. காவலர்களிடத்தில் நடந்து கொள்கிற முறையா இது? காவலர்களிடத்தில்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

பேரவை பணியினின்று சில உறுப்பினர்கள் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி

இப்படி நடந்து கொள்கிற முறையற்ற பேர்வழிகளை ஆதரிக்காதீர்கள், இது முறையற்ற செயல்.

... தங்களுடைய இருக்கையை விட்டு எழுந்து சென்று கடைசி இருக்கையில் உள்ள உறுப்பினர்களை மிரட்டுவதை இந்த அவையிலே அனுமதிக்க முடியாது. உங்களுக்கு ஏதோ அஞ்சி நடக்க வேண்டுமென்று கருதுவீர்களேயானால் அது இந்த அவையில் நடக்காது,

(உறுப்பினர்கள் திரு. ஞானசேகரனும் திரு. சம்பத்தும் பேரவைக் காலவர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.) 288—291

விசாரணையில் இருக்கும் பொருள்—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பங்குகொண்டு பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்து குறித்து தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

"உயர் நீதிமன்றத்திலே இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, எனவே இதனை விட்டுத்து வேறு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்ள வேண்டும்." 360

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு பேசிய ஓர் உறுப்பினர் விசாரணையில் இருக்கும் பொருள் குறித்து பேசிய பகுதியை நீக்கவேண்டும் என்று தலைவர் ஆணையிட்டபோது கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார் :

"நீங்கள் பேச ஆரம்பித்தவுடன் நான் சொல்ல நினைத்தது, இது பற்றிய

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விசாரணையில் இருக்கும் பொருள்—தொடர்ச்சி

வழக்கை உயர்நீதிமன்றமே எடுத்துக் கொண்டு விசாரித்து கொண்டிருக்கிறது, எனவே அதை நாம் இங்கே பேசினால் அந்த வழக்கினுடைய போக்கையும் திசை திருப்புவதுபோல் அமையும், சப்ஜுடிசாகவும் இருக்கும், எனவே அந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கு கிறேன்.'' 627

விவாதம்—நடைமுறைகள்—

அவை முன்னுள்ள பொருள்—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப் பினர் கட்சிக்கு நிதி திரட்டுவது குறித்து தெரிவித்த கருத்தையொட்டி எழுந்த விவாதத்திற்குப் பிறகு தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரைத்தார்:

''அவை முன்னவர் அவர்கள் தெளிவாகக் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள், எனவே அந்தக் கருத்தினை எல்லோ ரும் ஏற்றுக் கொண்டு, உறுப்பினர் அவர்கள் கடைசியாக சொன்ன அந்த சொற்றொடரை அவைக் குறிப்பிலே யிருந்து நீக்குகிறேன்.'' 514

அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய ஓர் உறுப்பினர் அவையில் இல்லாதோர் குறித்து குற்றம் சாட்டிப் பேசியது தொடர்பாக பின்வருமாறு தலைவர் குறிப்புரைத்தார்,

''வெளியில் உள்ளவர் மீது குற்றஞ்சாட் டக் கூடாது என்று இருக்கிறது. அதைத்தான் அவர் ஆதாரம் என்று

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்-நடைமுறைகள்—தொடர்ச்சி

அவையில் இல்லாதோர் குறித்துப் பேசியது—தொடர்ச்சி

சொல்லுவார்களானால் அதை நீக்கலாம், இந்தப் பிரச்சினையில் வேண்டாம்.

காவல் துறை அதிகாரி உங்களிடத்தில் சொன்னதாக சொல்கிறீர்கள். அவரிடம் நான் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னது வரைக்கும் வேண்டுமானால் நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளலாம். அவர் உங்களிடத்தில் ஒன்றைச் சொன்னார் என்று இருப்பது, அது ஆதாரத்தோடு இருக்க வேண்டிய ஒன்று. எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.'' 614—615

உரையாற்றும் முறை—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தைக் குறித்து தலைவர் பின்வருமாறு திர்ப்புரைத்தார்:

''காங்கிரஸ் கட்சி உறுப்பினருடைய உணர்வு இந்தி என்கிற எழுத்தே தமிழ் நாட்டில் இருக்கக் கூடாது என்பது. அதை உண்மையிலேயே பெரிதும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற முறையிலே பாராட்டுகிறேன்.

அதே உணர்வை உங்களுடைய கட்சியிலேயும் மத்திய அரசிலேயும் கொஞ்சம் சொன்னால் நன்றாக இருக்கும்.'' 610

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசிய ஓர் உறுப்பினர் தாம் தெரிவித்த கருத்து வேறு எந்த

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

விவாதம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

உரையாற்றும் முறை—தொடர்ச்சி

உறுப்பினரும் பேசவில்லை என்று சொன்னதை சில உறுப்பினர்கள் ஆட்சேபித்ததை குறித்து தலைவர் அளித்த குறிப்புரை யாவது:

"இந்த அவையிலேயே உறுப்பினர்கள் பலரும் இது குறித்து பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். ஒருவரும் பேசவில்லை என்று சொல்கிறபோது மற்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிப்பதாக அமைந்துவிடும். வேறு எந்த உறுப்பினரும் பேசவில்லை என்று சொல்லிவிட்ட காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினையே வந்தது.

..அந்த மாதிரி குறிப்பு வேண்டாம்" 604

எழுதிவைத்துப் படித்தல்—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய உறுப்பினர் எழுதி வைத்துப் படிப்பது விதிமுறைகளுக்குப் புறம்பானது என்று ஓர் உறுப்பினர் பிரச்சினையை எழுப்பிய போது குறிப்புகள் வைத்துக்கொண்டு பேசலாம் என்றும் சில நேரங்களில் சில குறிப்புகளை அப்படியே அவையில் சொல்லலாம் என்றும் தலைவர் குறிப்புரைத்தார். 304

காலவரையறை—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த

கருத்துக்களுக்கு அமைச்சர்கள் விரிவாகப் பதில் சொல்லிய பிறகும் அந்த உறுப்பினர் பேசத் தொடர்ந்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்:

"இது சம்பந்தமாக அமைச்சர்கள் விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இதற்கு முன்னர் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இந்த சர்க்கரை ஆலை சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெளிவான அறிக்கையை இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். எனவே இவ்வளவுக்கும் பிறகு தாங்கள் இதுபற்றிப் பேசவேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முடிந்து விட்டது. எனவே உரையை இத்துடன் முடித்துக் கொள்ளலாம். 488

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய ஓர் உறுப்பினர் தெரிவித்த ஒரு கருத்தைத் தொடர்ந்து பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது:

(அ) தானிப்பாடி கிராமத்தை மையமாக கொண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாதம் 2-ந் தேதி திருவண்ணாமலை நகருக்கு வருகை புரிந்த போது, திருவண்ணாமலையிலே இருக்கின்ற அருணாச்சலேஸ்வரர் கோயில் தங்கத் தேர் அமைப்பதற்காக 60 இலட்சம் ரூபாயும், அங்கே இருக்கின்ற கோயில் மண்டபத்தை புதுப்பிப்பதற்காகவும், விமானங்களை புதுப்பித்தற்காவும் இராஜகோபுரத்தை அமைப்பதற்காகவும் 1.5 கோடி ரூபாய் செலவிலே அங்கே அனுமதி வழங்கினார்கள். இன்னைறக்கு தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு திருவண்ணமலை-சம்புவராயர் மாவட்ட மக்கள் சார்பில் எங்களுடைய நன்றியை அவர்கள் பாதத்தைத் தொட்டு முதற்கண் தெரிவித்துக் கொள்

கிறேன். இங்கே கேட்ட கேள்விக்கு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தானிப்பாடி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி ஆகும். அந்தப் பகுதியில் நூற்றுக்கு நூறு சதவீதம் என்று சொல்லப்படுகின்ற அளவுக்குவிவசாயத்தை நம்பிமக்கள் வசித்து வருகிறார்கள். அங்கே விளைகின்ற விளைப்பொருட்களைஏற்றிச் செல்ல வேண்டும் என்று சொன்னால் அருகில் இருக்கின்ற திருவண்ணாமலை நகருக்குச் செல்வதற்கு ஏறத்தாழ 35 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்ல வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனைச் செய்து விரைவில் தானிப்பாடியில் இப்படிப்பட்ட ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைத் துவக்குவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே தானிப்படி கிராமம்போதியவானாபுரம்ஒழுங்குமுறை விற்பனைக் கூட எல்லையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. தானிப்படியிலிருந்து வானாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 23 கிலோ மீட்டர் தொலைவிலும் திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 28 கிலோ மீட்டர் தொலைவிலும் செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 36 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. மேற்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தானிப்பாடியிலிருந்து செல்ல சாலை வழித்தடங்கள் இருக்கின்றன. செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட தாலூகா மையத்தில் பல்வேறு வசதிகள் அமையப்பெற்று இருக்கின்றன. தற்போது தானிப்படி கிராமத்தை மையமாகக் கொண்டு புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது போன்ற நடவடிக்கைகள் ஏதும்அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் எங்களுடைய தொகுதியில் வானாபுரம் கிராமத்திலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைந்து இருந்தாலும் தானிப்படியிலிருந்து அங்கே வரவேண்டும் என்று சொன்னால் போதிய அளவுக்கு பேருந்து வசதி இல்லை. மேலும் தானிப்பாடி அருகில் தர்மபுரி மாவட்டத்தின் எல்லை ஒட்டியிருக்கின்ற காரணத்தால், தர்மபுரி எல்லைக்குள் இருக்கின்ற மோத்தக்கல் போன்ற குக்கிராமங்களில் இன்றைக்கு விவசாயத் தொழிலை நம்பி இருப்பவர்கள் திருவண்ணாமலை வரவேண்டும் அல்லது வானாபுரம் வரவேண்டும் என்று சொன்

னால் மாட்டு வண்டியில் வரவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் இதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தானிப்பாடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை முன்னுரிமை தந்து அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று தானிப்பாடி கிராமப் பகுதிக்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நிலை, அங்கே விளையும் விளை பொருட்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருவார்களானால் அந்த அறிக்கையில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கும் என்று அவர்கள் குறிப்பு தருவார்களானால் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்றவாறு பணி துவக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர்.

14—

சிவகாசி கூட்டுறவுப் பால்பண்ணைக்குக் கூடுதலாகப் பால் வழங்குதல்.

*21576—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி கூட்டுறவுப் பால் பண்ணைக்குக் கூடுதலாக பால் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எவ்வளவு கூடுதலாக வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவு பால் பண்ணைகளுக்கு அரசு பால் வழங்குவதில்லை.

(ஆ) மற்றும் (இ): இந்தக் கேள்விகளுக்கு இடமில்லை.

னால் மாட்டு வண்டியில் வரவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் இதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தானிப்பாடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை முன்னுரிமை தந்து அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று தானிப்பாடி கிராமப் பகுதிக்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நிலை, அங்கே விளையும் விளை பொருட்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருவார்களானால் அந்த அறிக்கையில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கும் என்று அவர்கள் குறிப்பு தருவார்களானால் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்றவாறு பணி துவக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர்.

14—

சிவகாசி கூட்டுறவுப் பால்பண்ணைக்குக் கூடுதலாகப் பால் வழங்குதல்.

*21576—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி கூட்டுறவுப் பால் பண்ணைக்குக் கூடுதலாக பால் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எவ்வளவு கூடுதலாக வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவு பால் பண்ணைகளுக்கு அரசு பால் வழங்குவதில்லை.

(ஆ) மற்றும் (இ): இந்தக் கேள்விகளுக்கு இடமில்லை.

1994 மார்ச் 4]

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாள்தோறும் எவ்வளவு பால் வெளியிலிருந்து அனுப்பப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரத்திற்கு, சிவகாசி கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் சங்கம் பால் விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு அங்கு 8 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. அதிலே 4 ஆயிரம் லிட்டர் பாலை சிவகாசி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்கிறது. மீதமுள்ளதை தனியார்கள் விற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலங்களிலே அங்கேயுள்ள கன்ஸ்யூமர்களுக்கு பால் கொடுக்க முடியவில்லை. தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே இங்கே கொடுக்கப்படுகின்ற 8 ஆயிரம் லிட்டர் பாலையும் அங்குள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றிய சங்கங்களின் மூலமாக வெளியிலே இருந்து தருவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 15 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

15—

இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களின் வயதுவரம்பு.

* 22320—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு அதைப்பெற வயது வரம்பு ஏதேனும் உண்டா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 4]

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாள்தோறும் எவ்வளவு பால் வெளியிலிருந்து அனுப்பப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரத்திற்கு, சிவகாசி கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் சங்கம் பால் விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு அங்கு 8 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. அதிலே 4 ஆயிரம் லிட்டர் பாலை சிவகாசி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்கிறது. மீதமுள்ளதை தனியார்கள் விற்பனை செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலங்களிலே அங்கேயுள்ள கன்ஸ்யூமர்களுக்கு பால் கொடுக்க முடியவில்லை. தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே இங்கே கொடுக்கப்படுகின்ற 8 ஆயிரம் லிட்டர் பாலையும் அங்குள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றிய சங்கங்களின் மூலமாக வெளியிலே இருந்து தருவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 15 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

15—

இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களின் வயதுவரம்பு.

* 22320—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு அதைப்பெற வயது வரம்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதனைக் குறைக்கும் பரிசீலனை உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமூகத்தில் விதவைப் பெண்களாக, கணவரால் கைவிடப்பட்ட கைம்பெண்களாக இருக்கிற பெண்களுக்காவது இலவச தையல் இயந்திரங்களை அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு வயது வரம்பு ஏதேனும் உண்டா என்றுதான் கேட்டிருந்தார்கள். அதைத்தான் இல்லையென்று சொன்னேன். 20 வயதிலிருந்து 40 வயதுவரை யார் சமூகத்தில் நலிவடைந்த பெண்களாக இருந்தாலும் உடல் ஊனமுற்றவர்களாக இருந்தாலும் விதவைகளாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறோம். இதில் எந்தவித மாற்றமும் இல்லை. உடல் ஊனமுற்றவர்களுக்கு இன்னும் வயது வரம்பு தளர்த்தப்பட்டும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 வயதிலேயிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 40 வயதுக்கு மேற்பட்டும் பல ஏழைப் பெண்கள் வாழ்வதற்கு வழியில்லாத சூழ் நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு வசதியற்ற அந்தப் பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை வழங்க இயலாவிட்டாலும் எளிய தவணை முறையிலே வட்டியற்ற கடனாக தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தில் நலிவடைந்த பெண்களுக்கு சுயதொழில் செய்வதற்கு எல்லாவிதத்திலும் சமூக நலத்துறை உதவி செய்து வருகிறது. தையல் இயந்திரங்

1994 மார்ச் 4]

களுக்கு லோன் தருவதில்லை. இலவசமாகத்தான் வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்ற பெண்கள், விதவைப் பெண்கள் என்கின்ற அடிப்படையில் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத்தான் இதுவரையில் சமூக நலத்துறையில் அப்ளை செய்து வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 16, டாக்டர் அ. ஸ்ரீதரன் மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

16—

கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றும் திட்டம்.

*20056—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை தென்னிந்திய வனச்சரகர் கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை மதிக்க முடியாத வைரத்தை பித்தளையில் பதித்து அழகு பார்ப்பதைவிட, தங்கத்தில் பதித்து அழகு பார்த்தால்தான் தங்கத்துக்கும் மதிப்பு அந்த வைரத்திற்கும் மதிப்பு. அதைப்போல கோவை மாநகரத்தினுடைய மத்தியில் இருக்கக்கூடிய வனக் கல்லூரியை வால்பாறை மலைப்பகுதியும் வனமும் நிறைந்த பகுதிக்கு மாற்றினால்தான் வால்பாறையினுடைய வனத்திற்கும் வனப்பு; வனக் கல்லூரிக்கும் வனப்பு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் சிறப்பானது. ஆனால் இந்தக் கல்லூரியை சுமார் 75 ஆண்டுக்காலம் 1987 வரை மத்திய அரசு நடத்தி வந்தது. அதற்குப்பிறகு மத்திய அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து இதை மாநில அரசே நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். மீண்டும்

களுக்கு லோன் தருவதில்லை. இலவசமாகத்தான் வழங்கப் பட்டு வருகிறது. நலிவுற்ற பெண்கள், விதவைப் பெண்கள் என்கின்ற அடிப்படையில் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத் தான் இதுவரையில் சமூக நலத்துறையில் அப்ளை செய்து வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 16, டாக்டர் அ. ஸ்ரீதரன் மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

16—

கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றும் திட்டம்.

*20056—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை தென்னிந்திய வனச்சரகர் கல்லூரியை வால் பாறைக்கு மாற்றுவதற்கு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை மதிக்க முடியாத வைரத்தை பித்தளையில் பதித்து அழகு பார்ப்பதைவிட, தங்கத்தில் பதித்து அழகு பார்த்தால்தான் தங்கத்துக்கும் மதிப்பு அந்த வைரத்திற்கும் மதிப்பு. அதைப்போல கோவை மாநகரத்தினுடைய மத்தியில் இருக்கக்கூடிய வனக் கல்லூரியை வால்பாறை மலைப்பகுதியும் வனமும் நிறைந்த பகுதிக்கு மாற்றினால்தான் வால்பாறை யினுடைய வனத்திற்கும் வனப்பு; வனக் கல்லூரிக்கும் வனப்பு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் சிறப்பானது. ஆனால் இந்தக் கல்லூரியை சுமார் 75 ஆண்டுக்காலம் 1987 வரை மத்திய அரசு நடத்தி வந்தது. அதற்குப்பிறகு மத்திய அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து இதை மாநில அரசே நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். மீண்டும்

மத்திய அரசு அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து மத்திய அரசே நடத்துவதாக மாநில அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மத்திய அரசு இந்தக் கல்லூரியை எடுத்து நடத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு இசைவு அளித்துள்ளது என்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு உதவ முடியவில்லை என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைசசர்.

17—

அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் அமைத்தல்.

*21323—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம் அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) —இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேட்பாளராக இருந்த நாள்முதல் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மீது திருவண்ணாமலை அருணாசல ஈஸ்வரர் ஆலயத்தில் என் தாய்மீது என்றென்றும், மாதந்தோறும் அர்ச்சனை செய்த அந்த திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குத் தங்கத் தேர் வழங்கிய என்னுடைய இதய தெய்வம் அவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில், போளூரிலே உள்ள என்னுடைய சொந்தக் கிராமமான, நான் பிறந்த மண்ணின் அத்திமூர் கிராமத்தில் கிளை நூலகம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அறிவொளி இயக்கத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கல்வி அறிவு பெற வேண்டும் ; . பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் கல்வியறிவு பெற

மத்திய அரசு அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து மத்திய அரசே நடத்துவதாக மாநில அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மத்திய அரசு இந்தக் கல்லூரியை எடுத்து நடத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு இசைவு அளித்துள்ளது என்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு உதவ முடியவில்லை என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைசசர்.

17—

அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் அமைத்தல்.

*21323—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம் அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) —இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேட்பாளராக இருந்த நாள்முதல் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மீது திருவண்ணாமலை அருணாசல ஈஸ்வரர் ஆலயத்தில் என் தாய்மீது என்றென்றும், மாதந்தோறும் அர்ச்சனை செய்த அந்த திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குத் தங்கத் தேர் வழங்கிய என்னுடைய இதய தெய்வம் அவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில், போளூரிலே உள்ள என்னுடைய சொந்தக் கிராமமான, நான் பிறந்த மண்ணின் அத்திமூர் கிராமத்தில் கிளை நூலகம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அறிவொளி இயக்கத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கல்வி அறிவு பெற வேண்டும் ; . பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் கல்வியறிவு பெற

1994 மார்ச் 17]

வேண்டும் என்று புரட்சித் தாய் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து எங்கள் அத்திமூர் கிராமத்திற்குக் கிளை நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்திமூர் கிராமத்திற்கு நூலகம் வேண்டுமென்ற கோரிக்கை இதுவரை முறையாகப் பெறப்படவில்லை. அத்திமூர் கிராமத்திற்கு மிக அருகில்தான் 4 கிலோ மீட்டர் தொலைவில் போளூர் கிளை நூலகம் செயல்பட்டு வருகிறது. தான் பிறந்த மண்ணில் நிச்சயமாக ஒரு பகுதி நேர நூலகம் வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்குமானால் மாவட்ட நூலக, பெயரில் 5 முதல் 10 சென்ட் காலி நிலமும். நூலகத்திற்கு ஏற்றதாக வாடகை இல்லாமல் உறுதியான ஒரு கட்டிடமும். ரூபாய் 2,000 அல்லது அதற்கு ஈடான நூலகத் தளவாடங்களும் வழங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்வருவார்களானால் அத்தோடு குறைந்த அளவு 100 உறுப்பினர்களைச் சேர்த்துத் தருவதாக வாக்களிப்பாரானால் இந்தக் கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இதுபோன்ற குறிப்புகள், நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த பொழுதே எங்களுடைய கிராமத்திற்கு நூல் நிலையம்—கிளை நூல் நிலையம் தேவை என்று அனைத்து வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே ஒரு கேள்விக்கு சொல்லியிருக்கிறேன். கேள்வி நேரத்திலே அத்தகைய குற்றச்சாட்டு கூடாது அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. நா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் அதனை மீண்டும் பரிசீலனை செய்து வரும் நிதியாண்டில் கிளை நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருக்குமானால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டிலேயே அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1994 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18, திரு டி. வேலையா, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

18—

ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கிராமங்கள் ஒட்டுமொத்தமாக பயனடையத் திட்டங்கள் தீட்டுதல்

*22146— திரு. டி வேலையா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களில் தனி நபர்களுக்குக் கடன் வழங்குவதற்குப் பதிலாக, கிராமங்கள் ஒட்டு மொத்தமாக பயன் அடையும் வகையில் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து மத்திய அரசுதான் கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டும்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ. ஆர், டி. பி. கடனைப் பொறுத்தவரையில் 100 பேர்கள் கடன் கேட்டால் 2 அல்லது 3 பேர்களுக்குத்தான் அந்தக் கடனை வழங்குகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கூட வங்கிகளில் சரியான ஒத்துழைப்புக் கொடுக்கப்படுவதில்லை. இதனால், கடன் கிடைக்காதவர்கள் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் நெருக்கடிக்கு ஆளாக்குகிறார்கள். ஆகவே இப்படி தனிப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் பலன் அடைவதைவிட, ஒட்டு மொத்தமாக அந்த பகுதியிலே விவசாயம், தச்சுக்கூடம், பால் பண்ணை போன்ற தொழில்களுக்கு, ஊருக்காக அந்த கிராமத்திற்காக ஒட்டு மொத்தமாக இந்த பணத்தை முதலீடு செய்து, அங்கே தொழில் பயிற்சி எல்லாம் அளித்து, அங்கே இருக்கிற மக்களுக்குப் பொதுவாக வேலைவாய்ப்பு கொடுத்தால், இப்படிப்பட்ட திட்டங்கள் பொதுமக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும், ஆகவே. அந்த அடிப்படையில் மத்திய அரசையும் கேட்டு, இந்த திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்று சொல்லுகின்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசால் அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்படி அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்

[1994 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18, திரு டி. வேலையா, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

18—

ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கிராமங்கள் ஒட்டுமொத்தமாக பயனடையத் திட்டங்கள் தீட்டுதல்

*22146— திரு. டி வேலையா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களில் தனி நபர்களுக்குக் கடன் வழங்குவதற்குப் பதிலாக, கிராமங்கள் ஒட்டு மொத்தமாக பயன் அடையும் வகையில் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து மத்திய அரசுதான் கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டும்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ. ஆர், டி. பி. கடனைப் பொறுத்தவரையில் 100 பேர்கள் கடன் கேட்டால் 2 அல்லது 3 பேர்களுக்குத்தான் அந்தக் கடனை வழங்குகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கூட வங்கிகளில் சரியான ஒத்துழைப்புக் கொடுக்கப்படுவதில்லை. இதனால், கடன் கிடைக்காதவர்கள் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் நெருக்கடிக்கு ஆளாக்குகிறார்கள். ஆகவே இப்படி தனிப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் பலன் அடைவதைவிட, ஒட்டு மொத்தமாக அந்த பகுதியிலே விவசாயம், தச்சுக்கூடம், பால் பண்ணை போன்ற தொழில்களுக்கு, ஊருக்காக அந்த கிராமத்திற்காக ஒட்டு மொத்தமாக இந்த பணத்தை முதலீடு செய்து, அங்கே தொழில் பயிற்சி எல்லாம் அளித்து, அங்கே இருக்கிற மக்களுக்குப் பொதுவாக வேலைவாய்ப்பு கொடுத்தால், இப்படிப்பட்ட திட்டங்கள் பொதுமக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும், ஆகவே. அந்த அடிப்படையில் மத்திய அரசையும் கேட்டு, இந்த திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்று சொல்லுகின்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசால் அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்தப் படுகிறது. இப்படி அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்

1994 மார்ச் 17]

தப்படுகின்ற பொழுது நிதி ஒதுக்கீடும் மத்திய அரசாலே நிர்ணயம் செய்யப்பட்டு மொத்த நிதி ஒதுக்கீட்டிலே 50 சதவீதம் மத்திய அரசாலும்; 50 சதவீதம் நிதி உதவி மாநில அரசாலும் அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, நிதியுதவி அவர்கள் அளிக்கின்ற காரணத்தால் மாவட்ட அளவிலே இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்றபொழுது ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு பயனாளிகள் வழங்கப்பட வேண்டுமென்ற குறியீட்டையும் அவர்களே நிர்ணயிக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பேருக்குத்தன் இந்த ஆண்டு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு மேல் நாம் வழங்க முடியாது. ஆகவே, இது கொள்கை முடிவு; மத்திய அரசு எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலும், ஏற்கெனவே இந்தத் திட்டம் முறையாக மாநில அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிற காரணத்தாலும், தற்போது இருக்கின்ற முறையே போதுமானது என்று கருதப்படுகிறது.

திரு. டி. வேலய்யா: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கடனுக்கு விண்ணப்பிப்பவர்களைப் பொறுத்த வரையில் கடன் கிடைத்தவர்களுக்கு மட்டும் தகவல் கொடுக்கிறார்கள், கடன் கிடைக்காத பல பேர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்களா அல்லது வருகிற ஆண்டிலேயாவது அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா என்று எந்த விவரமும் கொடுக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட காரணத்தால் வருஷம் முழுவதும், சட்டமன்ற உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு மக்கள் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த மாவட்ட வளர்ச்சி முழுமுகமைக்குத் தக்க அறிவுரை வழங்கி, கடனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றாலும், முறையான பதிலை எழுத்து மூலமாக அறிவிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்குச் சாத்தியக் கூறாக இருக்கும் என்பதை ஆராய்ந்து இதுப்பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கு இந்த திட்டத்தின் மூலமாக பயனாளிகள் கிட்டதட்ட ஓராண்டிற்கு இருபதாயிரத்திற்கும் மேலாகப் பயனடைகிறார்கள். ஆக, ஆண்டிற்கு இருபதாயிரத்

திற்கும் மேலாக இந்தத் திட்டத்தின் மூலமாக மாநில அரசு, பயனாளிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறபோது, ஒரு கோடி மக்களுக்கும் மேலாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், இது சம்பந்தமாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இது ஒரு நல்ல யோசனை என்ற அடிப்படையில் இது சம்மந்தமாக உடனடியாக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திருமதி ரமணி நல்லதம்பி மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

19—

பனைத் தொழில் செய்யும் நாடார் வகுப்பினரை மிகவும் பிற் படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*24606—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைத் தொழில் செய்து மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுபவர்களைப் பெருவாரியாகக் கொண்ட நாடார் இனம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. து. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின்றி நாடார் வகுப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடார் சமுதாயத்தைச் சார்ந்த மக்களை, கிராமப்புறங்களிலே பார்ப்போமேயானால், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பனை ஏறுகிற தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், மிகவும் கீழ்த்தரமான, பொருளாதாரத்திலும் சமூக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய கீழ்த்தரமான வாழ்க்கை முறையை அவர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க

[1994 மார்ச் 17

திற்கும் மேலாக இந்தத் திட்டத்தின் மூலமாக மாநில அரசு, பயனாளிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறபோது, ஒரு கோடி மக்களுக்கும் மேலாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், இது சம்பந்தமாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இது ஒரு நல்ல யோசனை என்ற அடிப்படையில் இது சம்மந்தமாக உடனடியாக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திருமதி ரமணி நல்லதம்பி மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

19—

பனைத் தொழில் செய்யும் நாடார் வகுப்பினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*24606—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைத் தொழில் செய்து மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுபவர்களைப் பெருவாரியாகக் கொண்ட நாடார் இனம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. து. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின்றி நாடார் வகுப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடார் சமுதாயத்தைச் சார்ந்த மக்களை, கிராமப்புறங்களிலே பார்ப்போமேயானால், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பனை ஏறுகிற தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், மிகவும் கீழ்த்தரமான, பொருளாதாரத்திலும் சமூக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய கீழ்த்தரமான வாழ்க்கை முறையை அவர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேண்டியது, காலத்தின் கட்டாயம் என்று கருதுகிற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 'கமிஷன்' அமைக்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும்கூட இன்னும் அதற்கு நீங்கள் 'டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' கொடுக்காத காரணத்தினால், அது பற்றி வரையறுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதை எப்போது நீங்கள் செயல்படுத்த இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இதுபோன்ற பல்வேறு சமூக, பொருளாதார, கல்வியிலே பின் தங்கியுள்ள மக்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அறிவதற்காக ஒரு நிரந்தரமான ஆணையத்தினை அதாவது பிற்படுத்தப்பட்டோர் நல நிரந்தர ஆணையத்தினை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த ஆணையத்திற்கு 'டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையத்திற்கு, அவர்கள் மனு கொடுப்பார்கள் எனில், அதுகுறித்து ஆணையம் அளிக்கிற பரிந்துரையின் பேரிலே, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவாரியான அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற இந்தப் பனை பொருள் தொழிலைச் செய்துவருகிற மக்கள், நிச்சயமாக இன்றைக்கு பல்வேறு சமுதாயத்தினரோடு அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் பின் தங்கிய நிலையிலே வாழ்கிற காரணத்தினால், அந்தக் 'கமிஷனிலே' நீங்கள் பரிந்துரை செய்து, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள அரசுக்கு மனு கொடுப்பார்கள் எனில், அரசிடமிருந்து அந்த ஆணையத்திற்கு அந்த மனு பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

[1994 மார்ச் 17

20—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் அமைத்தல்.

*21826—திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார் கோவில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரசு கேட்கும்போதெல்லாம் கொடுக்கிற அரசாக இருப்பதால்தான், இப்படியெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. கேட்காத பொதுமக்களின் பிரச்சினையைக்கூட, அலசி ஆராய்ந்து தமிழகம் முழுவதும் தீர்த்து வருவதால்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சிதலைவி அவர்களுடைய அரசை—சிறந்த அரசை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் துணைக் கேள்வியைக் கேட்கிறேன். எனது மாவட்டத்திலே, கடலூரிலே ஒரு பயிற்சி நிலையம் உள்ளது. அதைப் பயிற்சி நிலையத்திற்கு நாங்கள் சென்று பயிற்சி எடுக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இது மாவட்டத்தின் தென்கோடிப் பகுதியாக இருப்பதால், அங்கே சென்று வருவதற்குச் சிரமமாக உள்ளது. மேலும், பனை மரங்களும், தென்னை மரங்களும், ஈச்ச மரங்களும் அங்கே அதிக அளவு உள்ளன. அங்கே, கச்சாப் பொருள்கள் வீணாகிற சூழ்நிலை உள்ளது. அவற்றைப் பயன்படுத்தும்பொருட்டு காட்டுமன்னார் கோயில் தொகுதியில் ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்போமேயானால் அந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும்போது, அங்கு உற்பத்தியும் தொடங்கக்கூடிய நிலை இருப்பதால் அரசுக்கு வருவாய் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகவே, மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் மா. புடையூரில் ஏற்கனவே ஒரு பனைப்பொருள் திட்ட மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் மூலம்

காட்டுமன்னார்கோவில் தொகுதிக்கு மட்டுமல்லாமல் இந்தமாவட்டத்தில்பனைபொருள்உற்பத்தியில்ஈடுபட்டு இருக்கும் அனைத்துத் தொழிலாளர்களின் போதியத் தேவையை நல்லமுறையில் நிறைவு செய்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பயிற்சி மையமானது தென்னகத்தே அமைந்துள்ள 4 மாநிலங்களுக்கும் பொதுவான மையமாக இருக்கும் காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கோ அல்லது அதனுடைய உபகிளைகளைத் தொடங்குவதற்கோ சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுதல் எதிர்காலத்தில் பரிசீலித்து கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. ஜானகிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் இன்னும் முடியவில்லை; உட்காருங்கள். திரு. என். ஆர். ராஜேந்திரன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைப் பயிற்சி மையமாவது காட்டுமன்னார் கோவிலில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட மா. புடையூர் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலே வருவதாக அறிகிறேன். எனவே தேவையினைக் கருதி தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு எதிர்காலத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலே மையமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருகின்ற அந்தப் பயிற்சி மையத்தை மாற்றுவதற்கு முடியாது என்று சொன்னார்கள். அரசு அதிலே உறுதியாக இருக்குமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் ஆணையத்தின் மூலம் நான்கு மாநிலங்களுக்கும் பொதுவாக அமைக்கப்பட்ட மையம் அது. எனவே அதை வேறு பகுதிக்கு மாற்றுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1994 மார்ச் 17

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 4 வரை)

முதல் பட்டியல்

1—

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் பொது தொலைபேசி வசதி செய்தல்.

வினா எண் 14095—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் பொதுத் தொலைபேசி வசதியை அதிகப்படுத்த மத்திய அரசிற்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தற்சமயம் நான்கு பொதுத் தொலை பேசி கூண்டுகள் இயங்கி வருகின்றன. மேலும் மத்திய தந்தி அலுவலகம், சென்னை, உயர் நீதிமன்ற வளாகத்தில் எஸ்.டி.டி.,ஐ.எஸ்.டி.,பி.சி.ஓ. மற்றும் பேக்ஸ் வசதிகளுடன் கூடிய ஒரு துணைக்கோள் உதவியால் இயங்கும் தந்தி அலுவலகத்தை அமைக்க இருக்கிறது. ஆகையால், மேற்கூறிய வசதிகள் வழக்காடும் பொதுமக்கள் மற்றும் வழக்குரைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானவை என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

2—

கள்ளச் சாராய ஒழிப்பு நடவடிக்கைகளில் கடமை தவறி பணிநீக்கம் ஆன கிராம நிர்வாக அலுவலர்கள் விவரம்.

வினா எண் 12686—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளச் சாராய ஒழிப்பு நடவடிக்கைகளில் கடமையை செய்யாமல் சஸ்பென்ட் ஆன கிராம நிர்வாக அலுவலர்கள் எத்தனை பேர் ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் கள்ளச் சாராய ஒழிப்பு நடவடிக்கைகளில் தங்களது கடமைகளை ஒழுங்காகச் செய்யாத குற்றத்திற்கா தென்னாற்காடு, புதுக்கோட்டை, மாவட்டங்களில் தல ஒருவரும், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தலா இருவருமாக மொத்தம் '8' நபர்கள் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

3—

சுகாதாரப் பிரச்சினையை ஆராய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஆலோசனைக்குழு அமைக்கும் திட்டம்.

வினா எண் 1370—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர் பட்டம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைத்து மாவட்டங்களில் உள்ள சுகாதாரப் பிரச்சினையை ஆராயவும் அந்தந்த மாவட்டங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

டாக்டர் பட்டம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தனி ஆலோசனைக் குழு அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது ஒவ்வொரு வட்டம் மற்றும் மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளிலும் மருத்துவ ஆலோசனைக் குழு இயங்கி வருகிறது. அவற்றை திருத்தியமைக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தற்போது புரட்சித் தலைவி இலவச மருத்துவ நல முகாம்களை மாவட்டங்களில் நடத்திவரும் திட்டத்தை அரசு அமுல்படுத்தியுள்ளது.

4—

முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலைய பழுதடைந்த கட்டிடத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை.

வினா எண் 2141—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்த கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1994 மார்ச் 17

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

ஆம். முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கும் கட்டிடம் 50 வருடங்களுக்கும் மேலாக அக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது எனவும் அதனை பழுதுபார்க்க சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும் என துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருவாரூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. முத்துப் பேட்டை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் பழுது பார்ப்பது குறித்து உரிய திட்ட மதிப்பீடுகள் இயக்கு நரிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

5—

மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய நல மையமாக்கும் திட்டம்.

வினா எண் 10374— டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்பட்டி (வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டம்) அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய நல மையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மேம்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை சமுதாய நல மையமாக மேம்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் நிதி நிலையை அனுசரித்து மேம்படுத்தப் படும்.

1994 மார்ச் 17]

6—

தொக்காளிக்காட்டிலும் இடையாத்தியிலும்
தாய்சேய் நலவிடுதி ஏற்படுத்தும் திட்டம்

வினா எண். 12566—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் தொக்காளிக்காட்டிலும், பேராவூரணி ஒன்றியம், இடையாத்திலும் தாய்சேய் நல விடுதி இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்புள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தஞ்சைமாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காளிக்காட்டில் ஒரு தாய்சேய் நல விடுதி இயங்கு வருகின்றது. பேராவூரணி ஒன்றியம், இடையாத்திலும் ஒகி தாய்சேய் நல மையம் இயங்கி வருகின்றது.

7—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கம்ப்யூட்டர்
அறிமுகப்படுத்தும் திட்டம்.

வினா எண். 7766—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் எந்த வகைகளில் ''கம்ப்யூட்டர் சிஸ்டம்'' செயல்படுத்தப்படுகிறது?

(ஆ) இதன்மூலம் ஏற்கனவே இருந்த பணிச்சுமை மற்றும் காலதாமதம், ஒழுங்கற்ற தன்மை குறைந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் கம்யூட்டர் சிஸ்டம் கீழ்க்கண்ட பலவகைகளில் செயல் படுத்தப்படுகிறது.

1. பயணச்சீட்டு முன்பதிவு, 2. சம்பளப் பட்டியல், 3. வைப்பு நிதிக் கணக்கு, 4. பணியாளர் நிர்வாகம், 5. கணக்கு நிர்வாகம், 6. போக்குவரத்து மற்றும் நிர்வாகத் தகவல் தொடர்பு, 7. தொழில் நுட்பத் தகவல்கள் முதலானவை.

(ஆ) ஆம். இதன்மூலம் பணிச்சுமை குறைந்துள்ளது. குறித்த நேரத்தில் பணிகள் முடிக்கப்படுகிறது. காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. மேலும் ஒழுங்கற்ற தன்மை குறைந்துள்ளது.

8—

பேராவூரணியிலிருந்து கரம்பக்குடி வரை சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

வினா எண் 12437—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து சீதாம்பாள்புரம், இடையாத்தி வழியாக கரம்பக்குடி வரை சோழன் போக்குவரத்துக்கழகம் மூலம் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

பேராவூரணியிலிருந்து சீதாம்பாள்புரம் வரை சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் 48 நடைகளும் புற நகர் பேருந்துகள் நான்கு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. சீதாம்பாள்புரத்தில் இருந்து இடையாத்தி வழியாக கரம்பக்குடி வரை நகரப் பேருந்துகள் 36 நடைகளும், புற நகர் பேருந்துகள் 12 நடைகளும் இயக்கப்படுகின்றன. இத் தடத்தில் தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளது. பேராவூர்ணியிலிருந்து கரம்பக்குடிக்கு சீதாம்பாள்புரம், இடையாத்தி வழியாக நேரடி பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1994 மார்ச் 17]

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டிணம் செல்லும் தடம் எண் 14ஐ கூடுதல் நடைகள் இயக்க திட்டம்.

9—

வினா எண் 13757—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பழவேற்காடு, கீழப்பழஞ்சூர், அதிராம்பட்டினம் செல்லும் பேருந்து தடம் எண். 14-ஐ முன் போல் நான்கு தடவை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை-அதிராம்பட்டிணம் (வழி) கீழப்பழஞ்சூர் பழவேனிற்காடு தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண். 14 நான்கு நடைகள் தற்பொழுது இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படும், நடைகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் நடைகள் இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

10—

பட்டுக்கோட்டை-சூரியநாராயணபுரம் (வழி) திருச்சிற்றம்பலம் தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம்.

வினா எண் 13762—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து திருச்சிற்றம்பலம்-சூரியநாராயணபுரம் வழியாகச் செல்லும் நகரப் பேருந்தை 1992—1993-ல் மீண்டும் இயக்க அரசிடம் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை-சூரியநாராயணபுரம் (வழி) திருச்சிற்றம்பலம் தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று நான்கு நடைகள் தற்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன.

11—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்க துணை இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 9847—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பட்டு மற்றும் கைத்தறி சங்கங்களின் துணை இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பட்டு மற்றும் கைத்தறி சங்கங்களின் துணை இயக்குநர் அலுவலகம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

12—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை.

வினா எண் 492—திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதியைச் சேர்ந்த பெருமாள் ஏரிக்கு நீர்வரும் வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள் செய்து பயிர் செய்து வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெருமாள் ஏரியின் வரத்து வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளில் 50 விழுக்காடு (50%) வனத்துறையினரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை, இந்தக் கோடையில் அகற்றத் திட்டமிடப்பட்டது. ஆனால், இதற்குத் தேவையான புல்டோசர் குறித்த காலத்தில் கிடைக்காததாலும், பருவமழை துவங்கும் நிலையில் உள்ளதாலும் திட்டமிட்டபடி நடப்பு ஆண்டில் ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்ற இயலவில்லை. எனவே, மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அடுத்த ஆண்டில் முன்னுரிமை கொடுத்து அப்புறப்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

13—

சனத்குமார் நதியில் அணைக்கட்டும் திட்டம்.

வினா எண் 4233— திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி வேப்பனப்பள்ளி அருகே சனத்குமார் நதியில் சங்கமடுகு என்ற இடத்தில் அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) கிருஷ்ணகிரி தொகுதி வேப்பனப்பள்ளி அருகே சனத்குமார் நதியில் அணை கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

வெட்டாறு வடிகால் ஓடையை அகலப்படுத்தி ஆழப்படுத்த திட்டம்.

வினா எண் 5383—திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி தா. பழூர் ஒன்றியம் மதனத்தூர் (பொதுப்பணித்துறை) பிரிவின் கீழுள்ள வெட்டாறு வடிகால் ஓடையை அகலப்படுத்தி ஆழப்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) வெட்டாறு வடிகால் ஓடையை அகலப்படுத்தி ஆழப்படுத்தி அதனை சிந்தாமணி வடிகாலில் விழச் செய்வதற்கும், வலதுபுறம் கரை போடவும் வழி வகைகளுடன் மதிப்பீடு கூர்ந்தாய்வில் உள்ளது.

(ஆ) மேற்படி பணிக்காக ரூ. 24.00 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு பொதுப்பணித்துறை தனி அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

15—

வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 7600—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைத்து சி. முட்லூரையும், பி. முட்லூரையும் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

நாகப்பட்டினம் கோட்டத்தில் சாலைகளைப் பராமரிக்க நடவடிக்கை.

வினா எண் 8450—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் கோட்டத்தில் திருமருகல் துறையூர் சாலை நெடுஞ்சாலைத் துறையில் உள்ளதில் திருமருகல்—மருங்கூர் வரை நெடுஞ்சாலை கீழும் எஞ்சியவை ஒன்றியம் பராமரிப்பிலும் உள்ளவற்றை சீர் செய்ய மையசாலை நிதியில் பராமரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

6.4 கி.மீ. நீளமுள்ள திருமருகல் துறையூர் சாலையில் கி.மீ. 0/0-3/0 (3.00 கி.மீ.) வரை நெடுஞ்சாலை துறையினரால் பராமரிப்புச் செய்யப்பட்டுவரும் இதர மாவட்டச் சாலையாகும் இதில் தற்போது பேருந்து போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. கி.மீ. 3/0.4/4 வரை திருமருகல் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள கருங்கல் தள சாலையாகவும், கி.மீ. 4/4—6/4 வரை-ஊராட்சி ஒன்றிய மண் தள சாலையாகவும் அமைந்துள்ளது. இச்சாலையில் கி.மீ. 3/0—6/4 வரையுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைப் பகுதியை மேம்பாடு செய்யும் பணியை கி.மீ. 4/4-ல் 20 மீட்டர் நீர்வழிப்பாதையுடன் கூடிய புத்தாற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டுதல் உட்பட ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் மைய சாலை நிதி திட்டத்தில் மேற்கொள்ள ஏற்கனவே தமிழ்நாடு அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[1994 மார்ச் 17

நடுக்காவேரி குழமாத்தூர் விண்ணமங்கலம் பாலம் வரையிலுள்ள சாலையை சீரமைக்கும் திட்டம்.

வினா எண் 8503—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுக்காவேரி குழமாத்தூர், அள்ளூர், வெண்ணாற்றங்கரை வழியாக விண்ணமங்கலம் பாலம் வரையிலுள்ள சாலையை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நடுக்காவேரி குழமாத்தூர், அள்ளூர் வெண்ணாற்றங்கரை வழியாக விண்ணமங்கலம் பாலம் வரையிலுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையினால் இதர மாவட்டச் சாலையாக பராமரிப்பு செய்யப்பட்டு வரும் கீழ்க்காணும் மூன்று சாலைப் பகுதிகளைக் குறிக்கும்:—

		கி.மீ.
1,	தோகூர்—அய்யம்பட்டைசாலை கி.மீ. 26/0-ல் இருந்து குழமாத்தூர் சாலை கி.மீ. 0/0—4/0	4.0
2.	அள்ளூர்-அலிசக்குடி சாலை கி.மீ. 0/0—2/9	2.9
3.	வெண்ணாறு இடதுகரை திருக்காட்டுப்பள்ளி–செங்காப்பட்டி சாலையில் கி.மீ. 5/10-ல் பிரிந்து செல்லும் தென் பெரம்பூர் சாலை கி.மீ. 0/0—7/6 ..	7.6
	மொத்தம்	14.5

1994 மார்ச் 17]

இதில் வரிசை எண் 1-ல் உள்ள நடுக்காவேரி—குழமாத்தூர் சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது. வரிசை எண் 2-ல் உள்ள அள்ளூர்—அனிச்சக்குடி சாலை கி.மீ. 0/0—1/0 வரையுள்ள பழுதடைந்துள்ள ஓடு தளத்தை காலமுறை புதுப்பிக்கும் பணியாக (Periodical Renewal) ரூ.81,000 (ரூபாய் எண்பத்தொன்றாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பணி செயலாக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள சாலைப் பகுதிகள் நல்ல நிலையில் உள்ளது. வரிசை எண் 3-ல் உள்ள தென் பெரம்பூர் சாலையில் கி.மீ. 3/0—4/0 வரையிலான பகுதியை 1992—93 காலமுறை புதுப்பித்தல் பணியாக ரூ. 0.92 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. கி.மீ. 4/0—6/0 வரையில் உள்ள பகுதியை ஏற்கனவே 1991—92 ஆம் ஆண்டு பராமரிப்பின்கீழ் தார் தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

18—

கிருட்டிணகிரி அணையில் புதிய பாசனக்கால்வாய் அமைக்க பரிசீலனை.

வினா எண் 8618—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி அணையின் வலதுபுறக் கால்வாய்ப் பாசன பிரிவிலிருந்து வறட்சி மிகுந்த சோபனூர்—தட்டர அள்ளிப் பகுதிக்கு புதிய பாசனக் கால்வாய் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போதுமுதல் துவங்கப்படும் ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) சோபனூர்—தட்டர அள்ளிப் பகுதிக்குப் புதிய பாசனக் கால்வாய் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மேலே குறிப்பிட்ட விளக்கத்தின் அடிப்படையில் இவ்வினா எழவில்லை.

19—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சானல்களை பழுது நீக்க நடவடிக்கை.

வினா எண் 9731—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சானல்களை பழுது நீக்க 1991—1992-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் பழுது நீக்கிய சானல்களின் விவரம் என்ன ?

(இ) பழுது நீக்கிய பின்பு எல்லாப் பகுதிக்கும் தண்ணீர் விவசாயததிற்குச் செல்கிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ரூ. 53.48 இலட்சம்.

(ஆ) சுமார் 266 சானல்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளது.

(இ) ஆம் பழுது நீக்கிய பின்பு எல்லா பகுதிக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது.

20—

காட்பாடி தொகுதி வெள்ளக் கால்வாயை சீர் செய்ய நடவடிக்கை.

வினா எண் 9426—திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி, திருவலம் பகுதியும் கெம்பராஜபுரம் என்ற இடத்தில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் பாசனம் தரக்கூடிய வெள்ளக் கால்வாயை சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஆம். மேற்படி பணிக்காக ரூ. 60,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டு உள்ளது. விரைவில் ஒப்பந்தக்காரர் நியமனம் செய்து பணி துவங்கப் பட உள்ளது. வரும் மழைக் காலத்திற்கு முன்பாக, பணியை முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

21—

நிலக்கோட்டைத் தொகுதி, பேரணைப் பாலத்தை சீர் செய்ய நடவடிக்கை.

வினா எண் 9751— திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி பேரணையில் கட்டப் பட்ட பாலம் எப்போது கட்டப்பட்டது?

(ஆ) அப்பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளதைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்;

(அ) பேரணையில் கட்டப்பட்ட பாலமானது 1898-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

(ஆ) அப்பாலத்திலுள்ள பழுதுகள் சரி செய்யப்பட்டு விட்டன.

22—

கொடுமுடியிலிருந்து ஈரோடு, கரூர் சாலையை அகலப்படுத்தும் திட்டம்.

வினா எண் 12116—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியிலிருந்து ஈரோடு மற்றும் கரூர் செல்லும் தார் சாலைகளை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்;

(அ) மற்றும் (ஆ) : இச்சாலைகள் ஏற்கனவே இருவழிப் பாதை சாலையாக உள்ளதால் தற்பொழுது அகலப்படுத்தும் திட்டம் இல்லை.

23—

நெடுஞ்சாலை பதிவுறு எழுத்தர்களுக்கு இளநிலை உதவியாளராக பணி உயர்வு அளித்தல்.

வினா எண் 12179—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை கிராமப்பணித்துறையில் பணிபுரியும் பதிவு எழுத்தர்கள் ஐந்து ஆண்டு பணி முடிந்த பின் இளநிலை உதவியாளராக பணி உயர்வு அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்;

(அ) ஆம்.

(ஆ) 5 ஆண்டுகள் முறையாக பணிமுடிந்த பதிவுறு எழுத்தர்களை அவர்கள் முதுநிலைப்படி, மொத்த காலி பணியிடங்களில், 20 விழுக்காடு பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

24—

ராஜாமடம் ஆதிதிராவிடர்கள் தெருவிற்கு தெருவிளக்கு அமைக்கும் திட்டம்.

வினா எண் 12186—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ராஜாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992—93-ல் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்யறிம் ராஜாமடம் ஆதி திராவிடர்கள் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்துக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

25—

பாதரங்கோட்டை ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைக்க திட்டம்.

வினா எண் 12200—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (தெற்கு) ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒரு விளக்கு இணைப்புதர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை:—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்;

திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (தெற்கு) ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக்கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

26—

காயாவூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைக்க திட்டம்.

வினா எண். 12213—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் காயாவூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி தமிழ்நாடு மின்சாரா வாரியத்திடம் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

27—

ஊமத்தநாடு ஆதி திராவிடர்கள் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு ஏற்படுத்த திட்டம்.

வினா எண் 11216—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு காமாட்சி அம்மன் கோவில் தெருவிலுள்ள ஆதி திராவிடர்களின் குடிசைகளுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை:—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித்துறை அமைச்சர்;

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்த நாடு காமாட்சி அம்மன் கோவில் தெருவிலுள்ள ஆதிதிராவி விடர்களின் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

28—

சேதுபாவாசத்திரம் ஒனறியத்திற்கு கூடுதல் மின்வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் 12218—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் அடைக்கத்தேவன் அம்மாபள்ளிவாசலுக்கும் கடற்கரை சாலைக்கும் 1992-93-ல், மின் விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர்

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் அடைக்கத்தேவன் அம்மாப்பள்ளிவாசலுக்கும் கடற்கரை சாலைக்கும் மின்வசதி விஸ்தரிப்பு கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

29—

பண்ணவயல் ரயில்வே கேட்டுக்கு தெரு விளக்கு ஏற்படுத்துதல்.

வினா எண் 12233—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயல் ரயில்வே கேட்டுக்கு வடக்குத் தெருவிற்கு 1992-93ல் தெரு விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயல் ரயில்வே கேட்டுக்கு வடக்குத் தெருவிற்கு 1992-93ல் தெரு விளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ் நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

30—

மருங்க பள்ளத்தில் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண் 12241 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கபள்ளம் 1-வது வார்டிற்கு 1992-93ல் தெரு விளக்குகள் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம்: சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மருங்கபள்ளம் 1-வது வார்டிற்கு 5 எண்ணிக்கை தெரு விளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு விளக்குகள் எரியவிடப் பட்டுள்ளது. மேலும் தெரு விளக்கு விஸ்தரிக்க விண்ணப்பங்கள் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் பெறப்படவில்லை.

31—

கொடுமுடியின் அரசு நிலத்தை மசூதிக்கு பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 12495—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடியில் உள்ள முஸ்லீம்களுக்கு தொழுகை நடத்த இடம் இல்லாத காரணத்தினால் அவர்கள் தற்சமயம் நடத்திவரும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான 30 சென்ட் தொழுகை நிலத்தை அவர்கள் மசூதிக்குப் பட்டா செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் கொடுமுடியில் உள்ள முஸ்லீம்களுக்கு தொழுகை நடத்தக் கோரியுள்ள இடம் புகளூர் வாய்க்கால் மைல் 2!6-7க்கு இடதுபுறம் காவிரி ஆற்றுக்கும் வாய்க்காலுக்கும் இடையே உள்ள படுகை நிலத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் தற்பொழுது தொழுகை நடத்த எந்த கட்டிடமும் இல்லை. வருடத்தில் முஸ்லீம் பண்டிகை தினத்தில் மூன்று அல்லது நான்கு தினங்கள் மட்டுமே தொழுகை நடத்துகின்றனர். நீர்ப்பாசனம் சம்பந்தமாக வெள்ளக் காலங்களில் மண் எடுக்க இவ்விடம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) துறைக்கு அவசியம் தேவைப்படும் என்பதாலும் அரசு ஆணை எண். 41. வருவாய் (எல்) துறை. நாள் : 20-1-87ன் படி. ஓடை வாய்க்கால். குளம், குட்டை மற்றும் ஆற்றுப் புறம்போக்கு முதலிய நீர் நிலைப் போக்கு நிலங்கள் ஒப்படை செய்யக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதாலும் மேற்கண்ட இடத்தினை மசூதிக்கு பட்டா வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1994 மார்ச் 17]

32—

மேலக்கொள்ளுக் காட்டிற்கு புதிய டிரான்ஸ்பாரர்மர் அமைத்தல்

வினா எண் 12968—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி திருவோணம் ஒன்றியம் பாதரங் கோட்டை (வடக்கு) மேலக்கொள்ளுக் காட்டிற்கு மின்சாரம் வழங்க புதிய ட்ரான்ஸ்பாரமர் அமைத்துக் கொடுக்க 1992-93—ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், மேல திருக்கொள்ளுக் காட்டிற்கு இப்போது மின்சாரம் வழங்கப்பட்டு வரும் கொள்ளுக் காடு மின்மாற்றி நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, மேலக் கொள்ளுக்காட்டிற்கு புதிய ட்ரான்ஸ்பார்மர் அமைக்க அவசியம் எழவில்லை.

33—

பாதரங்கோட்டை கருப்பட்டித் தெருவிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றி அமைத்தல்.

வினா எண் 13007—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வடக்கு) சேர்ந்தக் கருப்பட்டித் தெருவிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றித் தர 1992-93ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி கருப்பட்டித் தெருவிற்குத் தற்பொழுது கொள்ளுக்காடு மின்மாற்றியி லிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. இதற்குப் பதிலாக புதுப்பட்டி 2 என்ற மின் மாற்றியிலிருந்து 10 கம்பங்கள்

அமைத்து மின்சாரம் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கம்பங்கள் நடுவதை ஆட்சேபித்து நில உரிமையாளர்கள் உரிமையியல் நீதி மன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளனர். நீதி மன்ற முடிவிற்கு ஏற்ப மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

பேராவூரணி கோட்ட நெடுஞ்சாலையை பராமரிக்க நடவடிக்கை

.வினா எண் 13253—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி கோட்டம், அலிவலத்திலிருந்து அதம்பை வழியாக நம்பிவயல் செல்லும் நெடுஞ்சாலையை 1992-93-ல் பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி .தொகுதி, பேராவூரணி கோட்டம், அலிவலத்திலிருந்து அதம்பை வழியாக நம்பிவயல் செல்லும் நெடுஞ்சாலை .கீழ்க்கண்டுள்ள 6 இதர மாவட்டச் சாலைகள் அடங்கியதாகும் :—

	நீளம். கி.மீ.
1. அதம்பை—கிராமச் சாலை கி.மீ. 0/0-1/4	1.40
2. அலிவலம்—நம்பிவயல் சாலை (வழி) அதம்பை சாலை கி.மீ..4/3-7/6	3.30
3. அதம்பை—கிராமச் சாலை கி.மீ. 3/5-4/3	0.80
4. நடுவிக்கோட்டை—கிராமச் சாலை 0/0-1/8	1.80
5. அலிவலம்—நம்பிவயல் சாலை கி.மீ. 1/0-1/7	0.70
6. அலிவலம்—கீழ அரிசன காலனி சாலை கி.மீ. 0 0-1/0	1.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

இதில் வ. எண் (2)-ல் உள்ள அலிவலம் நம்பிவயல் சாலை 1992-ல் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் புதுப்பிக்கப்பட்டது, வ. எண் (3)-ல் உள்ள அதம்பை கிராமச் சாலை 1989-90ல் தார் தளம் புதுப்பிக்கப்பட்டது. வ.எண். (4)ல் உள்ள நடுவிக்கோட்டை கிராமச் சாலை நடப்பு ஆண்டில் (1992-93) பழுதுற்ற சாலைகள் (Bad Stretches) திட்டத்தில் புதுப்பிக்கப்பட்டது. வ. எண் (5)-ல் உள்ள அலிவலம்—நம்பிவயல் சாலை 1989-90-ல் தார் தளம் புதுப்பிக்கப்பட்டது, வ.எண் (6)-ல் உள்ள அலிவலம் அரிசன காலனி சாலை 1992, ஆண்டு வெள்ள நிவாரணப் பணியாக மேற்கொள்ளப் பட்டது. மற்றும் வ. எண் (1)-ல் உள்ள அதம்பை கிராமச் சாலை கி.மீ. 0/0-1/4 வரை சீர் செய்ய தோராயமான ரூ. 2.00 லட்சம் தேவைப்படும். நிதி நிலைக்கேற்ப இப்பகுதியை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

பேராவூரணி ஆவணம் நெடுஞ்சாலையை பராமரிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 13271—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஆவணம் செல்லும் நெடுஞ்சாலையை 1992-93-ல் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் ;

பேராவூரணி—ஆவணம் சாலை கி.மீ. 0/0-8/6. நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பெரிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் பழுதடைந்த பகுதிகளான கி.மீ. 0/8-10, 1/0-4, 4/6, 10 மற்றும் கி.மீ. 5/6-8 ஆகிய பகுதிகளை 1992-93 ஆம் ஆண்டு காலமுறை புதுப்பிக்கும் பணியாக மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. எஞ்சியுள்ள பகுதிகளை நிதி நிலைக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

36—

சென்னை சட்டமன்ற உறுப்பினர்கள் புது விடுதி-அரசினர் விருந்தினர் மாளிகை சாலையைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 13272—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சட்டமன்ற உறுப்பினர்கள் புது விடுதிக்கும் அரசினர் விருந்தினர் மாளிகைக்கும் இடையிலுள்ள சாலை பழுது அடைந்து இருப்பதை 1992–93-ல் செப்பனிட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சென்னை சட்டமன்ற உறுப்பினர்கள் புது விடுதிக்கும் அரசினர் விருந்தினர் மாளிகைக்கும் இடையிலுள்ள சாலை பழுதடைந்து இருந்தது. தற்போது இப்பணி மேற்கொள்ளப் பட்டு சாலை பழுது பார்க்கப்பட்டு விட்டது.

37—

பேராவூரணி உடையநாடு நெடுஞ்சாலையை பராமரிக்க நடவடிக்கை.

வினா எண் 13329—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து வீரியங் கோட்டை, உடையநாடு வழியாகச்செல்லும் நெடுஞ்சாலையை 1992–93-ல் பராமரித்துக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து வீரியங் கோட்டை உடையநாடு வழியாக செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் பூங் கொல்லை மரக்காவலசை சாலை கி. மீ. 0/0—8/2 ஆகும்.

1994 மார்ச் 17]

இச்சாலையில் கி.மீ. 0/0—5/0 வரையில் பழுதுற்ற சாலைகள் சீர் செய்யும் (Bad stretches) திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் கி.மீ. 6/0—7/0 பகுதியையும், எஞ்சியுள்ள பகுதிகளையும் நிதிநிலைக்கேற்ப புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

பேராவூரணி—சேதுபாவாசத்திரம் நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்.

வினா எண். 13337—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து சேது பாவாசத்திரம் வரை செல்லும் நெடுஞ்சாலையை 1992–93-ல் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி—சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 0/0—10/2 வரை நெடுஞ்சாலைத் துறையின் பெரிய மாவட்டச் சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 4/0-5/0, 5/8-10, 6/0—7/0 மற்றும் கி.மீ. 8/6-10-ல் பழுதடைந்த பகுதிகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. மற்றும் கி.மீ. 4/0-5/0 வரை வெள்ள நிவாரண பணியாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

39—

பூலாங் கொல்லைக்கும்—குளக்கடிக்கும் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண் 13351—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சி, பூலாங்கொல்லைக்கும், குளக்குடி I-வது வார்டு மாந்தோப்பிற்கும் 1992—93-ல் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சி, பூலாங்கொல்லைக்கும், குளக்குடி கிராமத்திற்கும் 12 கூடுதல் விளக்குகள் அமைத்துக் கொடுக்க விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பம் 1993-94 ஆம் ஆண்டில் இப் பகுதி இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

40—

ஏற்காட்டில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

வினா எண் 5566—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காட்டில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

41—

எண்ணெய்ப் பனைத் தோட்டம் அமைத்தல்,

வினா எண் 20785—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் பாமாயில் மரம் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இது எப்போது பலன்ளிக்கும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் அரசு உதவியுடன் திருச்சி, தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத் மாவட்டங்களில், 1993–94 ஆம் ஆண்டு முதல் எண்ணெய் பனை சாகுபடி ஆரம்பிக்க திட்டமிட்டு எண்ணெய்ப் பனை கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் முயற்சியாக மதுரை மாவட்டம் தேனீ பகுதி அருகில் சுமார் 80 எக்டேர் பரப்பில் எண்ணெய்ப் பனை தோட்டம் அமைக்கப் பட்டுள்ளது. எண்ணெய்ப்பனை நடவு செய்யப்பட்டு நன்கு பராமரித்தால் மூன்றாவது ஆண்டு மகசூல் கிடைக்கும். நடப் பட்டதிலிருந்து ஆறாவது ஆண்டில் எக்டேருக்கு 20 டன் எண் ணெய்ப்பனை குலைகள், மகசூல் கிடைக்கும்.

42—

பென்னாகரம் வட்டத்தில் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ள குத்தகை நிலங்களின் விவரம்.

வினா எண் 1066—டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்பு மிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதியில் தமிழ்நாடு கனிம நிறு வனம் எவ்வளவு ஏக்கர் உரிமம் பெற்று எத்தனை ஏக்கரில் கருப்புக் கல் வெட்டி எடுக்கப்படுகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு மொத்தம் 382.96 ஏக்கர் நிலப் பரப்பில் கருப்புக் கல் வெட்டி எடுப்பதற்கான குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

43—

தமிழ்நாடு கனிம நிறுவனம் கிரானைட் குவாரிகளை பணி துவங்க ஏற்பாடு செய்யுதல்.

வினா எண் 1357—திரு. மு. நடேசன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் நூற்றுக்கணக்கான ஏக்கர் கிரானைட் குவாரிகளை பணி துவங்கப்படாமல் வைத்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் ஏனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

44—

சுண்ணாம்புக்கல் குவாரிகளை முறைப்படுத்துதல்

வினா எண் 1362—திரு. எம். அப்புநடேசன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சுண்ணாம்புக்கல் குவாரிகளை முறைப்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(1) இல்லை. சுண்ணாம்புக்கல் படிவங்களை வெட்டி எடுத்து பயன்படுத்துவது குறித்து அரசு கீழ்க்கண்ட செயல் முறைக் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது :—

மைய மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான தொழிற் கழகங்கள் மற்றும் சுயசார்புள்ள பெருந் தொழில்கள், இரசாயனத் தொழில்கள், சிமெண்ட் தொழில்கள் மற்றும் பெரிய மற்றும் சிறிய சிமெண்ட் ஆலைகள், உலோகவியல் தொழிலில் கலவைப் பொருள் செய்தல் ஆகியவைகளுக்கான சுரங்கக் குத்தகைக் காலம் இருபது ஆண்டுகள் வரையிலும், சர்க்கரை மற்றும் காகிதத் தொழிலில் சுண்ணாம்பு பயன்படும்போதும் இரப்பர் மற்றும் வண்ணத் தொழில்களில் நிரப்பியாக மற்றும் சுண்ணாம்பு பொடியாக வியாபார நோக்கோடு கனிமங்களை விற்பவர்களுக்கும், சுரங்க குத்தகைக் காலம் ஐந்தாண்டுகளாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

(2) தரம் உயர்ந்த சுண்ணாம்புக்கல்லை அருகில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே விற்க சுரங்கக் குத்தகைதாரர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தரம் குறைந்த சுண்ணாம்புக் கற்களை சுண்ணாம்பு அரவை செய்து நிரப்பியாக

உபயோகப்படுத்த அனுமதிக்கப்படுகிறது. மேலும், பெரிய அளவிலான சிமெண்ட் ஆலைகளுக்கு அதன் 20 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள சுண்ணாம்பு படிவங்களை குத்தகை அளிக்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இருப்பினும், சிறிய அளவிலான சுண்ணாம்புக் கல் படிவங்களை சிறு சிமெண்ட் ஆலைகள், சுண்ணாம்பு சார்ந்த தொழில்கள் ஆகிய நடுத்தர மற்றும் சிறு தொழில்களில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக மேற்சொன்ன கொள்கை சிறிது தளர்த்தப்பட்டு குத்தகை வழங்கப்படுகிறது.

45—

சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை இயங்கும் திட்டம்

வினா எண் 1448—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், சிவகங்கையில் கிராபைட் தொழில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) அத் தொழில் தொடர்புடைய உப தொழில்களும் ஆரம்பிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட் சுத்திகரிப்பு தொழிற்சாலை சிவகங்கையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் முழுமையாக இயங்கத் தொடங்கும்.

(ஆ) ஆம். கீழ்க்கண்ட தொழில்களைத் துவங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன :—

1. சிலிகான் கார்பைட் மேசைகள் தயாரித்தல்.
(Silicon Carbide Crucible)

2. ரிப்ராக்டரி பொருள்கள் தயாரித்தல்.
(Refractory Industry)

3. மசகுக் களிம்பு தயாரித்தல்.
(Lubrication Industry)

4. மின் பாய்வுப் பொருள்கள் மற்றும் கார்பன் பிரஷ்கள் தயாரித்தல். (Electrodes and Carbon brushes)

5. விரிவாக்கப்பட்ட கிராபைட் தயாரித்தல்.
(Expanded Graphite)

6. ஆகாய விமானத்தின் சில உறுப்புகள் மற்றும் காற்றாலை தகடுகள் தயாரித்தல்.
(Carbon Impregnated Synthetic for the aviation Industry and win-mill.)

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7. வண்ண பூச்சு எண்ணெய் தயாரித்தல்.
(Paint Industry)

8. மின் கலங்கள் தயாரித்தல்.
(Electric Batteries)

9. பென்சில் தயாரித்தல்.
(Pencil Manutactures)

10. கிராபைட் இழைகள் தயாரித்தல்.
(Graphite Fibre)

46—

பழைய ஆயக்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

வினா எண் 3414—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கல்வி மாவட்டம், பழைய ஆயக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியின் கட்டிடம், கழிப்பிட வசதி, ஆய்வுக் கூடம், விளையாட்டு மைதானம், வகுப்பறை மரச்சாமான்கள் ஆகிய வசதிகள் இல்லாத நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது இயலாத நிலை உள்ளது.

47—

மாவட்ட விளையாட்டு வளர்ச்சிக்குழு அமைத்தல்

வினா எண் 7966—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு 1986-க்கு முன்பு இருந்தது போல மீண்டும் மாவட்ட விளையாட்டு வளர்ச்சிக் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்விஅமைச்சர் :

மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு ''தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்'' என்ற அமைப்பை தற்போது அரசு ஏற்படுத்தியுள்ள இச்சூழ்நிலையில் மாவட்ட அளவில் குழுக்கள் ஏற்படுத்தும் நிலை எழவில்லை.

1994 மார்ச் 17]

48—

ஆலங்குளம் ஒன்றியத்தில் அரசு பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 8652—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், ஆலங்குளம், மாறாந்தை ஊர்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும் கழிப்பிட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

49—

அந்தியூர் பேரூராட்சியில் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 10077—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், அந்தியூர் பேரூராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1992–93-ல் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அந்தியூர் பேரூராட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் பள்ளிகள் எதுவும் செயல்படவில்லை. குறிப்பாக, பெண்கள் உயர்நிலைப் பள்ளி எதுவும் இல்லை. கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியை 1992–93 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த உயர்மட்டக் குழுவினால் கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 மார்ச் 17

50—

வினாங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 15580—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வினாங்குளம் நடுநிலைப் பள்ளியை 1993-94-ல் உயர்நிலைப் பள்ளியாக ஆக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

51—

நன்னிலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி பழுதடைந்த கட்டிடங்களைப் பழுதுபார்க்க நடவடிக்கை

வினா எண் 15658—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்கள் எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆம். மேற்படி பள்ளியின் பிரதான கட்டிடம் மட்டும் ரூ. 46,500 மதிப்பீட்டில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் சிறப்பு பழுது பார்க்கும் பணி மற்றும் அபிவிருத்திப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என பொதுப்பணித் துறையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 மார்ச் 17]

52—

கூட்டுறவு சொசைட்டிகளில் முறைகேடுகளின் விசாரணைகள்.

வினா எண் 5366—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், மற்றும் மதுரை மாவட்டத்தில், மாவட்ட அளவிலான எந்தெந்த கூட்டுறவு சொசைட்டிகளில் 1988–89, 1989-90, 1990-91 ஆகிய ஆண்டுகளில் முறைகேடுகள் மற்றும் அதிகாரத்தை அதிகப்படியாக பயன்படுத்தப்பட்டது குறித்து அரசுக்கு வந்துள்ள முறையீடுகள் விவரம் என்ன?

(ஆ) அவற்றின் மீது விசாரணைகள் ஏதேனும் அரசு மேற்கொண்டதா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): 1988–89, 1989–90 மற்றும் 1990–91 ஆம் ஆண்டுகளில் திண்டுக்கல்-அண்ணா மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கடைகளிலும், மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப்பண்டக சாலையின் கட்டுப்பாட்டில் உள்ள 6 கடைகளிலும் சரக்கிருப்புக் குறைவு சம்பந்தமான முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. இந் நிகழ்வுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ள அரசால் ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

(இ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விபரங்கள் வருமாறு :—

மாவட்ட அளவிலான சங்கத்தின் பெயர்— திண்டுக்கல்-அண்ணா மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை.

வரிசை எண்.	ஆண்டு	முறைகேடுகளின் தன்மை.	தொகை ரூ. பை.	தற்போதைய நிலை.
(1)	(2)	(3)	(4)	(5)
1	1989–90	எரியோடு மதுபான சில்லரை விற்பனை அங்காடியில் சரக்கு இருப்பு குறைவு.	25,274.25	இது பற்றிய குற்றவியல் வழக்கு திண்டுக்கல் வணிகவியல் குற்றப்புலனாய்வுக் குழு ஆய்வாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 111, மதுரை நீதிமன்றத்தில் சிசி. எண். 14/92-ல் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு தொடர்பாக சரக்கு இருப்பு குறைவு தொகை முழுவதும் சம்மந்தப்பட்ட விற்பனையாளரிடமிருந்து வசூலிக்கப்பட்டுவிட்டது.
2	1989–90	சின்னாளப்பட்டி மளிகை பொருள் பிரிவில் சரக்கு இருப்பு குறைவு.	23,643.11	இக்குற்றவியல் வழக்கு திண்டுக்கல் வணிகவியல் குற்றப் புலனாய்வுக்குழு ஆய்வாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 111, மதுரை நீதிமன்றத்தில் சிசி. எண் 15/92-ல் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு சம்மந்தப்பட்ட விற்பனையாளர் சங்க பணியிலிருந்து நீக்கப்பட்டு உள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

53—446—14

மாவட்ட அளவிலான சங்கத்தின் பெயர்—மதுரை மாவட்ட பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை

வரிசை எண்.	ஆண்டு.	முறைகேடுகளின் தன்மை.	தொகை. ரூ. ல.ப.	தற்போதைய நிலை.
(1)	(2)	(3)	(4)	(5)
1	1988–89	போடிநாயக்கனூர் சிறப்பங்காடியில் சரக்கிருப்பு குறைவு.	70,172,78	விசாரணை கண்டுபிடிப்புகளின் பேரில் குற்றவியல் நடவடிக்கைத் தொடர கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ. 73,617,97-க்கு தாவா நடவடிக்கை தொடரப்பட்டு தீர்ப்பாணை வழங்கப் பட்டுள்ளது. (எண். 614/92–93, நாள்: 20–10–1992). 23–6–1993 அன்று நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.
2	1988–89	தானப்பமுதலி தெரு கிளையின் துணிகள் பிரிவில் சரக்கிருப்பு குறைவு.	63,862.96	இக்குற்றவியல் வழக்கு மதுரை மூன்றாவது குற்றவியல் நீதிமன்றத் தின் விசாரணையில் உள்ளது. இவ் வழக்கின் 15 சாட்சிகளில் 8 பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர். ரூ. 68,852.96-க்கு, தாவா நடவடிக்கை தொடரப்பட்டு 28–7–1989 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்று மனு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ. பை.	
3	1989–90	தலைமையகத்தில் உள்ள எண்ணெய் பிரிவில் சரக்கிருப்புக் குறைவு.	1,96,396.00	இக்குற்றவியல் வழக்கு மதுரை மூன்றாவது குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது. இவ்வழக்கின் 21 பிராசிக்யூஷன் தரப்பு சாட்சியங்களில் 21 பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர். தாவா நடவடிக்கை தொடரப்பட்டு 5810/88-89, நாள் 30—9—92-ல் ரூ. 2,00,855.63-க்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. 23—6—1993 அன்று நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
4	1990-91	சின்னமனூர் கிளையில் சரக்கிருப்புக் குறைவு.	63,167.59	விசாரணை முடிக்கப்பட்டு குற்றவியல் நடவடிக்கை தொடர அனுமதியும் வழங்கப்பட்டு விட்டது. அதனடிப்படையில் காவல்துறையிடம் புகார் அளிப்பதற்காக நடவடிக்கை மதுரை சரக துணைப் பதிவாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 87-ன் கீழ் எஸ்சி/1/93–94-ல தண்டத் தீர்வை அறிவிப்பு ரூ. 63,170.79-க்கு வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
5	1990–91	மீனாம்பாள்புரம் எண். 4 நியாய விலைக் கடையில் சரக்கிருப்பு குறைவு.	17,399.60	விசாரணை முடிக்கப்பட்டு அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கையில் சம்பந்தப்பட்டவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
				பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. ரூ. 17,599,60-க்கு தாவா நடவடிக்கை தொடரப்பட்டு எண். 620/92-93-இல் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரிலான நிறைவேற்று மனு சங்கத்திடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. மதுரை பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தனி அலுவலருக்கு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
6	1990-91	திருவாப்புடையார் கிளையில் நியாயவிலை கடை 1- சரக்கு இருப்பு குறைவு.	50.145.22	விசாரணை அறிக்கை பெறப்பட்டு உரிய மேல் நடவடிக்கை தொடர மதுரை சரக துணைப் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது. ரூ. 57,187.22-க்கு தாவா நடவடிக்கை தொடரப்பட்டு எண் 621/92-93. நாள் 30-10-1992-ல் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. 23-6-1993 அன்று நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53— [1994 மார்ச் 17

கட்டயங்காடு காட்டாற்றில் பாலம் கட்டுதல்

வினா எண் 629—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு அருகே உள்ள காட்டாற்றில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கட்டயங்காடு அருகே உள்ள காட்டாற்றில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

54—

சொர்ணக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு பாலம் கட்டுதல்

வினா எண் 984—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் சொர்ணக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சி. எம். பி. வாய்க்காலில் ஒரு சிறு பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சொர்ணக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சி. எம். பி. வாய்க்காலில் சிறு பாலம் கட்டுவதற்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால் அவ்வேலையை எடுத்துச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

55—

திருவோணம் ஒன்றியத்தில் இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்த வண்டி வழங்குதல்

வினா எண் 1976—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, அதம்பை (வ) ஆதிதிராவிடர்கள் மற்றும் மற்றவர் களின் கால்நடைகள் இறந்தால், அவைகளை அப்புறப்படுத்த ஊராட்சியின் மூலம் வண்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

56—

காயாவூர் மயான சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 2367—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கு கோவக்காரன் தெருவிலிருந்து மயானத்திற்குச் செல்லும் சாலையை செப்பனிட்டு தர செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கு காவக்காரன் தெருவிலிருந்து மயானத்திற்குச் செல்லும் சாலையைச் செப்பனிட்டு தரவும் தகர, கொட்டகை கட்டித் தரவும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

57—

எட்டிவயல் கிராமத்தில் குடிநீர் ஊரணிகளை ஆழப்படுத்த பரிசீலனை

வினா எண் 2413—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், எட்டிவயல் கிராமத்தில் குடிநீருக்காக ஊரணிகள் ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை ஊரணி கள் ஆழப்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட எட்டிவயல் ஊரணியில் தண்ணீர் அதிகம் உள்ளதால் ஆழப்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆழப்படுத்தப்படும் ஊரணிகளின் எண்ணிக்கை 632.

58—

சென்னை விக்டோரியா மண்டபத்திற்கு பாவலர் பெயர் சூட்டுவதற்குப் பரிசீலனை

வினா எண் 2419—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விக்டோரியா மண்டபத்திற்கு சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவாக அவர் பெயரைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

59—

மகிழங்கோட்டை பழுதடைந்த ஆதிதிராவிடர் வீடுகளை பழுது நீக்கத் திட்டம்.

வினா எண் 2778—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1994 மார்ச் 17]

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் இடிந்து போன வீடுகளை மாற்றிப் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்படடுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்து தர வழி வகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப்பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதிதாகத்தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே, இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

60—

வெளிவயல் மீனவர்கள் காலனிக்கு மின் விளக்குகள் அமைத்தல்.

வினா எண் 3076— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டிணம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயல் மீனவர்கள் குடியிருப்பு வரை தெரு விளக்கு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

புதுப்பட்டிணம் ஊராட்சி, வெளிவயல் மீனவர்கள் காலனி குடியிருப்பிற்கு புதிதாக 20 மின் விளக்குகள் அமைக்கக் கோரி பட்டுக்கோட்டை உதவி செயற்பொறியாளருக்கு (தமிழ்நாடு மின்சார வாரியம்) உரிய முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

61—

கள்ளிகுளம் துறை குடியிருப்பு சாலையைத் தார்ச் சாலையாக்கும் திட்டம்

வினா எண் 3605—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிகுளம் துறை குடியிருப்பு சாலையைத் தார்ச்சாலையாக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி கள்ளிகுளம் துறை குடியிருப்பு சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லையாதலால் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்து செய்ய இயலவில்லை. நிதி ஒதுக்கீடு முழுவதும் ஒன்றியத்திலுள்ள சாலைகளின் வருடாந்தர பராமரிப்புச் செலவுக்கே போதுமானதாக உள்ளதால் இதனை தார்ச்சாலையாக்க இயலவில்லை. தற்போது இச்சாலை கல் பரத்தப்பட்டு நல்ல நிலைமையில் உள்ளது. எனவே, தார்ச்சாலையாக்க உடனடி அவசியம் இல்லை.

62 —

சென்னை மாநகராட்சியிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஐந்து வருடத்திற்கான வரி கேட்பு அட்டைகள் வழங்கும் திட்டம்.

வினா எண் 3878—THIRU M. SUNDARADOSS : Will the Hon ble Minister for Local Administration be pleased tc state—

(a) Whether the property tax pass book has to be issued to House owners in Madras city and

[b] the details thereof?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):

சென்னை மாநகராட்சியிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வீட்டு வரி செலுத்துவதற்கான அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன. முன்னதாக வரி கேட்பு நோட்டீஸ்கள் ஒவ்வொரு

1994 மார்ச் 17]

அரையாண்டிற்கும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கான உழைப்பு, செலவு மற்றும் நேரம் மற்றும் சில சொத்து உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் கேட்பு அறிவிப்புகள் கிடைக்கவில்லை என்ற புகாரின் பேரில் ஐந்து வருடங்களுக்குப் பயன்படக் கூடிய வரி கேட்பு அட்டைகள் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. இதனை சென்னை மாநகராட்சி 1991-92 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது.

63—

மாநகராட்சித் துறைகளில் காலியாக உள்ள பணியிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை.

வினா எண் 3934—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநகராட்சித் துறைகளில் காலியாக உள்ள பணியிடத்தைப் பூர்த்தி செய்ய அரசு ஆவண செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்:

மாநகராட்சித் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை அவ்வப்போது பூர்த்தி செய்ய மாநகராட்சியும் அரசும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

64—

ஆரணி நகராட்சியில் குடிதண்ணீர் முறையாக வழங்க நடவடிக்கை

வினா எண் 5833—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகராட்சிக்குச் சொந்தமான தண்ணீர் வண்டிகளில் சில குறிப்பிட்ட முக்கியஸ்தர்களுக்கு மட்டும் தண்ணீர் வழங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆரணி நகராட்சியில் 6 மாதங்களுக்கு முன்னர் வறட்சியினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. அது சமயம் கட்டணம் கட்டியவர்களுக்கு நகராட்சி வண்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது பருவமழை பெய்ததினால் குடிநீர் பற்றாக்குறை இல்லை. ஆரணி நகரில் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஐந்தாறு மாதங்களாக நகராட்சி வண்டி மூலம் குடிநீர் யாருக்கும் வழங்கப்படுவதில்லை.

65—

வி. கே.புரம் பேரூராட்சியில் குடிநீர் விஸ்தரிப்பு திட்டம்.

வினா எண் 6296—திரு. எம். ஆண்டி அம்பலம், திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதி வி.கே புரம் பேரூராட்சி மன்றத்திற்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தில் அதிகப்படியான பைப்லைன் விஸ்தரிப்பு திட்டத்தை அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும்(ஆ) : அரசு ஆணை எண் 33, நாள் 7–2–1991-ல் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி 14 மற்றும் 15–வது வார்டு பகுதிகள் முழுமைக்கும், இதர வார்டுகளில் விடுபட்ட தெருக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய பைப் லைன் விஸ்தரிப்புக்காக ரூ. 44.23 லட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

66—

புதுக்கோட்டை தொகுதியில் அம்புகோவல் சாலையில் இணையும் சாலையை புதுப்பிக்கும் திட்டம்.

வினா எண் 6386—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் செங்கிப்பட்டி—பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையில் பிரிந்து சொக்கம்பேட்டை வழியாக அம்புக்கோவல் நெடுஞ்சாலையில் இணையும் சாலையை நெடுஞ்சாலை கிராமச்சாலை திட்டத்தில் எடுத்து அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலையை எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

67—

வாவளாவயல் வாய்க்கால் குறுக்கே பாலம் அமைத்து சாலையை பராமரிக்கத் திட்டம்.

வினா எண் 6403—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, கஞ்சங்காடு வாவளாவயல் செல்வதற்கு சி.எம்.பி. வாய்க்கால் குறுக்கே சிறுபாலம் (கல்வெர்ட்) அமைத்து சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்:

நிதி வசதி இல்லாத காரணத்தினால் குருவிக் கரம்பை ஊராட்சி, கஞ்சங்காடு வாவளாவயல் செல்வதற்கு சி.எம்.பி. வாய்க்கால் குறுக்கே சிறுபாலம் (கல்வெர்ட்) அமைத்து சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

68—

பழுக்காட்டிலிருந்து வெள்ளாலங்காடு சாலைவரை தார்சாலை அமைத்தல்.

வினா எண் 6410—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்ரசிந்தாமணி ஊராட்சி பழுக்காட்டிலிருந்து வெள்ளாலங்காடு மெயின் சாலை வரை சாலையைப் பராமரித்து தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ருத்ரசிந்தாமணி ஊராட்சி பழுக்காட்டிலிருந்து வெள்ளாலங்காடு மெயின் சாலை வரை தற்போது சிகப்பு கப்பிச் சாலையாக உள்ளது. இச்சாலை போக்குவரத்து ஏற்படக் கூடிய சாலையாக இல்லாததால் தார்ச்சாலையாக மாற்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை.

69—

சங்கரன் கொல்லை பேராவூரணி சாலையை இணைக்கும் கப்பி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 6423—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியத்திலிருந்து சாந்தாம்பேட்டை சங்கரன்கொல்லை வழியாக பேராவூரணி சாலையை இணைக்கும் கப்பிச் சாலையை மராமத்து செய்து தார்ச் சாலையாக ஆக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், நாடியத்திலிருந்து சாந்தாம்பேட்டை, சங்கரன்கொல்லை வழியாக பேராவூரணி சாலையை இணைக்கும் கப்பிச் சாலை பேருந்து போக்கு வரத்தற்ற சாலையாக இருப்பதனால் இச்சாலையை தார்ச் சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

70—

ஆலடிக்காடு மயான சாலையைப் பராமரித்து தகரக் கொட்டகை அமைத்தல்

வினா எண் 6444— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி, ஆலடிக்காடு மயானத்திற்குச் செல்லும் சாலையைப் பராமரிக்கவும் தகரக் கொட்டகை அமைத்துக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி, ஆலடிக்காடு மயானத்திற்குச் செல்ல கால் நடைப்பாதை மட்டும் உள்ளது. மேலும் சாலை அமைப்பதற்கு புறம்போக்கு நிலம் கிடையாது. இரு புறமும் பட்டா நஞ்சை நிலமாக உள்ளதால் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

71—

கரிசவயல் சாலையை மராமத்து செய்தல்

வினா எண் 6473— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங்காட்டிலிருந்து பாடுவான் கொல்லை வழியாக கரிசவயல் செல்லும் சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங்காட்டிலிருந்து பாடுவான் கொல்லை வழியாக கரிசவயல் செல்லும் சாலையின் இருபுறமும் பட்டா நிலமாக உள்ளதால் கருங்கல் ஜல்லி சாலையாக மேம்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

72—

செருபாலக்காடு சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம்

வினா எண் 6474— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூரில் இருந்து தில்லங்காடு வழியாக செருபாலக்காடு செல்லும் சாலையில் உள்ள மரங்களை அகற்றி சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் பஸ்போக்கு வரத்தற்ற சாலையாக உள்ளதனாலும் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

73—

இரண்டாம் புலிக்காடு ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 6492— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஆதி திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழி வகை இல்லை, கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

74—

செந்தல வயல் கிராமத்தில் சாலை வசதி அமைக்கும் திட்டம்

வினா எண் 6585— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், விளங்குளம் ஊராட்சியைச் சேர்ந்த செந்தல வயல் வடக்குப் பகுதியிலுள்ள 150 குடியிருப்புகளுக்குச் சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

விளங்குளம் ஊராட்சியைச் சார்ந்த செந்தலவயல் வடக்குப் பகுதியிலுள்ள குடியிருப்பு சாலை வேலை வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட்டுள்ளது.

[1994 மார்ச் 17

75—

சேதுபாவாசத்திரத்தில் சாலைகளை பராமரித்தல்

வினா எண். 6603—திரு. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முடக்கிக்காட்டில் ஊருக்குள் செல்லும் சாலையையும் பள்ளிவாசலுக்குச் செல்லும் சாலையையும் பராமரித்து செப்பனிட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காட்டில் ஊருக்குள் செல்லும் சாலையையும் பள்ளி வாசலுக்குச் செல்லும் சாலையையும் பராமரிக்க நிதி இல்லாததால் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

76—

பின்னிசாலையில் கூவம் ஆற்றுப் பாலத்தை விரிவுபடுத்த திட்டம்.

வினா எண் 6662—திரு. உ. பலராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்னி சாலையில் கூவம் ஆற்றின் மீதுள்ள பாலத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஆம், இந்த பாலத்தின் பணிகள் தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு ரூபாய் 155.00 இலட்சங்கள் செலவில் தற்போது பணி விரைவாக் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணியை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காலவரை டிசம்பர் 1993 ஆகும்.

[1994 மார்ச் 17]

77—

ஆண்டிகாடு கிராமத்தில் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் திட்டம்

வினா எண் 6787—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிகாடு ஊருக்குள் மெயின்சாலயையிலிருந்து வந்து சின்ன ஆவுடையார் சாலையுடன் இணையும் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதிவசதி இல்லாத காரணத்தினால் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிகாடு ஊருக்குள் மெயின் சாலயிலிருந்து வந்து சின்ன ஆவுடையார் சாலையுடன் இணையும் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

78—

அழகியநாயகிபுரம் இரளிவயல் கோயில் சாலையை செப்பனிடுதல்

வினா எண் 6788—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரத்தில் இருந்து இரளிவயல் கோயில் வரையுள்ள சாலையைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதி வசதி இல்லாத காரணத்தினால் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரக்தில் இருந்து இரளிவயல் கோயில் வரையுள்ள சாலையை செப்பனிட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை,

79—

போளூர் ஒன்றியத்தில் புதியதாக மின்விளக்குள் அமைத்தல்

வினா எண் 6855—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் புதிய மின் விளக்குகள் அமைக்க பணம் செலுத்தியும் இன்னமும் மின்விளக்கு போடவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின்விளக்குப் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர், அனந்தபுரம், திண்டிவனம், சந்தவாசல், செங்குளம், ரெண்டிரிப்பட்டு ஆகிய அனைத்து ஊராட்சிகளிலும் புதியதாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டு நன்கு எரிந்து வருகின்றன.

80—

சோலைககாடு சாலையை கப்பிச் சாலையாக மாற்றும் திட்டம்

வினா எண் 6540—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், மந்திரிபட்டினத்தில் இருந்து திருத்தேவன் வழியாக சோலைக்காட்டிற்குச் செல்லும் சாலையைப் பராமரித்து கப்பிச் சாலையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மந்திரிபட்டினத்தில் இருந்து திருத்தேவன் வழியாக சோலைக்காட்டிற்குச் செல்லும் சாலையை நிதி வசதி இல்லாததால் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

1994 மார்ச் 17]

81—

மந்திரிப்பட்டினம் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண். 6941— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம். மந்திரிப்பட்டினம் முஸ்லீம் தெரு வழியாகவும், மீனவர் தெரு வழியாகவும் கடற்கரைக்குச் செல்லும் மீனவர்கள் சாலையைச் தார்ச்சாலையாக மாற்றி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மந்திரிப்பட்டினம் முஸ்லீம் தெரு வழியாகவும், மீனவர் தெரு வழியாகவும் கடற்கரைக்குச் செல்லும் மீனவர்கள் சாலையை நிதி வசதி இல்லாததாலும், பேருந்து போக்குவரத்து இல்லாத சாலையாக உள்ளதாலும், தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

82—

மந்திரிப்பட்டினம் புதுத்தெரு மீனவர் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 6942— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், மந்திரிப்பட்டினம் அருகில் உள்ள புதுத்தெரு மீனவர் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், மந்திரிப்பட்டினம் அருகில் உள்ள புதுத் தெரு மீனவர் சாலைக்கு பேருந்து போக்குவரத்து ஏற்படக்கூடிய சாலையாக இல்லாத காரணத்தால் தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

83—

சின்ன ஆவுடையார் கோவில் சாலையை கப்பிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 6988—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன ஆவுடையார்கோவில் ஊருக்குள் செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், சின்ன ஆவுடையார் கோவில் ஊருக்குள் செல்லும் சாலையை நிதி வசதி இல்லாத தால் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

84—

ஆண்டிக்காடு ஊராட்சியில் கப்பிச் சாலைகளை தார்ச்சாலையாக மாற்றத் திட்டம்.

வினா எண் 6998—திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்காவயலில் ஆண்டிவயல் மெயின் சாலையிலிருந்து மருதங்காவயலுக்கு வரும் கப்பிச் சாலையை பராமரித்து தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி வசதி இல்லாத காரணத்தினால் ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்காவயலில் ஆண்டிவயல் மெயின் சாலையிலிருந்து வரும் கப்பிச் சாலையை, தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

85—

பாதரங்கோட்டை, காயாவூர் சாலையை கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7000—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை தெற்கிலிருந்து காயாவூர் செல்லும் குறுக்குச் சாலையை பராமரித்து செய்து இடையில் கல்வெர்ட் அமைத்துக் கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போதுமான நிதி வசதி இல்லாததால் பாதரங்கோட்டை தெற்கிலிருந்து காயாவூர் செல்லும் குறுக்குச் சாலையை மராமத்து செய்து கல்வெர்ட் அமைத்துக் கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

86—

பேராவூரணி ஒன்றியத்தில் சாலைகளை பாராமரித்தல்.

வினா எண் 7025—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 மார்ச் 17

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலத்தில் இருந்து வலச்சேரிக்காடு வழியாக வலசக்காடு செல்லும் குறுக்குச் சாலைக்கு கப்பி அடித்து பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு, டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் ;

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலத்திலிருந்து வலச்சேரிக்காடு வழியாக வலசைக்காடு செல்லும் குறுக்குச் சாலை தற்சமயம் கப்பி சாலையாக உள்ளது. இச்சாலை பஸ் போக்குவரத்திற்கு ஏற்ற சாலையாக இல்லாததால் சாலையை பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

87—

களத்தூர்—சாயிதோப்பு சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 7033—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கிழக்கில் இருந்து சாயிதோப்பு வரை செல்லும் சி.எம்.பி ஆற்றுக்கரை சாலையை தார்ச் சாலையாக ஆக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

போதிய நிதிவசதி இல்லாத காரணத்தினால் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலையை தார்ச்சாலையாக ஆக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

88—

ஏனாதி—கரம்பை சாலையை கப்பிச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 7051—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதி கரம்பை உயர்நிலைப் பள்ளியிலிருந்து மெய்யம்பெருமாள் கோவில் வரை செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஊராட்சி, ஏனாதிகரம்பை உயர்நிலைப் பள்ளியிலிருந்து மெய்யம்பெருமாள் கோவில் வரை உள்ள சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர போதிய நிதி வசதி இல்லாததால் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

89—

பெருமகளூரிலிருந்து—தூரங்குடி சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7086 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூரிலிருந்து தூரங்குடி வழியாக கேயார்புரம் செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூரிலிருந்து தூரங்குடி வழியாக கேயார்புரம் செல்லும் சாலையை நிதி வசதி இல்லாததால் தார் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

90—

செருவா விடுதி—ஈச்சன் விடுதி சாலையை பராமரித்தல்.

வினா எண் 7113—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம். செருவா விடுதி ஊராட்சி, ஈச்சன் விடுதி தெற்கு முத்திரையர் தெருவிற்கு செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செருவாவிடுதி ஊராட்சி ஈச்சன் விடுதி தெற்கு முத்திரையர் தெருவிற்கு செல்லும் சாலையை எடுத்துச் செய்ய அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை. இச்சாலை பஸ் போக்குவரத்திற்கு வசதி இல்லாததால் சாலை பராமரிக்க கருத்துரு எதுவும் இல்லை.

91—

செருவா விடுதி வடக்கு ஈச்சன் விடுதி சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7218—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி, வடக்கு ஈச்சன் விடுதியில் இருந்து உடையார் தெரு வரை உள்ள சாலையை மராமத்து செய்து தார்ச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி வசதி இல்லாத காரணத்தினால் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செருவா விடுதி வடக்கு ஈச்சன் விடுதியில் இருந்து உடையார் தெரு வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க செயற் குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

92—

மதன்பட்டவூர் பெரிய குளம் ஏரிக்கரையை மராமத்து செய்தல்.

வினா எண் 7269— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, மதன்பட்டவூர் பெரியகுளம் ஏரிக்கரையை மராமத்து செய்து ஒட்டங்காடு செல்வதற்கு சாலை அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி ஒன்றியம் மதன்பட்டவூர் பெரியகுளம் ஏரிக்கரையை மராமத்து செய்து கப்பி சாலையாக மாற்ற ரூ. 2.75 இலட்சம் வரை செலவாகும். ஏற்கனவே அருகில் நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் உள்ள சாலை உள்ளது. எனவே, இச்சாலையை மராமத்து செய்வது அவசியமில்லை.

93—

தாட்கோ மூலம் சுயவேலை வாய்ப்புத் திட்டம்.

வினா எண் 5134— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் சுயவேலை வாய்ப்புக்காக நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் 1988–89, 1989–90 மற்றும் 1990–91 ஆகிய ஆண்டுகளில் கடனுதவி கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவர்களில் எவ்வளவு பேருக்கு கடனுதவி அளிக்கப்பட்டது ?

53–448–17

(இ) அளிக்கப்பட்ட கடனுதவியில் அரசு மான்யமாக அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) தாட்கோ மூலம் சுயவேலை வாய்ப்புக்காக நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியங்களில் 1988–89 ஆம் ஆண்டில் 89 பேர்களும் 1989–90-ல் 61 பேர்களும், 1990–91-ல் 142 பேர்களும் ஆக மொத்தம் 292 பேர்கள் கடனுதவி கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

(ஆ) இவர்களில் 1988–89-ல் ஒருவருக்கும் 1989–90-ல் 24 பேர்களுக்கும் 1990–91-ல் 15 பேர்களுக்கும் ஆகமொத்தம் 40 பேர்களுக்கு கடனுதவி அளிக்கப்பட்டது.

(இ) அளிக்கப்பட்ட கடனுதவியில் அரசு மானியம் 1988–89-ல் ரூ. 2,500-ம், 1989–90-ல் ரூ. 78,600-ம். 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 27,500-ம், ஆக மொத்தம் ரூ. 1,08,600 அளிக்கப்பட்டது.

94—

பேராவூரணி ஊராட்சியில் கூடுதல் ஆசிரியர்கள் பணி நியமனம்.

வினா எண் 15574—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையப்பாரா—

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் அணிவலம் ஊராட்சி ஆதி திராவிடர் பள்ளியில் ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், அணிவலம் ஊராட்சி ஆதி திராவிடர் பள்ளியில் தற்போது தலைமை ஆசிரியர் உட்பட மூன்று

ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது மேற்படி பள்ளியில் 83 மாணவர்கள் மட்டுமே கல்வி பயிலுகின்றனர். எனவே ஆசிரியர் பற்றாக்குறை இல்லை.

95—

ஆலங்குடி தொகுதி பாலசுப்பிரமணியர் கோயிலை புதுப்பிக்கத் திட்டம்.

வினா எண் 9230— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி அரசுக்குச் சொந்தமான நகரம் பாலசுப்பிரமணியர் கோயிலை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

இத்திருக்கோயிலை புதுப்பிப்பது பற்றிய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

காரங்குடாவில் மீனவர்களுக்கு குடிமனை பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 3020—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் மீனவர்கள் பல வருடமாக குடியிருந்து வரும் தனியார் இடத்திற்கு குடிமனை பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் உள்ள மீனவர்களில் சிலர் தற்போது குடியிருந்து வரும் நிலத்தை விலைக்கு வாங்கி பத்திரம் பதிவு செய்தும் மற்றும் சிலர் நிலத்திற்கான விலையை கொடுத்து விட்டு பத்திரம் செய்யாமலும் வீடுகள் கட்டி வசிப்பதாலும் அருகிலுள்ள மாற்று நிலத்திற்கு செல்ல விரும்பாததாலும் மேற்படி நபர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க இயலாது.

97—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்துகளின் விவரம்.

வினா எண் 5507—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பில் இயங்கும் சொகுசுப் பேருந்துகள் எண்ணிக்கை விவரம் என்ன ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் இவற்றில் மீண்டும் பயன்படுத்த முடியாதவை என ஒதுக்கப்பட்ட பேருந்துகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவற்றை எந்த நெறி முறைகளின் அடிப்படையில் அரசு டிஸ்போஸ் செய்கிறது ?

(ஈ) கடந்த 3 ஆண்டுகளில் அரசின் நெறிமுறைகளின் மீறி டிஸ்போஸ் செய்யப்பட்டதாக ஏதேனும் முறையீடு புகார் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அது குறித்து முழு அளவிலான விசாரணைக்கு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்;

(அ) குளிர்சாதன வசதி பொருத்தப்பட்ட பெரிய சொகுசுப் பேருந்துகள்	3
குளிர்சாதன வசதி இல்லாத பெரிய சொகுசுப் பேருந்துகள்.	20
குளிர்சாதன வசதி இல்லாத சிறிய சொகுசுப் பேருந்துகள்.	7
மொத்தம்	30

(ஆ) ஆறு.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினில் அமைக்கப்பட்டுள்ள இயக்குநர் குழுமம் சுற்றுலாப் பயணிகளின் வசதியைக் கருத்திற்கொண்டு 3 ஆண்டுகளுக்கு மேல் ஓடிய சொகுசுப் பேருந்துகளை பயன்படுத்த வேண்டாமென முடிவெடுத்துள்ளது. மேலும் இக்குழுமத்தின் பரிந்துரையின் பேரில், அத்தகைய பேருந்துகள் உரிய முறையில் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு, அதன் மூலம் பெறப்பட்ட டெண்டர்களை, ஏலதாரர் முன்னிலையில் பிரித்து வாசித்துக் காட்டப்படுகிறது. மற்றும் அதே நேரத்தில் விற்பனைக்கான பேருந்துகளை அரசின் அனுமதி பெற்ற ஏலக் கம்பெனியினரால் பொது ஏலம் விடப்படுகிறது. மேற்கூறிய இருமுறைகளில் அதிகத் தொகைக்கு பேருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது.

(ஈ) இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

98—

தமிழ்நாடு சுற்றுலாத்துறை நடத்தும் சுற்றுலா விவரம்.

வினா எண் 6287—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்தும் திட்டமிட்ட சுற்றுலா என்னென்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 17

(ஆ) மேலும் புதிதாக துவங்க திட்டமிட்டுள்ளவை எவை?

(இ) இந்திய முக்கிய மற்றும் புண்ணியத்தலங்கள் அனைத்தும் அடங்கிய வகையில் திட்டமிட்ட சுற்றுலா துவங்குவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) 1. அரை நாள் சென்னை நகரச் சுற்றுலா—

(வள்ளுவர் கோட்டம், அருங்காட்சியகம், புனித ஜார்ஜ் கோட்டை, கபாலீஸ்வரர் கோவில், மெரினா கடற்கரை)

2. முழு நாள் சென்னை நகரச் சுற்றுலா

(வள்ளுவர் கோட்டம், அருங்காட்சியகம், கபாலீஸ்வரர் கோவில், முட்டுக்காடு, படகுத்துறை இல்லம், வி.ஜி.பி. தங்கக் கடற்கரை)

3 மாமல்லபுரம் மற்றும் காஞ்சிபுரம், ஒரு நாள் சுற்றுலா—

(மாமல்லபுரம், காஞ்சிபுரம், முதலைப்பண்ணை, முட்டுக்காடு படகு இல்லம், வி.ஜி.பி. தங்கக் கடற்கரை)

4 திருப்பதி ஒரு நாள் சுற்றுலா

5 சத்தி சுற்றுலா, (மேல்மருவத்தூர், மாங்காடு, திருவேற்காடு)

6 திருப்பதி இரு நாள் சுற்றுலா, (திருத்தணி, திருப்பதி, திருமலதேவஸ்தானம், திருச்சானூர், காலஸ்திரி)

7 வாரக் கடைசி இரு நாள் சுற்றுலா (தஞ்சாவூர், வேளாங்கண்ணி, நாகூர், திருநெல்லர், பூம்புகார், சிதம்பரம், பிச்சாவரம், பாண்டிச்சேரி)

8 தமிழ்நாடு எட்டு நாள் சுற்றுலா—

(பாண்டிச்சேரி, பிச்சாவரம், சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோவில், நாகூர், வேளாங்கண்ணி, தஞ்சாவூர், ராமேஸ்வரம், மண்டபம், கன்னியாகுமரி, சுசீந்தரம், மதுரை, கொடைக்கானல் திருச்சி,

1994 மார்ச் 17]

9 அறுபடை வீடு சுற்றுலா—

(திருத்தணி, சுவாமிமலை, தஞ்சாவூர், திருசெந்தூர் மதுரை, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், பழனி, திருச்சி.)

10. மூகாம்பிகை 6 நாள் சுற்றுலா—

(வெங்கனூர், சரவணபெலகுலா, பேலூர், ஹசன், சீரிங்கேரி, மூகாம்பிகை, உடுப்பி, மைசூர், ஒகேனக்கல்)

11 மந்திராலயம், கோவா ஏழுநாள் சுற்றுலா—

(மகாநந்தி, நந்தியால், ஸ்ரீசைலம், மந்திரால்யம், ஹம்பி, ஆஸ்பெட், கோவா பெங்களூர்)

12 தென்னிந்திய 6 நாள் சுற்றுலா—

(ஸ்ரீரங்கப்பட்டினம், பிருந்தாவனம், மைசூர், முதுமலை, ஊட்டி, மேட்டூர், ஒகேனக்கல், திருவண்ணாமலை, மாமல்லபுரம்.)

13 கிழக்கு மேற்கு கடலோர ஏழுநாள் சுற்றுலா—

(சென்னை, திருச்சி, மதுரை குற்றாலம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், ஆலம்புழா, கொச்சி, காலடி, குருவாயூர், மலம்புழா, கோயம்புத்தூர், ஏற்காடு, திருவண்ணாமலை

14 நாள் சுற்றுலா. (Sunny South) தென்னிந்திய கோடைச் சுற்றுலா —

(சென்னை, திருத்தணி, திருப்பதி, திருச்சானூர், பெங்களூர், மைசூர், முதுமலை, ஊட்டி, மருதமலை கோவை, குருவாயூர், கொச்சி, திருவனந்தபுரம், சுசீந்தரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், ராமேஸ்வரம், திருப்பரங்குன்றம், மதுரை, பழனி, திருச்சி, சுவாமிமலை, பூம்புகார், சிதம்பரம், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், மாமல்லபுரம்)

ஊட்டியை மையமாகக் கொண்டு ஊட்டி, தொட்ட பெட்டா. படகுஇல்லம், முதுமலை ஆகியவற்றைக் காண ஒரு நாள் சுற்றுலாவும், கோடை காலங்களில் கோயம்புத்தூர், ஊட்டி, சுற்றுலாவும், மதுரை, கொடைக்கானல் சுற்றுலாவும் நடத்தப்படுகிறது.

(ஆ) ஹைதராபாத் ஏழுநாள் சுற்றுலா ஒரிஸ்ஸா 8 நாள் சுற்றுலா

[1994 மார்ச் 17

(இ) தற்போதைக்கு இல்லை.

99—

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவு விடுதி அமைத்தல்.

வினா எண். 8427—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் தீவுத்திடலில் இயங்கிவரும் உணவு விடுதியின் (Drive-in-Restaurent) கிளை ஒன்றை தலைமைச் செயலகத்தில் இயங்க வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப் படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்;

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

100—

ஒசூரில் கம்பளி நெய்வோர் கூட்டுறவு சங்கம்.

வினா எண் 14525—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒசூர் தொகுதி, தேகேபள்ளியில் இயங்கி வந்த கம்பளி நெய்வோர் சங்கத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

ஒசூர் தொகுதி, தேகேபள்ளியில் கம்பளி நெய்வோர் கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஏதும் இயங்கவில்லை.

1994 மார்ச் 17]

இரண்டாம் பட்டியல்.

1—

விருதுநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 19368—திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூரில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு இணையாக விருதுநகரில் ஒரு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பொதுவாக ஒரு மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஆகியவை செயலாற்றி வருகின்றன. ஆயின், அதே மாவட்டத்தில் மாவட்ட நீதிபதி தரத்தில் பிற இடங்களில் நீதிமன்றங்கள் அமைக்கப் பெறுவதில்லை. எனவே ஸ்ரீவில்லிப்புத்தூரில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு இணையாக விருதுநகரில் ஒரு நீதிமன்றம் அமைக்க இயலாது என உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

2—

சிறுபாக்கம் வருவாய் குறுவட்டத்தை கள்ளக்குறிச்சி வட்டத்துடன் இணைக்கும் திட்டம்.

வினா எண் 19188—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சிறுபாக்கம் வருவாய் குறுவட்டத்தை கள்ளக்குறிச்சி வட்டத்தில் இணைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு எதுவும் ஆய்வில் இல்லை.

3—

பேராவூரணி பெருந் தலைவர் காமராஜ் அரசு மருத்துவ மனைக்கு குளிர் சாதன வசதியுடன் அறுவை சிகிச்சைக் கூடம்.

வினா எண் 13458—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி பெருந் தலைவர் காமராஜ் அரசு மருத்துவ மனைக்கு குளிர் சாதனத்துடன் கூடிய அறுவை சிகிச்சை கூடம் (ஆபரேஷன் தியேட்டர்) கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பேராவூரணி அரசு மருத்துவமனையில் குளிர் சாதனத்துடன் கூடிய அறுவை சிகிச்சைக் கூட கட்டிடப் பணிகள் முடிவடைந்து மின் இணைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

4—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை இடமாற்றம் செய்யும் திட்டம்.

வினா எண் 13787—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் – காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப் பூண்டி அரசு மருத்துவமனை இட மாற்றம் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்பொழுது நிறைவேற் வேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவ மனையை திருத்துறைப்பூண்டியிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை இயங்கும் வளாகத்திற்கு மாற்றவும் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை திருத்துறைப்பூண்டியிலுள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கவும் அரசு ஆணை எண். 1624, சுகாதாரம், நாள் 21—8—1987-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை செயற்படுத்த நாகப்பட்டினத்தில் உள்ள காயிதே மில்லத் மாவட்ட சுகாதாரப் பணி இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5—

ஆதிசப்பரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 14186—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருத்துறைப் பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், ஆதிசப்பரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்கும் பொருட்டு கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

திருத்துறைபூண்டி ஒன்றியம், ஆதிசப்பரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்க கட்டிடம் கட்டுவதற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் குடும்ப நலப்பிரிவு கட்டிடம் உள்ள பகுதியில் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. தற்போது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டம் ஏது மில்லை.

[1994 மார்ச் 17

6—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் கூடுதல் சுகாதார வசதி அளிக்கும் திட்டம்.

வினா எண். 14688—திரு. என்.ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, வீரானந்தபுரம் பஞ்சாயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டும் இன்னும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடத்தில் இயங்க வைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காட்டுமன்னார் கோயில் தொகுதி' வீரானந்தபுரம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட சின்னபுங்கனேரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தனியார் கட்டிடத்தில் வாடகையில்லாத ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டு வருகிறது.

சின்னபுங்கனேரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருந்தகக் கட்டிடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டிடம் மற்றும் பணியாளர் குடியிருப்புக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

7—

பரமக்குடி-கீழப்பருத்தியூருக்கு பேருந்து விடுதல்.

வினா எண் 15390—டாக்டர். ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி-கீழப்பருத்தியூருக்கு (வழி) பீர்க்கன்குறிச்சி பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

1994 மார்ச் 17]

விடை—

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :</u>

பரமக்குடியிலிருந்து பீர்க்கன்குறிச்சி வரை மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், ஒரு நாளைக்கு 6 நடைகள் வீதம், இயக்கப்படுகின்றன. பீர்க்கனகுறிச்சியிலிருந்து கீழப்பருத்தியூர் வரையுள்ள 4 கி.மீ. நீளமுள்ள சாலையில 3 கி. மீ. தார் சாலையாகவும் 1 கி.மீ. கிராவல் மண் சாலையாகவும், குறுகலானதாகவும், குழிகள் உள்ளதாகவும் இருப்பதால் பேருந்து செல்ல இயலாத நிலையில் உள்ளது.

8—

<u>ஆயிரம் மக்கள் தொகையுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து விடும் திட்டம்.</u>

வினா எண். 19599—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுககு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பேருந்து வசதி செய்து தரப்படாத 1,000 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் எத்தனை ?

(ஆ) அவ்வகை கிராமங்களுக்கு எப்போது அரசு பேருந்து வசதி செய்து தர உள்ளது ?

விடை—

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :</u>

(அ) மற்றும் (ஆ) 1980 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,000 மககள் தொகையும் சாலை வசதியும் பெற்று, பேருந்து வசதி பெறாத கிராமங்களுக்கு பேருந்து வசதி அளிக்கப்பட வேண்டும் என்பது அரசின கொள்கையாகும். அதன்படி மழை, வெள்ளம் போனற காரணங்களினால் சாலை பழுது பட்ட 28 கிராமங்களைத் தவிர ஏனைய சாலை வசதி பெற்ற கிராமங்கள் அனைத்திற் கும், பேருந்து வசதி அளிக்கபபட்டு விட்டது. மேற்கூறிய கிராமங்களுக்கும், சாலைபேருந்து இயக்கத்திற்கு ஏற்றவாறு செப்பனிடப்பட்ட பிறகு மீணடும் பேருந்து வசதி அளிக்கப் படும். மேலும் சாலைகளே இல்லாத 1,000 மக்கள் தொகை கொண்ட 433 கிராமங்களுக்கும் பேருந்து வசதி அளிக்க இயலவில்லை. சாலை வசதி பெற்றதும் இக் கிராமங் களுக்கும் வருங்காலத்தில் அரசின் நிதி நிலைக்கேற்ப பேருந்து வசதி அளிக்கப்படும்.

9—

அரவங்குறிச்சி வெள்ளியணைவரை பேருந்து விடுதல்.

வினா எண். 20033—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியிலிருந்து வெஞ்சாமாங்கூடலூர் வழியாக வெள்ளியணை வரை நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை. அரவக்குறிச்சி-வெள்ளியணை (வழி) வெஞ்சமாங்கூடலூர் என்ற 32.3 கி. மீ. நீளம் கொண்ட வழித்தடத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து வசதி பெற்ற பகுதிகளாக இருப்பதாலும் அரசு ஆணையின்படி, பேருந்து வசதி பெற்ற பகுதியில் 30 கி. மீ. க்கு மேல் பேருந்து இயக்கலாகாது என்பதாலும் இவ்வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க இயலாது.

10—

திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி பேக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவு படுத்தும் திட்டம்.

வினா எண். 23042—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகரில் அமைந்துள்ள பணிமனையினை நடப்பு ஆண்டில் 1993-94-ல் விரிவுபடுத்தும் உத்தேசம் இல்லை.

1994 மார்ச் 17]

11—

பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல்—விற்பனை விவரம்.

வினா எண் 16411—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட துணிகள் எவ்வளவு?

(ஆ) நேரிடையாக விற்ற துணிகள் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் :

(அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள 35 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் (1—4—1992 முதல் 31—3—1993 முடிய) ரூ. 1,31,52,491 மதிப்புள்ள துணிகளை கொள்முதல் செய்துள்ளது.

(ஆ) இச்சங்கங்கள் தனது உற்பத்தியில் ரூ. 4,43,53,446 மதிப்புள்ள துணிகளை நேரிடையாக விற்பனை செய்துள்ளது மேற்குறித்த பகுதியில் உள்ள 35 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் 31—3—1993-ன்படி ரூ. 2,23,37,321 மதிப்புள்ள சரக்குகள் இருப்பில் உள்ளது. அவற்றினை விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12—

நாடியம் ஊராட்சியில் கூடுதல் மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 13352—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி சித்தக்காட்டிற்கும் தண்டாமரைக் காட்டிற்கும் 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப்பணித்துறை அமைச்சர் ;

சேதுபாவா சத்திரம் ஒன்றியம் நாடியம் ஊராட்சி சித்தக் காட்டிற்கும் தண்டாமரைக் காட்டிற்கும் 7 தெருவிளக்குகள் அமைத்துத்தரக் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இப் பணிகள் 1993–94–ம் ஆண்டில் முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

13—

சேதுபாவா சத்திரம் ஒன்றியத்திற்கு புதிய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை.

வினா எண். 13355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ராவுத்தன் வயல் ஊராட்சி கொண்ணக்காட்டிற்கு 1992 -93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ராவுத்தன் வயல் ஊராட்சி கொண்ணங்காட்டிற்கு 20 தெரு விளக்குகள் அமைத்துக் தரக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பம் 1993-94-ஆம் ஆண்டில் இப் பகுதிக்கு நிர்ணயிக்கப்பட இருக்கும் இலக்கீட்டிற்கேற்ப எடுத்துச் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

14—

திருவோணம் ஒன்றியம் ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்.

வினா எண். 13356—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சி விடுதி குளத்துக்கரை ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சி விடுதி குளத்துக்கரை ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு கோரி மின்சார வாரியத்திடம் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை,

15—

கொத்தமங்கலம், கீரமங்கலம் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 13623—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொத்தமங்கலத்திலிருந்து கீரமங்கலம் செல்லும் நெடுஞ் சாலை தார்ச் சாலையை அகலப்படுத்தி சீர் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கொத்தமங்கலத்திலிருந்து கீரமங்கலம் செல்லும் சாலையின் சரியான பெயர் நகரம் கொத்தமங்கலம் சாலை கி. மி. 0/0—8/8'' என்பதாகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் மேற்பரப்பு முழுவதும் தார் தளமாகும். நடப்பு நிதியாண்டில் (1992—93) இச்சாலையில் காலமுறை புதுப்பித்தல் தலைப்பின் கீழ் கி.மீ.2/0–3/0 சாலைப் பகுதியும், பழுதடைந்த பகுதிகளை சீர் செய்தல் தலைப்பின் கீழ் கி. மீ. 0/0—2/0 சாலைப்பகுதியும் தார் புதுப்பிக்க ஒப்புதல் வழங்கப்பட்டு பணி ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விரைவில் நிறைவு செய்யப்படும். தற்போது ஒரு வழித் தடமாக உள்ள இச்சாலையினை இருவழித் தடச் சாலையாக மாற்றி அமைக்கத் தோராயமாக ரூ. 13.50 இலட்சம் தேவைப்படும். நிதி நெருக்கடியின் காரணமாக இப்பணியினை அண்மைக் காலங்களில் திட்டப் பணிகளின் கீழ் செயல்படுத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை,

16—

பின்ன வாசல் பெரிய ஏரியை ஆழப்படுத்தி அகலப்படுத்தி கரையை உயர்த்தும் திட்டம்.

வினா எண். 13751—திரு. ஆர் சிங்காரம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பின்ன வாசல் பெரிய ஏரியை புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி, அகலப்படுத்தி கரையை உயர்த்தி பராமரிக்க உலக வங்கிக் கடன் திட்டத்தில் 1992—93-ல் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்ய காவிரி தமிழக பாசன மேம்பாடு அணைக்குழு (CADRA) ஒன்று ஏற்படுத்தலாமென இவ்வரசு கருதுகிறது. காவிரி நீரை நன்முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டமானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இதனை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனவும் இவ்வரசு கருதி, ரூ. 952 கோடி அளவுக்கு தேசீய நீர் மேலாண்மை திட்டம் பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற் குறிப்புகளை மத்திய அரசின் எட்டவாது திட்டத்தில் சேர்ப்பது பற்றிய பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

17—

கல்லான்குளத்தை மராமத்து செய்வதற்கு நடவடிக்கை.

வினா எண். 13771 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் கல்லான் குளத்தை மராமத்து செய்து மதகுகளை செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கல்லான் குளத்திலுள்ள இரண்டு மதகுகளும் பனை மரக் குழாய்களாக உள்ளன. இக்குளத்தை விரிவு படுத்தப்பட்ட சிறுபாசன திட்டத்தின் கீழ் மராமத்து செய்யவும், மதகுகளை கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

18—

பழுதடைந்த பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை அப்புறப்படுத்தும் திட்டம்.

வினா எண். 14100—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்குரிய (Cooling Towers) பழுதடைந்த நிலையில் பல ஆண்டுகளாக இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவைகளை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அக் குளிர் கோபுரங்களின் (Cooling Towers) பழுதடைந்த நிலையையும் அவைகளை அப்புறப்படுத்த ஆகும்? செலவினையும் கருத்தில் கொண்டு தக்கப்படி அவற்றை அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து வருகிறது.

19—

சங்கனூர் பள்ள சீரமைப்புத் திட்டம்.

வினா எண். 14114—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சியின் மத்தியில் செல்லும் சங்கனூர் பள்ள சீரமைப்புத் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கோயம்பத்தூரில், சங்கனூர்பள்ளம் ஆற்றில் வெள்ளத்தடுப்பு பணிக்கான முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த பணிக்கு விரிவான ஆய்வு செய்து தற்சமயம் நில நிலைமை, நிலச்சரிவு, அகலம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு விரிவான மதிப்பீடு அனுப்பும்படி அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, விரிவான ஆய்வு, தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் செய்யப்பட்டு வருகிறது. விரிவான ஆய்வுப்பணிகள் முடிந்ததும், விரிவான மதிப்பீடு அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும் என தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்கள் தெரிவித்துள்ளார்.

20—

செட்டிகுளம் பஞ்சாயத்து புதுமனை நாடார் குடியிருப்பில் மின்வாரிய அலுவலகம் அமைத்தல்.

வினா எண். 14155—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி, செட்டி குளம் பஞ்சாயத்து புதுமனை நாடார் குடியிருப்பு மக்களுக்கு மின் கட்டணம் செலுத்த வசதியாக மின்வாரிய அலுவலகம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

புதுமனை நாடார் குடியிருப்பு மின் நுகர்வோர்கள் தற்போது செட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள மின்கட்டண வசூல் நிலையத்தில் தற்போது பணம் செலுத்தி வருகிறார்கள். இங்கு 263 மின் இணைப்புகளுக்கு மட்டுமே மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

வாரியத்தின் பணம் பாதுகாப்பினைக் கருதி பணம் வசூல் செய்யும் மையம் புதுமனை நாடார் குடியிருப்பில் அமைக்க இயலாது.

1994 மார்ச் 17]

21—

சுப்புகிரி அணைக்கட்டு கால்வாயை பழுதுபார்க்க நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் 14506— திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சுப்புகிரி அணைக்கட்டு (காமன்தொட்டி) கால்வாய் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டப் பணி மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சுப்புகிரி அணைக்கட்டு (காமன்தொட்டி) கால்வாய் பழுதுபார்க்கும் செயற்குறிப்பு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் பரிசீலிக்கப் பட்டு வருகிறது. பராமரிப்பு நிதியில் இப்பணி மேற்கொள்ள விருப்பதால் 1993—94 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) இப்பணியின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 85,000.

22—

தாமரங்கோட்டை பாலத்திற்கு ரிவெட்மெண்ட் கட்டுவதற்கு பரிசீலனை.

வினா எண் 14601— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், செங்கபடுத்தான்காடு ஊராட்சி, மரவக்காடு— துவரங்குறிச்சி சாலையில் துவரங்குறிச்சியிலிருந்து 1.5, கி.மீ. தூரம் உள்ள தாமரங்கோட்டை பாலத்திற்கு கீழ் ரிவெட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

72 கி.மீ. நீளமுள்ள துவரங்குறிச்சி மறவக்காடு சாலையில் கி.மீ. 0/10 மற்றும் கி.மீ. 1/2 ஆகிய பகுதிகளில் ரிவெட்மெண்ட் கட்ட ரூ. 1 லட்சம் தேவைப்படும் 1993–94 ஆம் ஆண்டின் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இப்பணியை எடுத்துச் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

23—

பெருங்கால் கால்வாயினை நவீனப்படுத்தும் திட்டம்.

வினா எண் 14712—திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தின் உள்ளே பெருங்காலில் லைனிங் வேலை செய்வதற்கு ஆய்வு வேலைகள் நடைபெற்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1987–88 விலை விவரப்பட்டியலின்படி பெருங்கால் கால்வாயினை நவீனப்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 3.97 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வுக்குப்பின் இன்றைய விலை விவரப்படி விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்று பெருங்கால் கால்வாயில் லைனிங் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

24—

வேந்தோனிக் கால்வாயை பரமக்குடி நகராட்சிக்கு வழங்கத் திட்டம்.

வினா எண் 14740—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் வேந்தோனிக்கால்வாயை கழிவு நீர் அகற்றுவதற்காக பொதுப் பணித்துறையிடமிருந்து நகராட்சிக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

25—

தமிழகத்திற்கு கூடுதல் மின்சக்தி உற்பத்தி செய்ய வாரியம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 14747—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் மின்சக்தி திறன் எவ்வளவு?

(ஆ) மின்சார வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப் படும் மின் சக்தி மாநில தேவைக்குப் போதுமானதாக உள்ளதா ?

(இ) கூடுதல் மின்சக்தி உற்பத்தி செய்ய வாரியம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் மின் உச்சத் தேவை 3,700 மெகாவாட்டும் மற்றும் மின்சக்தி 76 மில்லியன் யூனிட்டும் ஆகும்.

(ஆ) ஆம்.

(இ) இல்லை.

26—

மடிச்சல் கால்வாய் திட்டத்திற்கு நிதி ஒதுக்குதல்.

வினா எண் 15095—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடிச்சல் கால்வாய் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

27—

உக்கிரன் கோட்டை, படவையார் குளக்கால்வாயை மராமத்து செய்ய நடவடிக்கை.

வினா எண் 15106—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், உக்கிரன் கோட்டை, படவையார் குளத்திற்கு வரும் கால்வாய்க் கரையைச் செப்பனிடவும், குளத்தை பராமரிக்கவும், கால்வாயை மராமத்து செய்யவும் அலைகல்லை புதுப்பிக்கவும், பாலத்தைப் புதுப்பிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இக்கால்வாயில் சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் அலைகற்களை புதுப்பிக்கவும் தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரப்படுகிறது. இப்பணி 1993—94 வருட நிதி நிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாலத்தை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தினரால்தான் புதுப்பித்துக் கொடுக்கப்பட வேண்டும்.

1994 மார்ச் 17]

28—

தாழையூத்து குளத்தில் சேதமடைந்த அலைக்கற்களை புதுப்பிக்க நடவடிக்கை.

விடை—

வினா எண் 15111—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்ட பொம்மன் மாவட்டம் ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் தாழையூத்து குளத்தில் சர்வே எண். 117–5 குளத்துக் கரையில் அலைக்கற்கள் சேதமடைந்துள்ளதை நீக்கி புதிய அலைக்கற்கள் பதிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இக்குளத்தில் அலைக்கற்கள் சேதமடைந்ததை பழுது பார்க்கவும் இதர மராமத்துப் பணிகளுக்கும் ரூ. 90,000க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் (எம்&ஆர்) தலைப்பில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் வரும் நிதியாண்டில் (1993—94) நிதி நிலைமைக்கேற்ப இந்தப்பணி மேற் கொள்ளப்பட்டு நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

29—

மானூர் ஒன்றியம் பட்டாக்குளம் மடையை மராமத்து செய்வதற்கு நடவடிக்கை.

வினா எண். 15119—திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி கட்டபொம்மன், மாவட்டம் ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், சீதைக்குறிச்சி மடையிலிருந்து அக்கால்வாயிலுள்ள பட்டாக் குளம் மடை '11—ஏ'' மடிய மராமத்து செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், சீதைக்குறிச்சிக் குளம் மற்றும் பட்டாக்குளம், பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள குளங்கள் ஆகும். இக்குளங்களில் ஆயக்கட்டுகள் முறையே 90.55 ஏக்கர் மற்றும் 42.44 ஏக்கர் ஆகும்.

இக்குளங்கள் சிற்றாற்றின் குறுக்கே அமைந்துள்ள பள்ளிக் கோட்டை அணையிலிருந்து பிரிந்து செல்லும் பள்ளிக் கோட்டை கால்வாய் மூலம் நீர் வரத்து பெறுகின்றன. இக்கால்வாயில் சீதைக்குறிச்சி குளத்திற்கு தண்ணீர் செல்லும் மடையிலிருந்து பட்டாக் குளத்திற்கு தண்ணீர் செல்லும் மடை வரை மராமத்து செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரப்படுகின்றன. இப்பணி 1993—94-ம் வருட நிதி ஒதுக் கீட்டிற்கு தக்கவாறு முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

அம்மாபேட்டை—அந்தியூர் சாலைகளை பழுதுபார்த்தல்.

வினா எண். 15143—திரு. வெ. பெரியசாமி, மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அம்மாப்பேட்டை முதல் அந்தியூர் வரை உள்ள சாலைகள் பழுது அடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆமெனில், பணி எப்போழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டத்திலுள்ள அரசு சாலைகள் மற்றும் பாலங்களில் கடந்த நவம்பர் மாதம் பெய்த பெருமழையின் காரணமாக மிகவும் பாதிப்புகள் ஏற்பட்டன.

1994 மார்ச் 17]

அந்தியூர் அம்மாப்பேட்டை சாலையில் மழை வெள்ளத்தினால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளான கி. மீ. 6/4—8. கி. மீ. 8/2—9 0 மற்றும் கி. மீ. 16/0—17/4 ஆகிய 3.80 கி. மீ. தூரம் சாலைப் பகுதிகளை சீர் செய்ய வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பழுதடைந்துள்ள பகுதிகளான கி. மீ. 3 0—6 0 கி. மீ. 9/0—10/0 , 12/0—14/2 மற்றும் 15 0—16/0 ஆகிய 7.20 கி. மீ. தூரம் உள்ள சாலைகள் கூடுதல் வெள்ள நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யும் தருணத்தில் பணிகள் எடுத்துச் செய்யப்படும்.

31—

அந்தியூர் முதல் பர்கூர் வரை பழுதடைந்த சாலையை செப்பனிடுதல்.

வினா எண். 15144—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்ட அந்தியூர் தொகுதியில் அந்தியூர் முதல் பர்கூர் வரை உள்ள நெடுஞ்சாலைப்பணித் துறை சாலை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ): இச்சாலை 1992 நவம்பரில் பெய்த கனத்த மழையினால் பழுதடைந்து இருந்ததை, தார் ரோடு போடப்பட்டு பக்கக் கால்வாய் எடுக்கப்பட்டு போக்குவரத்திற்கு உகந்தவாறு சரி செய்யப்பட்டுள்ளது. பழுதடைந்த பகுதிகளை நிரந்தரமாக சரி செய்வதற்கு ரூ. 69.20 லட்சங்கள் தேவைப்படும். இப்பொழுது வெள்ளச் சேதங்களை சரி செய்ய அளிக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து இச்சாலையை நிரந்தரமாக சரி செய்ய இயலாது. மேலும் இச்சாலையில் கி. மீ. 54/6-ல் பாலாற்றின் குறுக்கே இருந்த பாலம் கடந்த நவம்பர் மாதம் பெய்த பெரு மழையினால் தகர்ந்து விட்டது. இதில் போக்குவரத்து தற்போது நடை பெறவில்லை. இப்பாலப்பணியினை கர்நாடக அரசால் மேற் கொள்ள இவ்வரசால் கடிதப் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இது வரை செப்பனிடும் வேலை துவங்கப் படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

32—

பவானி ஆற்றில் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை.

வினா எண் 15165—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட மேட்டுப்பாளையம் தாலுக்கா, நெல்லித் துறை கிராமம் செல்ல பில்லூர் அணையில் இருந்து வரும் பவானி ஆற்றில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் ;

(அ) ஆம், திட்டம் உள்ளது.

(ஆ) இப்பாலம் அமைக்கும் பணியானது தமிழக அரசால் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள மத்திய சாலை நிதித்திட்டத்தில் ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் இடம் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் நெல்லித்துறை அருகே பவானி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

33—

காவிரியாற்றின் இரு கரைகளிலும் ரிவிட்மென்ட் கட்டுதல்

வினா எண். 15179—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரியாற்றின் இருகரைகளிலும் சில இடங்களில் பொதுப்பணித்துறையின் மூலம் ரிவிட்மென்ட் கட்ட அரசு ஆணையிடுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரியாற்றின் இரு கரைகளிலும் அத்தியாவசியமான இடங்களுக்கு ரிவெட்மென்ட் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, பணிகள் இக்கோடையில் செய்து முடிக்கப் படும்.

34—

சூரக்காடு கிராமத்தில் உப்பனதற்றினால் ஏற்படும் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா எண். 15768—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியில் சூரக்காடு குக்கிராமத்தில் உப்பனதற்றினால் ஏற்படும் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

35—

நெடுஞ்சாலைகளை மேம்படுத்தத் திட்டம்.

வினா எண் 15883—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் இதர மாவட்டச் சாலைகள் எத்தனை ?

(ஆ) 1991–92 ஆம் ஆண்டு சாலைகளை மேம்படுத்த அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மாநில நெடுஞ்சாலைகள் 1—நீளம் 8 கி. மீ, பெரிய மாவட்டச் சாலைகள் 34—நீளம் 38.3. கி. மீ., இதர மாவட்டச் சாலைகள் 170—நீளம் 1020 கி. மீ.

(ரூபாய் இலட்சத்தில்)

(ஆ)	திட்டப்பணிகள்	..	38.63
	திட்டம் சாரா பணிகள்	..	364.98
	மொத்தம்	..	403.61

36—

சிஸ்டம் கண்மாய்களை நவீனப்படுத்த திட்டம்.

வினா எண். 15903—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் சிஸ்டம் டாங்கில் வரத்துக் கால்வாய் இல்லாத கண்மாய்கள் எத்தனை ?

(ஆ) இவை அனைத்தும் ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின் கீழ் எடுத்து கண்மாய் நவீனப்படுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தொகுதியில் சிஸ்டம் டாங்கில் வரத்துக் கால்வாய்கள் இல்லாத கண்மாய்களின் எண்ணிக்கை 68 ஆகும்.

(ஆ) ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் கீழ் சிஸ்டம் கண்மாய்களை நவீனப்படுத்த அரசு விதிமுறைகள் இல்லை.

1994 மார்ச் 17]

37—

அரியாக்கோட்டை — ராமநாதபுரம் வண்டல் அருகே பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை.

வினா எண். 15910—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியாக்கோட்டை — ராமநாதபுரம் சாலையில் வண்டல் அருகே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தற்போதுள்ள தரைமட்டப் பாலம் 1992-93-ல் மராமத்து செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால், உயர் மட்டப் பாலம் கட்டும் அவசியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

38—

இலையூர் மதிகெட்டான் ஏரியை ஆழப்படுத்தத் திட்டம்.

வினா எண். 15959—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைப் பாதுகாப்பு உத்திரவாத சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று ஆண்டிமடம் தொகுதியில் உள்ள இலையூர் மதிகெட்டான் ஏரியை ஆழப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

39—

நக்கம்பாடி—வங்கினபுரம் சாலையை செப்பனிட நடவடிக்கை

வினா எண். 16130— திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் நக்கம்பாடி — வங்கினபுரம் செல்கின்ற சாலையை செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் ''வஞ்சினபுரம் நக்கம்பாடி சாலை கி.மீ. 0/0–2/8'' என்பதாகும். இச்சாலை செந்துறை ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள 3.70 மீ. அகலமுள்ள கிராவல் தள மேற்பரப்பு கொண்ட ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூபாய் 6 இலட்சம் தேவைப்படும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி 2 திட்டத்தில் மேற்கொள்ள வகை செய்யாததால், இப்பணியை பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள இயலாது.

40—

பரமக்குடியில் இரண்டாம் தொழிற்பேட்டை கட்டுதல்.

வினா எண் 16823 டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் இரண்டாம் தொழிற்பேட்டை கட்டும் பணியில் காலதாமதம் ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்;

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

41—

தென்னை அபிவிருத்திக்கு நடவடிக்கை.

வினா எண் 21712—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை மரங்களில் பிஞ்சு பூக்கள் உதிர்ந்து வளர்ச்சி குன்றியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) ஆயினும் மாவட்டங்களில் தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் இப்பிரச்சினையினைச் சந்திக்கும்போது வேளாண்மை அலுவலர்களைச் சந்தித்து தக்க ஆலோசனை பெற்று, அவர்கள் சிபாரிசு செய்யும் வழிமுறைகளைக் கடைபிடிக்கிறார்கள்.

42—

கள்ளத்தனமாக மணல் எடுத்துச் சென்ற வாகனங்கள் மீது நடவடிக்கை.

வினா எண் 3172—திருமதி. வி.ஜி. மணிமேகலை: Will the Hon'ble Minister for Industries be pleased to state—

(a) Whether a number of lorries and tractors have been seized by the police at Adigathur and other place in Chengalpattu-MGR District for illegal quarrying of river sands about August 1991, and

(b) The details thereof?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்

(அ) மற்றும் (ஆ): கடந்த 1991 ஆகஸ்டு திங்களில் செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அதிக தூர் மற்றும் மாவட்டத்தின் இதர பகுதிகளில் கள்ளத்தனமாக மணல் எடுத்துச் சென்ற லாரி, டிராக்டர் போன்ற எந்த வாகனத்தையும் காவல் துறையினர் கைப்பற்றுகை செய்திடவில்லை. வருவாய்த்துறை அலுவலர்களால் மேற்படி மாதத்தில் 35 வாகனங்களை கைப்பற்றுகை செய்து, அந்த வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

43—

மயிலாடுதுறையில் காகித ஆலை நிறுவும் திட்டம்:

வினா எண் 3486—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கரும்புச்சக்கையைக் கொண்டு மயிலாடுதுறை தொகுதியில் காகித ஆலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்;

(அ) நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு காகித ஆலை அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 மார்ச் 17

44—

தமிழ்நாடு கனிம நிறுவன கிராபைட் சுத்திகரிப்பு தொழிற் சாலையை சிவகங்கையில் அமைத்தல்.

வினா எண். 3883—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether graphic projec is being set up in Tamil Nadu, and

(b) The details thereof?

விடை:—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் கிராஃபைட் சுத்திகரிப்பு தொழிற்சாலையை சிவகங்கையில் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னையிலுள்ள இந்தியன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமானப்பணிகள் மிகவும் தீவிரமாக நடந்து வருகின்றன. தற்போது லார்சண் மற்றும் டூப்ரோ நிறுவனம் இத்தொழிற்சாலைக்கான கட்டிடம் கட்டும் பணியைத் துவக்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1994-ஆம் ஆண்டில் ஜனவரி திங்களில் உற்பத்தியைத் துவங்கும்.

45—

செங்கல்பட்டு—எம்ஜி.ஆர். மாவட்டத்தில் ஆற்றுப் பகுதிகளில் ஒப்பந்த விதிகளை மீறி மணல் எடுப்பவர்கள் மீது நடவடிக்கை

வினா எண். 4477—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டத்தில் ஆற்றுப் பகுதிகளில் மணல் எடுப்பவர்கள் ஒப்பந்த விதிகளை மீறுவதைக் கண்காணிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

விடை:—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

செங்கல்பட்டு-எம்.ஜி. ஆர். மாவட்டத்தில் ஆற்றுப் பகுதிகளில் ஒப்பந்த விதிகளை மீறாமல் மணல் எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

46—

கரிசவயல் பத்துக்காடு பள்ளிக்கு தளவாட சாமான்கள் வழங்கும் திட்டம்.

வினா எண் 16146—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கரிசவ்யல் பத்துக்காடு பள்ளிக்கு 1992-93-ல் தளவாட சாமான்கள் வழங்கச் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை:—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தளவாடங்கள் வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அரசாணை எண் 190, நிதித்துறை, பி.ஜி. 1, நாள் 16—3—1993-ன்படி 31—3—1993 வரை தடை ஆணை வழங்கப்பட்டது. இருப்பினும் அரசுப் பள்ளிகளில் இருக்கை வசதிகள் செய்து கொள்ள பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்தும் உரிய அலுவலரின் அனுமதி பெற்று செலவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1994 மார்ச் 17]

47—

மேல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதி ஏற்படுத்துதல்.

வினா எண். 19853—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி கல்வி மாவட்டம் மேல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மேல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இவ்வாண்டு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

48—

பல்கலைக் கழக ஆண்டு அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

வினா எண். 19952—திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஆண்டு அறிக்கைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பல்கலைக் கழகங்கள் விதிப்படி ஆண்டறிக்கைகள் பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது. இவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட ஆண்டறிக்கையின் நகல் அரசிற்கு அனுப்பப்படுகிறது.

[1994 மார்ச் 17

49—

இஸ்லாமிய பள்ளிகள் கல்லூரிகளில் தொழுகை நடத்துவதற்கு இடைவேளை நேரம் ஒதுக்குதல்.

வினா எண். 20213—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பிற மாநிலங்களைப்போல் வெள்ளிக்கிழமை நாட்களில் இஸ்லாமிய மாணவர்கள் சிறப்பு தொழுகை நடத்துவதற்கு வசதியாக பள்ளி, கல்லூரிகளில் பகல் 12 மணி முதல் 2 மணி வரை இடைவேளை விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

1. தமிழகத்தில் உள்ள பெரும்பாலான முஸ்லீம் பள்ளிகளில் வெள்ளிக்கிழமை விடுமுறை தினமாகவும் சனிக்கிழமை வேலை நாளாகவும் நடைபெற்று வருகின்றன. எனவே அப்பள்ளிகளில் இப்பிரச்சினை எழவில்லை.

ஏனைய பள்ளிகளில் குறைந்த அளவிலேயே இஸ்லாமிய மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளிகளில் பகல் 12-00 மணி முதல் பிற்பகல் 1-30 முடிய நண்பகல் உணவு இடைவேளையாக விடப்படுகிறது. எனவே, இஸ்லாமிய மாணவர்களுக்கு தொழுகைக்கென தனியாக இடைவேளை அனுமதி தேவையில்லை. தொழுகைக்கென இஸ்லாமிய மாணவர்கள் அனுமதி கோரினால் அவர்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியரால் அனுமதி வழங்கப்படும்.

2. அரசு மற்றும் தனியார் கலைக் கல்லூரிகளில் இஸ்லாமிய மாணவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே பயில்கின்றனர். மேலும் கல்லூரிகளில் பகல் 12 மணி முதல் 2 மணி வரை உணவு இடைவேளையாக இருக்கும். இஸ்லாமிய மாணவர்கள் வெள்ளிக்கிழமை 12 மணிக்குத் தொழுகைக்கு செல்லவேண்டும் எனக் கேட்டால் உரிய அனுமதி கல்லூரி முதல்வர்களால் வழங்கப்படும்.

1994 மார்ச் 17]

50—

சங்ககிரி கல்வி மாவட்டத்தில் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகங்களை அரசுக் கட்டிடங்களுக்கு மாற்றுதல்.

வினா எண். 21491—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி கல்வி மாவட்டத்தில் உதவிக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் 12-ம் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதைப் படிப்படியாக அரசுக் கட்டிடங்களாக மாற்ற அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், சங்ககிரி உதவிக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

51—

தாயில்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை.

வினா எண். 21968—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசித் தொகுதி தாயில்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

ஆம். சிவகாசித் தொகுதி, தாயில்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டிடம் கட்டித்தர பெற்றோர் ஆசிரியர் கழக சம்மதத்தின் பேரில் 50 சதவீதம் பணம் கட்ட தயாராக உள்ளதால் மேற்காண் பள்ளிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 17

52—

பரமக்குடி தாலுக்காவிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயன் அடைந்தோர் விவரம்.

வினா எண். 17201—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை ?

(ஆ) இதன் மூலம் வழங்கப்பட்ட பயிர்க் கடன்கள், நகைக் கடன்கள், உரமானியங்கள் தொகை எவ்வளவு ?

(இ) முதலமைச்சர் அவர்களின் வட்டி மற்றும் அபராத வட்டி போனஸ் திட்டத்தில் பயன் அடைந்தோர் சதவீதம் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுகாவில் உள்ள மொத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்—23.

(ஆ) வழங்கப்பட்ட கடன் விபரம்—

(1) பயிர்க்கடன்—

உறுப்பினர் எண்ணிக்கை	2,827
தொகை	ரூ. 72.25 இலட்சம்.

(2) நடுத்தரக் காலக்கடன்—

உறுப்பினர் எண்ணிக்கை	458
தொகை	ரூ. 28.08 இலட்சம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

(3) நகைக்கடன்—

உறுப்பினர் எண்ணிக்கை 10,847

தொகை ரூ. 287.32 இலட்சம்.

(4) உரமான்யம்—

பயனடைந்தோர் எண்ணிக்கை .. 3,093

தொகை ரூ. 11.24 இலட்சம்

(இ) முதலமைச்சர் அவர்களின் வட்டி மற்றும் அபராத வட்டி போனஸ் திட்டத்தில் பயனடைந்தோர் எண்ணிக்கை 1,812; தொகை ரூ. 5.16 இலட்சம்.

பயனடைந்தோர் சதவீதம் : 22.27 சதவீதம்.

53—

கோரவயல்காடு சாலையை கப்பிச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 7273—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல்காடு செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல்காடு செல்லும் சாலையை மராமத் செய்து கப்பிச் சாலையாக மாற்றித்

தர போதிய நிதி வசதி இல்லாததால் இவ்வேலையை எடுத்துச் செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

54—

கள்ளம்பட்டி பூவாணம் மண்சாலையை மராமத்து செய்யும் திட்டம்.

வினா எண் 7379—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கள்ளம்பட்டியிலிருந்து பூவாணம் வரை குறுக்கே உள்ள மண்சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கள்ளம்பட்டியிலிருந்து பூவாணம் வரை குறுக்கே உள்ள மண்சாலையை மராமத்து செய்து கொடுக்க நிதி ஆதாரம் ஏதும் இல்லாத நிலையில் இப்பணியினை செய்திட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

55—

கச்சவயல் தெரு ஆதிதிராவிடர் பழுதடைந்த வீடுகளை புதுப்பித்தல்.

வினா எண் 7500—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் ராஜா மடம் ஊராட்சி, கச்சவயல் தெரு ஆதிதிராவிடர்களின் வீடுகள் பழுதுபட்டதை பழுதுபார்த்துக் கொடுக்க அல்லது புது தொகுப்பு வீடு கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுது பார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே, இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

56—

கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் தார்சாலையாக மாற்றி அமைத்தல்.

வினா எண் 7768—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் பிசானத்தூர் துருகபட்டி சாலையும், அரியானிபட்டி மற்றும் வீரபட்டி சாலைகளை தார்சாலையாக செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பிசானத்தூர் துருசு பட்டி சாலை, அரியானிபட்டி சாலைகளின் ஒரு பகுதி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக மாற்றும் பணி முடிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள பகுதி நிதி ஒதுக்கீடு இல்லாததால் எடுத்து செய்ய இயலவில்லை.

[1994 மார்ச் 17

57—

கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் சிறுபாலங்கள் கட்டும் திட்டம்.

வினா எண் 7770—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், உயர்நிலைப் பள்ளிச்சாலை, சோழகம்பட்டிச் சாலை ஆண்டிச் சாலை, குளம்பட்டிச் சாலை, மேலவான்பான் விடுதி போன்ற இடங்களில் சிறுபாலங்கள் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நிதி வசதி இல்லாததால் சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்கப்பட்ட வேலைகளை எடுத்துச் செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

58—

புதுக்கோட்டை தொகுதியில் புதிய சிறு பாலங்கள் அமைத்தல்.

வினா எண் 7771—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், ஆண்டிப்பட்டி சாலை, உல்வயல் சாலை, துருகபட்டி, புதுநகர் சாலை, முதுகுளம்—குளத்தூர் சாலை போன்ற இடங்களில் புதியதாக சிறு பாலங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நிதி ஒதுக்கீடு இல்லாததால் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்டுள்ள இவ்வேலைகளை எடுத்து செய்யும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

1994 மார்ச் 17]

59—

புதுக்கோட்டை தொகுதி கிராமங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண் 7775—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக் கோட்டை ஒன்றியத்தில் உள்ள கோமாபுரம், அரவம்பட்டி, நத்தமாடிப்பட்டி போன்ற கிராமங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக் கோட்டை ஒன்றியத்தில் உள்ள கோமாபுரம், அரவம்பட்டி, நத்தமாடிப் பட்டி போன்ற கிராமங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் இப்போது இல்லை.

60—

ஆயிபுரம் காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7797—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிபுரம் காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும்

[1994 மார்ச் 17

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

61—

மானம்பாடி மண்டபத் தெரு குடிநீர் பிரச்சினையைத் திர்க்கும் திட்டம்

வினா எண் 8336—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மானம்பாடி மண்டபத்தெரு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மானம்பாடி மண்டபத்தெரு குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி வசதி இல்லாததால் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

62—

பரமாகுடி—வஞ்சியூர் பழுதடைந்த சாலையை சீர்படுத்தல்

வினா எண் 8599—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூர் ஒன்றியம் பரமாகுடியிலிருந்து வஞ்சியூர் வரை செல்லும் ஊராட்சி சாலை பழுதுபட்டுள்ளதால் அதைச் சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூர் ஒன்றியம், பரமாகுடியிலிருந்து வஞ்சியூர் வரை செல்லும் சாலை வேலையினை எடுத்துச் செய்ய அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அவ்வேலை எடுத்து செய்யப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

63—

சண்முகநேரி குளத்தின் ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கு நடவடிக்கை

வினா எண் 8383—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கருமேலவட்டத்திலுள்ள பெரியவாடி கிராமத்தைச் சேர்ந்த சண்முகநேரி குளத்தின் பாதிப் பகுதியை தனியார் ஆக்கிரமித்து விவசாயம் செய்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குடி தாலுக்கா, கருக்காகுறிச்சி மேற்கு வட்டம் வானக்கங்காடு கிராமம் புல எண் 224-8 சண்முகநேரி குளத்தின் நீர்ப்பரப்பு பகுதியில் 8 நபர்கள் 3.02.0 ஹெக்டேர் பரப்பில் ஆக்கிரமிப்பு செய்து வாழை, யூகலிப்டஸ், முந்திரி சாகுபடி செய்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆலங்குடி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதைக் கண்காணிக்க புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1994 மார்ச் 17

64—

திட்டப்படுகை ஆச்சான்புரம் பழுதடைந்த சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் 8454—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் திட்டப்படுகையில் இருந்து ஆச்சான்புரம் செல்லும் ரோடு பழுதடைந்துள்ளதால் அதை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதிப் பற்றாக்குறை காரணமாக சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலையைப் பழுது பார்க்கும் குறிப்பு அரசிடம் இல்லை.

65—

கீழப்பாவூரில் சாலையைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 8579—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் நகரில் மத்திய சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சாலை செப்பனிடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் நகர மத்திய சாலை 1991-92-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூ. 24,000 மதிப்பீட்டில் செய்யப்பட்டு பணி முடிவு பெற்று விட்டது.

1994 மார்ச் 17]

66—

குறிச்சான்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்புகளை பழுது பார்த்தல்.

வினா எண் 8784—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம். குறிச்சான்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் குடியிருக்க முடியாத நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிதாக வீடு கட்டிக் கொடுக்கப் படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்;

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப் பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக் கும். எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

67—

கிராமங்களிலுள்ள கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி அளித்தல்

வினா எண் 8923—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிராமங்களில் கட்டப்பட்டுள்ள நவீன கழிப்பிடங்களுக்கு கீழ்க்காணும் முறையில் தண்ணீர் வசதி செய்யப்படுகிறது

கழிப்பிடங்களுக்கு அருகில் தண்ணீர் தொட்டி அமைத்து, தண்ணீர் நிரப்பி, அதன் மூலம் தண்ணீர் வசதி செய்யப்படுகிறது. அல்லது அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து, குழாய் இணைப்பு மூலம் தண்ணீர் வசதி செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட வசதிகள் செய்யப்படாத இடங்களில், அருகில் கைப்பம்பு அமைத்து அதன் மூலம் தண்ணீர் வசதி செய்யப்படுகிறது.

68—

கிளாவடி நத்தம் காலனி வீடுகளை சீர்செய்தல்

வினா எண் 9191—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கிளாவடி நத்தம் காலனி தொகுப்பு வீடுகளை சீர்செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்;

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

69—

வாழக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட திட்டம்

வினா எண் 9213—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் வாழக்கொல்லை கிராமத்தில் ஆதிதிராவிடர் பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

70—

வாழக்கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்

வினா எண் 9261—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

புவனகிரி ஒன்றியத்தில் வாழகொல்லை ஆதிதிராவிடர் பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வாழக்கொல்லை ஆதிதிராவிடர் காலனியில் இந்தியா மார்க் 2 கைப்பம்பு ஒன்று தற்போது போடப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

71—

வண்ணாரப்பட்டி—வடக்கு தொண்டமான் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 9804—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுகையில் இருந்து வடக்குத் தொண்டமான் ஊரணிக்குச் சென்றுவரும் நகரப் பேருந்து சாலையில் வண்ணாரப்பட்டி—வடக்கு தொண்டமான் ஊரணி வரை உள்ள 4.8. கி. மீட்டரில் இருந்து கிராமத்திற்குள் செல்லும் சாலையை தார்ச்சாலையாக கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்;

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

72—

ராஜாபகதூர் சாலையில் ஓடுபாலம் அமைக்கும் திட்டம்.

வினா எண். 9802—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான் ஊரணி ஊராட்சி, வண்ணாரப்பட்டி—வடக்குத் தொண்டமான் ஊரணி சாலை 2.6. கி.மீ. விலக்கில் இருந்து ராஜாபகதூர் சாலை முடிவில் ஓடு பாலம் (காஸ்வே) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்கப்பட்ட வேலையை எடுத்துச் செய்ய இயலவில்லை.

73—

பெருச்சிவன்னியன்பட்டி செட்டிக்காடு சாலையில் பாலம் கட்டுதல்.

வினா எண் 9809—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் பெருச்சிவன்னியன்பட்டி-செட்டிகாடு செல்லும் சாலையில் பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதிவசதி இல்லாததால் சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்கப்பட்ட பாலம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏது இல்லை.

1994 மார்ச் 17]

74—

தொண்டமான் ஊரணி சாலையில் கூடுதல் பாலம் அமைத்தல்.

வினா எண் 9812—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுகை ஒன்றியம், வடக்கு தொண்டமான் ஊரணியில் இருந்து தெற்கு தொண்டமான் ஊரணி செல்லும் சாலையில் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுகை ஒன்றியம், வடக்கு தொண்டமான் ஊரணியிலிருந்து தெற்கு தொண்டமான் ஊரணி செல்லும் சாலையில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஏற்கனவே மூன்று பாலங்கள் உள்ளன. மேலும் ஒரு பாலம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

75—

குன்றாண்டார் கோவில் ஒன்றியத்தில் சாலைகளை பழுது பார்க்க நடவடிக்கை.

வினா எண் 10056—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில் உள்ள தெம்மாவூர் சின்ன ஊரணிப்பட்டி, தெம்மாவூர்—மின்னாத்தூர் சாலை போன்றவைகளுக்கு ஜல்லி பரத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை 1993-94 நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படும்.

76—

புரசைவாக்கம் தொகுதியிலுள்ள மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த தலைமையாசிரியர் ஆசிரியைகள் விவரம்.

வினா எண் 10395—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புரசைவாக்கம் தொகுதியிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த தலைமை ஆசிரியர்கள் ஆசிரியைகள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பதினொன்று பேர்.

77—

புதுகை தொகுதியில் சாலையை சீர்படுத்த திட்டம்.

வினா எண். 10611—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுகை தொகுதியில் அம்புக்கோவில்காட்டு நாவல் சாலையில் இருந்து கணபதிபுரம் தொண்டமான் ஊரணி வழியாக மீனம்பட்டி வரை உள்ள சாலையை சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வகோட்டை அம்புக்கோவில் சாலையில் காட்டுநாவல் விலக்கிலிருந்து கணபதிபுரம் செல்லும் சாலையில் 0/0-1/0 வரை ஜல்லிசாலையாக மாற்றும் பணி முடிவுற்றது. கணபதிபுரம்

தொண்டைமான் ஊரணி வழியாக மீனம்பட்டி வழியாக மோலூர் மையான்பட்டி சாலை 1992-93-ம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எடுத்து வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன. கந்தர்வகோட்டை அம்புக்கோவில் சாலையில் காட்டுநாவல் விலக்கிலிருந்து கணபதிபுரம் செல்லும் சாலையில் பாலம் கட்டும் தார்சாலையாக மாற்றும் பணி நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் எடுத்து செய்ய வாய்ப்பில்லை.

78—

அழிச்சிக்குடி ஆதிதிராவிடர்களின் தொகுப்பு வீடுகளை சீர்படுத்த திட்டம்.

வினா எண் 10788—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள அழிச்சிக்குடி ஆதி திராவிடர் மக்களின் தொகுப்பு வீடுகளை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. உள்ளாட்சித் துறை அமைச்சர்;

(அ) மற்றும் (ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுது பார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

79—

பரமக்குடி தொகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் விவரம்.

வினா எண் 10804—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் உபயோகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் ;

பரமக்குடி தொகுதியில் பயனிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எண்ணிக்கை மொத்தம் 83 ஆகும். அவை பின்வருமாறு:—

1. பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்	..	41
2. நயினார்கோயில் ஒன்றியம்	..	15
3. போகலூர் ஊராட்சி ஒன்றியம்	..	27
		83

80—

பெரிய நெகமம் ஆதிதிராவிட குடியிருப்பில் நவீனக் கழிப்பிடம் அமைக்க நடவடிக்கை.

வினா எண் 11073—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

கிணத்துக்கடவு தொகுதி—பெரிய நெகமம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் பொதுக் கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கிணத்துக்கடவு தொகுதி—பெரிய நெகமம் பேரூராட்சிக்குட்பட்ட பெரிய நெகமம் அரிஜன காலனிக்கு ஆறு இருக்கைகள் கொண்ட ஒரு நீரடிநவீனக் கழிப்பிடம் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

81—

புரசைவாக்கம் தொகுதி வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கீடு விவரம்:

வினா எண் 11300—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992-93ஆம் நிதியாண்டில் சென்னை மாநகராட்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகர சீரமைப்புக்காக ஒதுக்கியுள்ள தொகையில் புரசைவாக்கம் தொகுதிக்கு அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ரூபாய் 277.89 லட்சம்

(ஆ) பேருந்து சாலைகள் .. 31.46 லட்சம்.

உட்புற சாலைகள் .. 106.76 லட்சம்

வெள்ள நிவாரணம் :

பேருந்து சாலை மற்றும் உட்புறச் சாலைகள்	..	40.81 லட்சம்
தெரு மின் விளக்குகள்	..	54.00 லட்சம்
மழைநீர் வடிகால்	..	30.20 லட்சம்.
கட்டிடங்கள்	..	14.66 லட்சம்.
ஆக மொத்தம்	..	277.89 லட்சம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

82—

காமன்கோட்டை கூட்டுக்குடிநீர் திட்டம்.

வினா எண் 11319—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, காமன் கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பயன்பெறும் ஊர்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

காமன்கோட்டை கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பயன் பெறும் கிராமங்கள் :

1. மெய்யனேந்தல்
2. கே. வலசை
3. காக்கனேந்தல்
4. குழு கோட்டை
5. பூவிலத்தூர்
6. சின்ன இதம்பாடல்
7. தெற்கு குடியிருப்பு
8. மேல் குடியிருப்பு
9. ஓடை குடியிருப்பு
10. காமன்கோட்டை

ஆகியவை ஆகும்.

83—

அதிராம்பட்டினம்—தொக்காளிக்காடு சாலையை கப்பிச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 11469—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம்பட்டினம்—தொக்காளிக்காடு சாலையை கப்பிச் சாலையாக மாற்றி பராமரிக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் அதிராம்பட்டினம்—தொக்காளிக் காடு சாலையை கப்பிச் சாலையாக மாற்றி பராமரிக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

84—

கீழக்கொள்ளுக்காடுக்கு மயானச்சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைக்கும் திட்டம்.

வினா எண். 11975—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (வடக்கு) கீழக்கொள்ளுக்காடு மக்களுக்கு 1992—93—ல் மயானச்சாலை மற்றும் தகரக்கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊராட்சியிலும், ஊராட்சி ஒன்றியத்திலும் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் சட்டமன்ற வினாவில் கேட் கப்பட்ட மயானச்சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

85—

வீரியங்கோட்டை கப்பிசாலையை தார்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 11987—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் பேராவூரணி—சேதுபாவாசத்திரம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து வீரியங்கோட்டை, வீரியங் கோட்டை கிழக்கு கிராமத்திற்கு செல்லும் கப்பிச் சாலையை தார்சாலையாக மாற்றித்தர 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செய்ற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி—சேதுபாவாசத்திரம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து வீரியங்கோட்டை, வீரியங் கோட்டை கிழக்கு கிராமத்திற்கு செல்லும் கப்பிச்சாலையை தார்ச்சாலையாக மாற்றித்தர நிதி ஆதாரம் ஏதும் இல்லாத தால் இவ்வேலையை செய்திட செயற்குறிப்பு ஏதுமில்லை.

86—

கரம்பக்காடு மயானச்சாலையில் கல்வர்ட் அமைக்கும் திட்டம்.

வினா எண் 11989—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, கரம்பக்காடு ஊராட்சியில் மயானச்சாலையில் ஒரு கல்வர்ட் அமைக்கும் செயற்குறிப்பு 1992-93-ல் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கரம்பக்காடு ஊராட்சி மயானச்சாலையில் 1991-92-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கல்வர்ட் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

87—

பேராவூரணி ஒன்றியத்திற்கு கூடுதல் தெருவிளக்குகள் வசதி அளித்தல்.

வினா எண் 12272—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சொர் ணக்காடு ஊராட்சி பட்டத்தூரணி வடக்கிற்கும், படப்பனார் வயல் வடக்கிற்கும் 1992-93-ல் தெருவிளக்கு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஊராட்சி பட்டத்தூரணி கிராமத்தில் 35 தெரு விளக்குகளும், படப்பனார் வயல் வடக்கில் 30 தெருவிளக்குகளும் தற்போது நல்லமுறையில் எரிகின்றன. எனவே, இவ்வூராட்சியில் தற்போது தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்ய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

88—

பாலத்தளி ஊராட்சிக்குக் கூடுதல் விளக்குகள் அமைக்க திட்டம்.

வினா எண் 12280—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சி வைரவன் காலனிக்கு 1992-93ல் தெருவிளக்கு அமைக்கவும், மணவயல் காந்திநகர் ஆதிதிராவிடர்களுக்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பாலத்தளி ஊராட்சியில் 84 தெருவிளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. வைரவன் காலனியில் 5 விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இந்த காலனிக்கு 5 விளக்குகள் போதுமானதாகும். மணவயல் காந்திநகர் ஆதிதிராவிடர் காலனியில் இரண்டு தெருவிளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இக்காலனி சாலையை ஒட்டி அமைந்துள்ளது. சாலையில் உள்ள விளக்குகள் எரிவதாலும் அவைகள் இந்த காலனிக்கு நன்கு வெளிச்சம் தருவதாலும், மேற்கொண்டு விளக்குகள் விஸ்தரிக்கத் தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

89—

வலப்பிரமன்காடு பகுதியில் தெருவிளக்கு வசதி அளிக்கும் திட்டம்.

வினா எண் 12281—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வலப் பிரமன்காடு (வ) பகுதியில் 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், வலப்பிரமன்காடு ஊராட்சியில் ஏற்கெனவே 55 தெருவிளக்குகள் போடப்பட்டு, அவை நல்ல நிலையில் எரிந்து வருகின்றன. அவை போது மானது. எனவே மேற்கொண்டு தெருவிளக்கு விஸ்தரிப்புக்காக செயற்குறிப்பு எதுவும் இல்லை.

90—

பின்னவாசல் ஊராட்சிக்கு தெருவிளக்கு அமைக்கும் திட்டம்.

வினா எண் 12282—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசல் ஊராட்சி மெயின்ரோடு, புதுநகருக்கு 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசல் ஊராட்சி மெயின்ரோடு புதுநகருக்கு 5 தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க மின்சார வாரியத்திற்கு முன்மொழிவு

1994 மார்ச் 17]

அனுப்பப்பட்டு அதற்கான மின் இணைப்பு காப்புத் தொகை தமிழ்நாடு மின்சார வாரிய (இயக்குதலும் மற்றும் காத்தலும்) செங்கமங்கலம் உதவிபொறியாளருக்கு 27—8—1993-ம் தேதி யன்று செலுத்தப்பட்டுள்ளது. விரைவில் இப்பகுதிக்கு தெரு விளக்குகள் அமைக்கப்படும்.

91

அம்மையாண்டி ஆதிதிராவிடர் காலனியைப் புதுப்பிக்க திட்டம்.

வினா எண். 12310—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் அம்மையாண்டி ஆதிதிராவிடர்களின் இடிந்துபோன காலனி வீடுகளை மாற்றி 1992-93ல் புதிய வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி .எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்;

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

92—

வீரகேரளம்புதூரில் கூடுதலாக தெருவிளக்கு அமைத்தல்

வினா எண். 20691 திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம், வீரகேரளம்புதூரில் கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வீரகேரளம் புதூர் ஊராட்சியில் 1992-93ஆம் ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிதாக 12 தெருவிளக்குகளும், புதியதாக மின் கம்பம் அமைத்து 10 தெரு விளக்குகளும் ஆக மொத்தம் 22 தெருவிளக்குகள் அமைக்க தேவையானத் தொகை திருநெல்வேலி மின்வாரிய பொறியாளருக்கு 17-2-1992ல் செலுத்தப்பட்டுள்ளது. இது தவிர ஊராட்சி நிதியிலிருந்து கூடுதலாக 8 தெரு விளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செங்கமங்கலம் ஆதிதிராவிடர் குளத்தை மராமத்து செய்யும் திட்டம்.

வினா எண் 16169—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களின் வளையன் குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி சுத்தம் செய்து படித்துறை கட்டித்தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களின் வளையன் குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி கொடுக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. வளையன் குளத்தில் 1992-93-ம் ஆண்டில் படித்துறை ஒன்று ரூபாய் 13,500 மதிப்பீட்டில் கட்டித்தரப்பட்டுள்ளது.

94—

போகலூர் மற்றும் பரமக்குடி ஒன்றியத்திலுள்ள நிலமற்ற ஆதிதிராவிடர்களின் விவரம்

வினா எண் 16644—டாக்டர் சா. சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியம் மற்றும் பரமகுடி ஒன்றியங்களில் உள்ள ஆதிதிராவிடர்களில் நிலமற்றவர் எத்தனை பேர்?

விடை —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்;

போகலூர் ஒன்றியம் .. 1,241 நபர்கள்

பரமக்குடி ஒன்றியம் .. 3,648 நபர்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய திட்டம்.

95—

வினாக்கள் எண் 15937, 15945, 15948, 15970, 15971; 15984, 15988, 18681, 18683, 18684 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்.

1. ராஜப்பா நகர், அருள்மிகு கமல ஆஞ்சநேயசுவாமி ஆலயம்
2. இதப்பக்கோரை அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயம்
3. சந்திரக்காந்திரோடு அருள்மிகு ரெங்கநாதசுவாமி ஆலயம்
4. சாகாஞ்சிமேடு அருள்மிகு மகாகணபதி ஆலயம்
5. வலங்கைமான் அருள்மிகு மதுவனராமசாமி ஆலயம்
6. ஆதிச்சமங்கலம் அருள்மிகு லட்சுமிநாராயணப்பெருமாள் ஆலயம்.
7. வலங்கைமான் அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயம்
8. மாத்தூர் அருள்மிகு வடுவாலியம்மன் ஆலயம்
9. மடிகை அருள்மிகு பிள்ளையார் ஆலயம்
10. புதுப்பட்டினம் அருள்மிகு ரெங்கநாதபெருமாள் ஆலயம்

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

96—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள குளங்களில் மீன்வளர்க்கும் திட்டம்.

வினா எண் 21404 திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் எத்தனை குளங்களில் மீன் வளர்க்க அரசு உதவி உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 300 குளங்களில் மீன் வளர்க்க அரசு உதவி செய்துள்ளது.

97—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த திட்டம்.

வினா எண். 7943— திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

The Det .ils of the steps t. ken to improve the touri ststay at Hotels/Rest urent/Rest Houses run by T mil Na u Tourism Development Corpor tion,

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் மூலம் நடத்தப்படும் ஓட்டல்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், ஆகியவற்றில் தங்கும் சுற்றுலா பயணிகளின் வசதிக்

1994 மார்ச் 17]

காக கீழ்க்கண்ட வசதிகளை தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படிப்படியாக ஏற்படுத்தி வருகிறது.

ஒட்டல்களின் தரத்தை உயர்த்தும் வகையில் அறைக்கு அறை டெலிபோன் வசதி (EPBX) கலர் தொலைக் காட்சி பெட்டிகள் சர்கூட் டி.வி. (Closed Circuit Tnlevision) வசதிகள் அளித்தல்.

2. முக்கிய ஒட்டல்களில் உள்ளறைகளை அழகுபடுத்துதல்.

3. தகுதி பெற்ற அலுவலர்களை வரவேற்பறைகளிலும், ஒட்டல்களிலும் உணவு விடுதிகளிலும் அமர்த்துதல்.

4. கால ஒதுக்கீடு திட்டத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு இல்லங்களை ஒதுக்குதல்.

5. குழுக்களாக அறைகளை பதிவு செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் வாடகையில் சலுகை அளித்தல்.

6. ஒட்டல்களில் தங்குபவர்கள் வெளியிடங்களை சுற்றிப் பார்க்க வாகனங்கள் ஏற்பாடு செய்தல்.

98—

சுற்றுலா கழக ஒட்டல்களை மேம்படுத்த திட்டம்.

வினா எண். 7544—திரு. எம். சுந்தரதாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

விடை—

a. Whether the rest home/Hostels/Restaurants oper. ted by the Tamil N..du Tourism Corporation fin l Competition irom such homes by run India Tourism Corporation.

b. The steps taken to meet these competition.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் ;

(அ) இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ் நாட்டில் மதுரையிலும், மாமல்லபுரத்திலும் தான் ஒட்டல்கள் நடத்தி வருகிறது. இங்கு விற்கும் பண்டங்களின் விலை ஏற்கனவே அதிக அளவில் உள்ளது. ஆகவே போட்டி என்பதற்கு இடமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

99—

இராமேஸ்வரம் வரும் சுற்றுலாப் பயணிகள் விவரம்

வினா எண். 11663—டாக்டர் ச. சுந்தரராஜ்; மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் இராமேஸ்வரம் வரும் சுற்றுலாப் பயணிகள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் சராசரியாக 7.68 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 1,400 அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் இராமேஸ்வரத்திற்கு வருகின்றனர்.

100—

பரமக்குடி தாலுகாவில் மண்பாண்டத் தொழிலுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்

வினா எண் 15685—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுகாவில் கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மண்பாண்டம் செய்யவும், காலனி அலகுக்கும் 1991-92ல் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி தாலுகாவில் கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மண்பாண்டத் தொழிலுக்கு 1991-92 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 1,76,300 மற்றும் காலணி தொழிலுக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 90,000.

(ஆ) மண்பாண்டத் தொழிலில் பயனடைந்தோர் 43 நபர்கள், காலணித் தொழிலில் பயனடைந்தோர் 9 நபர்கள், மொத்தம் 52 நபர்கள்.

[1984 மார்ச் 17]

மூன்றாம் பட்டியல்

காவல்துறை ஆய்வாளர் சரகத்திற்கு வழக்குரைஞர் நியமிக்கும் திட்டம்

வினா எண் 21577-திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறை ஆய்வாளர் சரகம் ஒவ்வொன்றுக்கும் சட்ட ஆலோசகர்களாக வழக்கறிஞர்களை நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை——

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

தற்போது ஒவ்வொரு சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்களில் தாக்கலாகும் வழக்குகள் அரசு தரப்பு முதல் நிலை. இரண்டாம் நிலை வழக்குரைஞர்களும், அரசு வழக்குரைஞசர்களும் வழக்குகளை கூர்ந்தாய்வு செய்துதான் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு காவல் சரகத்திற்கும் ஒரு வழக்குரைஞர் நியமிப்பது பற்றி நிதி நிலைமை நெருக்கடியான இவ்வேவேலையில் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இலலை.

2—

உடைய நாட்டை ரெவின்யூ கிராமமாக்கும் திட்டம்

வினா எண் 19688—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம் உடையநாட்டை ரெவின்யூ கிராமமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்;

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

பூந்தோட்டம் மருத்துவர் குடியிருப்புகள் பழுது பார்த்தல்

வினா எண். 15679—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி பூந்தோட்டம் மருத்துவர்களின் குடியிருப்புகள் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதுபார்த்துத் தர அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மருத்துவர் அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருக்கும் இல்லங்களில் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் உடைந்து கீழ்த்தரைகள் எல்லாம் மேடுபள்ளங்களாக காணப்படுகிறது: இவற்றை சீர் செய்ய துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் திருவாரூர், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை அவர்களை கலந்தாலோசித்து திட்ட மதிப்பீடுகள் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

4—

ஏ. என். எம். படித்த கிராமச் சுகாதார செவிலியர் எண்ணிக்கை

வினா எண். 15858—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஏ.என்.எம். படித்துவிட்டு கிராம சுகாதார செவிலியராக (Village Health Nurse) பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 1991-92 என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் 1991-92 ஆம் ஆண்டில் பலநோக்கு சுகாதார பணியாளர் (பெண்) பயிற்சி பள்ளியில் மேற்படி பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற மாணவிகளின் எண்ணிக்கை 732 ஆகும். இவர்களில் 575 நபர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1994 மார்ச் 17]

5—

கம்மவான்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்த கட்டிடம்

வினா எண். 21318 திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் வட்டம், கம்மவான்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் அரசு கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கம்மாவான்பேட்டை ஆரம்ப சுகாதசர நிலயத்திற்கு மருந்தகம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டத் தேவையான நிலம் பெறப்படவில்லை. கம்மவான்பேட்டை ஆரம்ப சுகாதார நிலயத்திற்கு மருந்தகம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்ட தற்சமயம் செயற்குறிப்புகள் ஏதுமில்லை.

6—

ஆவனத்திற்கு மருவக்குறிச்சி வழியாக பேருந்து வசதி

வினா எண். 12435 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பேராவூரணியில் இருந்து ஆவனம் செல்லும் நகரப் பேருந்தை 1992-93ல் மாவடுக்குறிச்சி வழியாக மாற்றி அமைத்துக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்;

பேராவூரணியில் இருந்து ஆவனம் செல்லும் நகரப் பேருந்தை மாவடுக்குறிச்சி வழியாக மாற்றி இயக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை. மாவடுக்குறிச்சி வழியாக செல்லும் சாலை 2 கி.மீ. தூரம் பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளதால் பேருந்தை மாவடுக்குறிச்சி வழியாக மாற்றி இயக்க இயலாது.

[1994 மார்ச் 17

7—

கெம்மநாயகன் பாளையத்திற்கு பேருந்து வசதி.

வினா எண். 21525—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அன்னூர், கெம்மநாயக்கன் பாளையம் வழியாக இயக்கப்படும் பேருந்து எண். 25-ஐ மேலும் சில நடைகள் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) சேரன் போக்குவரத்துக் கழக நகர்ப்புற வழித்தட எண். 25 தற்பொழுது 12 நடைகள் அன்னூர், கெம்மநாயக்கன்பாளையம் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது பள்ளி சென்று வரும் குழந்தைகளுக்கு உதவும் வகையில் இப்பேருந்து சரியான நேரத்தில் இயக்கப்பட்டு வருவதால் கூடுதல் நடைகள் இயக்கும் போது பள்ளிக் குழந்தைகள் பாதிக்கப்படுவர். மேலும் தற்போது இயங்கும் 12 நடைகளே போதுமானதாகக் கருதப் படுகிறது.

(ஆ) எழாது.

8—

துலுக்கமுத்தூர் வரை பேருந்து வசதி.

வினா எண் 21530—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசியிலிருந்து குன்னத்தூர் செல்லும் பேருந்துகள் ஏ. 13, ஏ. 14 ஆகியவற்றை குப்பாண்டம்பாளையம் வழியாக துலுக்கமுத்தூர் அரசு மருத்துவமனை வரை நீடித்து உத்திரவிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும் ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) சேரன் போக்குவரத்துக் கழக வழித்தடம் ஏ. 13, ஏ. 14 பேருந்துகள் குப்பாண்டம்பாளையம் வழியாக துலுக்கமுத்தூர் அரசு மருத்துவமனை வழியாகத்தான் தற்பொழுது சென்று கொண்டிருக்கின்றன. மேலும் ஏ1, ஏ2, ஏ5 ஆகிய பேருந்துகளும் மருத்துவமனை வழியாக சென்று கொண்டிருக்கின்றன.

(ஆ) இவ்வினா எழாது.

9—

பழங்கரை—திருப்பூர் சாலையில் கூடுதல் பேருந்து வசதி.

வினா எண் 21541—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசிலிங்கம்பாளையம் பழங்கரை—திருப்பூர் சாலையில் மாலை நேர நெரிசலைத் தவிர்க்கக் கூடுதல் நடைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அவிநாசிலிங்கம்பாளையம் பழங்கரை—திருப்பூர் வழித்தடத்தில் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வழித்தட எண்கள் 4ஏ, 12சி மூலமாக மாலை நேரங்களில் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் பழங்கரை வழியாக தடம் எண். 9ஏ, 12ஏ மாலை நேரங்களில் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளின் இயக்க நடைகளே போதுமானதாகும். பயணிகள் பயன் விகிதாச்சாரம் அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் நடைகள் இயக்குவது குறித்து பரிசீலனை செய்ய இயலும்.

10—

குறவன் கொல்லை கிராம குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு வசதி.

வினா எண். 12211—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியிலுள்ள குறவன் கொல்லை கிராமத்தில் உள்ள குடிசைகளுக்கு 1992—93-ல் ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியிலுள்ள குறவன் கொல்லை கிராமத்தில் உள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

11—

ஆலடிக்காட்டில் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண். 12217—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காட்டில் 1992—93-ல் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பம் எதுவும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

1994 மார்ச் 17]

12—

பழைய முதல் சேரியில் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண். 12230—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல் சேரியில் மீதி காலனி வீடுகளுக்கு 1992-93ல் ஒற்றை விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் பழைய முதல் சேரியில் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

13—

பள்ளிக்கொண்டானில் மின்மாற்றியை அமைத்தல்.

வினா எண். 13017—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிக் கொண்டானில் தெரு விளக்குகள் சரிவர எரியாததால் 1992-93ல் அங்குள்ள மின்மாற்றியை (Transformer) மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் பள்ளிக்கொண்டானில் புதிய மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14

கோட்டைக்காடு ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 13349— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கெங்காதரபுரம் ஊராட்சி கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

கங்காதரபுரம் ஊராட்சி கோட்டைக்காடு ஆதி திராவிடர்களுக்கு 15 தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. 1993-94-ல் இப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட இருக்கும் இலக்கீட்டிற்கேற்ப இவ்விண்ணப்பம் எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

15—

குருவிக்கரம்பை ஊராட்சியில் உள்ள ஊர்களுக்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 13353—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி குறிஞ்சிவனம், சங்கரன் கொல்லை ஆகிய ஊர்களுக்கு 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

குருவிக்கரம்பை ஊராட்சி குறிஞ்சிவனம், சங்கரன் கொல்லை ஆகிய ஊர்களுக்கு 33 தெரு விளக்குகள் அமைத்துத் தரக்கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இவ்விண்

ணப்பம் 1993-94 ஆம் ஆண்டில் இப்பகுதிக்கு நிர்ணயிக்கப் பட இருக்கும் இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக் கொள்ளப் பட்டு மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்வாரியம் ஆவன செய்யும்.

16—

நக்கம்பாடி—வங்கினபுரம் இடையில் உள்ள ஓடைக்கு பாலம் கட்டுதல்.

வினா எண். 16131—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

நக்கம்பாடி—வங்கினபுரம் இடையில் இருக்கும் ஓடையில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் அமைக்கக் கோரும் பாலமானது செந்துறை ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள ''வஞ்சினபுரம்—நக்கம்பட்டி சாலை கி.மீ. 0/0—2/8'' என்ற ஊராட்சி ஒன்றிய சாலையில், கி.மீ. 1/2-ல் 49 மீட்டர் நீர் வழிப்பாதையுடன் குறுக்கிடும் ஓர் ஓடையில் அமைக்கப் பட வேண்டியதாகும். இவ்விடத்தில் குழாய் பதித்துதாம் போதி ஒன்று அமைக்க தோராயமாக ரூ. 4.00 இலட்சம் தேவைப் படும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ் சாலைத் துறையில் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள வகை செய்யப்படாததால் இப்பணிகளை பகுதி 2 திட்டத்தில் மேற்கொள்ள இயலாது.

17—

சேத்தியாத்தோப்பு காவல் நிலையத்திலிருந்து ஏ.டி.சி மதகு வரை தெருவிளக்குகள் அமைத்தல்.

வினா எண் 16365—செல்வி. கோ. மல்லிகா. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பு காவல் நிலையம் முதல் ஏ.டி.சி. மதகு வரை மின் வசதி செய்து தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சேத்தியாதோப்பு காவல் நிலையத்திலிருந்து ஏ.டி.சி. மதகு வரை ஏற்கெனவே 26 தெருவிளக்குகட்கு (18 குழல் விளக்கு, 8 மெர்க்குரி விளக்குகள்) மின்சார வசதி செய்யப்பட்டு அவை தற்பொழுது நல்ல நிலையில் செயலில் உள்ளன. மேலும் இப்பகுதியில் உள்ள வீடுகள், குடிநீர்த் தொட்டி, தொழிற்சாலை மற்றும் இதர உபயோகங்கட்கு முன்பே மின்வசதி செய்யப்பட்டுள்ளது.

18—

மரவன்பட்டி—கணக்கன்காடு—கனகபுளியான் கொல்லை சாலையை மேம்படுத்த திட்டம்.

வினா எண். 16653—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி மரவன்பட்டி கனகபுளியான் கொல்லை வரை செல்லும் சாலையை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் மரவன்பட்டி—கணக்கன்காடு—கனகபுளியான் கொல்லை சாலை என்பதாகும். இச்சாலை 2.80 கி. மீ, நீளம் கொண்ட கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள ஓர் ஊராட்சி சாலையாகும். இதன் மேற்பரப்பு மண்தளம் கொண்டதாகும், இச்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்து, தேவைப்படும் இடங்களில் சிறுபாலங்கள் மற்றும் தடுப்புச்சுவர் ஆகியவை அமைக்க தோராயமாக ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும்.

1994 மார்ச் 17]

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையில் பகுதி-2 திட்டத்தின் கீழ் செயல் படுத்த வகை செய்யப்படாததால், சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியை நெடுஞ்சாலைத்துறையில் பகுதி-2 திட்டத்தின் கீழ் செயல்படுத்த இயலாது.

19—

ஆர். எஸ். மாத்தூரிலிருந்து கிலுப்பலூர் வரை புதிய சாலை அமைத்தல்.

வினா எண். 16662—திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆர். எஸ். மாத்தூரில் இருந்து கிலுப்பலூர் வரை புதிய சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் ஆர். எஸ், மாத்தூரிலிருந்து கிலுப்பலூருக்கு அகுவீரன் குடிக்காடு செங்க மேடு கிராமங்கள் வழியாக சுமார் 7.20 கி.மீ. நீளத்திற்கு புதிதாக அமைக்கப்பட வேண்டிய ஒன்றாகும.

மேற்படி சாலை அமைக்க கி. மீ. 0/0—2/2 வரை நிலம் கையகப்படுத்துதல் வேண்டும். மேலும் கி. மீ. 0/10லும், கி. மீ. 3/0லும் ஆனைவாரி மற்றும் உப்போடையின் குறுக்கே இரு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட வேண்டும். இவ் விடங்களில் நீர்க்குறுக்கீடுகளின் நீர்வழிப்பாதை முறையே 100 மீட்டர் மற்றும் 60 மீட்டர் அகலமானவையாகும். மேற் சாலை அமைக்க தோராயமாக ரூ. 27.00 லட்சமும் உயர்மட்ட பாலங்கள் கட்ட ரூ. 240.00 லட்சமும், ஆக ரூ. 267.00 லட்சம் தேவைப்படும். ஆனால் ஏற்கெனவே ஆர். எஸ். மாத்தூரிலிருந்து அகவீரன் முடிக்காடு தாமரைப்பூண்டி, தளவாய், செந்தமங்கலம் வழியாக சிலுப்டலூர் செல்ல சாலை வசதி உள்ளது. இதன் மொத்த நீளம் புதிதாக செங்கமேடு வழியாக அமைக்கக் கோரப்பட்டுள்ள மேற்கண்ட

சாலையை விட 0.4 கி. மீ. தூரம் மட்டுமே அதிகமாகும். இந்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள புதிய சாலை ஏதும் அமைக்கத் தேவையில்லை. இச்சாலையினை பகுதி-2 திட்டத்திலும் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

20—

அருவாப்பட்டி பஞ்சாயத்து வை. பட்டவர்த்தி கிராமத்திற்கு தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண். 16782—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி அருவாப்பட்டி பஞ்சாயத்து வை. பட்டவர்த்தி கிராமத்தில் புதியதாக தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மயிலாடுதுறை தொகுதி அருவாப்பட்டு பஞ்சாயத்து வை. பட்டவர்த்தி கிராமத்தில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

21—

மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் தென்புறம் பகுதிக்கு புதியதாக தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை.

வினா எண். 16800—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் தென்புறம் பகுதிக்கு புதியதாக தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை டவுன் ஸ்டேஷன் தென்புறம் பகுதிக்கு புதியதாக 52 தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கக் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு மின் இணைப்பு விரைவில் வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

22—

சித்திரம்பட்டியில் தெருவிளக்குகள் அமைத்தல்.

வினா எண். 16856—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, சித்திரம்பட்டியில் புதியதாக தெரு விளக்குகள் (குழல் விளக்குகள்) பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கோவில்பட்டி தொகுதி சித்திரம்பட்டியில் புதிதாக 6 (ஆறு) தெரு விளக்குகள் அமைப்பதற்கான விரிவாக்கப் பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. இவ்விளக்குகளுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

23—

ஆலங்குடியிலிருந்து கறம்பக்குடி சாலை மூடுகல் பாலத்தை மாற்றி குழாய் பாலமாக அமைக்க நடவடிக்கை.

வினா எண். 17139—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலிருந்து கறம்பக்குடி செல்லும் வழியில் வெட்டன் விடுதியில் உள்ள பாலம் பழுதடைந்து இருப்பது குறித்து அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள பெரிய மாவட்ட சாலையான புதுக்கோட்டை பட்டுக்கோட்டை சாலையில் கி. மீ. 27/4ல் வெட்டன் விடுதி என்ற கிராமத்திற்கு அருகே அமைந்துள்ள பழைய மூடுகல் பாலத்தை குறிப்பதாகும். பொதுவாக இப்பாலத்தின் மீது அதிக கனமுள்ள வாகனங்கள் செல்லும்போது பாலத்தின் மூடுகல் உடைந்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது.

(ஆ) இப்பாலத்தில் இருந்து பழுதடைந்த மூடுகல் பாலத்தை மாற்றியமைக்கப்பட்டு பாலத்தினால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும், இந்த மூடுகல் பாலத்தை மாற்றி குழாய் பாலமாக அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

24—

மென்னிந்திக்கு கீழ் வைகை ஆற்றை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் திட்டம்.

.வினா எண் 17145—டாக்டர். எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தாலுக்காவில் மென்னிந்திக்கு கீழ் வைகை ஆற்றை அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை .எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பரமக்குடி தாலுக்காவில் மென்னிந்திக்கு கீழ் வைகை ஆறு 1979-ல் ஏற்பட்ட வெள்ளத்தின் போதும் கடந்த 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போதும்

பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது நடப்பு ஆண்டில் அப்பகுதியில் வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு விரிவான ஆய்விற்குப் பிறகு சாத்தியக் கூறுகளை அறிந்து பணி நிறைவேற்றப்படும்.

25—

செவ்வூரில் வைகையாற்றில் வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டுவதற்கு பரிசீலனை.

வினா.எண். 17152—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் செவ்வூர் அருகில் ஆறு அகலம் குறைவாக இருப்பதால், ஆற்றை அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம். போகலூர் ஒன்றியம் செவ்வூர் கிராமத்தின் அருகில் செல்லும் வைகையாறு நீண்டகாலமாக தற்போது இருக்கும் அளவிலேயே இருந்து இருக்கிறது, எனவே, அதனை அகலப்படுத்தவோ, ஆழப்படுத்தவோ தேவையில்லை என கருதப்படுகிறது. எனினும் அப்பகுதியில் வைகையாற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து பொதுப்பணித்துறையின் திட்டம் மற்றும் வடிவமைப்பு பிரிவினரால் விரிவான ஆய்வு தற்போது செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறித்த முதனிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றதும் இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

26—

ஆலங்குடி—கறம்பக்குடி நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை.

வினா எண். 17422—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில், ஆலங்குடி—கறம்பக்குடி செல்லும் வழியில் வெட்டன்விடுதியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள ஆலங்குடி முதல் கறம்பக்குடி செல்லும் வழியில் வெட்டன் விடுதியில் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை 24—9—1992-ல் ஏற்கெனவே அகற்றப்பட்டு போக்குவரத்து சரி செய்யப்பட்டு விட்டது. தற்போது இவ்விடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

27—

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்திற்கு மின் இணைப்புகள் வழங்குவதில் முன்னுரிமை.

வினா எண் 17432—திரு. சு. சுவாமிநாதன் ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1991—92ஆம் வருட விவசாயத்திற்கு கொடுத்த மின் இணைப்பு மற்றும் தொழிற்சாலைக்குக் கொடுத்த மின் இணைப்புகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் தொழிற்சாலைக்கு கொடுக்கும் முன்னுரிமையைப் போல் விவசாயத்திற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1991–92ஆம் வருடத்தில் 1,340 எண்ணிக்கை புதிய விவசாய மின் இணைப்புகளும் 106 எண்ணிக்கை புதிய தொழில்துறை மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

1994 மார்ச் 17]

(ஆ) தொழிற்துறை மின் இணைப்புகளுக்குச் சிறப்பு முன்னுரிமைத் திட்டம் ஏதும் இல்லை. புதிய தொழிற் மின் இணைப்பு கேட்டு குறைந்த எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வருவதால் வரிசைப்படி குறைந்த கால அவகாசத்தில் மின் இணைப்பு வழங்க முடிகிறது. விவசாயத்திற்கும் வரிசைப்படி விண்ணப்பங்கள் முதுநிலை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், விவசாயத்திற்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பங்கள் தொழிற் துறையைவிட பலமடங்கு அதிகமாக வருவதால், ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்புப் பெற காத்திருக்க வேண்டி உள்ளது, தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் 31—12—1986 வரை பெறப்பட்ட விவசாய விண்ணப்பங்களுக்கு 1993—94 ஆம் ஆண்டுக்குள் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

28—

ராமநாயக்கன்பட்டி, ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமங்களை இணைக்க வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

.வினா எண் 17438 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம் ராமநாயக்கன்பட்டி, ரெங்கநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களை இணைக்க வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைக்கும் பணிக்கு மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் மத்திய அரசுக்கு ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

29—

வெங்கம்பூரில் கூடுதல் மின் விளக்குகள் அமைத்தல்.

வினா.எண் 19205—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் வெங்கம்பூர் கிராமம் வெற்றிகோனார் பாளையத்தில் ஊர் பொதுவில் உள்ள 10 சென்ட் நிலத்தில் மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் வெங்கம்பூர் கிராமம் வெற்றிகோனார் பாளையத்தில் ஊர் பொதுவில் உள்ள 10 சென்ட் நிலத்தில் மின் விளக்கு அமைக்கக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. மேலும் இப்பகுதியில் ஏற்கெனவே உள்ள நான்கு தெரு விளக்குகளே போதுமானதாகும்.

30—

கொடுமுடி ஒன்றியத்தில் சென்னை சமுத்திரம் கிளை வாய்க்காலின் மூலம் தண்ணீர் விடும் நாட்களை அதிகரித்தல்.

வினா எண். 19246—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், எழு நூத்தி மங்கலம், கீழ் பவானி கடைகோடி விவசாயிகள் நலனுக்காக வாய்க்காலில் தண்ணீர் விடும் முறை நாளை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிட்டுள்ள கொடுமுடி ஒன்றியத்தைச் சேர்ந்த எழு நூத்தி மங்கலம் பகுதி, கீழ் பவானி பிரதானக் கால்வாயில் இருந்து பிரியும் சென்னை சமுத்திரம் கிளை வாய்க்காலின்மூலம் பாசனப் பயன் பெறுகின்றது. நடப்பு ஆண்டில் இப்பகுதி பாசனத்திற்காக 1—1—1993 முதல் 15—4—1993 வரை தண்ணீர் வழங்கப்பட்டது. விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க விளைவிக்கப்பட்ட நிலைப் பயிர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு 23—4—1993 முதல் 30—4—1993 வரை ஒரு வாரத்திற்கு சிறப்புத் திறப்பாக தண்ணீர் வழங்கப்பட்டது.

1994 மார்ச் 17]

31—

அந்தியூர் தொகுதியில் விவசாயப் பயிர் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் விவரம்.

வினா எண். 19313—திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்குச் சேர்ந்த ஏரியில் செய்யும் விவசாயப் பயிர் மூலம் 1992-93இல் அரசுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

அந்தியூர் தொகுதியில் பொதுப்பணித்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏரிகளின் பாய்ச்சலில் உள்ள நிலங்களிலிருந்து ரூ. 86,738 தண்ணீர் தீர்வையாக 1992-93 ஆம் ஆண்டில் வருவாய்த்துறையினரால் வசூலிக்கப்பட்டுள்ளது.

32—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசன குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை.

வினா எண். 19612—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசனக் குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசனக் குளங்கள் மற்றும் கால்வாய்களில் இதுவரை 2,987 ஹெக்டேர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 213 ஹெக்டேர் ஆக்கிரமிப்பு நீக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ஆக்கிரமிப்புகள் படிப்படியாக வருவாய்த்துறை மற்றும் காவல் துறையின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகிறது.

[1994 மார்ச் 17

33—

ஒசூர் நகருக்கருகில் இளநிலைப் பொறியாளர் அலுவலகம் திறப்பதற்குத் திட்டம்.

வினா எண் 20120—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒசூர் நகருக்கு அருகாமையில் உள்ள சில புதிய குடியிருப்பு பகுதிகள் மின்சார தொகை (Electricity Bill) கட்ட 12 கி.மீ. தூரமுள்ள பாகலூருக்குச் செல்ல வேண்டியுள்ளதால் இக் குடியிருப்புப் பகுதியில் மின்சார இளநிலைப் பொறியாளர் அலுவலகம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

34—

மழை நீர் வீணாகுவதைத் தடுக்க திட்டம்.

வினா எண். 20347—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கிப்பட்டி, பாலையம்பட்டி, புதுக்குடி தெற்குப்பகுதிக்கு திருச்சி புதுக்கோட்டை மாவட்டங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் வீணாகப் போவதைத் தடுத்து வாய்க்கால் வெட்டி பாசனத்திற்குப் பயன்படச் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

35—

மின்னழுத்தம் குறைவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 20422—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

தமிழகம் முழுவதும 110 கே. வி.ஏ. கிடைக்க வேண்டிய இடத்தில் 80 கே. வி. ஏ. கிடைக்குமளவிற்கு மின்னழுத்தம் குறைந்துள்ளதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

இக்குறைபாடு நாள்தோறும் நிகழ்வதல்ல. சிற்சில கால கட்டங்களில் நீர் மின் உற்பத்தி குறைகின்றபொழுது ஏற்படுகின்றது. தமிழகத்தின் மிக உயர் மின் அழுத்தக் கூட்டமைப்பு தென் மண்டலக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தென் மண்டலத்தில் மின் தட்டுப்பாடு நிரந்தரம், நீர் மின் உற்பத்தியும் அனைத்து மாநிலங்களில் ஒரே சமயத்தில் குறைவதும் கண்கூடு. எனவே, தென் மண்டலக் கட்டமைப்பில் நிலவும் குறைந்த மின்னழுத்தம் தமிழகத்தையும் பாதிக்கிறது. எனினும் இம் மண்டலக் கட்டமைப்பினால் ஒவ்வொரு மாநிலத்திலும் அவ்வப்போது உள்ள உபரி மின்உற்பத்தித் திறன் அனைத்து மாநிலங்களின் மின் பளுவை சமாளிக்க உதவுகின்றது. மிக உயரழுத்த குறைபாட்டினைத் தவிர்க்குமாறு தேசிய அனல் மின் கழகம், அகில இந்திய மின் கட்டமைப்புக் கழகம், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் போன்றவற்றையும், இத்தென் மண்டலத்திலுள்ள மற்ற மின் வாரியங்களையும் மின் உற்பத்தியைச் சீராக வைக்குமாறும் ட்ரான்ஸ்மிஷன்களில் சில மாறுதல்களைச் செய்யுமாறும் தமிழக மின்வாரியம் மண்டல பொதுக் குழுவில் முறையிட்டுள்ளது.

தமிழக மின்வாரியமும் இக்குறையை சீர் செய்வதற்காக திட்டம் ஒன்று வகுத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டபணிகள் மேற்கொள்ளப்படுகின்றன—

(1) மின்பாதைகளில் தற்போது பயன்படுத்தப்படும் கம்பிகளைவிட பெரிய கம்பிகள் நிதிநிலைக்குத் தக்கவாறு பயன்படுத்தப்படவுள்ளன.

(2) உயர் அழுத்த ஷன்ட் கப்பாசிட்டர்கள் துணைமின் நிலையங்களிலும், உயர் அழுத்த மின் ஊட்டிகளிலும் நிறுவப்படுகின்றன.

(3) முக்கியமான துணை மின் நிலையங்களில் தானியங்கி மின் அழுத்த விகித மாற்றி வசதியுள்ள மின் மாற்றிகள் நிறுவப்படுகின்றன.

(4) கூடுதல் மின் தேவையை எதிர் கொள்ள ஏற்கனவே உள்ள மின் மாற்றிகளின் திறனை அதிகரிப்பதோடு, புதிய மின் துணை மின் நிலையங்களும் நிறுவப்படுகின்றன.

4 உயர் அழுத்த மின் ஊட்டிகளை ஆய்வு செய்து, மேம்பாட்டுத் திட்டங்களை சிறப்பாகவும், விரைவாகவும் தயாரிப்பதற்காக ஒவ்வொரு மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலும் கணிப்பொறி நிறுவத் திட்டமிடப்பட்டு உள்ளது. முதல் கட்டமாக கோவையில் ஒரு கணிப்பொறி அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

36—

பாசன கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங் செய்ய திட்டம்.

வினா எண் 20780—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்படி பாசன நீர் கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங் செய்யும் திட்டம் 1993-94-ல் செயல்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ், பாசன நீர் கால்வாய்களுக்கு சிமெண்ட் லைனிங் செய்யும் திட்டமென்பது ஏதும் இல்லை. எனினும், பாசன கால்வாய்களில் தள மண் அமைப்பு தண்ணீர் வீணாவதற்கேதுவாக இருப்பின், அம்மாதிரியான பகுதிகளில் மட்டும் லைனிங் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

37—

கொடுமுடி ஒன்றியத்தில் குடிசைத் தொழில் செய்வோருக்கு கடன் வழங்க திட்டம்.

வினா எண் 19207—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரம் கிராமம் வருந்தியாபாளையத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடிசைத் தொழில் செய்ய கடன்தர அரசு ஆவன செய்யுமா?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் அமைச்சர் :

குடிசைத் தொழில் துவங்க முனைவோருக்கு, தொழில் வணிகத் துறையின் மூலம் பதிவுச் சான்றிதழ் மட்டுமே வழங்கப் படுகிறது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளும், குடிசைத் தொழில் முனைவோருக்கு இயந்திரங்கள், உபகரணங்கள் வாங்கவும் மற்றும் நடைமுறை மூலதனங்களுக்காகவும் கடனுதவி வழங்குகின்றன.

38—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு ஆழ்குழாய் கிணறு தோண்டும் எந்திரம் வழங்க திட்டம்.

வினா எண் 22742—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மை பொறியியல், பணிகூட்டுறவு இணையத்திற்கு ஆழ்குழாய் கிணறு தோண்டப் பயன்படும் துளைபோடும் எந்திரம் (Rig) சொந்தமாக எத்தனை உள்ளன ?

(ஆ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு அதுபோன்ற எந்திரம் ஒன்று வாங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு வேளாண்மைப்பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமாக, ஆழ்குழாய் கிணறு தோண்டப் பயன்படும் துளை போடும் இயந்திரம் ஒன்று மட்டும் உள்ளது.

(ஆ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு அதுபோன்ற எந்திரம் வாங்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 17

39—

நத்தம் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க திட்டம்.

வினா எண் 5607—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் கீழ் அமைந்துள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? எங்கெங்கு அமைந்துள்ளன ?

(ஆ) அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகள் என்ன நெறிமுறைகள் அடிப்படையில் அமைக்கப்பட்டன?

(இ) நத்தம் தொகுதியில் கரும்பு ஏராளமாகப் பயிரிடப் படுவதாலும், நத்தம் தாலூகா தொழிலில் பின்தங்கிய தாலூகாவாக அரசு அங்கீகரித்துள்ளதாலும் அங்கு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் மொத்தம் 15 சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:—

வரிசை எண்.	ஆலையின் பெயர்.	அமைந்துள்ள இடம்.
(1)	(2)	(3)
1	ஆம்பூர் கூட்டுறவு சாக்கரை ஆலை.	வடபுதுப்பட்டு, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்
2	மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	படாளம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.
3	அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை.	கிருஷ்ணாபுரம், கோவை மாவட்டம்.

1994 மார்ச் 17]

(1)	(2)	(3)
4	சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	மோகனூர், சேலம் மாவட்டம்.
5	கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை	மூங்கில் துறைப்பட்டு தென்னாற்காடு மாவட்டம்.
6	நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	அலங்காநல்லூர், மதுரை மாவட்டம்.
7	தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை.	பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.
8	வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	அம்முண்டி, வட-ஆற்காடு -அம்பேத்கார் மாவட்டம்.
9	திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	கேதாண்டப்பட்டி, வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.
10	செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	பெரியசெவலை, தென்னாற்காடு மாவட்டம்.
11	திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை.	திருவாலங்காடு, செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம்.
12	நடிப்பிசைப்புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டு சர்க்கரை ஆலை.	திலைஞாயிறு, தஞ்சாவூர் மாவட்டம்.
13	எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை.	சிதம்பரம் தென்னாற்காடு மாவட்டம்.
14	செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை.	செய்யாறு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.
15	சுப்ரமணியசிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை.	அரூர், தர்மபுரி மாவட்டம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) சர்க்கரை ஆலை அமைக்கத் தேவையான கரும்பு பயிரிடும் நிலப்பரப்பு அப்பகுதியிலுள்ள நிலத்தடிநீர் பயிராகும் கரும்பின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆலை அமைக்கத் தேவையான நிதிநிலை அதாவது அரசின் பங்கு தொகை மற்றும் தொழில் வளர்ச்சிக்கான நிதி வழங்கும் வங்கிகளின் பங்கு ஆகிய யாவும் பொருத்தமாக உள்ளதா என ஆய்வு செய்து அதன் அடிப்படையில் சர்க்கரை ஆலைகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

(இ) நத்தம் தாலுகா ஏற்கனவே அப்பகுதியில் அலங்காநல்லூரில் இயங்கி வரும் நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாலையில் பிழிதிறன் நாளொன்றுக்கு 1500 டன்னிலிருந்து 2500 டன்னிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே அவ்வாலைக்கு 4.30 லட்சம் டன்கள் கரும்பு தேவைப்படுகிறது. இந்த சூழ்நிலையில் அதே பகுதியில் மேலும் ஒரு கூட்டுறவுச்சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

40—

தலைவாசல் தொகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க திட்டம்.

வினா எண் 7876— திரு.கே. கந்தசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் கருங்கற்கள் (Gronaties) அதிக அளவில் கிடைப்பதால் இந்தப் பகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் தலைவாசல் தொகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1994 மார்ச் 17]

41—

லால்குடி வட்டத்தில் மண்ணரிப்பைத்தடுக்க நடவடிக்கை.

வினா எண் 8666— திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) லால்குடி வட்டம் கல்லக்குடியில் உள்ள டால்மியா சிமெண்ட் தொழிற்சாலைக்கு அதைச் சுற்றியுள்ள வடுகர்பேட்டை புள்ளம்பாடி கோவண்டாகுறிச்சி புதூர்பாளையம் கிராமத்தில் சுண்ணாம்புக் கல்எடுத்து அவைகளில் உள்ள பள்ளங்களை நிரப்பாமல் அதனால் மண்ணரிப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி தொழில் துறை அமைச்சர்:

(அ) திருவாளர்கள் டால்மியா சிமெண்ட்டு (பாரத்) நிறுவனத்திற்கு லால்குடி வட்டத்தில் உள்ள வடுகர்பேட்டை மற்றும் கோவண்டாக்குறிச்சி கிராமங்களில் மட்டும் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்க குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. சுரங்கப் பணிகள் தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் கனிமங்களை வெட்டியெடுத்து அப்புறப்படுத்தும் காலம் வரை தோண்டி எடுக்கப்பட்டுள்ள சுரங்கக் குழிகளை சமன் படுத்துவது இயலாது. மேலும் சுரங்க குத்தகை நிறுவனத்தினர் சுரங்கங்களுக்கு அருகாமையிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் மண்ணரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு மரங்களை வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள புள்ளம்பாடி மற்றும் புதூர்பாளையம் கிராமங்களில் மேற்படி நிறுவனத்திற்கு எவ்வித குத்தகையும் வழங்கப்படவில்லை. எனவே மேற்படி கிராமங்களில் மண்ணரிப்பு எதுவும் நிகழவில்லை. மேலும் லால்குடி வட்டம் கல்லக்குடி மற்றும் கோவண்டாக்குறிச்சி கிராமங்களிலும் மண்ணரிப்பு ஏதுவும் நிகழவில்லை சுரங்க திட்ட விதிமுறைகளின்படி குத்தகை தாரர் நிறுவனம் சுரங்கப்பணிகளை முடிக்கும் தருணத்தில்தான் மண்ணரிப்பைத் தடுப்பதற்கு எதுவாக காடுகள் வளர்க்கும் திட்டத்தை அமல்படுத்தவேண்டும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 மார்ச் 17

42—

புதுக்கோட்டை தொகுதியில் கல்லை பாலிஷ் செய்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யதிட்டம்.

வினா எண் 8960—திரு. சி.சுவாமிநாதன்: மாண்மிபுகு தொழில் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் நிறைய மலைகள் இருப்பதால் அரசு நல்ல மலையை தேர்ந்து எடுத்து கல்லை பாலிஷ் செய்து அதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ இவ்வினாவிற்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

43—

டான்மாக்—உற்பத்தி மற்றும் வருமானம்.

வினா எண். 21658—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-92 மற்றும் 199-293-ஆம் ஆண்டுகளில் தமிழ் நாடு மேக்னசைட் (டான்மாக்) உற்பத்தி எவ்வளவு ?

(ஆ) மேக்னசைட் உற்பத்தி மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை.—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி தொழிற்துறை அமைச்சர்:

(அ)

உற்பத்தி	1991–92	1992–93
(1)	(2)	(3)
	(அளவு டன்களில்)	
கச்சா மேக்னைசட் ..	1,18,424	1,15,388
முழுதும் எரியூட்டப்பட்ட மேக்னசைட் ..	27,108	26,879
மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்	8,928	9,009
ரேமிங் மாஸ் ..	1,128	855
(ஆ)	(ரூபாய் இலட்சங்களில்)	
தமிழ்நாடு அரசிடமிருந்து ஊதியம்	682.97	814.72
விற்பனை ..	1,586.04	1,544.71
ஏனைய வருமானங்கள் ..	19.20	13.36
மொத்தம் ..	2,288.21	2,372.79*

* தனிக்கைக்குட்பட்டது.

44—

டாப்சிலிப்பில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவதுறைக்கு அளித்தல்.

வினா எண் —8544, டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாப்சிலிப்பில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான கட்டிடங்களை வனத்துறையிலிருந்து மருத்துவத் துறைக்குக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தவிர்க்க ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) டாப்சிலிப்பில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான கட்டிடங்களை வனத்துறையிலிருந்து மருத்துவத் துறைக்கு சில நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுடன் கொடுக்க வனத்துறை தயாராக உள்ளது. பொது சுகாதாரத்துறை அக்கட்டிடங்களைப் பெற்றுக் கொள்ள இதுவரை பதில் ஏதும் அளிக்கவில்லை.

(ஆ) வினா எழாது.

45—

வால்பாறை மற்றும் பொள்ளாச்சி வனப் பகுதிகளில் இருந்து கிடைக்கும் வருமானம்

வினா எண்—11864 டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதிக்குட்பட்ட வனச்சரகம் மற்றும் பொள்ளாச்சி வனவிலங்கு சரணாலயம் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் வனம் சம்பந்தப்பட்ட வருமானம் இந்த ஆண்டு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: வால்பாறை தொகுதிக்கு உட்பட்ட வால்பாறை மற்றும் இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் கிடைக்கும் வனம் சம்பந்தப்பட்ட 1992-93ம் ஆண்டு வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

இந்திராகாந்தி வன உயிரின சரணாலயம் பொள்ளாச்சியில் 1992 93ம் ஆண்டு (31—3—1993உடன் முடிய உள்ள) காத்தில் கிடைத்த வருவாய் விவரங்கள்.

		(ரூபாய்.)
1.	தடிமர ஏலம் மூலம் கிடைத்த வருவாய்	3,05,059
2.	அபராத வட்டித் தொகை ..	2,650
3.	விறகு மற்றும் கரி விற்பனை மூலம் கிடைத்த வருவாய்.	2,50,767
4.	மேய்ச்சல் கட்டணம் ..	28,865
5.	இதர சிறு வனப பொருள் ..	6,91,779

1994 மார்ச் 17]

6.	கற்பூர மர விநியோகம்	..	56,87,394
7.	சரணாலய நுழைவுக் கட்டணம்	..	6,17,977
8.	ஓய்வு விடுதிக் கட்டணம்	..	1,14,999
9.	அரசு வாகனம் உபயோகித்த வகையில் கிடைத்த வாடகை கட்டணம்.		5,172
10.	தேக்கங்கால் விற்பனை மூலம் கிடைத்த வருவாய்.		4,35,365
	மொத்தம்	..	81,40,027

46—

பல்கலைக் கழக மானியக் குழு அனுமதி வழங்காத பல்கலைக் கழகங்கள் குறித்து.

வினா எண்—4915, திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதி வழங்காது பல்கலைக் கழகங்கள் இயங்கி வருவது அரசிற்குத் தெரியுமா ?

விடை.—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வித்துறை அமைச்சர் :

ஆம். தமிழ்நாட்டில் ஐந்து போலிப் பல்கலைக் கழகங்கள் உள்ளதாக பல்கலைக்கழக மானியக் குழு தெரிவித்திருந்தது. இப்போலிப் பல்கலைக்கழகங்களில் பயில்வதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு அவர்களே பொறுப்பாவார் என செய்திமூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து காவல் துறையையும் உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப் பட்டது.

47—

நத்தம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வசதிகள் குறித்து

வினா எண். 5620—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா ?

நத்தம் நகரில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாக, அரசினர் துரைக்கமலம் மேல்நிலைப் பள்ளி மட்டுமே இருப்பதால் ஆண்டு தோறும் பெருகிவரும் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப வகுப்

பறைகள் போதுமானதாகவும், ஆசிரியர் எண்ணிக்கையும் போதுமானதாகவும் இல்லை என்பதால் அப்பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டவும், ஆசிரியர் எண்ணிக்கையை உயர்த்தவும் அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

48—

தனியார் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியராக்குதல் குறித்து.

வினா எண் 7832—திரு. ஆர். சிங்காரம் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை அரசு ஊழியராக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

49—

தேசிய விருது பெற்ற மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நல்லாசிரியர்கள்.

வினா எண் 15725—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய விருது பெற்ற நல்லாசிரியர்கள் எத்தனை பேர் ?

(ஆ) விருதுபெற பரிந்துரை செய்யப்பட்டுள்ளவர்கள் நடப்புக் கல்வியாண்டில் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்

(அ) 4 பேர்கள்.

(ஆ) 2 பேர்கள்.

1994 மார்ச் 17]

50—

நன்னிலம் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு திடல்.

வினா எண். 21837—டாக்டர் க. கோபால் மாண்புமிகு கல்வி அமைச் சர்கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டுத் திடல் உபயோகமில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை.—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வித்துறை அமைச்சர்

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) நிதிநிலைக்கேற்ப இத்திடல் சீர்திருத்தப்படும்.

51—

சிப்பிப் பாறை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சீர்செய்தல்.

வினா எண். 21970 திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

சிவகாசித் தொகுதி, சிப்பிப்பாறை அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டிடம் கட்டித்தரவும், பழுதடைந்துள்ள கட்டிடங்களை சீர் செய்யவும் அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

52—

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

பாதரங்கோட்டை (தெ.) ஊராட்சி, ஆண்டாங்கொல்லையிலிருந்து அனந்தகோபாலபுரம் வரை உள்ள சாலையை மராமத்து செய்தல்.

வினா எண்—12401 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை (தெ.) ஊராட்சி ஆண்டாங்கொல்லையிலிருந்து அனந்தகோபாலபுரம் வரை உள்ள சாலையை 92–93–ல் மராமத்து செய்து கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஊராட்சியிலும், ஒன்றியத்திலும் போதிய நிதிவசதி இல்லாததால் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலைகளை, மராமத்து செய்து கப்பிச்சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

53—

சிலம்பூர் மேல்நிலைத் தொட்டி இயங்குதல் குறித்து

வினா எண். 12451—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் மேல்நிலைத் தொட்டியை இயங்க வைக்க நடப்பு நிதியாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் சிங்கப்பூர் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆழ்குழாய் கிணறு வறண்டு பழுது ஏற்பட்டதன் காரணமாக இயங்காமல் இருந்தது. தற்போது ஆழ்குழாய் கிணறு தூர் வாரப்பட்டும் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டும், பிப்ரவரி 1992 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

54—

சென்னை மாநகராட்சி மருந்தகங்கள் இயக்கம் குறித்து

வினா எண். 12743—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(a) The grounds on which Medical Dispensaries are opened by Madras Corporation

(b) The staff attached to them

(c) The details of Medical assistance provided at these Dispensaries

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை மாநகராட்சி, சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்காக இலவசமாக மருந்துகள் வழங்கி மக்கள் பயன்பெறும் வகையில் மருந்தகங்களை நடத்தி வருகின்றது.

(ஆ) ஒவ்வொரு மருத்துவமனையிலும் கீழ்க்காணும் அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்:—

1. மருத்துவர், 2. மருந்தாளுநர், 3. ஆண் ரணசிகிச்சையாளர், 4. பெண் ரணசிகிச்சையாளர், 4. நுண்கிருமியாளர். 6. அலுவலக உதவியாளர்.

(இ) ஒவ்வொரு மருத்துவமனையிலும் வருடத்திற்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

55—

கிள்ளை தெற்கு எம்.ஜி.ஆர். நகரில் வாழும் இருளர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 12775ஏ—செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கிள்ளை தெற்கு எம்.ஜி.ஆர். நகரில் வாழும் இருளர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

56—

குப்பதேவன் ஆதிதிராவிடர்களின் வீடுகள் பழுதுபார்த்தல்

வினா எண். 12952—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களின் பழுதடைந்த வீடுகளை 1992—93-ல் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதனை பழுது பார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

57—

குருவிக்கரம்பையிலிருந்து நாடியம் வரை நெடுஞ்சாலை ஓரத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தல்.

வினா எண். 13627—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பூங்கொல்லையிலிருந்து பெருமகளூர் வழியாக திருவம்பாடி செல்லும் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பூங்கொல்லையிலிருந்து பெருமகளூர் வழியாக திருவம்பாடி செல்லும் நெடுஞ்சாலையானது கீழ்க்கண்ட இரண்டு சாலைப் பகுதிகளைக் கொண்டதாகும்:—

சாலையின் பெயர்.	நீளம். கி.மீ.
1. காலகம்—ஆவடையார் கோவில் சாலை .. கி.மீ. 4/4—12/0.	8.2
2. பெருமகளிர்—அத்தாணி சாலை .. கி.மீ. 0/0—7/2.	7.2
மொத்தம் ..	15.4

மேற்கண்ட இரண்டு சாலைகளும் நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிப்பு செய்யப்பட்டு வரும் இதர மாவட்டச் சாலைகளாகும். தற்போது இச்சாலை 3.75 மீட்டர் அகலமுள்ள தார் சாலையாக உள்ளது. 15.4 கி.மீ. நீளமுள்ள இச்சாலையை இருபுறமும் அகலப்படுத்தி (7.00 மீட்டர் அகலத்திற்கு) மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 62.00 லட்சம் தேவைப்படும் நிதி நெருக்கடியின் காரணமாக தற்போது இச்சாலைகளை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

முதல் சேரியில் உள்ள ஆதிதிராவிடர்களின் காலனியை புதுப்பித்தல்.

வினா எண் 14038—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பழைய முதல் சேரியில் உள்ள ஆதிதிராவிடர்களின் பழுதடைந்த காலனியை புதுப்பித்துத்தர 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

53—446—30

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழி வகை இல்லை. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனயாக திட்டம் எதுவுமில்லை.

59—

அம்மையாண்டி-ஆதிதிராவிடர்களின் இடிந்த காலனி வீடுகளை மாற்றுதல்.

வினா எண். 14045—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி—ஆதிதிராவிடர்களின் இடிந்துபோன காலனி வீடுகளை மாற்றி புதிய வீடுகளை கட்டித்தர 1992–93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்து தர வழிவகை இல்லை. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவு மில்லை.

1994 மார்ச் 17]

60—

கீழப்பாவூர்-கரண்டை செல்லும் சாலையைப் பராமரித்தல்.

வினா எண் 14049—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம் கீழப்பாவூர்-கரண்டை செல்லும் சாலையை 1992–93-ல் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 1992—93-ம் வருடத்தில் முறையே கி.மீ. 0/0—1/4, 2/0—8/8 ஆகிய சாலைப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள சாலைப் பகுதியான கி.மீ. 1/4—2/0 (நீளம் 0.60 கி.மீ) நல்ல நிலையில் உள்ளது. மேற்படி சாலை முழுவதும் நல்ல நிலையில் உள்ளதால் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

61—

ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் செல்லும் சாலையைப் பராமரித்தல்.

வினா எண் 14050—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம் ஆலங்குளத்திலிருந்து துத்திகுளம் செல்லும் சாலையை 1992—93-ல் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிக்கப்பட்டுள்ள சாலையில் மிகவும் மோசமான பகுதிகளைச் சீர் செய்ய 1991–92-ம் ஆண்டு திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. இப்பணி 30–9–1993-க்குள் முடிக்கப்படும். மீதமுள்ள பகுதியைச் சீர்செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

62—

கீழக்கலங்கள் கிராமத்திற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 14051—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி கீழ்க்கலங்கள் கிராமத்திற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கீழக்கலங்கள் கிராமம் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றதாகும். இங்கு நான்கு கையிறைப்பான்கள் உள்ளன, இக்கிராமத்திற்கு ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான நீராதாரம் கிடைக்காததால், இத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. போதிய நீராதாரம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீராதாரம் அமைத்தவுடன், பிறப் பணிகள் செயல்படுத்தப்படும்.

63—

ஆயிற்குடிக்கு மெயின் ரோட்டிலிருந்து செல்லும் சாலையை பராமரித்தல்.

வினா எண் 14061—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம் ஆயிற்குடிக்கு மெயின் ரோட்டிலிருந்து செல்லும் சாலையை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை நிதி நிலைக்கு ஏற்ப 1993-94-ம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் தலைப்பின்கீழ் பணி மேற்கொள்ளப்படும்

199‡ மார்ச் 17]

64—

பூவளூரைச் சேர்ந்த தெய்வ விடுதிக்கு வரும் சாலையை சீர்செய்தல்.

வினா எண் 14318— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பூவளூரைச் சேர்ந்த தெய்வ விடுதிக்கு வரும் சாலையை 1992-93-ல் சீர்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டிருக்கும் சாலையை 1993-94-ஆம் ஆண்டு முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செய்யப்படும்.

65— குறிச்சிக்கு செல்லும் சாலையை தார் சாலையாக அமைத்தல்.

வினா எண். 14319. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா ?

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சிக்கு செல்லும் சாலையை சீர் செய்து 1992-93-ல் தார் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சிக்கு செல்லும் சாலை 1992-93-ம் ஆண்டு பகுதி வேலை தார்சாலையாக மாற்ற எடுத்துக்கொள்ளப்பட்டு மீதமுள்ள வேலை 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தில் எடுத்துச் செய்யப்பட உள்ளது.

[1994 மார்ச் 17

66—

பூவலூர் கிழக்கு தொடக்கப் பள்ளிக்குச் செல்லும் பாதையில் சி.எம்.பி. வாய்க்காலில் சிறு பாலம் அமைத்தல்.

வினா எண். 14325 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பூவலூர் கிழக்கு தொடக்கப் பள்ளிக்குச் செல்லும் பாதையில் சி.எம்.பி. வாய்க்காலில் 1992-93-ல் ஒரு சிறுபாலம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், பூவலூர் கிழக்கு தொடக்கப் பள்ளி அருகில் சி.எம்.பி. வாய்க்காலில் குழாய் பாலம் 1991-92-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒதுக்கீட்டில் 25 சதவீதம் ஊராட்சி நிதியில் இருந்து, ரூ. 10,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இப்பாலம் முடியும் தருவாயில் இருந்து வருகிறது.

67—

பசுக்காரன் தெருவிற்கு மயானச் சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண். 14345—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கிழக்கு), பசுக்காரன் தெருவிறகு 1992-93-ல் மயானச் சாலை அமைத்து தகரக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஊராட்சி நிதியில் போதிய நிதி வசதி இல்லாததால் சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்டுக் கொள்ளப்பட்ட மயானச் சாலை அமைத்து தகரக் கொட்டகை அமைத்துத்தர செயற்குறிப்பு ஏதுமில்லை.

1994 மார்ச் 17]

68.—

பளுக்காட்டில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு கட்டுதல்.

வினா எண் 14351—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பளுக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணி களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

69.—

புதுப்பட்டினம் ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடு கட்டுதல்.

வினா எண் 14353—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணி களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

[1994 மார்ச் 17

70—

சோலைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல்.

வினா எண் 14355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காடு வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு 1992-93-ல் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

71—

பள்ளத்தூர் ஊராட்சியில் மேல்நிலை குடிநீர் தொட்டியைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 14359—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் ஊராட்சியில் பழுதடைந்து இயங்காமல் இருக்கும் மேல்நிலை குடிநீர்த் தொட்டியைப் பழுதுபார்த்து இயங்க வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, இங்கு ஒரு கையிறைப்பான் மற்றும் ஒரு மின்விசைத் திட்டமும் பயனில் உள்ளது. இங்குள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது ஏதுமின்றி தற்போது நன்றாக இயங்கி வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

72—

தாமரங்கோட்டை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுதுபார்க்க நடவடிக்கை

வினா எண் 14361— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், செங்கபடுத்தான்காடு ஊராட்சி தாமரங்கோட்டையில் பழுதுபட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீர்செய்து அனைத்து மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. வரும் நிதியாண்டில் இயங்காத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் திட்டத்தின் கீழ் இக்கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த் தொட்டியின் பழுதுகள் பார்க்கப்பட்டு இயக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

73—

தோட்டாக்குடி யூனியன் பள்ளிக்கருகில் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 14368— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல் ஊராட்சி, தோட்டாக்குடி யூனியன் பள்ளிக்கருகில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

74—

அதிராம்பட்டினம் குளத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை

வினா எண் 14378—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம் பட்டினம், செல்லியம்மன் கோவில் குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், அதிராம்பட்டினம் பேரூராட்சியில் உள்ள செல்லியம்மன் கோயில் குளக்கரையில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்ற வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளனர். வழக்கு இன்னும் முடிவடையவில்லை.

75—

கீழப்பாவூர் ஒன்றியத்தில் தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை

வினா எண் 14850—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

கீழப்பாவூர் ஒன்றியம், வி. கே. புதூரிலிருந்து ராஜ கோபாலபேரி வழியாக அதிசயபுரம் வரை உள்ள சாலை பழுதடைந்திருப்பதால் தார்ச்சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கீழப்பாவூர் ஒன்றியம், வி. கே. புதூரிலிருந்து ராஜ கோபாலபேரி வழியாக அதிசயபுரம் வரை உள்ள சாலையின் நீளம் 3.60 கி.மீ. ஆகும். அது தற்போது கற்சாலையாக உள்ளது.

1994 மார்ச் 17]

அதனை தார்ச்சாலையாக்க உத்தேச மதிப்பீடு ரூ. 5.40 இலட்சம் ஆகும். இதனை 1993-94ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் எடுத்துச் செய்யப்பட உள்ளது.

76—

மாயமான் குறிச்சியில் பாலம் அமைக்கத் திட்டம்

வினா எண் 14860—திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

ஆலங்குளம் ஒன்றியம், மாயமான் குறிச்சியில் மானூரான் கால்வாயின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட பாலம் கட்ட ரூ. 20 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பிட்டுள்ளது. தற்போது நிதி வசதி இல்லாததால் பாலம் அமைக்க இயலாது.

77—

வடகரை கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க நடவடிக்கை

வினா எண் 14988—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்திலுள்ள வடகரை கிராமத்தில் பாலர்பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இதற்குரிய பிரேரணையை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட ஊட்டச் சத்து திட்ட அலுவலரிடமிருந்து பெற்று 3—8—1993 அன்று சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பி உள்ளார்.

78—

கோவனூர் ஊராட்சியில் மண் சாலையை கப்பிச்சாலையாக மாற்றத் திட்டம்.

வினா எண் 15000—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் கோவனூர் ஊராட்சியில் உள்ள மண் சாலையை 1992-93—ல் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிட்டுள்ள ஊராட்சியில் நாச்சியார்கோவி லிலிருந்து கோவனூர் வரை உள்ள 3.2 கி.மீ. கப்பிச் சாலை யாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர நாச்சியார் கோவில் பூந்தோட்டம் சாலையிலிருந்து கோவனூர் வரை உள்ள 0.6 கி.மீ. சாலை சிகப்பு கப்பிச் சாலையாக பராமரிக்கப் பட்டுவருகிறது. இச்சாலையை கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

79—

புதுக்கோட்டை உளூர் சாலையை தார்ச் சாலையாக மாற்ற திட்டம்.

வினா எண் 15001—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூர் ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையை 1992-93—ல் தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூர் ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1994 மார்ச் 17]

80—

பெரியத்திக் கோட்டை சாலையை தார்ச் சாலையாக மாற்றி யமைக்க திட்டம்.

வினா எண். 15002—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியத்திக் கோட்டைக்கு செல்லும் சாலையை 1992-93-ல் தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணித் தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரியத்திக்கோட்டைக்கு செல்லும் சாலையை 1992—93-ல் தார்ச் சாலையாக மாற்றியமைக்க ஒன்றிய நிதி போதுமானதாக இல்லாததால் அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

81—

செங்கமங்கலம் ஆற்றுக்கரை சாலையை கப்பிச் சாலையாக்க திட்டம்.

வினா எண். 15005—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் ஆற்றுக்கரை சாலையை 1992-93ல் செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நிதிப் பற்றாக்குறைக் காரணமாக இச்சட்டமன்றப் பேரவை வினாவில் கேட்கப்பட்ட சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர செயற் குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 17

82—

தொக்காலி காட்டில் சாலையை கப்பிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 15011—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலி காட்டில் ஊருககுள் செல்லும் சாலையை 1992–93ல் கப்பிச் சாலயாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தொச்காலிக்காடு ஊருக்குள் செல்லும் சாலை 0.6 கி.மீ. நீளமுள்ளது. இச்சாலை கருங்கல் ஜல்லி சாலையாகத்தான் இருந்து வருகிறது.

83—

ராமகிருஷ்ணாபுரம் சாலையில் பாலம் கட்டுதல்.

வினா எண். 15024—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ராமகிருஷ்ணாபுரம் செல்லும் சாலையில் 1992–93ல் ஒரு சிறு பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகண்பதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தற்சமயம் பாலம் கட்டும் வேலை நடைபெற்று வருகிறது. விரைவில் இவ்வேலை முடிக்கப் பட்டுவிடும்.

1994 மார்ச் 17]

84—

ராமனூர் கலிங்கப்பட்டி சாலையைப் பராமரிக்கும் திட்டம்.

வினா எண். 15028—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ராமனூரிலிருந்து கலிங்கப்பட்டி வரை செல்லும் சாலை மிகவும் குறுகியதாக உள்ளதால் அதை அகலப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை விரிவு படுத்தி தார்ச்சாலையாக்க நிதிப் பற்றாக்குறை காரணமாக எடுத்துச்செய்ய இயலவில்லை.

85—

திருவையாறு ஒன்றியத்தில் ஆதி திராவிடர் வீடுகளை பழுது பார்த்தல்.

வினா எண். 15043—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு ஒன்றியத்தில் ஆதி திராவிடர்களின் வீடுகள் பழுதடைந்துள்ளதால் அவற்றை புதுப்பித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள விதிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும் எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

86—

மேட்டுப்பிராஞ்சேரி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண். 15207— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்திலுள்ள மேட்டுப்பிராஞ்சேரி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

87—

பாப்பான்குளத்தில் சாலையை தார்ச் சாலையாக்க திட்டம்.

வினா எண். 15210— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், பாப்பான்குளம் கிராமத்திற்கு மதுரை ரோட்டிலிருந்து செல்லும் சாலையை மெட்டல் போட்டு தார்ச் சாலையாக்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட வேலைகளை எடுத்து செய்ய ரூ. 8.80 இலட்சம் உத்தேச செலவினம் ஆகும். ஆனால் கட்டவிழ் நிதி மூலம் எடுக்கப்படும் ஒரு வேலைக்கு அதிகபட்சம்

ரூ. 5.00 இலட்சம் மட்டுமே செலவு செய்ய முடியுமாதலால் குறிப்பிட்ட வேலையினை ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் நிதி நிலை ஒதுக்கீட்டினை அனுசரித்து படிப்படியாக எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

மருக்காலங் குளத்தில் அடி பம்பு அமைத்தல்.

வினா எண் 15211— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், மருக்காலங்குளம் கிராமத்தில் உள்ள மருத்துவ துறை நிலையத்தில் அடி பம்பு போட்டு தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆலங்குளம் ஒன்றியம், மருக்காலங் குளம் கிராமத்தில் உள்ள மருத்துவ துணை நிலையத்தில் அடி பம்பு போட்டு தண்ணீர் வசதி செய்து கொடுக்க போதுமான நிதி வசதி இல்லை.

89—

எட்டான்குளத்தில் அருந்ததியர்களுக்கு இலவச வீடு கட்டி வழங்குதல்.

வினா எண் 15278— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், எட்டான்குளம் கிராம அருந்ததியர்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத்தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

90—

நெல்லிக்கொல்லையில் ஆதிதிராவிடர் வீடுகளை புதுப்பித்தல்.

வினா எண் 15440—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள நெல்லிக்கொல்லை கிராமத்தில் ஆதிதிராவிடர்களின் எரிந்து போன வீடுகளைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித்தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

91—

கிள்ளை ரயிலடி மக்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

வினா எண் 15441—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளை ரயிலடி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கிள்ளை ரயிலடி மக்களுக்கு குடிநீர் விநியோகம் போதுமானதாக உள்ளதால் புதிதாக திட்டம் தேவையில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

92—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீர் செய்தல்.

வினா எண். 15457—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மாற்றி அமைக்கும் திட்டப்பணிகளின்கீழ் (Rejuvenation) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள பழுதடைந்துள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சீர்செய்து தரப்படும்.

(ஆ) தற்போது சில குடியிருப்புகளுக்கு வேலை நடை பெற்று வருகின்றது. டானிடா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1994-95-க்குள் முழுமையாக சீர்செய்யப்படும்.

93—

மாத்தாம்பட்டிணத்திற்கு புதியதாக தெரு விள்க்குகள் அமைத்தல்.

வினா எண் 15473—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில், மாத்தாம்பட்டிணம் கிராமத்திற்கு புதியதாக தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தென்னாம் பட்டிணம் ஊராட்சியின் உட் கிராமமான மாத்தாம்பட்டிணத் திற்கு 1991–92 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிறப்பு தன்னிறை வுத் திட்டத்தின்கீழ் புதியதாக 17 தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. இது தவிர, இதே மாத்தாம்பட்டிணம் கிராமத்தில் ஜவஹர் வேலை வாய்ப் புத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மீனவர் குடியிருப்பு தெருக் களுக்கும் புதியதாக 15 தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சி யால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94—

பரமக்குடி தாலுகாவில் சாலைகள் அமைக்க நடவடிக்கை.

வினா எண் 15707—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுகாவில் இடுகாடுகளுக்கு சாலைகள் இல்லாத ஊர்கள் எத்தனை ?

(ஆ) அங்கு சாலைகள் அமைக்க அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுகாவில் இடுகாடுகளுக்கு சாலைகள் இல்லாத ஊர்கள் 41.

(ஆ) நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் சட்டமன்ற கேள்வியில் கேட்கப்பட்ட இடுகாடுகளுக்கு சாலைகள் அமைக்க இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

95—

பரமக்குடி ஒன்றியத்தில் உப்புநீரை குடிநீராக்குதல்.

வினா எண் 15728— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி ஒன்றியத்தில் உப்புநீரை குடிநீராக்க எந்தெந்த பஞ்சாயத்துக்களில் அமல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) எந்த ஆண்டு அமுல் நடத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி ஒன்றியத்தில் உப்புநீரை குடிநீராக்கும் திட்டம் எதுவும் அமுலில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

96—

பரமக்குடி தொகுதியில் உப்புநீரை குடிநீராக்குதல்.

வினா எண் 16040— டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் செய்யானூர், எட்டிவயல் தென்னவனூர் தீயனூர் பஞ்சாயத்துக்களுக்கும் குடிநீர் வழங்க உப்புநீரை குடிநீராக்கும் திட்டத்தில் சேர்க்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் எட்டிவயல், தென்னவனூர், தீயனூர் பஞ்சாயத்துக்களையும் உப்புநீரை குடிநீராக்கும் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

97—

பார்த்திபனூர் - கௌரிப்பட்டி சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 16405— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி ஒன்றியத்தில் விளத்தூர்-பார்த்திபனூர் சாலையில் இருந்து கௌரிப்பட்டி வரையில் உள்ள ஒன்றியச் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த ஆண்டு வேலை துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கௌரிப்பட்டி கிராம மக்கள் தொகை 1000-க்கும் குறைவாக இருப்பதால் கிராமச் சாலைகள் திட்டத்திலும் பேருந்து செல்லாததால் பேருந்து தடத் திட்டத்திலும் வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை தார்ச்சாலையாக எடுத்து செயல்படுத்த இயலாது.

98—

மொடக்குறிச்சி தொகுதி கிராமங்களுக்கு தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 19245— திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், எழுநூத்திமங்கலம் கிராமம், குப்பம்பாளையத்தில் மக்களுக்கு தெருவிளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1994 மார்ச் 17]

கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், எழுநூத்திமங்கலம் ஊராட்சி, குப்பம்பாளையத்தில் 32 தெருவிளக்குகள் உள்ளன. இருப்பினும், மேலும் ஒரு தெருவிளக்கு அமைத்துத் தர சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

99—

கொடுமுடி சுற்றுலா மையத்தை துவங்க நடவடிக்கை.

வினா எண்கள் 12244 மற்றும் 19276— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி சுற்றுலா மையமாக தேர்வு செய்யப்பட்டுள்ள தால் அதற்கான பணிகள் விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டத்திலுள்ள கொடுமுடி மாவட்ட உலாத் தலமாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப அங்கு சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப்படும்.

100—

கிராமப் பொருள் விற்பனையை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 15699—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராமப் பொருள் விற்பனை நிலையங்கள் எத்தனை?

(ஆ) கிராமப் பொருள் விற்பனையை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எட்டு கதர் கிராமப் பொருள் விற்பனை அங்காடிகள் உள்ளன.

(ஆ) கதர் கிராமப் பொருள் அங்காடிகளில் விற்பனை அதிகரிக்க அதி குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. நுகர்வோருக்கு 1—3—1993 முதல் 14—4—1993 வரை கோப்பின் விலையில் 50 காசு வரை விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில் பொருட்கள் அங்காடிகள் நுகர்வோர் கூட்டுறவு சங்கம் மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றிற்கு கிராமப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிக்க விற்பனை தள்ளுபடியும் கடன் வசதியும் அளிக்க வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மதுரை இராமநாதபுரம் மாவட்ட பனை கூட்டுறவு இணையம் கைவினைஞர்களிடமிருந்து பனைப் பொருட்களை வாங்கி விற்பனை செய்கிறது. மண்டபம் என்ற இடத்தில் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நடமாடும் ஊர்தி மூலம் சென்னை நகரத்தில் கதர் கிராமப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதை மற்ற நகரங்களிலும் விரிவு படுத்தப்படவுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

நான்காம் பட்டியல்

1—

தமிழக அரசு நடத்தும் லாட்டரி சீட்டு மூலம் வருமானம்.

வினா எண் 23271— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு நடத்தும் லாட்டரி சீட்டு மூலம் 1992-93ஆம் ஆண்டு கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

தமிழக அரசு நடத்தும் லாட்டரி சீட்டு மூலம் 1992-93ஆம் ஆண்டு கிடைத்த வருமானம் கீழே தரப்பட்டுள்ளது:—

மொத்த வருமானம்	..	ரூ. 10,16,59,166
நிகர வருமானம்	..	ரூ. 2,55,62,725

2—

சத்யா நகர் அனைத்து குடும்பங்களுக்கும் மனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 5671—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், உமாரெட்டியூர் சத்யா நகரில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? எப்போது பட்டா வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பவானி வட்டம், அம்மாப்பேட்டை கிராமம், மஜரா உமாரெட்டியூரில் உள்ள புல எண் 700 முதல் 717 முடிய உள்ள புல எண்களில் நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் 201 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மனைப் பட்டா வழங்கப் பட்டதில் மேல்முறையீடு செய்து கொண்ட இனங்களும் முடிக்கப்பட்டு விட்டன. மேலும், சத்யா நகரில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் மனைப் பட்டா வழங்கப்பட்டு விட்டன.

3—

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை.

வின எண் 6368— திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம் பர்கூர் பஞ்சாயத்தைச் சார்ந்த 33 கிராமங்களில் உள்ள மலைவாழ் மக்கள் வாழும் வீடுகளுக்கு நூற்றுக்கு 20 பேருக்குக்கூட வீட்டு மனைப் பட்டா வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இப்பகுதி மக்களுக்கு விரைந்து பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டத்தில், பவானி வட்டம், பர்கூர் கிராமத்தில் உள்ள 34 மஜராக்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மக்களுக்கு நத்தம் சர்வே தனி வட்டாட்சியர் மூலம் நத்தம் வீட்டு மனைப் பட்டாக்களும், பவானி வட்டாட்சியர் மூலம் இதர இடங்களில் வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுமனைப் பட்டா கோரி வரப் பெற்ற விண்ணப்பங்கள் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

4—

கோடாரங்குளத்தில் செட்டில்மெண்டு மூலம் சர்வே செய்ய நடவடிக்கை

வினா எண் 8101— திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய பகுதி இனாம் கோடாரங்குளம் கிராமம் செட்டில்மெண்டு மூலம் சர்வே செய்யப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், இரு போக நஞ்சை, ஒரு போக நஞ்சை, புஞ்சையில் நஞ்சை, புறம்போக்கில் நஞ்சை, நத்தம் புறம்போக்கில் நஞ்சை ஆகிய நிலங்களின் விவரம் என்ன?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கோடாரங்குளம் கிராமம் நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சர்வே செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் உள்ள நில வகைப்பாடு விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

1. இருபோக நஞ்சை	..	121.07.0 ஹெக்டேர்
2. ஒரு போக நஞ்சை	..	இல்லை.
3. புறம்போக்கு	..	26.68.5 ஹெக்டேர்
4. நத்தம்	..	15.35.5 ஹெக்டேர்
5. தீர்வை ஏற்படாத தரிசு	..	56.84.5 ஹெக்டேர்
6. புஞ்சை	..	54.82.5 ஹெக்டேர்
7. புஞ்சையில் நஞ்சை வாட்டரேட்		3.86.9 ஹெக்டேர்
8. புறம்போக்கில் நஞ்சை வாட்டரேட்		0.04.0 ஹெக்டேர்
9. நத்தம் புறம்போக்கில் பயிர் சாகுபடி விஸ்தீரணம்		0.25.0 ஹெக்டேர்

5—

நாடியத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 12680—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாடியத்தில் மாடு அடைக்கும் பவுண்டு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, நாடியத்தில் மாடு அடைக்கும் பவுண்டு புதிதாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க ஒட்டுமொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

அனைத்து புறம்போக்கு நிலங்களுக்கும் பட்டா வழங்க திட்டம்.

வினா எண் 16443—திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கு நிலங்களில் தற்போது நத்தம் புறம்போக்காக இருந்தால்தான் பட்டா என்றில்லாமல் அனைத்து புறம்போக்கு நிலங்களிலும் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

நத்தம் புறம்போக்கில் படடா வழங்குதல் போல் அனைத்து புறம்போக்கு நிலங்களுக்கும் பட்டா வழங்க இயலாது. இருப்பினும், பட்டா வழங்குவதற்கு தடை செய்யப்பட்ட இனங்களான மேய்ச்சல் தரை புறம்போக்கு மற்றும் நீர்தலைப் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை கால அளவினை பொறுத்தும், நிலத்தின் தன்மையைப் பொறுத்தும் தேவைப்பட்ட நேர்வுகளில் நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து அவ்வப்போது பட்டா வழங்கப்படுகிறது.

1994 மார்ச் 17]

7—

தங்கிணாங்கிணறு கிராமத்தில் நியாயவிலைக் கடை ஏற்படுத்த திட்டம்.

வினா எண் 8515— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆலங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த தங்கிணாங்கிணறு கிராமத்திற்கு நியாய விலைக் கடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டம், ஆலங்குளம் ஒன்றியம், தங்கிணாங்கிணறு கிராமத்து மக்கள் அவ்வூரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பலபத்திராமபுரத்திலுள்ள நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள தங்கிணாங்கிணறு கிராமத்தில் 156 குடும்ப அட்டைகள் உள்ளதால் கிளை நியாயவிலைக் கடை திறக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏதுமில்லை.

8—

கோவில் வாழ்க்கை கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை துவக்கம்.

வினா எண் 13023— திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி கிராம கூட்டுறவு அங்காடி கோவில் வாழ்க்கை என்ற ஊரில் தொடர்ந்து இருக்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, திருக்களப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின், திருக்களப்பூர் கிராம கூட்டுறவு நியாயவிலைக் கடையின் குடும்ப அட்டைகளைப் பிரித்து கோவில் வாழ்க்கை கிராமத்தில் 26—8—1993 முதல் பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

9—

முழுக்குத்துறை மீனவர்களுக்கு நியாயவிலைக் கடை அமைத்தல்

வினா எண் 16384—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) புவனகிரி தொகுதி முழுக்குத்துறை மீனவர்களுக்கு நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் வட்டம், புவனகிரி தொகுதியில் முழுக்குத்துறை குடியிருப்பில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 72 ஆகும். இங்குள்ள மக்கள் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிள்ளை மீனவர் காலனி கூட்டுறவு நியாயவிலைக் கடையிலிருந்து பொருள்கள் வாங்கி வந்தனர். ஆனால் இவர்கள் தற்போது 2 கிலோ மீட்டர் தூரமே உள்ள முடசலோடைப் பகுதி நேர கடையில் பொருள்கள் வாங்குவதற்கு 11—8—1993 முதல் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, முழுக்குத்துறை மீனவர்களுக்கு தனியாக ஒரு நியாயவிலைக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

10—

பரமக்குடி தாலுக்காவில் கூடுதலாக நியாயவிலைக் கடைகள் திறக்கத் திட்டம்.

வினா எண் 17193—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பரமக்குடி தாலுக்காவில் உள்ள நியாயவிலைக் கடைகள் எத்தனை ?

(ஆ) மேலும், கடைகள் அமைக்க உத்தேசம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) பரமக்குடி தாலுக்காவில் உள்ள நியாயவிலைக் கடைகள் எண்ணிக்கை 98.

(ஆ) மேலும் கடைகள் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

11—

கோட்டை காட்டுவலசில் கிராம அங்காடி அமைத்தல்.

வினா எண் 19197—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் கொந்தளம் கிராமத்தில் கோட்டை காட்டுவலசில் கிராம அங்காடிகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

கோட்டைகாட்டுவலசு கிராமத்தில் 56 குடும்ப அட்டைகளே உள்ளன. தற்போது இக்கிராமத்திற்கும் அதன் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள கொந்தளம் (இருப்பு தட்டாம் பாளையம்) நியாயவிலைக் கடைக்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் மட்டுமே ஆகும். ஆகவே, கோட்டைகாட்டு வலசு கிராமத்தில் கிராம அங்காடி கிளை ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

12—

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி நிறுவன நுழைவுத் தேர்வுகளில் இட ஒதுக்கீடு வழங்க திட்டம்.

வினா எண் 4533—திரு. தேனி பி. பன்னீர்செல்வம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு மூலம் செய்யப்படும் தேர்வு முறையில் 10 சதவீதம் அரசு

ஒதுக்கீடு வைத்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களும் பயன் பெறும் வகையில் சீர்திருத்தம் செய்ய அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், கருணை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுமா ?

(இ) கிராமப்புறங்களின் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ்வினாவிற்கும் இடமில்லை.

13—

குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர் நியமனம்.

வினா எண் 4575—திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் இல்லை என்பதை அரசு அறியுமா !

(ஆ) ஆம் எனில், உடனடியாக மேற்படி பெண் மருத்துவரை நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குறிஞ்சிப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு ஆண் மருத்துவர் பணிபுரிந்து வருகிறார். இரண்டாவது சுகாதர்ர அலுவலர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவ்வாறு நியமிக்கும்பொழுது பெண் மருத்துவர் நியமிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

1994 மார்ச் 17]

1 —

போளூர் நகரில் செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்க பரிசீலனை.

வினா எண் 6189—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரில் செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரில் செவிலியர் பயிற்சிப்பள்ளி அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

15—

மருத்துவக் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை.

வினா எண் 6249—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனி நிறுவனங்களின் கீழ் எங்கெங்கு மருத்துவக் கல்லூரிகள் இயங்குகின்றன ?

(ஆ) தனியாரின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் அவற்றிற்கான அகில இந்திய கவுன்சில்கள் உரிய அங்கீகாரம் வழங்கப்படாமலேயே இயங்குபவை உள்ளதா ?

(இ) அதன் காரணமாக பாதிக்கப்படவிருக்கும் மாணவர்களுக்கு எந்த வகையில் பாதிப்பு நீங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது ?

[1994 மார்ச் 17

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 9 அரசு மருத்துவக் கல்லூரிகளும், 1 அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவக் கல்லூரியும் மற்றும் நான்கு தனியார் மருத்துவக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ் வருமாறு:—

1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
2. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.
4. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு.
5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
6. அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம்.
7. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.
9. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.
10. பெருந்துறை மருத்துவக் கல்லூரி, பெருந்துறை ஈரோடு (போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப் படுகிறது).

தனியார் மருத்துவக் கல்லூரிகள் :

1. ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னை.
2. கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்.
3. ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.
4. பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் நிலையம், கோயம்புத்தூர்.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 மார்ச் 17]

16—

ஆலத்தம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக உயர்த்த திட்டம்.

வினா எண் 14171—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆலத்தம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்சமயம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆலத்தம்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசிடம் செயறகுறிப்பு ஏதும் இல்லை.

17—

ஓசூர் மருத்துவமனையில் தங்கும் அறை கட்ட நடவடிக்கை.

வினா எண் 19543—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் மருத்துவமனையில் நிறைய குடும்பநல அறுவை சிகிச்சை நடைபெறுவதால், சிகிச்சைக்கு உட்படும் தாய்மார்களை பராமரிக்க வரும் உறவினர்கள் தங்க இடமில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கென ஓர் தங்கும் அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஓசூர் மருத்துவமனையில் நிறைய குடும்பநல அறுவை சிகிச்சை நடைபெறுவதால், சிகிச்சைக்கு உட்படும் தாய்மார் களைப் பராமரிக்க வரும் உறவினர்கள் தங்க இடமில்லை என்பது பற்றி புகார்கள் ஏதும் இதுகாறும் அரசின் கவனத்திற்கு

வரவில்லை. எனினும், இது சம்பந்தமாக மாவட்ட இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் சுகாதாரம், தருமபுரி அவர்களிடம் இருந்து ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

(ஆ) இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் சுகாதாரம், தருமபுரி அவர்களிடம் இருந்து ஆலோசனை பெறப்பட்ட பின், அதன் தேவையைப் பொறுத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

18—

வேதாரண்யம் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை.

வினா எண் 21214—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம் அமைப்பதில் அரசு கொடுத்துள்ள நெறிமுறைகளை தெரிவிக்குமா ?

(ஆ) வேதாரண்யம் தொகுதி, தேத்தாகுடி வடக்கு, ஆயக்காரன்புலம், நாலுவேதபதி, காரியாபட்டினம் ஆகிய ஊர்களில் நிரந்தரக் கட்டிடம் எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருந்தகக் கட்டிடம், மருத்துவ அலுவலர் குடியிருப்பு மற்றும் இதர பணியாளர் குடியிருப்புக் கட்டிடங்கள் ஆகியவை கட்ட 3 முதல் 6 ஏக்கர் நிலம் தேவை. மற்றும் பொது நன்கொடை ரூ. 10,000 அரசுத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். அதன்பின் கட்டுமானப் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

(ஆ) (1) காரியாப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருந்தகக் கட்டிடம், மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்டிடம் ஆகியவை கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் அதன் கட்டிடப் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

(2) தேத்தாகுடி வடக்கு, ஆயக்காரன்புலம் மற்றும் நாலுவேதபதி ஆகிய ஆரம்பசுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்ட நிலம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. தகுந்த நிலம் கையகப்படுத்தத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19—

தமிழ்நாடு மருத்துவச் செடி பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தின் வருவாய் விவரம்.

வினா எண் 22137—திரு. டி. வேலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1992–93 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மருத்துவச்செடி பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகம் செய்த மூலிகைகள் மற்றும் கச்சா மருந்துப் பொருட்களின் விற்பனை மூலம் ஈட்டிய லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு, சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு மருத்துவச்செடி பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் கச்சா மருந்துப் பொருட்களை இந்திய மருத்துவத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் மருந்து செய்யும் அலுவலகத்திற்கு வினியோகம் செய்து வருகிறது. 1992–93 ஆம் ஆண்டில் கச்சாப் பொருட்கள் விற்பனையும் மற்றும் லாபமும் பின்வருமாறு :

விற்பனை	..	ரூ. 21.63 லட்சம்
லாபம்	..	ரூ. 0.67 லட்சம்

வெளி வயலில் பஸ் ஸ்டாப் அமைத்தல்

வினா எண் 12418—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி வெளி வயலில் 1992-93-ல் பஸ் ஸ்டாப் அமைத்து நீண்ட தூரப் பேருந்துகள் நிற்க ஏற்பாடு செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி வெளி வயலில் சோழன் போக்குவரத்துக் கழக நீண்ட தூரப்பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் சென்று வருகின்றன.

21—

பேராவூரணி பட்டுக்கோட்டை தடம் எண் 8 மற்றும் 10 பேருந்து தடங்களை கூடுதல் நடைகள் இயக்க திட்டம்.

வினா எண் 12913— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியிலிருந்து குருவிக்கரம்பை, வாத்தலைக்காடு, நாடாகாடு வழியாகச் செல்லும் நகரப் பேருந்தை 10 சிங்கிளாகஇயக்கவும் தடம் 10-ஐ மேற்படி வழியில் 8 சிங்கிளாக இயக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி பட்டுக்கோட்டை (வழி) வாத்தலைகாடு குருவிக்கரம்பை தடத்தில், பல்வழித் தடத்தில் இயங்கும் பேராவூரணி பேருந்து தடம் எண் 8 நான்கு நடைகளும், பேராவூரணி தடம் எண் 10 இரண்டு நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் நடைகள் இயக்க செயற் குறிப்பு ஏதுமில்லை.

22—

சின்ன ஆவுடையார் கோயில் வழியாக சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து விடுதல்

வினா எண் 13446—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன ஆவுடையார் கோயில் வழியாக ஓடி நின்றுப் போன சோழன் நகரப் பேருந்து நம்பர் 11-ஐ, 1992-93-ல் மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி-சின்ன ஆவுடையார் கோயில் தடத்தில் பேராவூரணியில் இருந்து திருவப்பாடி வரை நான்கு தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திருவப்பாடியிலிருந்து சின்ன ஆவுடையார் கோயில் வரை மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சின்ன ஆவுடையார் கோயில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழக இயக்கப் பகுதியில் அமைந்துள்ளது. எனவே சின்ன ஆவுடையார் கோயில் வழியாக சோழன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23—

பேராவூரணி தடம் எண் 3 பேருந்தை கூடுதல் நடைகள் இயக்கத் திட்டம்.

வினா எண் 13593—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து மருங்கப்பள்ளம் வழியாக சேதுபாவாசத்திரம் செல்லும் நகரப் பேருந்தை 1992-93-ல் 14 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி தடம் எண் 3 பேருந்தை பேராவூரணி சேதுபாவாசத்திரம் (வழி) மங்கப்பள்ளம் தடத்தில், 14 நடைகள் இயக்க செயற் குறிப்பு ஏதும் இல்லை. தடம் எண் 3-ல்

தற்பொழுது இத்தடத்தில் நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதாலும், இப்பேருந்தின் வருவாய் குறைவாக உள்ளதாலும், இத்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்க இயலாது.

24—

பட்டுக்கோட்டை ராசியங்காடு பேருந்தை இயக்கத் திட்டம்.

வினா எண் 13616—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து ராசியங்காடு வழியாக சுந்தரநாயகிபுரம் வரை ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்தை 1992—93-ல் மீண்டும் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து ராசியங்காடு வழியாக சுந்தரநாயகிபுரம் வரை ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்தை மீண்டும் விட செயற் குறிப்பு இல்லை. இத்தடத்தில் ராசியங்காடு பிரிவு சாலையிலிருந்து சுந்தரநாயகிபுரம் வரை 6 கி.மீ. தூரம் சாலை பழுதடைந்து பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. எனவே இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

25—

பேராவூரணி ஆலங்குடி நகரப் பேருந்தை கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை.

வினா எண் 13755—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஆலங்குடி செல்லும் நகரப் பேருந்தை 1992-93-ல் 14 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி ஆலங்குடி தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்தை 14 நடைகளாக இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. தற்போது பேராவூரணி ஆலங்குடி தடத்தில் நகரப் பேருந்து 13ன் மூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளே போதுமானது என்பதால் கூடுதல் நடைகள் இயக்க வாய்ப்பில்லை,

26—

பட்டுக்கோட்டை ஊரணிபுரம் நகரப் பேருந்தை இயக்கத் திட்டம்.

வினா எண் 13761—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து அலிவலம், நடுவிக்கோட்டை அதம்பை, பாதரங்கோட்டை, கா. உஞ்சிவிடுதி-ஊரணிபுரம் வரை ஓடிக் கொண்டிருந்த நகரப் பேருந்தை 1992-93ல் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊரணிபுரம் தடத்தில் அதம்பையில் இருந்து பாதரங்கோட்டை வரை 4 கி.மீ. தூரம் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

27—

கரூரிலிருந்து காளையப்பட்டிக்கு நகரப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 20881—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளியணை வழியாக கரூரிலிருந்து காளையப்பட்டிக்கு நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்புஉள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை —

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கரூரிலிருந்து காணியாளப்பட்டிக்கு (வழி) வெள்ளியணை வழியாக இயக்கப்பட்டு வரும் வழித்தடத்தில் வீரியப்பட்டி என்ற இடத்திலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் காளையாபட்டி உள்ளது. காளையாபட்டி கிராம மக்கள் தொகை 300 ஆகும். இக்கிராம மக்கள் வீரியப்பட்டியிலிருந்து தற்போது கரூருக்குச் செல்கிறார்கள். தீரன் சின்னமலை போக்கு வரத்துக் கழக நகரப் பேருந்து 10 நடைகளும், தனியார் புற நகர்ப் பேருந்துகள் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. 1,000 மக்கட் தொகைகொண்டகிராமத்திற்கு மட்டுமே பேருந்து வசதி செய்து கொடுக்க இயலும். தற்போது கரூர்-காளையா பட்டி வரை நகரப் பேருந்து வழித்தடம் இயக்க தீரன் சின்ன மலை போக்குவரத்துக் கழகத்திடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை. புதிய நகரப் பேருந்து இயக்கும்போது இவ்வழித் தடம் பற்றி பரிசீலிக்க இயலும்.

28—

சங்ககிரி–சேலம் பழைய பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்க திட்டம்.

வினா எண் 21793—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி–சேலம் பழைய பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேலத்தில் புறநகர் பேருந்துகளுக்காக ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டதால் அனைத்து புறநகர் பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திலிருந்துதான் இயக்கப்படுகின்றன. மேலும் சங்ககிரியிலிருந்து சேலம் வரும் பயணிகள் கொண்டலாம்பட்டி பைபாஸ் வந்து இறங்கி, அங் கிருந்து பழைய பேருந்து நிலையத்திற்குச் செல்ல அண்ணா

1994 மார்ச் 17]

போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் 370 நடைகளும் தனியார் பேருந்துகள் மூலம் 138 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. பழைய பேருந்து நிலையத்திலிருந்து நகரப் பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வருவதால், கோரிக்கையில் கேட்டபடி பேருந்து இயக்க இயலாது .

29—

சங்ககிரியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் கழக சொகுசுப் பேருந்து விடுதல்.

வினா எண் 21794—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சொகுசுப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

அ) மற்றும் (ஆ) : சங்ககிரிக்கும் சென்னைக்கும் இடையே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது ஒரு சாதாரண விரைவுப் பேருந்து ஈரோட்டிலிருந்து, சங்ககிரிக்கு அருகேயுள்ள எடப்பாடி வழியாக சென்னைக்கு இயக்கப்படும்.

30—

அவினாசியிலிருந்து செட்டியூருக்கு போக்குவரத்து வசதி அளித்தல்.

வினா எண் 22710—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசியிலிருந்து செட்டிபுதூருக்கு போக்குவரத்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

அவினாசியிலிருந்து செட்டிபுதூருக்கு தினசரி சேரன் போக்குவரத்துக் கழகம் 6 நடைகளும் தனியார் பேருந்து ஒன்று 6 நடைகளும் இயக்கி வருகின்றன. செட்டிபுதூர் நாள் ஒன்றுக்கு 12 நடைகள் மூலம் போதுமான அளவு போக்குவரத்து வசதி பெற்றுள்ளது. எனவே கூடுதல் நடைகள் அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

31—

பரமக்குடி நகராட்சிப் பகுதியில் கல்வெர்ட் கட்ட திட்டம்.

வினா எண் 15882—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலைகளில் பரமக்குடி நகராட்சிப் பகுதியில் கல்வெர்ட் (Culvert) கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

32—

கருக்காகுறிச்சி தார்ச்சாலையை பழுதுபார்த்தல்.

வினா எண். 16287—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடியில் இருந்து கருக்காகுறிச்சி செல்லும் தார்ச் சாலையைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை தடம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சாலை பகுதிகளைக் கொண்டுள்ளது.

		கி.மீ.	
1.	புதுக்கோட்டை பட்டுக் கோட்டை சாலை கி.மீ. 19/4—23/4.	4.00	மாவட்ட பெருஞ் சாலை.
2.	கோட்டக்காடு சாலை கி.மீ. 23/44—31/4.	8.00	இதர மாவட்ட சாலை
3.	வானக்கன்காடு கருக்காகுறிச்சி சாலை கி.மீ. 31/6—36/4.	4.80	இதர மாவட்ட சாலை

1. புதுக்கோட்டை—பட்டுக்கோட்டை சாலை கி.மீ. 19/4–23/4.

இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்ட பெருஞ்சாலையாகும். இதன் மேற்பரப்பு தார் பரப்பு கொண்டது. சாலை நல்ல நிலையில் உள்ளது. இச்சாலையில் அவ்வப்பொழுது ஏற்படும் நொடிகள் சாலை பணியாளர்களைக் கொண்டு சரி செய்து போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2. கோட்டைக்காடு சாலை கி.மீ. 23/4—31/4.

இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 24/0—25/0, 25/8—87/0 மற்றும் 27/0—28/0 ஆகிய பகுதிகளில் தான் தளம் புதுப்பிக்க பணிகள் ஒப்பந்தங்கள் மூலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் முடிக்கப்படும். மீதமுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. இருப்பினும் அவ்வப்பொழுது காணப்படும் நொடிகள் சாலை பணியாளர்களைக் கொண்டு சரி செய்யப்பட்டு வருகிறது.

3. வானக்கன்காடு கருக்காகுறிச்சி சாலை கி.மீ. 31/6—36/4 (4.48 கி.மீ.)

இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை முழுவதும் சென்ற நிதியாண்டில் (1992–93ம் ஆண்டு) பழுதடைந்த சாலைகள் சீரமைப்பு திட்டத்தில் இச்சாலையில் தார் தளம் புதுப்பிக்கப்பட்டது.

33—

குழித்துறை பழுதடைந்த பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 19642—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில்—திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் குழித்துறையில் உள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் அமைக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவில்—திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலை 47ல் கி.மீ. 604/4ல் குழித்துறை ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்க செயற்குறிப்பு மைய அரசிடம் உள்ளது. முதற்கட்டமாக புதிய பாலம் கட்டி இணைப்புச் சாலை அமைக்க தேவையான நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் புதிய பாலம் கட்டுவதற்கான கருத்துரு மையஅரசின் வருடாந்திரத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு மைய அரசின் அங்கீகாரம் பெற்ற பின்பு இவ்வேலைக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

34—

அயன்கரிசல்குளம் பெரிய ஓடையில் பாலம் கட்டுதல்.

வினா எண் 19771— திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி புதூர் ஒன்றியம் அழகாபுரி அயன்கரிசல்குளம் நெடுஞ்சாலையில் உள்ள பெரிய ஓடையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

35—

ராஜன் வாய்க்காலில் பாலம் கட்டும் பணி

வினா எண் 20038— திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தாலுக்கா குமராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் ராஜன் வாய்க்காலில் பாலம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

விரைவில் இப்பாலப்பணி முழுமையாக முடிக்கப்படும்.

[1994 மார்ச் 17

36—

பால் கொள்முதல் விலையை உயர்த்தும் திட்டம்.

வினா எண் 20581—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பால் கொள்முதல் விலை கூட்டிக் கொடுக்கப்படாததால் பால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) பால் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படும் பால் கொள்முதல் விலை கடந்த மே மாதம்தான் உயர்த்தப்பட்டது.

பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்படும் பால் கொள்முதல் விலையை உரிய நேரத்தில் பரிசீலனை செய்து இரண்டு வருட காலத்தில் இருமுறை பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது.

பசும்பால் : (கிலோ ஒன்றுக்கு)

முந்திய விலை.	உயர்த்தப்பட்ட தேதி.	உயர்த்தப் பட்ட விலை.
ரூ. பை.		ரூ. பை
32.30	1—5—1992 முதல்	36.15
36.15	1—5—1993 முதல்	42.00

எருமைப்பால் : (கிலோ ஒன்றுக்கு)

முந்திய விலை.	உயாத்தப்பட்ட தேதி.	உயர்த்தப் பட்ட விலை.
ரூ. பை.		ரூ. பை.
67.15	23—2—1992 முதல்	90.00
90.00	1—5—1993 முதல்	96.00

கொள்முதல் விலை தக்க தருணத்தில், சீரான அளவிற்கு உயர்த்திக் கொடுக்கப் பட்டதால் பால் கொள்முதல் செய்வதில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு, இந்த வருடம் சாதாரணமாக பால் வற்றிய காலம் என கருதப்படும் ஜூன் மாதத்தில் எப்போதும் இருந்திராத அளவாக நாளொன்றுக்கு 14.50 இலட்சம் லிட்டராக பால் கொள்முதல் உயர்ந்து சீராகவும் இருந்து வருகின்றது.

37—

பால்வழங்கு சங்கங்களை கவனிக்க கண்காணிப்புக்குழு அமைத்தல்

வினா எண் 12800— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் வழங்கு சங்கங்கள் சிறப்பாக இயங்க கண்காணிப்புக் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் மற்றும் பால் வளத்துறை அமைச்சர் :

இல்லை.

38—

ஆத்தூரில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க திட்டம்

வினா எண் 138— திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரில் பெரிய தொழிற்சாலைகள் இல்லாததால் மூலப் பொருள்கள் அதிகம் உள்ள கிரானைட் (Granite) தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

39—

சிவந்திபுரம் ஊராட்சியில் கல்பாளங்கள் வெட்டியெடுத்தல்

வினா எண். 2452—திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் சிவந்திபுரம் ஊராட்சியில் புறம்போக்கு இடத்தில் கல் பாளங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசுக்குக் கிடைக்கும் வருமானம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம்—அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் சிவந்திபுரம் ஊராட்சியில் புறம்போக்கு இடத்தில் ''கல் பாளங்கள்'' (வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கல் பிளாக்குகள்) ஏதும் வெட்டி எடுக்கப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

40—

அம்மாபேட்டை ஒன்றியத்தில் இயங்கும் கருங்கல் குவாரிகள்

வினா எண். 5091—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் ஒன்றியத்திலும் அம்மாபேட்டை ஒன்றியத்திலும் எத்தனை ''கருங்கல்'' குவாரிகள் இயங்குகின்றன?

(ஆ) இதனால் தமிழக அரசுக்கு 1988-89, 1989-90, 1990-91ல் எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) அந்தியூர் ஒன்றியத்தில் நான்கு கருப்பு கிரேனைட் குவாரிகளும் அம்மாபேட்டை ஒன்றியத்தில் மூன்று கருப்பு கிரேனைட் குவாரிகளும் இயங்குகின்றன.

(ஆ) வருமான விபரம்

ஆண்டு	அந்தியூர் ஒன்றியம்	அம்மாபேட்டை ஒன்றியம்
1988-89	9,70,456.20	8,526.80
1989-90	14,34,871.60	75,977.00
1990-91	19,97,669.00	1,23,872.00
	44,02,996.80	2,08,375.80

41—

முதியோர் விதவைகள் ஓய்வூதியம் வழங்குதல்

வினா எண் 20579 திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முதியோர் ஒய்வூதியம் விதவைகள் ஓய்வூதியம் கோரி விண்ணப்பித்து நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அனைவருக்கும் அரசு எப்போது ஓய்வூதியம் வழங்க உள்ளது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் முதியோர் ஓய்வூதியம் கோரி நிலுவையில் உள்ள மனுக்கள் 21,954 ஆகும். அவற்றில் 3808 விண்ணப்பங்கள் உடன் முடிவு செய்யப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அனைவருக்கும் ஒய்வூதியம் வழங்குவதற்காக 25,000 அதிக இடங்கள் அனுமதிக்கப்பட்டு ஆணை வெளியிடப் பட்டுள்ளது. இதனால் நிலுவையில் உள்ள மனுதாரர் அனை வருக்கும் ஒய்வூதியம் வழங்கப்படும்.

42—

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்றல்.

வினா எண் 3387—திருமதி என். கனகவல்லி: மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கொடைக்கானலில் தொடங்கப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கடும் எதிர்ப்புகளையும் மீறி சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதா?

(ஆ) தற்போது அது எந்த நிலையிலுள்ளது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்கள் கல்வி மற்றும் மகளிர் சமுதாயத்திற்கு இன்னும் சீரிய முறையில் தொண்டு புரிய வகை செய்யும் நோக்குடன் இப் பல்கலைக் கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்கு மாற்றி அரசு ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

43—

காலியாக உள்ள விளையாட்டு பயிற்றுநர்கள் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.

வினா எண் 7967—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாவட்டங்கள்தோறும் தற்பொழுது காலியாக உள்ள விளையாட்டு பயிற்றுநர்கள் இடங்களை நிரப்ப அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மாவட்டங்கள்தோறும் காலியாக உள்ள விளையாட்டு பயிற்றுநர்கள் பணியிடங்களை நிரப்புவதற்காக வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்வர்களின் பட்டியல் பெற்று, நிரப்பிடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

44—

பெரம்பலூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்கத் திட்டம்

வினா எண். 8896—திரு. தா. செழியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பலூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசு விதிகளின்படி ஏற்கனவே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இயங்கி வருவதனால் மட்டுமே அப்பள்ளியை பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலும். பெரம்பலூரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்கும் நிலைமை தற்போது எற்படவில்லை.

45—

தாமரங்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த திட்டம்

வினா எண் 15577—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை கல்வி மாவட்ட, தாமரங்கோட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை 92-93ல் மேல்நிலைப் பள்ளியாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

46—

துவறங்குறிச்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியை பெண்கள் மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த திட்டம்.

வினா எண் 15578 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இட நெருக்கடி இருப்பதால் துவறங்குறிச்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியை 1993–94-ல் பெண்கள் மேல்நிலைப்பள்ளியாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

47—

ஆவணம் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த திட்டம்.

வினா எண் 15581—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம், ஆவணம் உயர்நிலைப்பள்ளியை 1993–94ல் மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1994 மார்ச் 17]

48—

பள்ளத்தூர் மேல்நிலைப்பள்ளியில் கணக்குப் பிரிவு தொடங்க திட்டம்.

வினா எண் 15585—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் மேல்நிலைப்பள்ளியில் 92–93ல் கணக்குப் பிரிவு தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

இல்லை.

49—

பரமத்தி அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த திட்டம்.

வினா எண் 21686—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமத்தி அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

தற்போது செயற்குறிப்பேதும் ஆய்வில் இல்லை.

50—

மருத்துவ உதவி சட்டத்தின் மூலம் வசூல்.

வினா எண் 21958— டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ உதவித் திட்டத்தின் மூலம் வசூல் செய்து வங்கிகளில் அல்லது கருவூலங்களில் இடப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த நிதி மூலம் பள்ளிக் கட்டிடங்கள் மராமத்து செய்வதற்கு அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) ரூ. 1,20,61,281.00 (ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சத்து அறுபத்தியோரு ஆயிரத்து இருநூற்று எண்பத்து ஒன்று மட்டும்).

(ஆ) இல்லை.

51—

ஆத்தூர் வட்டத்தில் சில பள்ளிகளை மேல்நிலை மற்றும் நடு நிலைப் பள்ளியாக உயர்த்த திட்டம்.

வினா எண் 22471—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப் பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் மஞ்சினி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைபபள்ளியாகவும் முல்லைவாடி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகவும் 1993–94 ஆம் ஆண்டில் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசின் நிதி நிலைமையின் காரணமாக சாத்தியக் கூறுகள் இல்லை.

52—

ஆரணி நகராட்சியில் பேருந்து நிலையம் ஏற்படுத்த நடவடிக்கை.

வினா எண் 5837—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இரண்டாக செயல்படும் ஆரணி நகராட்சி பேருந்து நிலையத்தை இணைத்து ஒரே பேருந்து நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆரணி நகராட்சியில் உள்ள இரண்டு பேருந்து நிலையங்களையும் இணைத்து ஒரே பேருந்து நிலையமாக மாற்றியமைத்து செயல்படுத்த திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

53—

வயலாமூர் காலனியில் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை.

வினா எண் 10776—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வயலாமூர் காலனியில் தெருவிளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வயலாமூர் கிராமத்திலும் மற்றும் காலனியிலும் முன்னரே மொத்தம் 49 தெரு விளக்குகளுக்கு மின்வசதி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 10 தெரு விளக்குகள் வயலாமூர் காலனியில் பொருத்தப்பட்டுள்ளன. கூடுதலாக தெரு மின்விளக்குகள் பொருத்துவதற்கு செயற்குறிப்பு ஏதும் நிலுவையில் இல்லை.

54—

பல்லடம் தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்த பரிசீலனை.

வினா எண் 11140— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு யளிப்பாரா—

(அ) பல்லடம் நகரப் பஞ்சாயத்தை— நகரசபையாக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பல்லடம் தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சி யாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரி சீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

55—

இடையாத்தி ஊராட்சியில் கூடுதல் தெருவிளக்குகள் ஏற்படுத்த திட்டம்.

வினா எண். 12277—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம், இடை யாத்தி ஊராட்சி வேலாம்பட்டி மேற்கில் 1992–93ல் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேலாம்பட்டி கிராமம் மேற்கு-ல் தற்சமயம் தெரு விளக்கு கள் எரிந்துக் கொண்டு இருக்கின்றன. மேலும் ஊராட்சி நிதி திருப்திகரமாக இல்லாததால் தெரு மின்விளக்கு விஸ்தரிப்பு தற்சமயம் சாத்தியமில்லை,

1994 மார்ச் 17]

56—

இடையாத்தி (மே) மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்தல்

வினா எண். 12408—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (மே) வெள்ளாளத் தெருவிற்கு 92–93-ல் மயானத்திற்கு தகரக் கொட்டகை கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி வெள்ளாளத் தெருவிற்கு 1992–93-ல் மயானம் கொட்டகை அமைக்க திட்டம் எதுவும் இல்லை. 1992–93 ஆம் ஆண்டில் இடையாத்தி கோனார் தெருவில் ரூ. 1.20 லட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் பரிசீலித்து முன்னுரிமை கொடுத்து அவ்விடத்தில் மயானக் கொட்டகை கட்டித் தரப்படும்.

57—

கார்காவயல் சத்துணவுக் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12923—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் கார்காவயல் சத்துணவுக் கூடத்திற்கு 1992–93-ல் புதிய கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கார்காவயல் சத்துணவு மையத்திற்கு 1991–92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டிடத்தில் தற்போது மையம் இயங்கி வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

58—

ஏரிப்புறக்கரையில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 13482—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை, ஒன்றியம், ஏரிப்புறக்கரையில் 1992-93ல் துணை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ராஜாமடம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த ஏரிப்புறக்கரையில் துணை சுகாதார நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. வரும் நிதியாண்டில் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று ஏரிப்புறக்கரையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

59—

பார்த்திபனூர் பஞ்சாயத்திற்கு கழிவுநீர் வடிகால் அமைத்தல்.

வினா எண் 16045—டாக்டர். எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூர் பஞ்சாயத்தில் கழிவுநீர் வடிகால் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பார்த்திபனூர் பஞ்சாயத்தில் ஏற்கனவே ஊராட்சி நிதி மூலம் பிள்ளையார் கோவில் தெருவிலும், ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மீன்கடைத் தெரு சர்ச் வீதி வானா·ரைஸ் மில் தெருவிலும் கழிவு நீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது. ஏனைய தெருக்களிலும் கழிவுநீர் வடிகால் திட்டம் அமைத்திட ஒன்றியப் பொதுநிதியிலும் ஊராட்சியிலும் போதிய நிதி இல்லை.

60—

போகலூர் ஒன்றியத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் 16504—டாக்டர் எஸ். சுந்தரராஜ்.: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியத்தில் திறந்தவெளி கிணறுகள் எத்தனை ?

(ஆ) இதற்குப் பதில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியத்தில் 49 திறந்தவெளி கிணறுகள் 23 கிராமங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

(ஆ) திறந்தவெளிக் கிணற்றுக்கு பதிலாக 22 குடியிருப்புகளுக்கு புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க திட்டமிடப்பட்டு, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டு குடியிருப்பிற்குள், 1993–94ம் ஆண்டு குடிநீர்த் திட்டத்தின் கீழ் 5 குடியிருப்புகளுக்கும் மற்றும் 15 குடியிருப்புகளுக்கு சில்லரை செலவு திட்டத்தின் கீழ் (Contingency phase) 1993–94 ஆம் திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

61—

பரமக்குடி நகராட்சியிலுள்ள நிலங்களின் விவரம்

வினா எண் 16687—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் உள்ள நகராட்சியில் ஊரணி புறம்போக்கு, கால்வாய் புறம்போக்கு, பாதைப் புறம்போக்கு மயான புறம்போக்கு பற்றிய விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.:

பரமக்குடி நகராட்சிச் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட பட்டியல் வருமாறு :

1. ஊரணி புறம்போக்கு :(Vested Property in the Municipal Council)

காட்டுப்பரமக்குடி கிராமம் :

புல எண்	விஸ்தீரணம் ஏ.செ.
72/7பி	0.32
113/2	1.34
113/328	4.01
94/5 பிடி.	2.80
152	5.01

எமனேசுவரம் கிராமம் :

153/2 பிடி.	1.28
195/2	2.00
219/1	0.37
205/2	0.54
206/4	0.99
220/7	2.72
219/4	2.44
237/2	0.42
26/11	2.73

2. கால்வாய் புறம்போக்கு : (Vested property in the Municipal Council)

காட்டுப் பரமக்குடி கிராமம் :

31/2	1.40
32/4	0.09
34/2	1.12
35/2	1.62
100	1.15
101	1.53
102	1.59
105/1	1.66
119/1	0.98
120/2	2.40

எமனேசுவரம் கிராமம்:

68/5	0.10
69/2	0.20
72	4.36
73	3.95

எமனேசுவரம் கிராமத்திலுள்ள வரத்துக்கால் மற்றும் வண்டிப் பாதை :

74	3.23
75	1.54
76	2.84
77	1.42
78	2.28

புல எண்	விஸ்தீரணம் ஏ. செ.
79	1.40
80	1.68
81	2.80
82	4.27
83	3.68
84	6.29

வேந்தோணி கிராமம்:

4	1.20
5/2	0.18
10	1.00
11	0.73
14	3.52
1/310	0.12
1/1661	1.26
1/2070	0.93
110	2.74
111/1	0.39
111/3	1.26
112	2.42
115	1.06
116	1.06
359	4.00
360	2.31

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. மயானப் புறம்போக்கு : (Vested Property in the Municipal Council.)

காட்டுப் பரமக்குடி கிராமம் :

33/1	2.05
41/2	0.70
148/1	0.31
153/1	1.94

எமனேசுவரம் கிராமம் :

259/3	2.35
260/13	0.35

மயானப் புறம்போக்கு : (Municipal Property)

காட்டுப்பரமக்குடி கிராமம் :

153/1	1.94

எமனேசுவரம் கிராமம் :

109/2	2.18

4. நகராட்சியில் அரசுப் பாதைப் புறம்போக்கு எதுமில்லை.

62—

மன்னம்பந்தல் பழுதடைந்த தெரு விளக்குகளை புதுப்பிக்க நடவடிக்கை.

வினா எண் 16795—திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மன்னம்பந்தல் கிராமத்தில் இருக்கும் அம்பேத்கார் தெருவில் உள்ள தெரு விளக்குகள் பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மயிலாடுதுறை தொகுதி, மன்னம்பந்தல் கிராமம் அம்பேத்கார தெருவில் உள்ள 15 குழல் விளக்குகள் பெருமழையின் காரணமாக சேதமடைந்து எரியவில்லை.

(ஆ) தற்பொழுது 15 குழல் விளக்குகளும் சீர் செய்யப் பட்டு நல்ல முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

63—

உடையூரில் கையிறைப்பான் அமைக்கத் திட்டம்.

வினா எண் 16801—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் கையிறைப்பான் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தனியாக அமைந்துள்ள உடையூர் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு குடிநீர் வசதிகள் முழுமையாக உள்ளதால் இங்கு கையிறைப்பான் தேவையில்லை. உடையூர் கிராமத்தில் ஒரு பகுதியாக விளங்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு ஒரு மின்விசைத் திட்டம் இந்நிதியாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைத்துத் தரப்படும்.

64—

உடையூர் ஆதிதிராவிடர் பகுதிக்கு குடிநீர் வசதி அளித்தல்.

வினா எண் 16802—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 17]

(அ) புவனகிரி ஒன்றியம் உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஒரு விசைப்பம்பு திட்டம் 1993-94 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைத்துத் தரப்படும்.

65—

புவனகிரி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 16804—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஒன்றியம் உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி நடப்பு நிதியாண்டில் கட்டித் தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 17

ஆணைவாரி ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் வசதி அளிக்க நடவடிக்கை

வினா எண் 16807—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஆணைவாரி ஆதிதிரா விடர் பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய் யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆணைவாரி ஆதிதிராவிட மக்களுக்கு குடிநீர் வசதி செய்யும் பொருட்டு, மணக்காடு காலனியில் தற்போது கட்டப்பட்டு வரும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து ஒரு பொதுக் குழாய் மேடை அமைக்கப்பட்டு 9/93 இறுதிக்குள் இக்குடிநீர் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

67—

பரமக்குடி நகராட்சியில் கழிவு நீரை அகற்ற நடவடிக்கை

வினா எண் 16828—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சி பேருந்து நிலையத்தின் எதிரில் வேந் தோணி கால்வாய் புறம்போக்கு நிலம் உபயோகப் படுத்தப் படாமல் இருப்பதால் நகராட்சியின் கழிவு நீரை அகற்றுவதற்கு நகராட்சியிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பரமக்குடி நகர் பேருந்து நிலையத்தின் எதிரில் மதுரை மண்டபம் தேசீய நெடுஞ்சாலையும் கீழப் பள்ளிவாசல் தெருவும் சந்திக்கும் மேற்கு எல்லையிலிருந்து கிழக்கே சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளி வழியாக நீர் ஏற்றும் நிலையத்திற்கு பவந் தோணி கால்வாய் மூலம் கழிவு நீரைக்கொண்டு செல்வதற்காக நகராட்சியால் திட்டமிடப்பட்டு அதற்காக பொதுப் பணித் துறையின் அனுமதி பெற வேண்டி கால்வாய்ப் பகுதியைக் குறிக் கும் நில அளவை வரைபடம் மற்றும் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

68—

பூம்புகார் தொகுதியில் ஈமச்சடங்குக்கு அரசு உதவிப் பணம் வழங்குதல்.

வினா எண் 16890—திரு. எம். பூராசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் சில ஊராட்சிகளில் ஆதிதிரா விடர் இறப்புக்கு ஈமச்சடங்குக்கு அரசு உதவிப்பணம் வழங்க ஊராட்சியில் நிதி நிலைமை இல்லாததால் காலதாமதமாக வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதியைச் சார்ந்த ஊராட்சிகள் மற் றும் இதர அனைத்து ஊராட்சிகளிலும் இருந்துவரும் இறப்பு நிதி விண்ணப்பத்திற்கு உரிய தொகை தாமதமில்லாமல் அன்றன்றே வழங்கப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

TRUTH ALONE TRIUMPHS

69—

சம்மன் காட்டும் துறையில் பாலம் கட்ட திட்டம்.

வினா எண் 17305—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம்-காட்டூர் சாலையை இணைப்பதற்கு சம்மன்காட்டும் துறையில் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நிதிப் பற்றாக்குறை காரணமாக சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

70—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தில்லைவிடங்கன் கிராமத்திற்கு மயான கொட்டகை ஏற்படுத்துதல்.

வினா எண் 17385—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் தில்லைவிடங்கன் கிராமத்தில் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத்தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ)

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தில்லைவிடங்கன் கிராமத்தில் மயானத்திற்கு தகரக் கொட்டகை 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 7,500 மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது.

1994 மார்ச் 17]

71—

வள்ளுவன் தோப்பிற்கு அடிப்படை வசதி.

வினா எண் 17389—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், வாழ்மங்கலம் பஞ்சாயத்து, வள்ளுவன் தோப்பு பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வள்ளுவன் தோப்பு பகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், அகரக்கொந்தகை ஊராட்சியில் உள்ளது. இதன் மக்கள் தொகை. 757. இக்குடியிருப்பிற்கு மின்வசதி வாழ்மங்கலத்திலிருந்து செய்யப்படல் வேண்டும். இதற்கு சுமார் 25 மின் கம்பங்கள் தேவைப்படும். ஊராட்சி நிதி நிலையைப் பொறுத்து இப்பணி துவக்கப்படவுள்ளது. இந்த குடியிருப்பிற்கு பிரதான சாலையிலிருந்து சுமார் 800 மீட்டர் நீளமுடைய சாலையை அகலப்படுத்தி செப்பனிட தோராயமாக ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம்) தேவைப்படும். இப்பணி 1994-95 ஆம் ஆண்டு 80 சதவீதம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டப் பணியில் மேற்கொள்ளப்படவுள்ளது. இக்குடியிருப்பிற்கு குடிதண்ணீர் வசதிக்காக ஒரு கைப்பம்பு அமைத்துக் கொடுக்க நடவடிக்கையில் உள்ளது. இந்தக் குடியிருப்பில் உள்ள வள்ளுவன்குளத்தை ஆழப்படுத்தி படித்துறை கட்ட சுமார் ரூ. 15,000 (ரூபாய் பதினைந்தாயிரம்) தேவைப்படும். இதனை 1993-94 ஆம் ஆண்டு 80 சதவீதம் ஜவஹர் வேலைவாய்ப்புத்திட்டத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த குடியிருப்பிற்கு அருகாமையிலுள்ள இடுகாடு சாலை சுமார் 100 மீட்டர் நீளம் இருக்கும். இதனை சீர் செய்திட தோராயமாக ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) தேவைப்படும். இதனை 1993—94 ஆம் ஆண்டில் 80 சதவீதம் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டத்தில்நிதிநிலைக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட இருக்கிறது.

72—

விநாயகன் புதூருக்கு புதிய குடிநீர்க் குழாய் அமைத்தல்.

வினா எண் 19359—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வள்ளிபுரம் கிராமம், விநாயகன் புதூர் மக்களுக்கு புதிய குடிநீர்க் குழாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஏற்கனவே செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றியத் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து ஊராட்சி ஒன்றியம் மூலம் குடிநீர் வசதி செய்யலாம்.

73—

ரோசல்பட்டி கிராம பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக உயர்த்துதல்.

வினா எண் 19364—திரு. சஞ்சய் ராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் பஞ்சாயத்து யூனியன் ரோசல்பட்டி கிராம பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) காமராசர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ரோசல்பட்டி ஊராட்சியினை பேரூராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அந்த ஊராட்சியின் 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 8,362 ஆக இருந்தபோதிலும் அவ்வூராட்சியின் கடந்த மூன்றாண்டுகளின் சராசரி வருமானம் ரூ. 1,42,723 ஆக உள்ளது. பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டால் புதிய பணியிடங்கள் ஏற்படுத்துவதானால் ஏற்படும் சராசரி ஆண்டு செலவினம் மட்டுமே ரூ. 1,96,000 ஆகக் கூடும். எனவே, நிதி நிலை தற்சார்பின்மை காரணமாக இவ்வூராட்சியினை பேரூராட்சியாக தரம் உயர்த்துவதற்கு சாத்தியமில்லை.

(ஆ) எழாது.

1994 மார்ச் 17]

74—

காளிங்கராயன் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம்.

வினா எண் 19486—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத் சலவை தொழிலாளிகள் சலவை செய்யும் இடத்தில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், பாசூர் பேரூராட்சிப் பகுதியில் சலவைத் தொழிலாளர்கள் சலவைத் துணிகளை துவைக்கும் காளிங்கராயன் வாய்க்கால் பாசன நீரில் தற்போது சிறிதளவு சாக்கடை கழிவு நீர் கலந்து வருகிறது. சலவை செய்யும் இடத்தில் கழிவு நீர் கலக்காமல் இருக்க 20 அடி நீளத்திற்கு சிமெண்ட் குழாய் அமைத்து சரி செய்யலாம். காளிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் அதிகமாகச் செல்லுவதால் தண்ணீர் வற்றியவுடன் இப்பணி மேற்கொள்ளப்படும்.

75—

வெள்ளோட்டாம்பரப்பு கிராமத்தில் குடிநீர் வசதி.

வினா எண் 19497—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டாம்பரப்பு கிராமம், குடிநீர்ப் பிரச்சினையை நீக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இக்கிராமத்திற்கு காவிரி நீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சிக்கான குடிநீர் திட்ட மதிப்பீட்டிற்கு ரூ. 98.32 இலட்சங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகஒப்புதல் ஆகஸ்டு 1992-ல் வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்ட மதிப்பீட்டிற்கான விரிவாக்க மதிப்பீடுகள் தயாரித்து தொழில் நுட்ப ஒப்புதல்கள் பெற்று அதன்பின் நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் துவங்கப்படும்.

(ஆ) காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்து குடிநீர் வசதி செய்யவே வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் திட்டப்பட்டுள்ளது.

76—

கொடுமுடி இடுகாட்டிற்கு மின்சார சாதனம் அமைத்தல்.

வினா எண் 19518—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி பேரூராட்சிக்குச் சொந்தமான இடுகாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மின் சார சாதனங்கள் உள்ள இடுகாடு அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், கொடுமுடி பேரூராட்சிப் பகுதி காவிரி ஆற்றங்கரையை ஒட்டி அமைந்துள்ளது கொடுமுடி பேரூராட்சிக்குச் சொந்தமான இடுகாட்டில் அப்பகுதி மக்கள் இடுகாடாகவும், சுடுகாடாகவும் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் காவிரி ஆற்றங்கரையையும் இடுகாடாகப் பயன்படுத்தி வருகின்றனர். கொடுமுடி பேரூராட்சி நிதி வசதியற்ற பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் கிடைக்கும் ஆண்டு வருவாயின் மூலம் மின் கட்டணம், தெருவிளக்குகளுக்கான உபகரணங்கள் வாங்கவும், குடிநீர் வசதி செய்யவும் போன்ற செலவினத்திற்கு மட்டுமே செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மின்சாதனம் உள்ள இடுகாடு அமைக்க பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதியில்லை. மேலும் மின்சார சுடுகாடு அமைக்கக்கூடிய அளவுக்கு இது பெரிய நகரமல்ல.

1994 மார்ச் 17]

77—

பாசூர் சாஸ்திரி நகருக்கு மின்விளக்கு வசதி.

வினா எண் 19791—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் சாஸ்திரி நகரில் மின் விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், பாசூர் பேரூராட்சிக்குட்பட்ட சாஸ்திரி நகருக்கு 4 அடி குழல் விளக்குகள் மூன்று அமைக்கவும், மற்ற பிற பகுதிகளுக்கு 4 அடி குழல் விளக்குகள் 19-ம், மொத்தம் 22 குழல் விளக்குகள் புதியதாக அமைக்க காப்புத் தொகை ரூ. 700-யை மின்சார வாரியத்திற்கு 7-5-1993-ல் செலுத்தப்பட்டுள்ளது. புதியதாக விளக்கு அமைக்கும் இடங்களில் மின்கம்பங்கள் நடப்பட்டு மின்விளக்குகள் பொருத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

78—

மரியதாய்புரத்திற்கு தெருவிளக்கு வசதி.

வினா எண் 20704—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரம் அருந்ததியர் மக்கள் வாழும் தெருவில் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மரியதாய்புரம் கிராமத்தில் உள்ள அருந்ததியர் மக்கள் வாழும் தெருவில் ஏற்கனவே ஒரு தெரு விளக்கு நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றது. மேலும், புதிய தெருவிளக்கு ஒன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

79—

மருதாத்தாள்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு மின்விளக்கு வசதி

வினா எண் 20725—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மருதாத்தாள்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு புதிய மின்கம்பங்கள் நட்டு மின் விளக்குகளை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருதாத்தாள்புரம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியை அடுத்துள்ள அனைத்து தெருக்களிலும் தற்போது மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதிக்கு 1991-92 ஆம் வருட சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் புதிய தெரு விளக்கு ஒன்று அமைப்பதற்குரிய தொகையை மின் துறைக்கு 4—3—1993ல் செலுத்தப்பட்டு மேல் நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

80—

அரவக்குறிச்சியில் குடிநீர் வடிகால் வாரிய கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 20890—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் குடிநீர் வடிகால் வாரிய கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

அரவக்குறிச்சியில் குடிநீர் வடிகால் வாரிய கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்க செயற்குறிப்பு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

1994 மார்ச் 17]

81-—

செங்கம் புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட பணி துவங்குதல்.

வினா எண் 20894——டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா——

(அ) செங்கம் நகரில் புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட பணி துவங்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை——

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், செங்கம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலைய முதல் கட்டப் பணி ரூ. 30.00 லட்சம் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே செங்கம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்டப் பணியினை தற்போது துவங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

82——

திண்டுக்கல்—பழனி நெடுஞ்சாலையில் சாலையோர விளக்கு பராமரித்தல்.

வினா எண் 21254—திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ரெட்டியார்சத்திரம் கிராமத்தில் முக்கியமான திண்டுக்கல்-பழனி நெடுஞ்சாலையில் சாலையோர விளக்குகளைப் பராமரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திண்டுக்கல்—பழனி சாலையில் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் மின்விளக்குகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி மின்விளக்கு

களுக்கு அவ்வப்போது பழுதுகள் பார்க்கப்பட்டும் புதிய மின் உபகரணங்கள் பொருத்தியும் மிக நல்ல முறையில் பராமரித்து வருவதுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளினால் மின் கட்டணங்கள் தமிழ்நாடு மின்சார இலாகாவிற்கு நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

83—

மக்கள் தொகை அதிகம் உள்ள ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 21283— திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மக்கள் தொகை அதிகமாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மக்கள் தொகை அதிகமெனும் அடிப்படையில் மட்டும் ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை.

84—

மாந்தை கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 21350— திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மாந்தை ஊராட்சி கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடமும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

மாந்தை கிராமத்தில் வானொலி மன்றக் கட்டிடம் உள்ளது. கட்டிடத்திற்கு மின் இணைப்புப் பெற்று வானொலிப் பெட்டி அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

1994 மார்ச் 17]

85—

இராமாபுரம் கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 21351— திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மாந்தை ஊராட்சி இராமாபுரம் கிராமத்திற்கு வானொலி மன்றக் கட்டிடமும் வானொலிப் பெட்டியும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இவ்வூராட்சியின் நிதி நிலை வளமுடையதாக இல்லாமையால் வானொலி மன்றக் கட்டிடமும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர தற்போது இயலவில்லை.

86—

கீழமாந்தைக்கு வானொலி மன்றக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 21352— திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மாந்தை ஊராட்சி, கீழமாந்தை மாதாகோயில் தெருவிற்கு வானொலி மன்றக் கட்டிடமும், வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இவ்வூராட்சியின் நிதி நிலை வளமுடையதாக இல்லாமையால் வானொலி மன்றக் கட்டிடமும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர தற்போது இயலவில்லை.

[1994 மார்ச் 17

87—

கருப்பூர் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 21356—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை தாலுகா 136. கருப்பூர் கிராமத்திற்கு தெரு மின்விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை தாலுக்கா, குத்தாலம் ஒன்றியம், கருப்பூர் கிராமத்தில் தற்பொழுது 90 தெரு விளக்குகள் இருக்கின்றன. அதில் 80 தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

88—

மயிலாடுதுறை தாலுகா, திருக்குளம்பியத்தில் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 21357—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை தாலுகா, திருக்குளம்பியம் கிராம துவக்கப் பள்ளிக்கு எதிர்ப்புற தெருவிற்கு மின் கம்பங்கள் அமைத்து தெரு மின் விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நாகப்பட்டினம்—காயிதே-மில்லத் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், திருக்குளம்பியம் கிராம துவக்கப் பள்ளிக்கு எதிர்ப்புறம் உள்ள தெருவிற்கு மின்கம்பம் அமைத்து தெரு விளக்கும் போட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

1994 மார்ச் 17]

89—

பூதவராயன்பேட்டைக்கு சாலை வசதி.

வினா எண் 7807—செல்வி .கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி பூதவராயன்பேட்டை ஆதிதிராவிட மக்கள் குடியிருப்புக்கு சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பூதவராயன்பேட்டை காலனி சாலை ஒ.என்.ஜி.சி. திட்டத்தில் ஜல்லி சாலை போடப்பட்டு தற்போது நல்ல முறையில் உள்ளது.

90—

ஜெயங்கொண்டான் காலனிக்கு மனைப்பட்டா வழங்குதல்,

வினா எண் 12883—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஜெயங்கொண்டான் காலனி மக்களுக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு.எம்.ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஜெயங்கொண்டான் காலனியில் கீழ்க்கண்டவாறு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன :

வருடம்.	ஆர்ஜித பரப்பு ஏக்கர்.	மனைப்பட்டாக்கள் கொடுத்தது.
(1)	(2)	(3)
1960 ..	2.53	50
1980 ..	1.92	30
1982 ..	2.78	38
		118

தற்போது மேற்படி காலனியில் மனைப் பட்டாக்கள் வழங்குவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

91—

இராதாவிளாகம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 15453—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள இராதாவிளாகம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள இராதாவிளாகம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக சிதம்பரம் (ஆதிதிராவிடர் நலம்), தனிவட்டாட்சியரின் தீர்ப்பு எண் 11-92-93-ன்படி நிலம் கையகப்படுத்தப்பட்டு 60 வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்கு மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1994 மார்ச் 17]

92—

பழனியாண்டவர் பல்கலைக்கழகம் அமைக்க திட்டம்.

வினா எண் 157—திரு. ஏ. டி. செல்லசாமி: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தான நிதி மூலம் இயங்கும் கல்லூரிகளை ஒருங்கிணைத்து திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் போன்று ''பழனியாண்டவர் பல்கலைக்கழகம்'' அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

93—

இராமலிங்கசுவாமி மடத்தை திருப்பணி செய்ய நடவடிக்கை.

வினா எண் 15962—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கோவிந்தகுடி அருள்மிகு இராமலிங்கசுவாமி மடத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ;

இம்மடத்தின் திருப்பணி மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 50,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

[1994 மார்ச் 17

94—

திரௌபதியம்மன் ஆலயத்தை திருப்பணி செய்தல்.

வினா எண் 15963—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பெற்று 18—5—1992-ல் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. எனவே தற்போது மேற்படி திருக்கோயில் திருப்பணி செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

95—

அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் ஆண்டு வருமானம்.

வினா எண் 20598—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) வருமான உயர்வுக்கேற்ப அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் பணியிடத்தை உதவி ஆணையர் அல்லது துணை ஆணையர் நிலைக்கு உயர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் :

(அ) பசலி 1398 ரூ. 21,53,236.
பசலி 1399 ரூ. 39,42,590
பசலி 1400 ரூ. 48,92,330

(ஆ) இல்லை.

1994 மார்ச் 17]

96—

பழனி அறநிலைய ஆட்சித்துறை தணிக்கை அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர் நியமனம்.

வினா எண் 20622—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியிலுள்ள இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மண்டலத் தணிக்கை அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

பழனியிலுள்ள இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மண்டலத் தணிக்கை அதிகாரி அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யத் தேவை ஏதும் தற்போது எழவில்லை.

97—

அருள்மிகு மகுடேஸ்வரர் நிதியிலிருந்து பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய திட்டம்.

வினா எண் 21739—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில் நிதியிலிருந்து பக்தர்களுக்கென செலவினங்களுக்காக பேரூராட்சிக்கு நிதி ஆதாரங்கள் ஒதுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் :

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்கு அசையா சொத்துக்கள் ஏதும் இல்லை. உண்டியல் மற்றும் சீட்டு விற்பனை மூலம் வரும் வருமானம் திருக்கோயில் நிர்வாகச் செலவுக்கே போதுமானதாக உள்ளது. எனவே, பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது.

[1994 மார்ச் 17

98—

சென்னையில் நட்சத்திர ஓட்டல் கட்டுவதற்கு பரிசீலனை.

வினா எண் 8288—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நட்சத்திர ஹோட்டல் கட்டும் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன?

(ஆ) இத்திட்டம் பற்றி இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் ஆலோசனை பெறப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சென்னையில் நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தோடு கூட்டுத்திட்டமாக நடத்துவதற்கு பரிசீலிக்கப்பட்டு, இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளும் வகையில் இல்லாததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

மேலும், சென்னையில் இடம் தேர்வு செய்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆர்வமுள்ள சில தனியார் நிறுவனத்தோடு கூட்டுத் தொழிலாக பிராட்வேயில் உள்ள பழைய சட்டமன்ற விடுதி இடத்தில் நட்சத்திர ஓட்டல் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

99—

மதுரை—இராமேஸ்வரம் செல்லும் வழியில் நட்சத்திர ஓட்டல் கட்ட திட்டம்.

வினா எண் 17341—டாக்டர் எஸ். சுந்தர்ராஜ்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில் நட்சத்திர ஓட்டல் கட்ட அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 மார்ச் 17]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் ;

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

100—

வால்பாறை நகரியத்தில் தனியார் மூலம் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஊக்கம் அளிக்கத் திட்டம்.

வினா எண் 20123—திரு. அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக ஆளியார் அணை மற்றும் வால்பாறை நகரியத்தில் தனியார் மூலம் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு ஊக்கம் அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எவ்வாறு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) வால்பாறைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக வால்பாறை நகரியத்தில், தனியார் மூலம் தங்கும்விடுதி கட்டுவதற்கு அரசு ஊக்கம் அளிக்கும்.

(ஆ) மேலும், இதுபோன்ற பின்தங்கிய பகுதிகளில் ஓட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுவதற்கு நிதியுதவிக்கு பரிந்துரை செய்யுமாறு விண்ணப்பங்கள் அரசுக்கு தனியாரிடமிருந்து வருகின்றபொழுது, அவை நிதியுதவி பெறுகிற வகையில் அரசு பரிந்துரைக்கும். மேலும் புதிதாக கட்டப்படும் ஓட்டல்களுக்கு, அரசு மானியமும், வரிவிலக்கு, மின்சாரக் கட்டணச் சலுகை போன்ற சலுகைகளை சுற்றுலா மேம்பாட்டிற்காக அரசு செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து ஏற்கனவே எழுதியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியாகிவிட்டது. அனுமதி மறுத்ததை நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும். (குறுக்கீடு) இல்லை. அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். நான் உங்களுக்கு எழுதியிருப்பதை என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும்; உட்காருங்கள் (குறுக்கீடு) இப்போது எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. திரு. விசுவநாதன், உட்காருங்கள். மாற்றுத் தலைவர்கள் பட்டியல் (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது முறையாக இல்லையென்று சொன்னால் நான் அனுமதி மறுக்கிற அதிகாரத்தை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்பதெல்லாம் முறையில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், நான் உங்களுக்கும் அனுமதி மறுத்து கடிதம் எழுதியிருக்கிறேன். உங்களுக்கு நான் அனுமதி மறுத்து எழுதியதற்குப் பிறகு இதை எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியிருக்கிறேன். உட்காருங்கள், (குறுக்கீடுகள்).

5. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)ன்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 7-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன் :

திரு. வி. கே. சின்னசாமி

திரு. கே. முனிவெங்கடப்பன்

செல்வி எல். சுலோசனா

திருமதி ஜீனத் சர்புதீன்

திரு. வே. தம்புசாமி

திரு. எஸ். வி. சண்முகம்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். மறுத்ததைப் பற்றி என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட வேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி வழங்கியிருக்கிறேன். இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவையில் அவர்கள் வைப்பார்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதையெல்லாம் பொது விவாதத்திலே பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜீரோ ஹவரில் நான் அனுமதித்தால் தான் பேச முடியும். நான் அனுமதிக்கவில்லை ன்கிறபொழுது அதை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதிக்காதபோது எழுபப முடியாது. நான் அனுமதிக்கவில்லை. பொது விவாதம் நடைபெற

அ ** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கற்றப்பெற்றது.

இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை. இப்போது இதைப் போன்றவற்றை அனுமதிப்பது கிடையாது. (குறுக்கீடுகள்) பொது விவாதத்தில் நீங்கள் பேசுகின்றபோது பேசுவதற்கு உரிய வாய்ப்பை எடுத்துக்கொண்டு இதையெல்லாம் பேசலாம். எது முக்கியம் என்று கருதுகிறீர்களோ அதைப் பேசுவதற்காகத்தான் பொது விவாதத்தில் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) அழகிரி, உருட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி மறுத்திருக்கிறேன், உட்காருங்கள், (குறுக்கீடு) அழகிரி உட்கார வேண்டும். (குறுக்கீடு) என் அனுமதி இல்லாமல் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடுகள்) விசுவநாதன் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை. விசுவநாதன் உட்கார வேண்டும். (குறுக்கீடு) விசுவநாதன் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) விசுவநாதன்தான் மற்ற உறுப்பினர்களோடு மோதுகிற சூழ்நிலைக்குச் செல்கிறார். (குறுக்கீடுகள்) ஞானசேகரன் இருப்பிடத்தைவிட்டு நகர்ந்து இன்னொரு உறுப்பினரோடு மோதச் செல்வது முறையல்ல, நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) ஞானசேகரன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு எழுந்து சென்று இன்னொரு உறுப்பினரோடு மோதுவது கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடுகள்) ஞானசேகரன் இன்னொரு உறுப்பினர், (குறுக்கீடுகள்) தன் இடத்தை விட்டு எழுந்து சென்று பேசுகின்ற காங்கிரஸ் உறுப்பினர் (குறுக்கீடுகள்) காங்கிரஸ் உறுப்பினர்தான் இருப்பிடத்தை விட்டு எழுந்து அடுத்த இடத்திற்குச் சென்றிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை. ஞானசேகரன் இருப்பிடத்தைவிட்டு எழுந்து சென்று..... (குறுக்கீடுகள்) தங்கள் இருப்பிடத்தை விட்டு எழுந்து சென்ற பாலூர் சம்பத், ஞானசேகரன் இருவரும் அவையில் மன்னிப்புக் கேட்டால் அனுமதிக்க முடியும். (குறுக்கீடுகள்) வேறு யாரும் ..(குறுக்கீடுகள்) இருவரும் மன்னிப்பு கேட்க வேண்டும். ஏன் உங்கள் இருப்பிடத்தைவிட்டு இன்னொரு இருப்பிடத்திற்கு சென்றீர்கள் ? (குறுக்கீடுகள்) சம்பத், ஞானசேகரன் இருவரும்.. .. (குறுக்கீடுகள்) ஞானசேகரன், பாலூர் சம்பத் இருவரும் தங்கள் இருப்பிடத்தைவிட்டு எழுந்து சென்றதால் அவையைவிட்டு, வெளியேற உத்தரவிடுகிறேன். இருவரும் அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) வேறு எல்லோரும் அவரவர் இருப்பிடத்தில் இருக்கிறார்கள். இருப்பிடத்தைவிட்டு எழுந்து சென்ற.. (குறுக்கீடுகள்) வேறு யாரும் செல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாரும் செல்லவில்லை. இருவரும்

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

அவையைவிட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். பாலூர் சம்பத், ஞானசேகரன் இருவரும் அவையைவிட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) காவலர்களுக்கு ஞானசேகரன் சம்பத் இருவரையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) தங்கள் இருப்பிடத்தைவிட்டு எழுந்துசென்று இன்னொரு உறுப்பினரை தாக்கச் செல்வதைக் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) கண்டிப்பாக அனுமதிக்க முடியாது. இங்கேயிருந்து அங்கே எழுந்து சென்று மற்ற உறுப்பினர்களைத் தாக்க முயற்சிப்பதை இந்த அவையில் அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடுகள்) காவலர்களை, சம்பத்தையும், ஞானசேகரனையும் அப்புறப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஞானசேகரன் நடந்துகொள்வது முறையற்றது, அநாகரீகமானது. காவலர்களிடத்தில் நடந்துகொள்கிற முறையா இது ? (குறுக்கீடுகள்) காவலர்களிடத்தில் இப்படி நடந்துகொள்கிற முறையற்ற பேர்வழிகளை ஆதரிக்காதீர்கள். முறையற்றசெயல். (குறுக்கீடுகள்)

(திரு. சி. ஞானசேகரன் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

பாலூர் சம்பத் அவர்களையும் அவையைவிட்டு வெளியேற்ற காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். தங்களுடைய இருக்கையை விட்டு எழுந்து சென்று கடைசி இருக்கையிலுள்ள உறுப்பினர்களை மிரட்டுவதை இந்த அவையிலே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு ஏதோ அஞ்சி நடக்க வேண்டுமென்று கருதுவீர்களேயானால் அது இந்த அவையிலே நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இந்த அவையில் இதைப் போன்ற(குறுக்கீடுகள்) சம்பத்தை அப்புறப்படுத்தவும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11-15

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் கவனிக்க வேண்டும். பேசுவதற்கு முன்னர் தங்களுடைய கட்சி உறுப்பினர்கள் காவலர்களோடு மோதாமல் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

(திரு. ஏ. சம்பத் பேரவைக் காவலர்களால் அவையினின்று வெளியேற்றப்பட்டார்.)

வெளியேற்றப்படுகிற நேரத்திலும் ஒரு உறுப்பினரைப் பார்த்து கை நீட்டுகிறார். அந்த சம்பத் என்கிற உறுப்பினர் (குறுக்கீடுகள்) முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை நிகழ்ச்சிகள் (குறுக்கீடுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பலராமன், முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, திரு. தம்புசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர்களில் இந்த முறையற்ற போக்கை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து திரு. பழனிசாமி, திரு. தம்புசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். அதாவது இரண்டு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையை விட்டுப் பின வரிசைக்கு எழுந்து சென்று, ஓடி, அங்கே இருக்கிற உறுப்பினர்களைத் தாக்க முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) வேறு எந்த உறுப்பினரும் தங்கள் இருக்கையை விட்டுச் செல்லவில்லை. (குறுக்கீடுகள்) வேறு எந்த உறுப்பினரும் தங்கள் இருக்கையை விட்டுச் செல்லவில்லை. அவரவர்கள் இருக்கையிலேதான் இருந்தார்கள். (குறுக்கீடுகள்) நீங்களாகச் சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை. சொல்கிறபோது (குறுக்கீடுகள்) இல்லை. நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கையைவிட்டு எவரும் எழுந்து செல்லவில்லை. காங்கிரஸ் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் மட்டும்தான், ஏதோ மிரட்டுகிற தொனியில் செல்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இதற்கு மேல் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. இதை நான் அனுமதிக்க முடியாது. பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இந்தமாதிரி எல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சிக்காரர்களை நீங்கள் (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை நிகழ்ச்சிகள் அமைதியாக சுமூகமாக நடைபெறவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இன்றையதினம் நேரம் இல்லாத நேரத்தில் சில உறுப்பினர்கள் சில பிரச்சினைகளை எழுப்ப எழுந்தார்கள்.** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் திசை திருப்ப வேண்டாம். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை திசை திருப்ப வேண்டாம் (குறுக்கீடுகள்) இல்லை. எழுப்பிய உறுப்பினர்கள் யாரும் தாக்கப்படவில்லை. ஆனால்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

உங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள்தான் (குறுக்கீடுகள்) திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் கண்ணாரப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான கண்ணாரப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது (குறுக்கீடுகள்) இல்லை. அதற்கடுத்து அந்தப் பிரச்சினை வரவேண்டும். (குறுக்கீடுகள்) அதற்கேகூட நீங்கள் என்னை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அதாவது இரண்டு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையை விட்டு எழுந்து சென்று தாக்க முற்படுவதை எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) அதற்காக எதிர்க்கட்சித் தலைவர்** என்று சொல்லி திசை திருபபுவதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதை அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இதை அனுமதிக்க முடியாது. திசை திருப்புவதை அனுமதிக்க முடியாது. நான் ஒன்றுக்கு இரண்டு முறை இதைத் தெரிவித்து அவர் வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டேன். அதற்கும் அவர்கள் முடியாது என்று உரத்த குரலில் குரல் எழுப்புகிறபோது அப்போதாவது எதிர்க்கட்சித் தலைவர் எனக்குத் துணையாக வந்திருக்கவேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை. தங்கள் இருக்கையை விட்டு எழுந்துசென்று இங்கே தாக்குகிற முயற்சியில் இறங்கியதற்குப் பிறகு இதை அனுமதிக்க முடியாது. (குறுககீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்தத் தவறான வாதம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-20

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ தன்னுடைய அறிக்கையை பேரவைக்கு இப்போது வைப்பார்கள். (குறுக்கீடுகள்). நீங்கள் திசை திருப்புகிறபோது..(குறுக்கீடுகள்) நான் இரண்டு ஆப்ஷன்கள் உங்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் வருத்தம் தெரிவிக்கவேண்டுமென்று (குறுக்கீடுகள்) இல்லை. அதற்குத்தான் நீங்கள் இப்போது சொல்லலாமே தவிர (குறுக்கீடுகள்) நீங்கள் திசை திருப்புகிறபோது நான் அதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் திசை திருப்புகிறீர்கள். இந்த வாய்ப்பைப பயன்படுத்தி பிரச்சினையைத் திசை திருப்புவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. இதை நான் அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் இவ்வளவு சொல்லியும் ஒரு உறுப்பினரைத் தாக்க ஒரு உறுபபினர் முற்படுகிறார். அதை நான் கண்டித்து ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடவடிக்கை எடுக்கிறபோது (குறுக்கீடுகள்) யாரையும் யாரும் தாக்கிக்கொள்ளலாம் என்றால் இந்தப் பேரவை ஜனநாயக முறைப்படி நடைபெறவே முடியாது. ஒரு உறுப்பினரை இன்னொரு உறுப்பினர் தாக்கிக்கொள்ளலாம் என்கிற நிலைமையை அனுமதிப்போமேயானால் ஜனநாயக ரீதியில் இந்தப் பேரவையை நடத்தவே முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையை இப்போது பேரவைக்கு வைப்பார்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இந்தப் பிரச்சினையை முடித்துவிட்டேன். இந்தப் பிரச்சினையை முடித்துவிட்டு நான இப்போது இன்னொரு பிரச்சினைக்குப் போய் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் நாளிலேயே (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இதிலே விவாதமே முதல் நாளில் யார் விவகாரத்தை ஆரம்பிக்கிறார்கள். முதல் நாளிலேயே யார் விவகாரத்தை ஆரம்பிக்கிறார்கள்? (குறுக்கீடுகள்) இல்லை. ஒரு உறுப்பினரை முதல் நாளிலோ கடைசி நாளிலோ தாக்க முற்படுகிறபோது (குறுக்கீடுகள்) இல்லை. அதுதான் முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை வைப்பார்கள். அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வார்கள்? அவர்கள் அந்த ஒரு முக்கியமான அறிவிப்பை, நாட்டிற்கு சொல்லவேண்டிய அறிவிப்பை அறிவிக்கவேண்டும் என்று நான் அறிவித்ததற்குப் பிறகும் அவர்களைத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவர்களைத் தடுத்து இத்தனை பேர் சத்தம் போட்டுக்கொண்டு இருக்கும்போது அவர்களாலே அந்த அறிக்கையை எப்படி வைக்கமுடியும்? (குறுக்கீடுகள்) இல்லை. இது முறையில்லை. (குறுக்கீடுகள்) நான கண்ணாலே பார்த்தேன், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. அப்போது பேரவைத் தலைவருக்கு மேலே நீங்களா? (குறுக்கீடுகள்) இல்லை. நான் எல்லா உறுப்பினர்களும் அவரவர்கள் இருக்கைகளில் அமர்ந்ததை நான் கண்ணாரப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. திரு. பொன்னுசாமி, இது முறையில்லை உட்காருங்கள். இது முறையில்லை. இது அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும். எப்படியோ ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டு நீங்கள் ஆரம்பிப்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) இல்லை. முதல் நாளே அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கவேண்டும் என்று இரண்டு உறுப்பினர்களை மற்ற உறுப்பினர்களைத் தாக்குமாறு ஏவிவிடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை. அடிக்கச் சென்றது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஞானசேகரனும், சம்பத்தும். (குறுக்கீடுகள்) நான் கண்ணாரப் பார்த்து

ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர்கள் எல்லாம் உட்காரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்..(குறுக்கீடுகள்) உட்காருங்கள், விசுவநாதன் நீங்கள் எந்தப் பிரச்சினையையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. எனவே நீங்கள் நின்றுகொண்டு இருப்பதே முறையற்ற செயல், உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் அவரிடத்தில் ஒன்றும் பேசவேண்டாம். மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல் குழப்பம்).

முற்பகல் 11-25

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

6 விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் மசூதி அகற்றப்பட்டது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 110-ன் கீழ் அறிக்கையை வைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டை பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டு விட்டதாக செய்தித் தாள்களில் வெளியான செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதன் முழு விவரத்தை தெரிவிப்பதோடு, அது தொடர்பாக ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

"சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு (குறுக்கீடுகள்) குழாய்கள் மூலமாக குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ் பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகளிலுள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்) குரோம்பேட்டை பகுதியில் ஜி.எஸ்.டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந்துள்ள இடமும் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிக்க வேண்டிய பகுதியில் வருவதை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து, பின்பு இந்தக் கோயிலையும் அகற்ற மாவட்ட நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இப்பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் சமீப காலமாக ஒன்றன்பின் ஒன்றாக அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் இந்த உறுப்பினர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

4 தகவல் கோரல்.—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை. பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க முனைந்த இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து நான் வெளியேற்றி இருக்கிறேன். எல்லா வகையிலும் பாதுகாப்பு உண்டு. (குறுக்கீடுகள்) இல்லை. இந்த அறிக்கை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லலாம். நான் முதலமைச்சர் அவர்களை அறிக்கை வைக்குமாறு . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்லி விடுகிறேன். உட்காருங்கள், நான் பேசிய பிறகு சொல்லலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் பேரவைக்கு வைக்குமாறு நான்

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் அறிக்கையை வைப்பதற்கு எழுகிற சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் எழுந்து பிரச்சினையை எழுப்புவதும், தங்கள் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று ஒரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதும் நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றங்களா இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். எத்தகைய சூழ்நிலையிலும், எந்த உறுப்பினருக்கும், எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. அப்படி ஏதேனும் ஏற்படுவதாக இருந்தால் அவர்கள் என்னிடத்திலே சொன்னால் அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். எந்த அசம்பாவிதமும் அந்த இடத்திலே நடைபெறவில்லை. இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுந்து ஓடி அடிக்கச் சென்றது தவிர வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபோது நேராக எங்களையோ அல்லது உங்களையோதான் பார்த்துக் கொள்கின்றார்களேயொழிய பின்னாலே நடைபெறுகிறதை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்திருக்க முடியாது. ஒரு நிகழ்ச்சியை அவர்கள் கற்பனையாக கூறுகிறார்களேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபொழுது, நேரடியாக எங்களையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது உங்களையேதான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்னாலே, நடக்காத ஒன்றை பார்த்ததாக— அவர்களுக்கு கண் முன்னாலே மட்டும்தான் இருக்கிறதேயொழிய பின்னாலே கண் இல்லை. பின்னாலே கண் இருந்தால் இரண்டு பக்கமும் பார்க்க முடியும். அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே பார்த்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நீங்கள், நிற்கிற 3 உறுப்பினர்களும். இந்த திசையை நோக்கி பார்த்துக் கொண்டு இருந்தவர்கள், திரு. திருநாவுக்கரசு அந்த நேரத்திலேயே இல்லை.

(குறுக்கீடுகள்) அப்படி இருக்கிறபோது, நீங்கள் எழுந்து நின்றுகொண்டு ஒரு பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிப்பது சரியல்ல. உங்கள் நான்கு பேர்களைவிட, கண்ணுக்கு நேரே நான் பார்த்துக் கொண்டிருந்தவன். திரு. விசுவநாதன் எழுந்தவுடன், நீங்கள் எந்தப் பிரச்சினையும் கொடுக்கவில்லை, உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு, அவர் திட்டமிட்டு ஏதோ சில குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அவர் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த இடத்தில் அவரவர்கள் இருக்கையில் இருந்துதான் எழுந்து நின்று கொண்டிருந்தார்கள். எவரும் தங்கள் இருக்கையை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் பார்த்ததைவிட நீங்கள் அதிகமாகப் பார்க்க முடியாது. அந்த நேரத்தில் ஞானசேகரன் என்ற ஓர் உறுப்பினர் (குறுக்கீடு) திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்று, அவரைத் தாக்க முற்படுவதும் (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினரும் எழுந்து, நான் சொல்லச் சொல்ல எழுந்து ஓடுவதும் எப்படி முறையாகும்? (குறுக்கீடு) இல்லை, முதலில் நீங்கள் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் பார்த்ததை உங்களுக்குச் சொல்கிறேன். அதை முதலிலே ஒத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டுக்கொண்டு சிலர் செயல்படுவதை அனுமதிக்கக் கூடாது. (குறுக்கீடு) கேளுங்கள், அதை அனுமதிக்கக் கூடாது. அதுதான் இன்றைக்கு நடந்தது. ஞானசேகரனுக்கு என்ன வந்தது? (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். அவர்தான் ஏன் போனார் என்று கேட்கிறேன்? ஞானசேகரன் தன் இருப்பிடத்தைவிட்டு ஏன் சென்றார் என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே வினா—விடை முடிவதற்கு முன்னாலேயே சில பேர் எழுந்து நின்று, பிரச்சினைகளைக் கிளப்பியபோது, எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இன்றைக்குச் சபையை ஒழுங்காக நடத்த விடாமல் இருப்பதற்குத் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதினோம். (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) பிறகு நீங்கள் சொல்லுங்கள்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இன்னொரு உறுப்பினரை நான் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u>: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னாலேகூட, கேள்வி நேரம் முடிந்தவுடன், பல உறுப்பினர்கள் இன்றைக்கு முதல்

நாளாக இருக்கிற காரணத்தால் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கலாம். ஆனால் ஒரே கட்சியிலே, பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட நியாயம் என்று சொல்லலாம். 10 பேர்கள் எழுந்து நின்று கொண்டு, நான் கொடுத்தேன், நான் கொடுத்தேன் என்று சொல்லுகிறபோது, ஒரே ஒரு சபாநாயகர் இந்த அவைக்கு இருக்கிறார்கள், எனவே அவர் எப்படி பதில் சொல்ல முடியும்? அவை எப்படி ஒழுங்காக நடக்கும்? அதே நேரத்திலேதான் இங்கே எதிர்க் கட்சியிலே இருக்கிற, கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிற.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்காத பல உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டு கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கே இருக்கின்ற 3 பேரும் எழுந்து நின்றுகொண்டு கேட்டார்கள். எனவே ஒரு தலைவர் எப்படி நிலைமையைச் சமாளிக்க முடியும்? ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட அதில் நியாயம் இருந்திருக்க முடியும். எனவே தான் எங்களுக்கு என்ன சந்தேகம் ஏற்படுகிறதென்று சொன்னால் இதில் ஏதோ திட்டம் இருக்கிறது, நோக்கம் இருக்கிறது என்றுதான் எங்களுக்குத் தோன்றுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே நடந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில் 2 காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்ட பின்னாலேதான், அதற்கு பின்னாலேதான், கற்பனையாக ஓர் உறுப்பினரை, அடித்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னாலே...... (குறுக்கீடு) நான் முடிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுப்பதாக அறிவிப்பதற்கு முன்னாலே இதை அவர்கள் யாரும் தெரிவிக்கவில்லை. அவர்கள் இந்த இடத்தை விட்டுப் போனார்கள். அசம்பாவிதம் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகப் பேரவைத் தலைவர் உடனடியாக உத்தரவிட்டார்கள். இருக்கைக்கு வர வேண்டும், இல்லை என்றால் நடவடிக்கை என்று சொன்னார்கள். அப்போதும் வரவில்லை. எனவே, மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதும் கூச்சல் குழப்பமாக இருந்தது. வேறு வழியில்லாமல், வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்ட பின்னாலேதான் நம்மீது தவறு வந்துவிடக்கூடாது, வேறு காரணத்தை முன்னாலே செய்ததாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு இது செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை ஒழுங்காக நடப்பதற்குத் தாங்கள் ஏதாவது ஒரு வழிவகை செய்து ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையினுடைய உறுப்பினர்களைப் பாது காக்கின்ற கடமை என்பது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் விதி 110-ன்கீழ் அறிக்கையில் பாதியைப் படித்துவிட்டார்கள், அதற்குப் பின்னர், உறுப்பினர்களை அனுமதிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் , மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த மட்டில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11—35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை ஒன்றை அளிக்குமாறு தாங்கள் கேட்டுக் கொண்டீர்கள். அது பாதியிலேயே நிற்கிறது. அதை முடித்து விட்டு, அதற்குப் பிறகு வேறு பல பிரச்சினைகளை மேற் கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை விதி 87 (Vii) ''பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, வேறுவகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடைமறிக்கக் கூடாது'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேர வைக்கு வைக்கலாம் என்று நான் அனுமதி அளித்தேன், அவர்கள் அறிக்கை வைக்கவிருந்த நேரத்தில் சில பல பிரச்சினைகள்

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

ஏற்பட்டு, அதிலே நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். முடிவெடுத்து இரண்டு உறுப்பினர்களை, நடவடிக்கை எடுத்துவெளியேற்றி இருக்கிறேன், அதற்குப் பிறகு அவர்கள் அந்த அறிக்கையை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பாதியிலே நின்றுகொண்டிருக்கிறபோது, நான்கு உறுப்பினர்கள் நின்று அவர்கள் அதைப் படிக்க முடியாமல் தடுத்துக்கொண்டிருந்த சூழ்நிலையிலேதான் என்னிடத்திலே கேட்டார்கள்— என்னாலே எப்படிப் படிக்கமுடியும், இப்படி நான்கு உறுப்பினர்கள் நின்றுகொண்டிருக்கிறார்களே என்று. நான் அதனால்தான் உங்களைஉட்காரவும் சொன்னேன். எனவே அவர்கள் அதை முடிக்கட்டும். முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இதை அவர்கள் முடிக்கட்டும். இப்போது பேரவையைத் திசை திருப்பமுடியாது. அவர்கள் முடிக்கட்டும். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (பின்னர், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம் வழுதி மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)

(6) விதி110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பகுதி அகற்றப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகில் உள்ள குரோம்பேட்டைப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது, அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டுவிட்டதாகச் செய்தித்தாள்களில் வெளியான செய்தி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அதன் முழு விவரத்தைத் தெரிவிப்பதோடு, அதன் தொடர்பான ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ், பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. குரோம்பேட்டைப் பகுதியில் ஜி. எஸ். டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து

4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து ஏற்கனவே எழுதியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியாகிவிட்டது. அனுமதி மறுத்ததை நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும். (குறுக்கீடு) இல்லை. அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். நான் உங்களுக்கு எழுதியிருப்பதை என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும்; உட்காருங்கள் (குறுக்கீடு) இப்போது எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. திரு. விசுவநாதன், உட்காருங்கள். மாற்றுத் தலைவர்கள் பட்டியல் (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது முறையாக இல்லையென்று சொன்னால் நான் அனுமதி மறுக்கிற அதிகாரத்தை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்பதெல்லாம் முறையில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், நான் உங்களுக்கும் அனுமதி மறுத்து கடிதம் எழுதியிருக்கிறேன். உங்களுக்கு நான் அனுமதி மறுத்து எழுதியதற்குப் பிறகு இதை எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியிருக்கிறேன். உட்காருங்கள், (குறுக்கீடுகள்).

5. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)ன்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 7-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன் :

திரு. வி. கே. சின்னசாமி

திரு. கே. முனிவெங்கடப்பன்

செல்வி எல். சுலோசனா

திருமதி ஜீனத் சர்புதீன்

திரு. வே. தம்புசாமி

திரு. எஸ். வி. சண்முகம்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

திரு. ச. அழகிரி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். மறுத்ததைப் பற்றி என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட வேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி வழங்கியிருக்கிறேன். இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவையில் அவர்கள் வைப்பார்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதையெல்லாம் பொது விவாதத்திலே பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜீரோ ஹவரில் நான் அனுமதித்தால் தான் பேச முடியும். நான் அனுமதிக்கவில்லை ன்கிறபொழுது அதை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதிக்காதபோது எழுபப முடியாது. நான் அனுமதிக்கவில்லை. பொது விவாதம் நடைபெற

அ ** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கற்றப்பெற்றது.

ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர்கள் எல்லாம் உட்காரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்..(குறுக்கீடுகள்) உட்காருங்கள், விசுவநாதன் நீங்கள் எந்தப் பிரச்சினையையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. எனவே நீங்கள் நின்றுகொண்டு இருப்பதே முறையற்ற செயல், உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் அவரிடத்தில் ஒன்றும் பேசவேண்டாம். மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல் குழப்பம்).

முற்பகல் 11-25

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

6 விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் மசூதி அகற்றப்பட்டது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 110-ன் கீழ் அறிக்கையை வைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டை பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டு விட்டதாக செய்தித் தாள்களில் வெளியான செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதன் முழு விவரத்தை தெரிவிப்பதோடு, அது தொடர்பாக ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

''சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்காக வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு (குறுக்கீடுகள்) குழாய்கள் மூலமாக குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப் பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ் பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப் பட்டு, அப்பகுதிகளிலுள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்) குரோம்பேட்டை பகுதியில் ஜி.எஸ்.டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந் துள்ள இடமும் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிக்க வேண்டிய பகுதியில் வருவதை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து, பின்பு இந்தக் கோயிலையும் அகற்ற மாவட்ட நிர்வாகம் தீர்மானித் துள்ளது. இப்பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் சமீப காலமாக ஒன்றன்பின் ஒன்றாக அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் இந்த உறுப்பினர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

4 தகவல் கோரல்.—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை. பாது காப்பற்ற சூழ்நிலையை உருவாக்க முனைந்த இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து நான் வெளியேற்றி இருக்கிறேன். எல்லா வகையிலும் பாதுகாப்பு உண்டு. (குறுக்கீடுகள்) இல்லை. இந்த அறிக்கை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லலாம். நான் முதலமைச்சர் அவர்களை அறிக்கை வைக்குமாறு . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்லி விடுகிறேன். உட்காருங்கள், நான் பேசிய பிறகு சொல்ல லாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட் காருங்கள். நான் நிற்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் பேரவைக்கு வைக்குமாறு நான்

கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் அறிக்கையை வைப்பதற்கு எழுகிற சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் எழுந்து பிரச்சினையை எழுப்புவதும், தங்கள் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று ஒரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதும் நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றங்களா இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். எத்தகைய சூழ்நிலையிலும், எந்த உறுப்பினருக்கும், எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. அப்படி ஏதேனும் ஏற்படுவதாக இருந்தால் அவர்கள் என்னிடத்திலே சொன்னால் அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். எந்த அசம்பாவிதமும் அந்த இடத்திலே நடைபெறவில்லை. இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுந்து ஓடி அடிக்கச் சென்றது தவிர வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபோது நேராக எங்களையோ அல்லது உங்களையோதான் பார்த்துக் கொள்கின்றார்களேயொழிய பின்னாலே நடைபெறுகிறதை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்திருக்க முடியாது. ஒரு நிகழ்ச்சியை அவர்கள் கற்பனையாக கூறுகிறார்களேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபொழுது, நேரடியாக எங்களையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது உங்களையேதான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்னாலே, நடக்காத ஒன்றை பார்த்ததாக— அவர்களுக்கு கண் முன்னாலே மட்டும்தான் இருக்கிறதேயொழிய பின்னாலே கண் இல்லை. பின்னாலே கண் இருந்தால் இரண்டு பக்கமும் பார்க்க முடியும். அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நானே பார்த்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நீங்கள், நிற்கிற 3 உறுப்பினர்களும். இந்த திசையை நோக்கி பார்த்துக் கொண்டு இருந்தவர்கள், திரு. திருநாவுக்கரசு அந்த நேரத்திலேயே இல்லை.

(குறுக்கீடுகள்) அப்படி இருக்கிறபோது, நீங்கள் எழுந்து நின்றுகொண்டு ஒரு பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிப்பது சரியல்ல. உங்கள் நான்கு பேர்களைவிட, கண்ணுக்கு நேரே நான் பார்த்துக் கொண்டிருந்தவன். திரு. விசுவநாதன் எழுந்தவுடன், நீங்கள் எந்தப் பிரச்சினையும் கொடுக்கவில்லை, உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு, அவர் திட்டமிட்டு ஏதோ சில குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அவர் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த இடத்தில் அவரவர்கள் இருக்கையில் இருந்துதான் எழுந்து நின்று கொண்டிருந்தார்கள். எவரும் தங்கள் இருக்கையை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் பார்த்ததைவிட நீங்கள் அதிக மாகப் பார்க்க முடியாது. அந்த நேரத்தில் ஞானசேகரன் என்ற ஓர் உறுப்பினர் (குறுக்கீடு) திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்று, அவரைத் தாக்க முற்படுவதும் (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினரும் எழுந்து, நான் சொல்லச் சொல்ல எழுந்து ஓடுவதும் எப்படி முறை யாகும்? (குறுக்கீடு) இல்லை, முதலில் நீங்கள் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் பார்த்ததை உங்களுக்குச் சொல்கிறேன். அதை முதலிலே ஒத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டுக்கொண்டு சிலர் செயல்படுவதை அனு மதிக்கக் கூடாது. (குறுக்கீடு) கேளுங்கள், அதை அனுமதிக்கக் கூடாது. அதுதான் இன்றைக்கு நடந்தது. ஞானசேகரனுக்கு என்ன வந்தது? (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். அவர்தான் ஏன் போனார் என்று கேட்கிறேன்? ஞான சேகரன் தன் இருப்பிடத்தைவிட்டு ஏன் சென்றார் என்று தான் கேட்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே வினா—விடை முடிவதற்கு முன்னாலேயே சில பேர் எழுந்து நின்று, பிரச்சினைகளைக் கிளப்பியபோது, எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இன்றைக்குச் சபையை ஒழுங்காக நடத்த விடாமல் இருப்பதற்குத் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதினோம். (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) பிறகு நீங்கள் சொல்லுங்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு உறுப் பினரை நான் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) உட் காருங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னாலேகூட, கேள்வி நேரம் முடிந்தவுடன், பல உறுப்பினர்கள் இன்றைக்கு முதல்

நாளாக இருக்கிற காரணத்தால் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கலாம். ஆனால் ஒரே கட்சியிலே, பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட நியாயம் என்று சொல்லலாம். 10 பேர்கள் எழுந்து நின்று கொண்டு, நான் கொடுத்தேன், நான் கொடுத்தேன் என்று சொல்லுகிறபோது, ஒரே ஒரு சபாநாயகர் இந்த அவைக்கு இருக்கிறார்கள், எனவே அவர் எப்படி பதில் சொல்ல முடியும்? அவை எப்படி ஒழுங்காக நடக்கும்? அதே நேரத்திலேதான் இங்கே எதிர்க் கட்சியிலே இருக்கிற, கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிற

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கொடுக்காத பல உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டு கேட்டார்கள்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : இங்கே இருக்கின்ற 3 பேரும் எழுந்து நின்றுகொண்டு கேட்டார்கள். எனவே ஒரு தலைவர் எப்படி நிலைமையைச் சமாளிக்க முடியும்? ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட அதில் நியாயம் இருந்திருக்க முடியும். எனவே தான் எங்களுக்கு என்ன சந்தேகம் ஏற்படுகிறதென்று சொன்னால் இதில் ஏதோ திட்டம் இருக்கிறது, நோக்கம் இருக்கிறது என்றுதான் எங்களுக்குத் தோன்றுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே நடந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில் 2 காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்ட பின்னாலேதான், அதற்கு பின்னாலேதான், கற்பனையாக ஓர் உறுப்பினரை, அடித்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னாலே. (குறுக்கீடு) நான் முடிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுப்பதாக அறிவிப்பதற்கு முன்னாலே இதை அவர்கள் யாரும் தெரிவிக்கவில்லை. அவர்கள் இந்த இடத்தை விட்டுப் போனார்கள். அசம்பாவிதம் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகப் பேரவைத் தலைவர் உடனடியாக உத்தரவிட்டார்கள். இருக்கைக்கு வர வேண்டும், இல்லை என்றால் நடவடிக்கை என்று சொன்னார்கள். அப்போதும் வரவில்லை. எனவே, மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதும் கூச்சல் குழப்பமாக இருந்தது. வேறு வழியில்லாமல், வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்ட பின்னாலேதான் நம்மீது தவறு வந்துவிடக்கூடாது, வேறு காரணத்தை முன்னாலே செய்ததாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு இது செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1994 மார்ச் 17

எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை ஒழுங்காக நடப்பதற்குத் தாங்கள் ஏதாவது ஒரு வழிவகை செய்து ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையினுடைய உறுப்பினர்களைப் பாதுகாக்கின்ற கடமை என்பது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கையில் பாதியைப் படித்துவிட்டார்கள், அதற்குப் பின்னர், உறுப்பினர்களை அனுமதிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் , மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த மட்டில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11—35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை ஒன்றை அளிக்குமாறு தாங்கள் கேட்டுக் கொண்டீர்கள். அது பாதியிலேயே நிற்கிறது. அதை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு வேறு பல பிரச்சினைகளை மேற்கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை விதி 87 (Vii) ''பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, வேறுவகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடைமறிக்கக் கூடாது'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு வைக்கலாம் என்று நான் அனுமதி அளித்தேன், அவர்கள் அறிக்கை வைக்கவிருந்த நேரத்தில் சில பல பிரச்சினைகள்

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

ஏற்பட்டு, அதிலே நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். முடிவெடுத்து இரண்டு உறுப்பினர்களை, நடவடிக்கை எடுத்துவெளியேற்றி இருக்கிறேன், அதற்குப் பிறகு அவர்கள் அந்த அறிக்கையை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பாதியிலே நின்றுகொண்டிருக்கிறபோது, நான்கு உறுப்பினர்கள் நின்று அவர்கள் அதைப் படிக்க முடியாமல் தடுத்துக்கொண்டிருந்த சூழ்நிலையிலேதான் என்னிடத்திலே கேட்டார்கள்— என்னாலே எப்படிப் படிக்கமுடியும், இப்படி நான்கு உறுப்பினர்கள் நின்றுகொண்டிருக்கிறார்களே என்று. நான் அதனால்தான் உங்களைஉட்காரவும் சொன்னேன். எனவே அவர்கள் அதை முடிக்கட்டும். முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இதை அவர்கள் முடிக்கட்டும். இப்போது பேரவையைத் திசை திருப்பமுடியாது. அவர்கள் முடிக்கட்டும். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (பின்னர், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம்வழுதி மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)

(6) விதி110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்களை பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பகுதி அகற்றப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகில் உள்ள குரோம்பேட்டைப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப் படும்போது, அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டுவிட்டதாகச் செய்தித் தாள்களில் வெளியான செய்தி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அதன் முழு விவரத்தைத் தெரிவிப்பதோடு, அதன் தொடர்பான ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ், பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. குரோம்பேட்டைப் பகுதியில் ஜி. எஸ். டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து

கட்டப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந்துள்ள இடமும் புதிய வீராணம் திட்டத்தின் கீழ் குழாய்கள் பதிக்க வேண்டிய பகுதியில் வருவதை, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆராய்ந்த பின்பு அந்தக் கோயிலையும் அகற்ற மாவட்ட நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் சமீபகாலமாக ஒன்றன் பின் ஒன்றாக அகற்றப்பட்டு வருகின்றன.

16—3—1994 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது இந்தக் கோயிலின் சில பகுதிகளும் இடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இடிப்பதற்கு முன்பு, இந்தக் கோயிலில் உள்ள விக்கிரகங்கள் கோயிலிலிருந்து அகற்றப்பட்டு தாம்பரம் நகராட்சி அலுவலகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. யாருடைய மனதையும் புண்படுத்தவேண்டும் என்கின்ற எந்த உள் நோக்கமும் இன்றி, பொது நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு, இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டிய நிர்பந்தம், மாவட்ட நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோயிலின் அறங்காவலர்கள், மாற்று இடம் கொடுக்கப்பட்டால் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள இந்தக் கோயிலை அகற்றி, பாதுகாப்பான புதிய இடத்தில் கோயில் அமைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக, சைதாப்பேட்டை கோட்டாட்சித் தலைவருக்குத் தெரிவித்துள்ளார்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்தக் கோயில் மீண்டும் தற்போது அகற்றப்பட்ட பகுதிக்கு மிக அருகிலேயே, அரசுக்குச் சொந்தமான நிலத்தில் புதிதாகக் கட்டிக்கொள்ள எல்லா உதவிகளும் அரசுத்தரப்பிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தற்போது கோயில் உள்ள பகுதிக்கு மிக அருகிலேயே அரசுக்குச் சொந்தமான, ஆட்சேபணையற்ற நிலத்தைக் கோயில் கட்டுவதற்காகத் தேர்வு செய்யுமாறு செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இடம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, இத்திருக்கோயில் கட்டும் திருப்பணி, விரைவில் மேற்கொள்ளப்படும். எனவே இது தொடர்பாக அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களோ மாண்புமிகு உறுப்பினர்களோ, கவலை கொள்ள வேண்டாம் என்றும், பாதுகாப்பான ஒரு பகுதியில் போக்குவரத்துக்கு எந்தவிதமான இடையூறும் இன்றி, இந்தத் திருக்கோயிலை மீண்டும் அமைத்துத் தருவதற்கு எல்லா உதவிகளையும் தமிழக அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-40

அதேபோன்று அக்கோயிலுக்கு அருகில் இருந்த மசூதி ஒன்றும் அதன் நிர்வாகத்தினரால் அகற்றப்பட்டுள்ளது. அந்த மசூதியை மீண்டும் அமைப்பதற்கு ஒரு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு,

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அந்த மசூதியையும் புதியதாகக் கட்டிக்கொள்ள எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

(4) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்தும் அவையில்தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு முக்கியமான பிரச்சினையைத்தான் பேரவைக்கும் இந்த நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள். அதற்கு அனுமதி அளித்து இருந்தேன். அவ்வளவு முக்கியமான தகவலைத் தடுக்கிற முயற்சியிலேதான் இங்கே சில உறுப்பினர்கள் சிலபல நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தால் இந்த அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நடந்ததைத் திரும்பவும் பேரவைக்கு உறுதி செய்து கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

வேறு எதையும் என் கவனத்திற்குக் கொடுக்காத பல உறுப்பினர்கள் பேரவையில் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட பொழுது அவர்களை அமருமாறு நான் திரும்பத் திரும்பச் சொல்லியுங்கூட அவர்கள் அமராத காரணத்தாலே பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, அத்தகைய முறையில் விதி முறைகளுக்குப் புறம்பாக நடைபெறுவதற்கு எந்த உறுப்பினரும் எந்த வகையிலேயும் இடம் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்

(7) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

' 1994ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா.பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.வி.கே.சின்னசாமி.

*371-401 ஆம் பக்கங்களில்இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அந்த மசூதியையும் புதியதாகக் கட்டிக்கொள்ள எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

(4) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்தும் அவையில்தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு முக்கியமான பிரச்சினையைத்தான் பேரவைக்கும் இந்த நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள். அதற்கு அனுமதி அளித்து இருந்தேன். அவ்வளவு முக்கியமான தகவலைத் தடுக்கிற முயற்சியிலேதான் இங்கே சில உறுப்பினர்கள் சிலபல நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தால் இந்த அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நடந்ததைத் திரும்பவும் பேரவைக்கு உறுதி செய்து கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

வேறு எதையும் என் கவனத்திற்குக் கொடுக்காத பல உறுப்பினர்கள் பேரவையில் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட பொழுது அவர்களை அமருமாறு நான் திரும்பத் திரும்பச் சொல்லியுங்கூட அவர்கள் அமராத காரணத்தாலே பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, அத்தகைய முறையில் விதி முறைகளுக்குப் புறம்பாக நடைபெறுவதற்கு எந்த உறுப்பினரும் எந்த வகையிலேயும் இடம் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்

(7) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

' 1994ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

*371-401 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''விண்ணோடும் மண்ணோடும் திங்களோடும் பிறவியோடும்பிறந்ததொன்மைமொழியாம் தமிழ்மொழியின்தெய்வப் பயனாக, நீலத் திரைக் கடலோரத்தில் நின்று தவம் செய்யும் குமரிக்கும் வடமாலவன் குன்றுக்கும் இடைப்பட்ட தமிழகத்தில் ஒப்பற்ற ஒளி விளக்காக, உடல் பொருள் ஆவி அனைத்தையும் அரசுக்கே அர்ப்பணித்துக் கொண்டு, கோடிக்கணக்கான மக்களின் குல தெய்வமாக இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒளி-விழி காட்டும் பாதையை, அந்தப் பாதையே வழியெனக் கொண்டு செயல்படும் எனக்கு, அவர் தம் சீரிய தலைமையின் கீழ் செயல் படும்போது ஒருபுறம் சிலிர்க்க வைக்க, மறுபுறம் அவர்தம் முன்னிலையில் பேசுகின்ற பேறு கிடைத்தது மனதை நெகிழ வைக்கின்றது.

''புரட்சி'' எனும் புனிதச் சொல் அகராதிக்கு அன்னியமானதல்ல. வான் மழை காணாது வறண்ட தஞ்சைப் பகுதியில் குறுவைக்காக, ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்ற . . . (குறுக்கீடு).

திரு. பி. வி. இராஜேந்திரன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர். இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறார்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். இது ''மெய்டன் ஸ்பீச்'', அல்ல. அவர்கள் இப்படி எழுதிப் படிப்பது நாடாளுமன்ற விதிமுறைகளுக்குப் புறம்பானது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசலாம். சில நேரங்களில் குறிப்புகளை, சில குறிப்புகளை மட்டும் அப்படியே அவைக்கு சொல்லலாம். மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : எதிர்க்கட்சித் தலைவர்கூட நிறைய குறிப்புகளை வைத்துக்கொண்டுதான் பேசுகிறார்.

1994 மார்ச் 17]

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புரட்சி'' எனும் புனிதச் சொல் அகராதிக்கு அன்னியாயமானதல்ல. வான்மழை காணாது வறண்ட தஞ்சைப் பகுதியில் குறுவைக்காக ''வாடிய பயிரைக் கண்ட போதெல் லாம் வாடினேன்'' என்ற வள்ளல் மனப்பான்மையுடன் காவி ரிக்கு உண்ணா நோன்பு இருந்த புரட்சி (மேசையைத் தட்டும் ஒலி). தாய்க்குலத்தின் தன்நிகர் பிறவியாய், தாய்க்குலத்தின் தன்நிகர் பிறவியாய் தலைமை ஏற்றதோடு மட்டுமின்றி, ''நாண மும் அச்சமும் நாய்கட்கும் வேண்டும்'' என புதுமைப் பெண்ணை தரிசித்த பாரதியின் பாதையிலே, மகளிர் காவல் நிலையம் கண்டது மகத்தான புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி). ஏழைகளின் கண்ணீர் கண்டால் இதயம் தாளாது, வறுமை யைத் துடைத்து எறிய வலிமை மிகு திட்டங்கள் ஒவ்வொன்றாக நிறைவேற்றி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு, இன் முகம் தாங்கித் தொண்டாற்றுவது ஈடற்ற புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி).

மாநிலத்திற்கு ஒரு கொடி வரலாமா, மங்கல வேள்வியில் மழை விழலாமா, பேணிய சுதந்திரம் பிழைபடலாமா என்று எந்த நேரமும் மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, கன்னித் தமிழ் நாட்டில் புலிகள் என்ற பெயரில் நுழைந்த களைகளை புறநானூற்று வீரத்தோடு அழித்தொழித்து, இந்திய ஒருமைப்பாட்டை எழுச்சி பெற வைத்த வீரப்புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-45

தமிழக மகளிர் தன்னிகரற்ற வாழ்வு நடத்த மகம் என்னும் நிறுவனத்தின் மூலம் பன்னாட்டு நிதியத்தின் ஆதாரத்தோடு கிராமத்து ஏழைப் பெண்களின் பொருளாதார நிலையில் புத் தொளி விழ வைத்தது மகத்தான யுகப்புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி).

பெண் சிசுக்களை வளர்த்து பேராதரவு நல்கி உலகத்திற்கே முன்னுதாரணமாகத்திகழ்ந்து, தாய்க்கும் சேய்க்கும் ஆதரவாய் நின்று 15 அம்சத் திட்டத்தை உருவாக்கியது பார் புகழும் புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) உலகில் பெண்கள் தினத் தன்று ஆழிசூழ் உலகம் அதிசயிக்க மகளிர் நலத்திற்காக சிறப்புத் திட்டம் வகுத்தளித்து செயல்பட ஊக்கம் அளித்திருப்பது வர லாற்றுச் சிறப்புமிக்க பெரும் புரட்சி. உலகிலேயே முதன் முத லாக கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் புரட்சி. உலகிலேயே ஒரு மாநில முதல்வர் நேராக 13 மாவட் டங்களுக்குச் சென்று 201 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு உதவிகளை 3,00,377 பேர்களுக்கு நேரடியாக வழங்கிய வள்ளல் பாரியின் புரட்சி. விளையாட்டு உலகில் சரித்திரம் காணாத

வகையில் பூனா தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் நாட்டை மூன்றாவது இடத்தில் வெற்றி பெற ஆக்கமும் ஊக்க மும் அளித்த புரட்சி. ஏழு மாதத்தில் சர்வதேச தர அளவுக்கு ஏற்ப எழில்மிகு நேரு விளையாட்டு அரங்கத்தை நிர்மாணித்து உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்களை தமிழ் நாட்டு மக்கள் எளிதில் காணும் வகையில் சர்வதேசப் போட்டிகளை நடத்திய புரட்சி. இங்ஙனம் சொல்லிலும், செயலிலும், எண் ணத்திலும் புரட்சிக் கனல் எழுப்பி, புதுமை படைக்கும் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்தனை புரட்சிகளையும் ஒரு சேர வகுத்து கொடுத்திருக் கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் சாதனைகளை அடுக்கடுக்காக அடுக்கி வைத்துள்ள மேதகு ஆளுநர் அவர்களின் உரையை ஒரு ஆளுநர் உரையாக நான் கருதவில்லை. ஒளி மிகுந்த ஓர் உன்னத எதிர்காலத்தைத் தமிழகத்திற்கு வகுத்தளிக்கும் ஒரு காலப் பெட்டகமாகக் கருது கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இலவச மருத்துவ முகாம்கள் நடத்திய சாதனை. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி குறிப்பாக கிராமத்துப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் டாக்டர் புரட்சித் தலைவி 1,315 இலவச மருத்துவ முகாம்களை மாநிலமெங்கும் நடத்தினார்கள். அந்த ஆய்வில் நூற்றுக் கணக்கான குழந்தைகள், ஆயிரக்கணக்கான தாய்மார்கள் நோய் வாய்ப்பட்டிருப்பது குறித்து—குறிப்பாக இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய நிலையில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் இருப்பதைக கண்டறிந்து, அவை உயிரை விடும் தருவாயில் இருப்பதைக் கண்டறிந்து, ஒரு இலவசத் திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், டாக்டர் புரட்சித் தலைவி இளம் குழந்தைகள் இருதய அறுவை சிகிச்சைத் திட்டத்தை 8—10—1993 அன்று அறிவித்தார்கள். குறிப்பாக ஏழே மாதத் தில் 14 இலட்சம் ரூபாய் செலவில் 58 குழந்தைகளுக்கு இலவச மாக இருதய அறுவை சிகிச்சை செய்து, ஒரு மாபெரும் திட் டத்தை உலகத்திற்கு அறிவித்தவர் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-50

குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மாதம்பாளையம் என்ற கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி என்பவரின் மகள் ஜெய லட்சுமி என்ற ஒன்பது வயது சிறுமி. நானே இந்த அறுவை சிகிச்சைத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெற வேண்டும் என்பதற்காக, சென்னையிலே இருக் கின்ற குழந்தைகள் நல மருத்துவ மனையிலே சேர்த்தேன். ஒரு மாத காலத்திற்குள்ளாக அந்தக் குழந்தைக்கு அறுவை

சிகிச்சை செய்யப்பட்டு, உயிர்விடும் தருவாயிலிருந்த அந்தக் குழந்தை காப்பாற்றப்பட்டது, இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தால், அந்தக் குழந்தை அறுவைச் சிகிச்சை முடிந்து ஊருக்குச் சென்றது ஊருக்குச் சென்ற அந்தக் குழந்தையை, வீட்டிலே இருக்கிற தாயும், தந்தையும் சாமி கும்பிட வேண்டும் என்று,. தெய்வத்தை வழிபடவேண்டும் என்று பூஜை அறைக்கு அழைத்துச் சென்றார்கள். பூஜை அறைக்குச் சென்ற அந்தக் குழந்தை, அங்கே வைத்திருந்த சாமி படங்களில் சிவன் படம் இருந்தது. சக்தி படம் இருந்தது, சரஸ்வதி படம் இருந்தது, லட்சுமி படம் இருந்தது, விநாயகர் படம் இருந்தது, அந்தப் படங்களை எல்லாம் வழிபட்ட அந்தக் குழந்தை—அதனுடைய தாயையும், தந்தையையும் பார்த்துக் கேட்டது, என்னை வாழ வைத்த தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் படம் எங்கே என்று கேட்டது. அந்தக் குழந்தை சொன்னது, உயிர்விடும் தருவாயில், இறக்கும் தருவாயில் இருந்த என்னை, அதற்குச் செலவு செய்து காப்பாற்றி, தாய் தந்தையினுடைய நிலைமையில் இருந்து என்னைக் காப்பாற்றி எனக்கு மீண்டும் உயிர் அளித்த, வாழ்வு அளித்த புரட்சித் தலைவியினுடைய படத்தை வைத்துத்தான் நான் வாழ்நாள் முழுவதும் வணங்குவேன் என்று சொல்லி, புரட்சித் தலைவியின் படத்தை பூஜை அறையிலே வைத்து, வணங்கிய காட்சியை நாங்கள் எல்லாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குழந்தை மட்டுமல்ல. இங்கே இருக்கிற உறுப்பினர்கள் நிறைய பேர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கும் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இப்படிப் பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் நான் படிக்கவில்லை, நானே பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை அருமை நண்பர் களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

> ''அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்''.

பொருளை ஆக்குவதும் அறிவு, ஆக்கிய பொருளைக் காப்பதும் அறிவு. ஆகவே, கல்விக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் கள், 1998-ல் அனைவருக்கும் கல்வி தரவேண்டும் என்பது மத்திய அரசின் இலக்காக இருந்தாலும் அதற்கு முன்பே அனை வருக்கும் கல்வி தருகின்ற மாபெரும் திட்டத்தை உருவாக்கிக் கொண்டு, லட்சோப லட்சம் மக்கள் அதிலே பயன்பெறுகிற திட்டங்களை நிலைநாட்டிக் கொண்டிருப்பவர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

இன்னொன்றையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக் கிறேன். சிறு சேமிப்புத் துறையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை யேற்றபின்புதான், சிறுசேமிப்புத் துறை, இந்தியத் துணை

கண்டத்திலே ஏழாவது, ஆறாவது இடத்தில் இருந்த இந்த மாநிலம் இன்றைக்கு மூன்றாவது இடத்திலேயும், தென்னிந்திய அளவிலே முதல் இடத்திலும் உள்ளது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக 1990-91-ல், தமிழ்நாட்டிற்கு மத்திய அரசாங்கம் இலக்காக நிர்ணயித்தது 450 கோடி ரூபாய். ஆனால் இதிலே வசூல் செய்தது 408 கோடி ரூபாய்தான். 91 சதவிதம் தான் அன்றைக்கு நிலை நாட்டியிருக்கிறார்கள். ஆனால் 1991-92-ல் மத்திய அரசாங்கம் மாநில சர்க்காருக்கு இலக்காக நிர்ணயித்தது 550 கோடி ரூபாய். ஆனால், இதிலே 580 கோடி ரூபாய் அளவிற்கு வசூல் செய்து, 105 சதவீதத்தை எட்டியிருப்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிதான்.

அதேபோல், 1992-93-ல் மத்திய அரசாங்கம் இலக்காக நிர்ணயித்தது 550 கோடி ரூபாய். ஆனால் வசூல் செய்தது 614 கோடி ரூபாய். இது 112 சதவீதம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் அநேகப் பரிசுகளை ஈட்டித் தந்துள்ளன. இங்கே அரசு செயல்படவில்லை, சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கின்ற பல்வேறு நண்பர்களுக்கு நான் கொடுக்கின்ற உதாரணம் கொஞ்சம் புரியும் என்று கருதுகிறேன். 1993-94 ஆம் ஆண்டில், இந்திய அளவிலான, தேசிய அளவிலான பரிசுகளில், போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் 7 பரிசுகளில் 5 பரிசுகளை தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

சமூகநலத் திட்டத்தின் சார்பாக, உடல் ஊனமுற்றோர்கள், குழந்தை நலப் பணிகள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்பு போன்ற பணிகளில் தமிழ்நாடு அரசு செய்து கொண்டிருக்கிற காரியங்களுக்காக 22 பரிசுகளை மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கிறது. வேளாண்மை விரிவாக்கப் பணியிலும், உயர் இன கழிவு உரங்களைத் தயாரிக்கும் பணியிலும் மிகச் சிறந்த சாதனை புரிந்ததற்கு மத்திய அரசும், தேசிய உற்பத்திப் பணிக் குழுவும் தகுந்த சான்றுகளை அளித்து இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்கிற அந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சிறப்பு ஏற்றுமதி பரிசையும் தந்திருக்கிறது. ஆக இப்படி பல்வேறு பரிசுகளை, மத்திய அரசிடமிருந்து சிறப்பாக தமிழ்நாடு அரசு பெற்றமைக்கு, இந்த ஆளுநர் உரையிலேயே ஆளுநர் அவர்கள் சொல்லியிருப்பது பாராட்டுக்குரியது என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

குறிப்பாக தமிழ்நாடு குடும்ப நலத்திட்டத்தின் வாயிலாக குழந்தைகள் பிறப்பு இறப்பு விகிதம், 2000 ஆண்டுகள் கழித்து எட்டப்பட வேண்டிய குறியீட்டை 1992-லேயே தமிழ்நாடு இந்திய அளவில் எட்டியுள்ளது என்பதை, மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இங்கே வந்திருக்கிற நண்பர்கள், அதையும் கொஞ்சம் படித்துப் பார்த்து, மேதகு ஆளுநர் அவர்கள் கூறியிருப்பதையாவது, அவர்கள் பாராட்டியிருப்பதையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பணிவனோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது புதிய பொருளாதாரக் கொள்கையினை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளை, புரட்சித் தலைவி அவர்கள் மிகத் துல்லியமாக, தெளிவாக அறிந்து தெரிந்து வைத்திருக்கிறார்கள். அப்படி தெரிந்து வைத்திருக்கும் காரணத்தினால் அதிலுள்ள நல்ல அம்சங்களை வரவேற்பதோடு, அதிலிருக்கிற சில அம்சங்கள் ஏழை எளியவர்களை வெகுவாகப் பாதிப்பதைச் சுட்டிக்காட்டி, அப்படிப் பாதிப்பு இல்லாத வகையில் புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதை அமல்படுத்தும் நேரத்தில், கண்ணை மூடிக்கொண்டு அப்படியே ஏற்றுக் கொள்ளவும் இல்லை, வறட்டு வேதாந்தமாக எதிர்க்கவும் இல்லை. புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக ஏற்படக் கூடிய வளர்ச்சி அனைத்தையும், சில அம்சங்களை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதோடு, பெரும்பான்மையான ஏழை எளியவர்களை பாதிக்கின்ற வகையில் உள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்தும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நாள்தோறும் பூஜித்துவரும், ஏழை எளியவர்களை அந்தத் தாக்குதல்களிலிருந்து காக்கும் கவசமாகவும் புரட்சித்தலைவி அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்., என்பதை இந்த ஆளுநர் உரையிலேயே சுட்டிக் காட்டி இருப்பதை உறுப்பினர்கள் அனைவரும் பெரிதும் வரவேற்பதற்கு கடமைப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக புதிய தொழில்கள் துவங்குவது சம்பந்தமாக இங்கே உள்ள மின்சாரத் துறை எப்படி சாதனைகளை செய்துள்ளது என்பது இங்கே ஆளுநர் உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்திய துணைக் கண்டத்திலேயே, தமிழகத்தின் வரலாற்றில் இப்படி ஒரு ஆளுநர் உரையிலே மின்சாரத் துறைக்கு தனி முக்கியத்துவம் கொடுத்திருப்பது இதுவரையில் காணப்படவே இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால், அமெரிக்கா

விலே இருப்பவர்கள் தமிழ்நாட்டிலே வந்து தொழில்-- துவங்குகிறார்கள். ஜப்பான் நாட்டிலே இருக்கின்றவர்கள் வருகிறார்கள். லண்டனிலே இருப்பவர்கள் இங்கே வருகிறார்கள் என்றால் அதற்கு அடிப்படை மின்சாரம். ஆக தொழிற்சாலை துவக்கப்பட வேண்டும் என்றால் தடை இன்றி மின்சாரம் கிடைக்க வேண்டும். ஆக அப்படிப்பட்ட மின்சாரத்தை தடை இன்றி உற்பத்தி செயவதற்காக 7,500 கோடி ரூபாய் செலவில் 1,500 மெகாவாட் உற்பத்தி-செய்யக்கூடிய புதிய மின் திட்டங்களை உருவாக்குவதற்கு இங்கே பல்வேறு குறிப்புகளை ஆளுநர் அவர்களே கொடுத திருக்கிறார்கள். ஆகவே இந்த மினசார உற்பத்தி என்பது மிகவும் சிறந்த ஒன்று. மின்சாரத்தை உற்பத்தி செய்கிற நேரததிலே நீர் ஆதாரம் வேண்டும். நீர் ஆதாரம் என்று குறிப்பிடும்போது இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன, காவிரி நீர் பிரச்சினை குறித்து 1971-லேயிருநது தமிழ்நாட்டு மக்கள் காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினாகளை டெல்லிக்கு அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். திராவிடத்தின் ஆதரவோடு அவர்கள் டெல்லிக்கு சென்றுக கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே காஙகிரஸ கட்சி ஆளும் கர்நாடக மாநிலத்தில் இருந்து செலபவர்களைப் பார்த்தால், இங்கேயிருந்து செல்கிற---- அளவுக்கு காங்கிரஸ் கட்சிக்கு கர்நாடகத்திலே வாய்ப்பு குறைவுதான். இருந்தாலும் 1974ஆம் ஆணடு கர்நாடகத் திலே காங்கிரஸ் அரசு. டெல்லியிலேயும் காங்கிரஸ் கட்சியின் அரசு. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் உறுதியாக காங்கிரஸ் உறுப்பினாகளை டெல்லிக்கு அனுப்பியிருப்பது போல் கர் காநாடகத்திலே நடக்கவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் திராவிட இயக்கததின் சொல்லுக்கு மதிப்பளித்து காட்டிய விசுவாசத்தை, கா்நாடக மக்கள் காங்கிரசுக்கு காட்ட வில்லை என்பது நாடறிந்த செய்தி. நீதிமன்றம் ஆணை வழங்கியபோது கர்நாடகத்திலும் காங்கிரஸ், டெல்லியிலும் காங்கிரஸ். ஆனால் நீதிமனறத் தீர்ப்பை நிலைநாட்டத் தவறியதும் மாயாதைக்குரிய காங்கிரஸ் கட்சி என்பதை நான் இங்கே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றையும் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். காநாடகத்தில் 28 நாடாளுமன்ற உறுப்பினாகள். ஆனால் தமிழகததில் பாண்டிச்சேரியோடு 40 நாடாளுமன்ற உறுப் பினாகள். கணக்குப் பிரகாரம் பார்த்தாலும் கூட நாம் இங்கு அதிகமாகததான் இருக்கிறோம். ஆனால் அந்த அளவுக்கு அதிகமாக இருந்தும், தமிழக மக்களுக்காக, தமிழக மக்கள் எந்த அளவுக்கு காஙகிரஸ் மீது நம்பிக்கை வைதது வாக்களித்தார்களோ அந்த நம்பிக்கை தமிழ்நாட்டு (குறுக்கீடு) டெல்லிக்கு(குறுக்கீடு) காங்கிரஸ் கட்சி வர வேண்டும் என்றுதான்—நான் முதலிலேயே சொன்னேன்-திராவிடத்தின் ஆதரவோடு என்று நான் முதலிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

1994 மார்ச் 17]

நண்பகல் 12.00

திரு. ஆர். ஈஸ்வரன் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : திராவிடத்தின் ஆதரவோடா அல்லது தனியா என்பதைத்தான் பழனி நாடாளுமன்றத் தேர்தல் நிரூபித்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக சட்டம் ஒழுங்கைப் பற்றியெல்லாம் இங்கே விரிவாகப் பேசுகிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது, அகில உலகத்திலேயே மகளிருக்கு என்று காவல் நிலையம் தமிழ்நாட்டிலே மட்டும் தான் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கியிருக்கிறார்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே. ஆக இந்த மகளிர் காவல் நிலையத்தைப் பார்த்து பாகிஸ்தானிலே இரண்டு மாத காலத்திற்கு முன்பு அங்கேயிருக்கின்ற பிரதம அமைச்சர் துவக்கியிருக்கிறார்கள். ஆனால் உலகத்திலேயே இந்த மகளிர் காவல் நிலையம் துவங்க வேண்டும், இந்த மகளிருக்கு என்று பாதுகாப்பு வேண்டும், ஆண்கள் இருக்கின்ற, வேலை செய்கின்ற காவல் நிலையத்திலே பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை, உண்மையான கொடுமைகளை நேரடியாகச் சென்று கூறுவதற்கு அச்சப்படுவார்கள், நாணப்படுவார்கள் என்று கருதித்தான் ஒரு பெண் காவல்துறை அதிகாரிகளாக இருப்பாரானால்உள்ளஉணர்வோடு நடந்த உண்மைகளை அப்படியே எடுத்து கூறுவதற்கு, அதற்கு உண்மையான பரிகாரம் காண்பதற்கு உலகததிலேயே பெண்கள் காவல் நிலயத்தை முதன் முதலாக துவக்கிய வரலாறு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான் என்பதை நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குப் பின்பு கூட இந்திய துணைக் கண்டத்திலே கூட வேறு எந்த மாநிலத்திலும் பெண்களுக்கு என்று காவல் நிலையம் துவக்கப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பக்கத்திலே இருக்கின்ற நாட்டிலே கூட 2 மாதங்களுக்கு முன்பு புரட்சித் தலைவி அவர்களுடைய பாதையிலே அவர்கள் சென்றார்கள். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கும் திறக்கப்படவில்லை. சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவதற்காக காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக, புதிய ஜீப்புகளை வாங்குவதற்காக, நவீன் கருவிகளை வாங்குவதற்காக, வெளிநாட்டு சக்திகளும், உள நாட்டு சக்திகளும் இந்திய ஒருமைப்பாட்டை சிதைகுலைய வைப்பதைத் தடுப்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் 80 கோடிக்கு மேல்

தர வேண்டும் என்று கடிதம் மூலமாக அனுப்பவில்லை நேரடியாக-ஒரு நாட்டின் முதலமைச்சர் நேரடியாக கோப்புகளை எடுத்துச் சென்று மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்களையும், மரியாதைக்குரிய உள்துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்தப் பணத்தை தாருங்கள் நான் இந்த விடுதலைப் புலிகளை மட்டும் அல்ல இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிற்கே தமிழ்நாடு முதல் மாநிலமாக வருவதற்கு மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க இது தேவைப் படுகிறது. உடனடியாகத் தேவைப்படுகிறது. தாருங்கள் என்று கேட்டால், அந்த 80 கோடியைத் தரவில்லை. 10 கோடி தான் தந்தார்கள். இங்கே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்திப்பதாகவும் மற்றவைகளை எல்லாம் நான் பத்திரிகையிலே படித்து இருக்கிறேன். அப்படி சென்றவர்கள் ஒரு முறையாவது—இந்தச் சட்டம் ஒழுங்கை பேசுகின்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஒரு முறை யாவது-பாரதப் பிரதமரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கேட்கும் 80 கோடியில் ஒரு 50 கோடி ரூபாயாவது தாருங்கள் என்று ஒரு வார்த்தை கேட்டிருப்பார்களா என்று நான் பத்திரிகையிலே, உள்ளதுவிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் அப்படி கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு என்று அங்கே சென்று பிரதமரைச் சந்தித்து பேசுவதில்லை. இவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினையைத் தான் அங்கே பேசுகிறார்களே (மேசையைத் தட்டும் ஒலி) தவிர தமிழ்நாட்டு நலனுக்காக ஒரு வார்த்தை கூட இந்திய பிரதமரிடத்திலே எடுத்து வைத்தார்கள், பாரதப் பிரதமரிடத்திலே கேட்டார்கள், மத்திய அரசாங்கத்திலே கேட்டார்கள். மற்ற அமைச்சர்களைக் கேட்டார்கள் என்று என் போன்றவர்கள் பத்திரிகைகள் வாயிலாக அல்லது வேறு செய்திகள் வாயிலாக பார்க்கவில்லை. கேட்கப்படவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆசவேதான் நான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் இங்கே இருக்கின்ற நண்பர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கின்ற இந்தச் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஒத்துழைத்து மத்திய அரசாங்கத்தில் கேட்கின்ற அந்த 80 கோடியைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் இனிமேலாவது வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(பிற்பகல் 12.05)

நாங்கள் எப்போதும் பணிவுடன் தான் இருக்கிறோம். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு உயிர் மூச்சாகக் கற்றுத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் வரை

மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உயிருள்ள வரை இந்த நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் தான். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வினர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்தத் திசையை நோக்கிக் காட்டுகிறார்களோ அந்தத் திசையை நோக்கிச் சாய்கின்ற பட்டாளம் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) டெல்லியில் இருக்கின்ற அமைச்சர் தங்களைப் பற்றி—எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி- ஒன்று சொல்லுகிறார். இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவரைப் பற்றி ஒன்று குறிப்பிடுகின்றார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் பெயரை உங்களுக்குத் தெரியும். (மணியடிக்கப்பெற்றது). நாங்கள் கூடச் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது) தயார் செய்து நாங்கள் சொல்லவில்லை (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு கட்சிக்குள்ளே ஒருவரைப் பற்றி ஒருவர் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பது ஆளுநர் உரையில் வேண்டாம். (குறுக்கீடுகள்) அவர்கள் அதைப்பற்றி கிளப்பினால் நீங்கள் பதில் சொல்லலாம். அது இல்லாதபோது நீங்களாக அதைப் பற்றி பேசக் கூடாது. அந்தக் கட்சிக்குள்ளே ஒருவரைப் பற்றி ஒருவர் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்பது ஆளுநர் உரையிலே வேண்டாம். (குறுக்கீடுகள்)

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, எங்களுக்கு அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்திற்கு ஒரே தலைமை மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் தலைவர் மறைந்த முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்குப் பின்பு இந்தக் கோடிக்கணக்கான அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக உறுப்பினர்களை வழி நடத்திச் செல்லுகின்ற சக்தியும், ஆற்றலும், துணிவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது என்பதை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வைத்து இருக்கின்ற சாதனைப் பட்டியலுக்கு இங்கே இருக்கின்ற அனைவரும் ஒத்துழைப்புத் தந்து மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் தமிழக அரசின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு இருக்கின்ற இந்த அரசின் சாதனைப் பட்டியலை இங்கே தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே பல்வேறு குறிப்புகளை நான் இங்கே கொடுத்து இருக்கிறேன், ஆகவே இந்த வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆளுநர் உரையைப் பெறுவதற்கே நாங்கள் ஒரு பெரிய போராட்டம் நடத்தியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) 3, 4 தினங்கள் மிகப் பெரிய போராட்டம் நடத்தி (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அழகிரி, நீங்கள் உட்காருங்கள். அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகிறார், அதற்கு நீங்கள் ஏன் எழுந்துகொள்கிறீர்கள்? அழகிரி, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று திரு. ஜெயக்குமார் எழுந்திருக்கிறார் (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஒரு உறுப்பினர் எழுந்துகொள்ளக் கூடாதா ? அதற்காக நீங்கள் ஏன் எழுந்துகொள்கிறீர்கள்? பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் அதை நான் பார்க்க வேண்டியது. (குறுக்கீடுகள்) அழகிரி உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஒரு உறுப்பினர் கேட்பதைப்பற்றி நான்தான் முடிவு செய்யவேண்டும். நீங்கள் என்ன முடிவு செய்வது ? (குறுக்கீடுகள்) நீங்கள் இதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சின்னசாமி அவர்கள் பேசத் தொடங்கியவுடன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஒரு உறுப்பினர் கேட்டார். நான் அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இல்லை; முறையற்ற முறையில் அழகிரி நடந்துகொள்வது முறையல்ல. இந்த வேலை எல்லாம் இங்கே வைத்துக்கொள்ளவேண்டாம். அழகிரி, இது முறையல்ல. (குறுக்கீடுகள்) முறையற்ற முறையில் அழகிரி இங்கே நடந்துகொள்வது சரியல்ல. இந்த கைவீசுகிற பழக்கம் எல்லாம் இங்கே வேண்டாம்.

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அழகிரி வழி வந்தவர்கள் நாங்கள். இந்த அழகிரிக்குப் பயப்படுகிறவர்கள் அல்ல நாங்கள். பட்டுக்கோட்டை அழகிரி வழி வந்தவர்கள் நாங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1994 மார்ச் 17]

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நான் பட்டுக்கோட்டை அழகிரி வழி வந்தவன் (குறுக்கீடுகள்) இந்த அழகிரி எனக்கு சாமான்யம் (குறுக்கீடுகள்) இந்த வேலை எல்லாம் இங்கே வேண்டாம் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இந்த வேலை எல்லாம் இங்கே வேண்டாம்.

திரு. ச. அழகிரி :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வேலை எல்லாம் இங்கே வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) இந்த வேலை எல்லாம் இங்கே வேண்டாம். நான் பட்டுக்கோட்டை அழகிரி வழி வந்தவன். (குறுக்கீடுகள்) அழகிரி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். பேரவைத் தலைவரைப் பார்த்து முறைகேடாகப் பேசுவது. . . . (குறுக்கீடுகள்) அழகிரி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அழகிரி அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அழகிரியை அவையைவிட்டு அப்புறப்படுத்தவும். (குறுக்கீடுகள்) அழகிரியை அப்புறப்படுத்தவும். (கூச்சல் குழப்பம்).

(திரு. ச. அழகிரி அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

பிற்பகல் 12-10.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகிரி பேரவைத் தலைவரைப் பார்த்து ஒருமையில் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப்ஆர்டர். (கூச்சல்-குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல (குறுக்கீடுகள்) இது என்ன முறை? ஒரு உறுப்பினர் அவர் இஷ்டத்திற்கு பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசிக்கொண்டே இருக்கிறார். அத்தனையும் சகித்துக்கொண்டே இருக்க வேண்டுமா? இது முறை அல்ல. (குறுக்கீடு) இதில் என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை (குறுக்கீடுகள்) நான் வருவாய்த் துறை அமைச்சரை அழைத்து இருக்கிறேன், அதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை 6 மணிக்கு(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அழைத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (கூச்சல்-குழப்பம்)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் அமைதியாக அவரவர்கள் இடத்திலே அமருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே 6 மணிக்கு ஒரு ஆமை கிழக்கே பார்த்துக் கொண்டு இருந்ததாம். காலையிலே 6 மணிக்கே ஏன் பார்க்கிறாய் என்று ஆமையைக் கேட்டால், நான் பார்த்தால்தான் சூரியன் வெளியே வரும் என்று சொன்னதாம். எப்படி அந்த ஆமை, நான் கிழக்கே பார்த்துக் கொண்டிருந்தால்தான் சூரியன் உதிக்கும் என்று சொன்னதோ, அதேபோல மாண்புமிகு உறுப்பினர் பாலகிருஷ்ணன், போராடியதனால்தான் இந்த கவர்னர் உரையே என்று சொல்வது, ஆமை எப்படி கிழக்கே பார்த்ததினால் சூரியன் உதிக்கும் என்று சொன்னதோ அதற்கு ஒப்பாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், போராடி ஆளுநர் உரையைப் பெற்றதாக எடுத்த உடனேயே துவக்கினார். அவர் கட்சியினுடைய தலைவராக ஆளுநரை நினைக்கின்றாரா அல்லது வேறு எந்தக் கட்சியினுடைய தலைவர், எதிர்க்கட்சியினுடைய தலைவர் என்ற எண்ணத்தில் அவர்

போராடிப் பெற்றதாகச் சொல்கிறாரா அல்லது அந்த உறுப்பினருக்கு ஆளுநர் ஏதேனும் உறவின்முறைக்காரரா? அவர் போராடிப் பெற்றார் என்று சொல்கிறார். எந்த அந்தஸ்தை வைத்து போராடிப் பெற்றார் என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு தலைவர் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரை என்பது அரசியல் சட்டத்தின்படி ஒரு ஆண்டின் முதல் கூட்டத் துவக்கத்தில் இருப்பது என்பது, அது அரசியல் சட்டத்தி லேயே இருக்கிற ஒரு செய்தியாகும். இதற்காக எவரும் போராடவும் வேண்டியதில்லை; விவகாரம் பண்ணவேண்டி யதும் இல்லை. அவை அலுவலைக் கெடுக்க வேண்டிய அவசிய மும் இல்லை. அரசியல் சட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிற நெறிமுறைப்படி நடந்திருக்கிறது. நேற்றைய தினம்தான் முதல் கூட்டம் துவங்கியது. முதல் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உரை ஆற்றுகிறார். இது ரொம்ப சாதாரண விஷயம். இதற்குப் போராடவும் தேவையில்லை; எதுவும் தேவையல்ல. பேச ஆரம்பித்த திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால், அடுத்து திரு. கா. பூ. முனுசாமி பேசலாம்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற முகத் தான் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தின்மீது கருத்துக் களைக் கூறுவதற்குரிய வாய்ப்பைத் தந்த தங்களுக்கும் இந்த அவையிலே வந்தமர்ந்து..

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதும் எந்த அளவில் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்கிற ஒரு முயற்சியை அரங்கேற்றுவதற்கு முயற்சித்தார்கள் என்பதைப் பேரவை உறுப்பினர்கள் அனை வரும் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறீர்கள்.

ஒரு உறுப்பினர் பேச ஆரம்பித்தவுடன், இன்னொரு உறுப்பினர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கேட்டார். அவ ருக்கு என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று நான் கேட்கிற பொழுது—சம்பந்தமேயில்லாமல்—பாலகிருஷ்ணனாவது இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கேட்டால் பரவாயில்லை; சம்பந்தமேயில்லாத அழகிரி எழுந்து, கை நீட்டி பேரவைத் தலைவரையும், ஆளுகிற கட்சியிலே இருக்கிற உறுப்பினர் களையும் பார்த்து அவர் ஏகவசனத்தில் பேச ஆரம்பித்த காரணத்தினாலேதான் பிரச்சினை திரும்பவும் முளைத்தது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆக, காலையிலேயே கேள்வி நேரம் முடிவதற்கு முன்னரேயே சில உறுப்பினர்கள் எழுந்து கூச்சல் போட ஆரம்பித்தார்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன் சில பிரச்சினைகளை எழுப்ப வேண்டும் என்று என்னுடைய அனுமதி பெற்ற உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்றார்கள்; பெறாத உறுப்பினர்கள் பலரும்கூட அப்பொழுதே எழுந்து நின்றார்கள், அழகிரி உட்பட.

அதன் பின்னர் இரண்டு உறுப்பினர்கள், உறுப்பினர்களைத் தாக்க எழுந்து ஓடியதற்குப் பிறகு பிரச்சினை எழுந்தது. அதற்குப் பிறகு எல்லோரும் வெளியே போனார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய அறிக்கையைப் படிக்க விடாமல் தடுக்கிற முயற்சியில் பலர் ஈடுபட்டார்கள். அதன் பின்பு, அவர்கள் வெளியே போய் விட்டுத் திரும்ப வந்தவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு—எப்படியோ ஒரு வகையிலே பிரச்சினையைக் கிளப்ப வேண்டும் என்கிற ஒரே முடிவோடுதான் இவர்கள் செயல்படுவார்கள் என்பதற்கு உரிய எடுத்துக்காட்டுதான் இந்த இரண்டாவது முயற்சியும் என்பது கண்கூடாகத் தெரிகிறது.

எனவே, இந்த முறையை அனுமதிக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பதோடு, வெளிநடப்புச் செய்தவர்கள் லாபியிலே நின்று கொண்டு கூச்சல் போட்டுக் கொண்டிருப்பது கூட பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற முயற்சி என்கிற காரணத்தால் அப்படி எவரேனும் லாபிலேயிருந்து குரல் எழுப்பிக் கொண்டிருப்பார்களேயானால், கூச்சல் போட்டுக் கொண்டிருப்பார்களேயானால், அவர்களுக்கே உரிய முறையில் வேறு ஏதேனும் செய்து கொண்டு இருப்பார்களேயானால் காவலர்கள் அவர்களை அப்புறப்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்

<u>மாண்புமிகு திரு. துரை ராமசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் சட்டப் பேரவைத் தலைவரை ஏகவசனத்தில் பேசியுள்ளார். தாங்கள் அவரை வெளியேற மட்டும் சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தண்டனை போதாது என்று நான் கருதுகின்றேன். அவைத் தலைவரையே மதிக்காமல், அவைத் தலைவர் அவையை நடத்துவதற்கு விடாமல் தடுத்து, இன்று காலை மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பேச விடாமல் தடுத்து, அவை நடவடிக்கைகளுக்கே குந்தகம் விளைவித்தது, பேரவைத் தலைவரை ஏகவசனத்தில் பேசிய பிறகு அவரை இங்கு அனுமதிப்பது நியாயமாக இருக்காது என்று கருதுகிறேன். அதை மறுபரிசீலனை செய்து தக்க தண்டனையை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு உடனடியாக விதிகளின்படி இருக்கின்ற அதிகாரத்தின்படி வெளியேற்றிவிட்டேன். இன்று முழுவதும் அவர் அவைக்கு வர முடியாது. மேற்கொண்டு தண்டனை கொடுக்க வேண்டுமென்று கருதினால் இது பேரவை முடிவு செய்கிற விஷயம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அது குறித்து கருத்து ஏதும் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுடைய நடவடிக்கைகள், சட்டமன்றத்தினுடைய பேரவை விதிகளுக்கு முரண்பாடாக இருந்த காரணத்தாலும், தங்களைத் தனிப்பட்ட முறையில் ஏகவசனத்தில் அவர்கள் கூறியதன் காரணமாகவும் அது சட்டமன்ற வரம்புக்கு மீறியது என்ற முறையில் தாங்கள் அவரை வெளியேற்றியிருக்கிறீர்கள். அது தாங்கள் எடுக்கக்கூடிய ஒரு சிறந்த தண்டனையாகும். அதுமட்டும் அல்லாமல் அவர் ஏக வசனத்தில் கூறிய அத்தனையையும் அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறீர்கள், ஆகவே, இந்தத் தண்டனையை இப்பொழுது பெரிதுபடுத்த அதிகப்படுத்த வேண்டாம். மீண்டும் அதே செயலைச் செய்வாரேயானால் அவருக்குத் தொடர்ந்து கடுமையான தண்டனை விதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நிகழ்ச்சிகளையெல்லாம் பார்ப்போம் என்று சொன்னால் நம்மிடம் மூன்றாண்டு காலம் நமமுடைய இதய தெய்வம் முதலமைச்சருடைய உதவியோடு அமைச்சர் பதவியில் உட்கார்ந்திருந்து, எல்லாச் சுகங்களையும் அனுபவித்து முடிந்த பிறகு கொஞ்ச காலம் வெளியேறியவுடனேயே எவ்வளவு ஆத்திரம் வந்திருக்கிறது அவருக்கு? அப்படி ஆத்திரப்படுகிறவரைக் கூட அழைத்து வைத்துக் கொண்டு, இன்றைக்குக் காலையிலே ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்ப்போம் என்று சொன்னால், இங்கேயிருந்து கண் ஜாடை மூலமாகவே நடந்ததைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தோம். இன்றைக்கு நம்மோடு சண்டைக்கு வருவதற்கு நம்மிடமே, நம்முடைய துரோகியாக இருப்பவரை அழைத்து வைத்துக்கொண்டு சண்டைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-20

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு திரு. விஸ்வநாதன் அவர்கள் எழுந்து இதை எழுப்புகிற இடமே மரியாதைக்குரிய நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய

உதவியால் கிடைத்த இடம். மரியாதைக்குரிய நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உதவியால் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு, இன்றைக்கு நம்மோடு சண்டை செய்ய, காங்கிரஸ் நண்பர்கள் அவரைத் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். நான் அந்த காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், திரு. விஸ்வநாதன் அவர்கள் நம்முடைய தயவால், நமமுடைய முதலமைச்சர் அவர்களுடைய தயவால் முன்பு அமைச்சராக இருந்து, இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அந்த இடத்தில் உட்காருவதற்கு உதவியாக இருந்தவரே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். அவர், இன்றைக்கு நமமுடைய கட்சிக்குத் துரோகம் செய்கிற நேரத்தில், பக்கத்திலே இருக்கிற நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கு உணர்ச்சிவசம் ஏற்படுவது நியாயம்தான். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தயவால் உயர்ந்திருக்கிற அங்கே இருக்கிற ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு நாட்டிலுள்ள உண்மை நிலைமைகளைச் சொல்கிறார்கள். நம்முடைய தயவால் என்று சொன்னால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தயவால் என்று சொன்னால், அடுத்த தடவை சட்டமன்றத்திற்கு வரமுடியாது என்ற உண்மையை அங்கே, இருக்கிற திரு. சிங்காரம் போன்றவர்கள் சொல்கிற நேரத்திலே அவர்களுக்கு மட்டும் எவ்வளவு ஆத்திரம் வருகிறது? அதே போலத்தான், நம்மிடம் இருந்தவர்கள், நம்முடைய தயவால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தயவால் வந்திருக்கிற இன்றைக்கு மற்றவர்களுக்கு நம்மைக் காட்டிக் கொடுக்கிற அந்த உணர்வோடு சொல்கிற நேரத்தில், ஆத்திரம் வருகிறதே ஒழிய, அடிதடி தகராறு எதுவும் நடக்கவில்லை, காங்கிரஸ் நண்பர்கள் நமமிடமிருந்து பிரிந்துபோய், துரோகியாக இருப்பவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மிகத் தெளிவாக நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரை ஒருமையிலே அழைத்த அழகிரி போன்றவர்கள், இந்தத் தடவை இது முதல் தடவை அல்ல; ஏற்கெனவே ஒரு நாள் உங்களைப் பார்த்து ஒருமையில் பேசினார்கள். இந்த நடைமுறையை நாம் சாதாரணமாக எடுத்துக் கொண்டால், பேரவைத் தலைவருடைய அந்த ஆசனத்தினுடைய மரியாதைக் கெட்டுவிடும். ஆகவே, இதற்கு நீங்கள் கண்டிப்பாக ஒரு முடிவு கட்டவேண்டும். இல்லையென்று சொன்னால், எல்லோரும் இதை எளிதாக எடுத்துக் கொண்டு, உங்களை அவ்வாறு பேசுவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, நீங்கள் அவசியம் இதற்கு முடிவு கண்டாக வேண்டுமென்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற தலைவர்களோடு பேசி, பிறகு என்னுடைய முடிவை அறிவிக்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கிற முகத்தான், இந்த விவாதத்திலே பங்கு கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியையும் அதே நேரத்தில் இந்த அவையிலே கருத்துக்களைச் சொல்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, இந்த இடத்திலே அமரச் செய்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர்நாடியாகவும், தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்விற்காக, தினமும் 18 மணி நேரம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் இதய தெய்வமாகவும் விளங்குகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

இன்று, உலக அளவில் ஒரு தனி மனிதனுடைய உயிருக்கும் உடைமைக்கும் பல நாடுகளில் பாதுகாப்பு இல்லை. அதற்கொப்ப, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற பல மாநிலங்களில், பல கட்சிகள் ஆட்சி நடத்தினாலும், அந்த மாநிலங்களில் பல பகுதிகள் சில தீவிரவாதச் சக்திகளின் ஆளுகைக்குட்பட்டு இரண்டாவது அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது, ஆக, தனி மனிதனுடைய உயிருக்கும், உடைமைக்கும் உத்திரவாதமில்லாத இந்தக் காலக்கட்டத்தில், தென்னிந்தியாவில் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு, இங்கே ஒரு தீவிரவாதக் கூட்டத்தினால் ஆட்கொள்ளப்பட்ட இந்தத் தமிழகத்தை மீட்டு, தீவிரவாதத்தை முழுமையாக ஒழித்துக் கட்டியதோடு மட்டுமல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்திற்கே முன்னோடியாகச் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, தனி மனிதனுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அரசாக, இன்று தமிழக அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நேற்று மேதகு ஆளுநர் அவர்கள், தன்னுடைய உரையிலே கூறியதற்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டன் என்ற முறையிலே, பெருமையோடு அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றுகூட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதற்காக —நேற்று காலை 10 மணி அளவிலே, இதே அவையிலே இந்த தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது இங்கே சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது, தனி மனிதனுடைய உயிருக்கும், உடைமைக்கும் இங்கே பாதுகாப்பு

இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துவிட்டுச் சென்ற, மேதகு ஆளுநரிடத்திலேகூட—சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கின்ற புகார்களைக் கொடுத்த தலைவர்கள் ஆளுகின்ற பல மாநிலங்களில் சட்டம் ழுங்கு மட்டும்கெட்டுவிடவில்லையா? அந்த மாநிலத்திலே ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்று சொன்னால் அந்த மாநிலத்தினுடைய முழுமையும் அவருடைய ஆளுமைக்கு உட்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நான்கு, ஐந்து மாவட்டங்கள் தீவிரவாதிகளுடைய கைப்பிடியிலே கிடைத்து ஏன் பல அமைச்சர்கள்கூட அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்ய முடியாத நிலைமை இன்று இருந்து கொண்டிருக்கிறது. அதுபோன்ற நிலைமையில் இருந்த இந்த மாநிலமும், இன்று, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு இங்கே தனி மனிதனுக்கு உரிய அத்தனை வசதிகளையும் அத்தனை பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

தனி மனிதனுக்கு உரிய பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல், பெண்கள் நலன் கருதி, பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் தீமைகளை அடுத்தவர்களிடத்திலே எடுத்துச் சொல்லக் கூடிய சூழ்நிலைமை இல்லாத நேரத்தில், பயமின்றி, சொல்கின்ற கருத்தை எந்த வித இடைஞ்சலுமின்றி சொல்வதற்காக தன்னுடைய சுயசிந்தனையால், தன்னுடைய அறிவாற்றலால் எழுந்த அடிப்படையில் இன்று தமிழகத்தில் 16 இடங்களிலே மகளிர் காவல் நிலையங்களை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இன்று உலக அளவிலே, எந்த நாட்டிலேயும் இதுபோன்ற பெண்களுடைய துன்பங்களை அறிந்து, பெண்கள் தாமாகவே முன்வந்து தங்களுடைய கஷ்டநஷ்டங்களை உரிய அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லி அதற்குத் தீர்வு காண்கின்ற வகையிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலைமை தமிழகத்தைத் தவிர இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, உலக அளவிலே இதுபோன்ற காவல் நிலையங்கள் எவரும் ஏற்படுத்தப்பட வில்லை. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதை அறிந்தோ, என்னமோ, தெரியவில்லை. பக்கத்தில் இருக்கும் நாடான பாகிஸ்தானிலே இன்று பிரதம அமைச்சராக இருக்கும் திருமதி பெனாசிர் பூட்டோ அவர்கள் அங்கே ஒரு மகளிர் காவல்நிலையத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அந்த ஒரு காவல் நிலையத்தைத் திறந்து வைத்தது உலக அளவிலே விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இதய தெய்வம்

1994 மார்ச் 17] [திரு. கா. பூ முனுசாமி]

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமைதியாக, பெண்களுடைய மேம்பாட்டுக்காக, 16 காவல் நிலையங்களைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அதற்காக மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இந்தக் காவல் துறையை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக, மைய அரசை வேண்டிக் கேட்டிருந்தாலும், மைய அரசு 10 கோடி ரூபாய் கொடுத்திருந்தாலும்—மேலும் நிதியை வேண்டி, மைய அரசைக் கேட்காமல் இந்தக் காவல் துறையை மேம்படுத்துவதற்காக மாநில அரசே தன்னுடைய பணத்தில் மேலும் 10 கோடி ரூபாயை இந்த ஆண்டிலே செலவு செய்து, மேம்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கியிருப்பதை பெருமகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

மேலும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்கள் கண்ட கனவுகளை இதய தெய்வம் புரட்சித் தலைவர் இருந்த காலத்தில்கூட நிறைவேற்ற முடியவில்லை. ஆனால், இன்று இதய தெய்வம், ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு, தந்தை பெரியார் கண்ட கனவுகளையும்-தந்தை பெரியார் கிட்டத்தட்ட 60 ஆண்டுகாலமாக இந்த தமிழக மக்களுக்கு வேண்டிய உரிமைகளுக்காகப் போராடி இறந்துவிட்டார் அவர் மறைந்த பின்பும், அவருடைய கனவுகள் நிறைவேறியதா என்று கேட்டால், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த போதுதான் ஒருசில திருத்தங்களைக் கொண்டு வர முடிந்தது. ஆனாலும், தந்தை பெரியார் அவர்கள் கண்ட கனவை முழுமையாக அவரால் நிறைவேற்ற முடியவில்லை.

அவருடைய வாரிசாக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 11 ஆண்டு காலம் ஆட்சி செய்தபோது தந்தை பெரியார் கண்ட கனவுகளை, இங்கே நினைவுக்குக் கொண்டு வந்து, அமல்படுத்தினாரா என்று சொன்னால் அவராலும் செய்து பார்க்க முடியவில்லை. இன்று, இந்த ஆட்சியிலே இருக்கின்ற இந்த முப்பெரும் தலைவர்களுடைய பிரதிநிதியாக அமர்ந்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தவுடன் சமூக நீதியை தன்க்கு மிகப் பெரிய சவாலாக எடுத்துக் கொண்டு, தந்தை பெரியார் கண்ட கனவை இன்று இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நிறைவேற்றியதோடு மட்டும் அல்லாமல், மைய அரசிற்கு ஒரு சட்டத் திருத்தத்தை தீட்டி, ஜனாதிபதிக்கு அனுப்பி அதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்றக் கோரிக்கையையும் விடுத்து, துணிவோடு செயல்படுகின்ற இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை, முப்பெரும் தலைவர்களுடைய பிரதிநிதியாக நான் இங்கே பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

[திரு. கா. பூ. முனுசாமி] [1994 மார்ச் 17 பிற்பகல் 12-30

அதோடு மட்டுமல்லாமல் இன்று கோவில் புனரமைப்பிலே ஒரு மிகப் பெரிய புரட்சியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே நான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்தக் கோவில் புனரமைப்பு நிதியிலே கடந்த ஆண்டு 48 கோவில்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே குலோத்துங்கன் ஆட்சி செய்த நேரத்திலே பென்னேஸ்வரமடம் என்கிற கிராமத்திற்கு அருகாமையில் பென்ன ஈஸ்வர ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு இன்று அது பழுதடைந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஆலயத்தைக் கண்டுபிடித்து சீரமைக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுமார் 7 இலட்சம் ரூபாய் இந்த நிதியிலிருந்து ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை எளியவர்கள் வாழவேண்டும் என்பதற்காக நல்ல திட்டங்களைத் தீட்டி எப்படி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ அதேபோல பக்தர்களே இல்லாமல் பக்தர்களே வந்து பார்க்காமல் இருக்கின்ற பழைய ஆலயங்களை தத்து எடுத்துக்கொண்டு இறைவனை வழிபடுகின்ற ஒரு சூழ்நிலையை ஒரு கால பூஜையாவது செய்யவேண்டும் என்பதற்காக திட்டங்களைத் தீட்டி கடந்த ஆண்டு மட்டும் 512 கோவில்களுக்கு ஒரு கால பூஜைக்கு உத்தரவிட்டிருந்தார்கள். அதைத் தொடர்ந்து இந்த ஆண்டும் 2,500 திருக்கோவில்களுக்கு ஒரு கால பூஜை கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைப் பார்க்கும்போது உண்மையிலேயே ஆன்மீகவாதிகளுக்கு ஒரு மிகப் பெரிய அருமருந்தாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று காட்சியளித்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல கோவில் நிர்வாகத்திலே எப்படி ஒரு புரட்சி ஏற்படுத்தினார்களோ அதேபோல தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகள் எந்த நேரத்திலேயும் காப்பாற்றப் படவேண்டும். அந்த ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுகின்றபோதோ அல்லது அதற்கு ஆபத்து ஏற்படும்போதோ நான் வாளா இருக்க மாட்டேன் என்பதற்கு உதாரணமாக காவிரிநீர்ப் பிரச்சினையிலே நடுவர் மன்றத் தீர்ப்பு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று காத்திருந்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், இந்த ஜீவாதாரப் பிரச்சினையை நான் விடமாட்டேன் என்று மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். உலக வரலாற்றிலே

1994 மார்ச் 17] [திரு. கா. பூ. முனுசாமி]

ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற தலைவர்கள் உண்ணாவிரதம் இருப்பது என்பது மிகமிக அரிது. அதற்கு முன்னுதாரணமாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரிசி வேண்டி மத்திய அரசை எதிர்நோக்கி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார். அன்று ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பிலே இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததை அறிந்த உடனேயே துரிதமாக நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவந்தார். இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது அன்று ஆட்சிக் கட்டிலிலே இருந்த மாண்புமிகு அன்னை இந்திரா காந்தி அவர்களைப் போல், இன்றைக்கு ஆட்சிக் கட்டிலிலே இருக்கின்றவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. ஏதோ அரசியல் ஆதாயத்திற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி உண்ணாவிரதம் இருந்தார் என்பதைப் போல அவர்கள் நடந்துகொண்டார்கள். ஆனால், இந்த ஜீவாதார உரிமைப் பிரச்சினையில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தன்னுடைய உயிரே போனாலும் சரி, இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவு பெறுகின்றவரையில் நான் உண்ணாவிரதம் மேற்கொள்வேன் என்று கடுமையாக மேற்கொண்டார். அப்படி மேற்கொண்ட காலகட்டத்தில் மக்கள் தலைவி என்பதை தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்திய துணைக் கண்டமே தெரிந்துகொள்கின்ற வகையிலே தமிழகத்தினுடைய மக்கள் நடந்து கொண்டார்கள். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உண்ணாவிரத நோன்பை மேற்கொண்டபோது, கோடிக்கணக்கான கழகத் தொண்டர்கள் உண்ணா நோன்பை மேற்கொண்டார்கள். அதுமட்டுமல்ல, அரசியலுக்கு அப்பாற்பட்டு நல்ல ஆட்சி நடத்துகின்ற காரணத்தினால் இவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை இடங்களிலும் கடைகள் மூடப்பட்டன. போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இப்படி தன்னிச்சையாக இருந்து வந்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அந்த உண்ணா நோன்புக்கு ஆதரவு தருகின்ற வகையிலே தமிழகமே புரட்சித் தலைவி பக்கம் இருந்ததை இந்தியத் துணைக்கண்டமே கண்டு அதிசயித்தது. அந்த நிகழ்ச்சியைக் கண்டு, மேலும் தொடர்ந்தால், நிச்சயமாக தமிழகத்தில் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்படும் என்பதற்காக மத்திய அரசு பணிந்துவந்து ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் தண்ணீர்ப் பிரச்சினையாக

இருந்தாலும் சரி அல்லது மழை வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி, இன்று தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்ததோடு மட்டுமல்லாமல், ஒரு உயரிய இலக்கை அடைந்துள்ளதை இந்த நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் தமிழகத்தினுடைய வரலாற்றைப் பார்க்கின்றபோது, உணவு தானியங்கள் கிட்டத்தட்ட 100 இலட்சம் டன் மதிப்பீட்டில் விளையக் கூடிய நிலையில் தமிழகம் நிறைவு பெற்று இருக்கிறது.

அதிலே அரிசி தானியம் மட்டும் 84.5 இலட்சம் டன். இந்த அளவுக்கு தமிழகத்தில் விளைகிறது என்று சொன்னால் உழவர்களுக்கு அந்த அரசு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு நல்கி இருந்தால் இவ்வளவு உயர்ந்த நிலையிலே தானியங்கள் விளையக்கூடிய நிலைமை வரும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல் கரும்பு உற்பத்தியை எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால் கூட இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு கிட்டத்தட்ட 51 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி இன்று தமிழகத்திலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் உபரியாக விளைந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி விளைபொருள் விளைவதற்கும் தொழில்கள் துவங்குவதற்கும் அடிப்படைத் தேவை என்ன என்பதை உணர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மின் துறைதான் இதற்கு அடிப்படைத் தேவை எனவே இதை நல்ல முறையில் திட்டமிட்டு தமிழகத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைத்து ஒரு பெரிய திட்டத்தையே தமிழகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் 1,500 மெகாவாட் திட்டம் 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதாவது ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியோடு இணைந்த ஒரு திட்டத்தை முடிவு .செய்திருக்கிறார்கள். அநேகமாக தமிழக வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய முதலீடு செய்து ஆரம்பிக்கிற ஒரு தொழில் இதுவாகத்தான் இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் 20, 25 ஆண்டுகள் திராவிட இயக்கம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நிலையில் ஒரு. தொழிலை ஆரம்பிப்பதற்காக 7,400 கோடி ரூபாய் முதலீடு செய்து எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப் படவில்லை என்பதை .இந்த நேரத்தில் திட்டவட்டமாக நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகுதான் மத்திய அரசின் உதவி கூட இல்லாமல் தன்னுடைய திறமையால் இன்றைக்குக் கிட்டத்தட்ட 1,500 மெகாவாட் உற்பத்தி செய்வதற்காக 7,500 கோடியை தமிழகத்திலே அள்ளித்

தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் தமிழகம் முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை எப்படி அர்ப்பணித்து அதற்காகத் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் எனபதை இந்த நேரத்திலே நாம் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இதோடு நின்றுவிடாமல் மேலும் ஒரு புதிய முயற்சியாக கடல் அலையில் இருக்கின்ற வெப்பத்தை வைத்துக்கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யவேணடும் என்கிற புதியஒரு திட்டத்தைகூட்டு முயற்சியைஇன்றைக்குஇதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். உலக அளவில் மிக உயர்ந்த தொழில் நுட்பம் விஞ்ஞான நுட்பம் கொண்ட நாடுகளிலே கூட இந்த முயற்சியில் ஈடுபடாமல் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு தமிழகத்திலே டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்காக முயற்சி செய்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இந்தத் திட்டம் இந்த முயற்சி நிறைவேறக் கூடிய சூழ்நிலையில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி 7,500 கோடி ரூபாயில் ஒரு திட்டம்; 1,200 கோடி ரூபாயில் ஒரு திட்டம்; 800 கோடி ரூபாயில் ஒரு திட்டம் என்று மின்துறைக்கு மட்டும் பல கோடி ரூபாய் முதலீட்டினை இந்தத் தமிழகத்திலே செலவழிக்கின்ற மிகப்பெரிய ஒரு சூழ்நிலையைக் கொண்டு வந்திருப்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுவதோடு, வணங்கி வரவேற்கிறேன். மேலும் இப்படி மின் உற்பத்தியைக் கொண்டு வருவதன் மூலம் தொழில் முனைவோர் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் தொழில் துவங்க ஒரு நல்லசூழ்நிலையை இததெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அதேபோல் தண்ணீர்ப் பற்றாக்குறை சென்னை மாநகருக்கு வந்தது. கடந்த பல ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் கூட தண்ணீர்ப் பற்றாக்குறை வந்தபோது இந்த சென்னை மாநகரின் தேவைக்கேற்ப தண்ணீர் கொடுக்க முடியவில்லை. ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வாரம் ஒரு முறை உரிய அதிகாரிகள் உரிய அமைச்சர்களை அழைத்து இந்தச் சூழ்நிலையில் நீங்கள் எந்தத் திட்டத்தைத் தீட்டி இருக்கிறீர்கள், நான் இந்தத் திட்டத்தை முன் வைக்கிறேன். இதை உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று சொல்லி 64 கோடி ரூபாய் செலவு செய்து சென்னையில் குடிநீர்ப் பிரச்சினையே இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறார். ஆனால் எதிர்க்கட்சியினர் வெறும் வாயில் அவல் தின்கிற முறையில் ஏதோ இரண்டு குடங்களை வைத்துக் கொண்டு கலாட்டா செய்ததை தவிர வேறல்ல. ஆனால் பொதுமக்கள் வரவேற்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர் இதயதெய்

வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அதோடு மட்டுமல்ல. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை 1989—ல் இருந்த ஆட்சியாளர்கள் கூட நிறைவேற்ற முடியாமல் தவறிவிட்ட சூழ்நிலையில் உடனடியாக ஆந்திரா அரசினுடைய முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி வருகிற 1995 ஆம் ஆண்டிலே தெலுங்கு கங்கைத் திட்டம் நிறைவேறி நிச்சயமாக சென்னைக்குக் குடிநீர் வரும் என்று உறுதி அளித்திருப்பது சென்னை வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதோடு மட்டுமல்லாமல் தெலுங்கு—கங்கைத் திட்டத்தைக் கொண்டுவருகின்ற அதே நேரத்தில் அந்த தண்ணீரை முறைப்படுத்தி மக்களுக்கு முறையாகச் சென்று அடையக் கூடிய நிலையிலே சுமார் 781 கோடி ரூபாய் திட்டத்தில் தண்ணீரைப்பிரித்து கொடுப்பதையும், கழிவு நீரை வெளியேற்றுவதையும், மற்றும் விநியோகம் செய்வதையும் நிறைவேற்ற உரிய உடனடி திட்டங்களை அமல் செய்து தண்ணீர் வருகின்ற அதே நேரத்தில் முறையாக செல்வதற்கு, மக்களை சென்றடைவதற்கு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்தாமல் இருந்து கொண்டிருக்க முடியாது.

அதேபோல இப்படி தொழில்துறை மின்துறை தண்ணீர் விவசாயம் என்று பல துறைகளிலேயும் இன்று தமிழகம் தன்னிறைவு பெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நல்ல நிலல்யிலே சமூகநலத்துறையிலே மிகப் பெரிய புரட்சியை இதய தெய்வவம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டு இருக்கின்றார்கள். இன்று உலக அளவிலே பல தலைவர்களை அன்னை தெரசா அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பல தலைவர்களைச் சந்தித்து இருந்தாலும் அவர்களைபாராட்டியதாக எந்த பத்திரிகையிலேயும் நான் பார்த்தது இல்லை. பல பெண் தலைவர்களை அவர்கள்சந்தித்து இருப்பார்கள். இன்று ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சந்தித்துப் பாராட்டியது. போல பக்கத்து நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற பெனாசிர் பூட்டோவையும் சந்தித்திருப்பார்கள். பிலிப்பைன்ஸ் நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அகினோவையும் சந்தித்து இருப்பார்கள். ஏன் ஒரிசா மாநிலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நந்தினி சத்பதியையும் சந்தித்திருப்பார்கள். பக்கத்து நாடான இலங்கையிலே ஆட்சி புரிந்த திருமதி பண்டாரநாயகா அவர்களையும் சந்தித்திருப்பார்கள். அவர்களை அமைதியின் திரு உருவாக இருந்து கொண்டிருக்கும் அன்னை தெரசா சந்தித்து வரவேற்று இருப்பார்களே மட்டுமல்லாமல் வேறு ஒன்று

சொல்லவில்லை. ஆனால் நம் முதலமைச்சர் அவர்களிடம் ''நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த நல்ல நாளிலே ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து குழந்தைகளுக்கும், ஏழையெளிய மக்களுக்கும் ஏற்ற ஒரு இந்த நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்துவதற்காக நான் பாராட்டு கிறேன்'' என்று பாராட்டி இருக்கிறார்கள். இப்படி எந்தத் தலைவர்களையும் அன்னை தெரசா பாராட்டியதாக நான் பத்திரிகையிலே பார்த்தது இல்லை. ஆனால் இன்று இங்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அவருடைய இல்லம் தேடி சென்று, நல்ல திட்டங்களைத் தீட்டி ஏழையெளிய குழந்தைகளுக்கு அமல் செய்து கொண்டிருக்கிறீர்கள், நான் வாழ்த்துகிறேன் என்று வாழ்த்துபவர் யார் என்று சொன்னால் நோபல் பரிசு பெற்றவர், நோபல் பரிசு பெற்றவர் என்பதை விட இந்த உலகிலே சமூக சேவை செய்து கொண்டிருக்கின்ற, நடமாடும் தெய்வம், அன்னை தெரசா அவர்கள், அவருடைய திருவாயால் ஒரு முதலமைச்சரைப் பாராட்டுகிறார் என்று சொன்னால் அவர் கொண்டுவந்த திட்டங்கள் எவ்வளவு உயரிய லட்சியம் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதோ ஆட்சிக்கு வருகிறோம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே மக்களைத் திருப்தி படுத்துவதற்காக சில திட்டங்களைத் தீட்டுகிறோம், மீண்டும் அடுத்த முறை தேர்தலிலே நிற்கின்ற போது, அந்தத் திட்டங்களை வைத்து எங்களுக்கு வாக்கு போடுங்கள் என்று கேட்கிறோம். அந்தத் திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொண்டால் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்துவிடுகிறோம். அதற்குத் தக்கவாறு திட்டங்களைத் தீட்டிக் கொண்டு செல்வதுதான் ஒரு சாதாரண நடைமுறையிலே உள்ள தலைவனுடைய வாடிக்கை. ஆனால் ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட பின்பு ஒரு நிலையான ஒரு பிடிப்புள்ள திட்டத்தைத் தீட்டி எதிர்காலத்திலே குழந்தைகள் எந்தச் சூழ்நிலையிலேயும் பாதிக்கப்படக்கூடாது, அவர்களுடைய எதிர்காலம் நல்ல நிலையிலே இருக்க வேண்டும் என்பதற்காக திட்டங்களைத் தீட்டியதோடு மட்டுமல்லாமல், அவருடைய வருவாய் எவ்வளவு வரும் என்று பார்க்காமல், அதனால் அரசியல் ஆதாயம் எவ்வளவு என்று பார்க்காமல், அந்தத் திட்டத்தினால் எதிர்காலத்திலே குழந்தைகள் எந்தச் சூழ்நிலையிலேயும் பாதிக்கப்படக்கூடாது என்பதை உருவாக்குகின்ற இந்தத் திட்டத்தில் புரட்சித் தலைவி அவர்கள் முனைந்திருப்பதை அன்னை தெரசா அவர்கள் பாராட்டியிருப்பது உண்மையிலேயே, திராவிட இயக்கத்திலே வந்த தலைவர்களில் மிக உயர்ந்த தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற ஒரு சூழ்நிலையை அன்னை தெரசா அவர்கள் புரட்சித் தலைவி அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அன்னை தெரசா அவர்களுக்கு இந்த நேரத்திலே நான்

நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட 15 அம்ச திட்டத்தைக் கொண்டு வந்து இன்று சமூகநலத் துறையிலே மிகப்பெரிய ஒரு புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அப்படி புரட்சி ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்ற காரணத்தினால்தான் சமூக நலத்துறையைப் பொறுத்தவரையிலே இந்தியத் துணைக் கண்டத்திலே மைய அரசு கொடுக்கின்ற அந்த ஒரு பாராட்டுப்பத்திரமும் அல்லது பரிசுப் பொருட்களும், கிட்டத்தட்ட 22 பரிசுப் பொருட்களை தமிழகம் பெற்றிருக்கிறது. இந்த 22 பரிசுப் பொருட்களைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமுதாயத்திலே இருக்கின்ற ஏழையெளிய சிறார்களுக்கு, ஊனமுற்றோர்களுக்கு, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையிலே திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். திட்டங்களைத் தீட்டுவதோடு மட்டுமல்லாமல் அமல்படுத்தியும் இருக்கின்றார்கள். நிறைய ஆட்சியாளர்கள் திட்டங்களைத் தீட்டுவார்கள். அதற்கு நிதி ஒதுக்குவார்கள். திட்டங்களைத் தீட்டி நிதி ஒதுக்குவதோடு சரி, அந்த நிதி எங்கே செல்கிறது என்று தெரியாது. போய் பார்ப்போம் என்று சொன்னால், ஏதாவது அதிகாரிகளிடத்திலேயும், அரசியல்வாதிகளிடத்திலேயும், சென்றுவிடும்.

பிற்பகல் 12-45

ஆனால் இங்கே நம்மைப் பொறுத்தவரையில், திட்டங்களைத் தீட்டுவதோடு மட்டுமல்லாமல், அதை நிறைவேற்றுகின்ற தன்மையினால்தான் இன்று இங்கே இவ்வளவு பெரிய பரிசுகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெற்றுக்கொண்டிருக்கிறது. இப்படி பெற்றுக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சமூக நலத் துறை மட்டுமல்லாமல், மற்ற துறைகளிலும் சரி, போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால், 7 பரிசுகளில் 5 பரிசுகளை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பெற்றிருக்கிறது, அதைப் போலவே, வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, இங்கே புதிய கண்டுபிடிப்புகளுக்கு பரிசுகளை இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது. இப்படி புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கும், செய்கின்ற செயல்முறைகளை ஒழுக்கமாக செய்கின்ற காரணத்தால் அவைகளுக்கும் இன்றைக்கு மத்திய அரசு பல பாராட்டுகளையும், பத்திரங்களையும், இந்த அரசுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. அரசியல் ரீதியாக காழ்ப்புணர்ச்சி எப்படி இருந்தாலும் சரி, அரசு ரீதியாக செய்கின்ற திட்டங்களை நல்லமுறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் — அரசியல் ரீதியாக காழ்ப்புணர்ச்சி கொண்டிருக்கின்ற மத்திய அரசு கூட அதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நமக்கு பாராட்டுப் பத்திரங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்படி அத்துணைத் துறைகளிலும் வளர்ந்து கொண்டிருக்கிற இந்தத் தமிழகத்தை

மேலும் வளர்க்க தமிழகத்தினுடைய தாய்மொழியாக இருக்கின்ற தமிழ் மொழிக்கு ஒரு கிரீடம் வைக்க வேண்டும் என்பதற்காக எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அடுத்த ஆண்டு தஞ்சையில் கொண்டு வருவதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்படி பாராட்டியிருப்பதற்குக் காரணம் தாய் மொழியாம் தமிழ் மொழியை உலக அளவில் இருக்கின்ற அத்தனை கவிஞர்களையும் அழைத்து இந்தத் தமிழுக்கு மேலும் மெருகூட்டுகின்ற வகையிலே தஞ்சையிலே இதைக் கொண்டு வர வேண்டும்-ஏனென்று சொன்னால் தமிழர்களுடைய கலாச்சாரங்களினுடைய பாரம்பரியமிக்க அந்த இடத்திலே இந்த உலகத்தமிழ் மாநாட்டைக் கொண்டு வருகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் மனமார பாராட்டி வரவேற்கின்றேன்.

மேலும் பல தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது தங்களுடைய பெயர் நாளைக்கு பத்திரிகையில் வர வேண்டும் என்பதற்காக நல திட்டங்களை ஒதுக்குவார்கள்—ஒதுக்கி முடிந்த பிறகு — முடிந்த உடனே — கொடுக்கின்றபோதே வேகப்படுத்துவார்கள்—முடித்து விட்டு சென்று விடுவார்கள். ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலிலே சென்னையிலே மக்களை அழைத்து மாவட்ட வாரியாக ஏழையெளியவர்களுக்கு உதவ வேண்டுமென்று முயற்சி செய்து பார்த்தார்கள். அதில் ஓரளவுக்குத் தான் மக்களை நேரடியாகப் பார்க்க முடிந்தது. எனவே மாவட்ட வாரியாக செல்கிறேன் என்று சொல்லி இந்த 1½ வருடக் காலத்திற்குள்ளாக 13 மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று கிட்டத்தட்ட 201 கோடி ரூபாயை ஏழை எளியவர்களுக்கு உதவுகின்ற வகையில் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் கிட்டத்தட்ட 3 லட்சம் பேர்கள் மிகப்பெரிய பயனை அடைந்திருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இது போன்ற நலத் திட்டங்களை வழங்குகின்றபோதே மிக அழகாக அறிவுரையாக சொல்கின்ற அந்தக் கருத்தை இங்கே நான் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நலத் திட்ட உதவிகளை வழங்கி கடன்களை வழங்கி அவர்களுக்கு அறிவுரை வழங்குகின்றபோதே அந்தக் கடன்களைப் பெறுகிறவர்கள் மேலும் முன்னேற வேண்டும், மேலும் வளர வேண்டும் என்ற துடிப்பு அவர்கள் மனதிலே ஏற்படுகின்ற வகையிலே புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை கூறுகின்றார்கள். இந்த அரசு உங்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், உங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும், நீங்கள் தொழில் செய்வதற்கும் ஒரு சிறுதொகை கொடுக்கிறது. இந்தத் தொகையைப் பயன்படுத்திக்கொண்டு, மேலும் நீங்கள் வளர்ந்து, பொருளாதாரத்திலே மேம்பட வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்,

என்று ஒவ்வொரு மேடையிலேயும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தைக் கேட்கின்றபோது, உதவியைப் பெறுகின்றவர்கள் அதை ஏதோ கடனுக்குக் கிடைக்கிறது, செலவு செய்து விடுவோம் என்ற கருத்தை ஒதுக்கி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று மேலும் தாங்கள் வளர வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்குகின்ற வகையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே கருத்துக்களை எடுத்துச்சொல்வதை நான் இங்கே நினைவுகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாதனைகளை மேதகு ஆளுநர் அவர்கள் நேற்றைய உரையிலே தெள்வாகவும், விளக்கமாகவும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மேதகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி கூறி, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

பிற்பகல் 12-50

*திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி கூறி, தாழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்தை தலை நிமிர வைத்த தன்மான உணர்வுடைய எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திசை நோக்கித் தொட்டுக் கும்பிட்டு, நான் உரையைத் தொடர்கிறேன்.

இந்தச் சட்டப் பேரவையில் காலை முதல் தொடர்ந்து எதிர்க் கட்சியினர் சபையிலே அமராது வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். இது இன்று மட்டுமல்ல, தொடர்ந்து கடந்த கூட்டத் தொடரிலே இருந்து இதையே செய்து வருவது என்பதிலிருந்து, அவர்கள் இந்த அவையிலே அமர்ந்து விவாதிக்கிற தகுதி அற்றவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. உதாரணமாக சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைக்கு முன்னால், அவர்களுடைய தலைவர்கள் பத்திரிகையின் மூலமாகப் பல்வேறு விமர்சனங்களை அள்ளி வழங்குகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதை எல்லாம் விவாதப் பொருளாக்கி, எங்களுக்கு முன்னாலே பதில் சொல்லுகின்ற திறமையற்றவர்கள், இது போன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கின்ற நிகழ்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

1994 மார்ச் 17] [திரு. வெ. பழனிசாமி]

நேற்றையதினம் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே இந்த நாட்டினுடைய பல்வேறு திட்ட அம்சங்களைப் பாராட்டி, கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தினுடைய ஆட்சி சட்டம் ஒழுங்கு சீர் குலைவு இல்லாமல், விடுதலைப் புலிகள் ஊடுருவல் இல்லாமல், சிறந்த நிர்வாகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நேற்றையதினம் அவர்கள் எடுத்துக் காட்டி, இந்த மாமன்றத்திலே கூறி இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் நாம் இரண்டு கடுமையான சூழ்நிலைகளைச் சந்தித்தோம். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த ஆட்சியை பொறுத்த வரையில் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குறிப்பிடுகிற நேரத்திலேகூட, நாங்கள் மலர் படுக்கையில் நடந்து வரவில்லை, கடுமையான முள் புதரிலே நடந்து வந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆம், உண்மைதான். கடுமையான நெருஞ்சி முள்ளிலே நடந்து வந்திருக்கிறோம். ஆனால் முள் கொஞ்சம் கூடப் படாமல் நம்மீது தொத்திக்கொண்டு வந்து, ஆட்சியில் அமர்ந்தவர்கள், எதிர்க் கட்சியிலே உட்கார்ந்து கொண்டு இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்குக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டிருக்கின்ற ஒரு தவறான அரசியல் நடத்திக் கொண்டிருப்பதை நாம் தமிழகத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் இந்த அரசு எந்த அளவுக்குக் கவனத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கும் அவைக்கும் தெளிவாகத் தெரியும். இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெற்ற நேரத்தில், அதற்குப் பின்னால் கவர்னருடைய ஆட்சி நடைபெற்ற நேரத்தில் விடுதலைப் புலிகளே இல்லை என்று அன்றைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அன்றைய தமிழகத்தினுடைய எதிர்க் கட்சித் தலைவராக இருந்த அன்னை, இன்றைய முதல்வர் அவர்கள், நிச்சயமாகத் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுடைய முகாம்கள், ஊடுருவல்கள் இருக்கிறன என்பதை எடுத்துக் காட்டியதன் விளைவாக இன்றைக்கு அவர்களுடைய பெயர் விடுதலைப் புலிகளுடைய 'ஹிட் லிஸ்ட்'-லே இருக்கக்கூடிய அளவுக்கு, அன்றைக்கு மிக ஆழமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே நாம் அதை நிரூபித்துக் காட்டினோம். கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகளும், பருத்தி ஆலைகளும், பனியன் தொழிற்சாலைகளும், இரும்பு-எஃகு ஆலைகளும்தான் இருக்கின்றன என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் கோவை மாவட்

டத்தில் விடுதலைப்புலிகளுடைய வெடி குண்டு தொழிற்சாலையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்களுக்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு தான் நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். நடவடிக்கையும் எடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் வேதாரண்யம் கடற்கரையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை நாம் கைப்பற்றி இருக்கிறோம். தஞ்சையிலும் அதேபோன்று ஆயுதங்களை நாம் கைப்பற்றி இருக்கிறோம். தமிழகத்திலே விடுதலைப் புலிகளை வேரோடு நாம் அறுத்திருக்கிறோம். விடுதலைப்புலிகளுடைய நடமாட்டம் இல்லை என்கிற நிலைமையை இன்றைக்கு உள்துறை அமைச்சரே பாராட்டக்கூடிய அளவுக்கும், இதே மாமன்றத்தில் கடந்த கூட்டத் தொடருக்கு முன்னால், அவர்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய மறைவுக்குப் பின்னால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு எங்களுடைய தலைவனுடைய உயிரைக் குடித்தவர்கள் எல்லாம் கூண்டோடு வேரோடு அறுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இந்த மாமன்ற உறுப்பினர்கள் பேசிக் காட்டியதை எல்லாம் நாம் பார்த்தோம். இன்னும் ஒரு படி மேலே போய், காங்கிரஸ் கட்சியினுடைய ஒரு மூத்த உறுப்பினர் உணர்ச்சிவசப்பட்டு, தாயே, நீங்கள் தமிழ்நாடு முதலமைச்சராகக்கூட இருக்கக்கூடாது; இந்த நாட்டினுடைய பாரதப் பிரதமராக (மேசையைத் தட்டும் ஒலி) வர வேண்டுமென்றெல்லாம் பாராட்டிய நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஓராண்டுக்கு முன்னால் பாராட்டியவர்கள், சட்டம் ஒழுங்கு சீர் குலையவில்லை என்று சொன்னவர்கள், தமிழகத்திலே விடுதலைப் புலிகளை வேரோடு சாய்த்துவிட்டார்கள் என்று சொன்னவர்கள், ஓராண்டுக்குப் பின்னால் வெளியிலே ஒன்று சொல்லுவது, உள்ளே ஒன்று சொல்லுவது என்ற சூழ்நிலைகளை நாம் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2½ ஆண்டு ஆட்சியில் முழுமையாக விடுதலைப் புலிகளை அகற்றி இருக்கிறோம்.

பிற்பகல் 12-55

ஆனால் இன்றைக்கு காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலங்களின் நிலைமைகள் எல்லாம் பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் தெளிவாகத் தெரிந்திருக்கும். இன்று, நேற்றல்ல, பல்லாண்டுக் காலமாக ஆந்திர மாநிலத்தின், நக்சலைட்டுகளின் ஆட்சிதான் அங்கே ஒரு பகுதியாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் தெளிவாக உணரவேண்டும். குறிப்பாக அந்தப் பகுதியின் ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை நக்சலைட்டுகள் கடத்திக் கொண்டு போய்விட்

1994 மார்ச் 17] [திரு. வெ. பழனிசாமி]

டார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய மனைவி, அந்த நாட்டின் முதலமைச்சரிடத்திலே புகார் கொடுத்தும் கூட, அவரை விடுவிக்கக் கடுமையான முயற்சி எலதயும் மேற்கொள்ளவில்லை என்பதையும், இன்னும் ஆந்திராவிலே நக்சலைட்டுகளைக் கேட்டுத்தான் அதிகாரிகள் செயல்பட வேண்டும் வரி வசூலிக்கவேண்டும் என்றெல்லாம் பல்லாண்டுக் காலமாக அங்கே இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற ஆந்திர மாநிலத்தில் தொடர்ந்து இது போன்ற தீவிரவாதிகளை, நக்சலைட்டுகளை ஒழிக்கமுடியாதவர்கள் அங்கே இருக்கிறார்கள். ஆனால் முழுமையாக சட்டம் ஒழுங்கு காக்கப்பட்ட மாநிலம் ஒன்று இன்றைக்கு இருக்கிறது என்றால் அது தமிழ்நாடுதான் என்று, நமது தோழமைக்கட்சிகள் கூட அல்ல, முன்னாள் பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களே சொல்கிறார். இன்றைக்கு பயமின்றி அச்சமின்றி நடமாடக்கூடிய அளவில் ஒரு மாநிலம் இருக்கிறது என்று சொன்னால், அது தமிழகம்தான் என்று எடுத்துக் காட்டக்கூடிய அளவுக்கு இந்த அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இன்றைக்குத் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் கர்நாடகத்தின் நிலை என்ன என்பதையும், கேரளாவிலே என்ன நிலை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கேரளாவிலே அண்மையில் பாலக்காட்டிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் கொலை செய்யப்பட்டதும் அதைத் தொடர்ந்து பி. ஜே. பி. கட்சியின் தொண்டர் கொலை செய்யப்பட்டதும், அதையும் தொடர்ந்து காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வெட்டிச் சாய்க்கப்படுகின்ற பல்வேறு காட்சிகளும் தொடர்ந்து கேரளமாநிலத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. நம்மைச்சுற்றியிருக்கிற ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் கேரள மாநிலம் போன்ற பல்வேறு இடங்களில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்திருக்கிறது என்பது இன்று நாடறிந்த உண்மையாகும்.

அது மட்டுமல்ல, இன்றைக்குக் காவிரி நீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், இந்த நாட்டில் உள்ள மற்ற மாநிலங்கள் மத்திய அரசினுடைய போக்கால் வெட்கித் தலை குனியக் கூடிய நிகழ்ச்சிகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. நடுவர் மன்றத்தின் தீர்ப்பையொட்டி, நாம் நியாயம் கேட்டோம். கொடுக்க மறுத்தார்கள். மாறாக என்ன செய்தார்கள்? ** லட்சக்கணக்கான மக்களுடைய உடைமைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு பெண்களையெல்லாம் கற்பழித்து அவர்களுடைய வீடுகளுக்கெல்லாம் தீ வைத்து. அவர்களை ஓட ஓட விரட்டினார்கள். (மணியடிக்கப்பெறறது)

** மாண்புமிகு சேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, **என்ற மாதிரி வார்த்தைகள் வேண்டாம். பொதுவாக மற்ற மாநிலங்களில் என்று கம்பாரிட்டிவ் ஆகச் சொல்லுங்கள். எனவே, **என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. வி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபையின் மரபுக்காக நீங்கள் அதை எழுதி விட்டாலும், உண்மையில் இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் அவர்கள் எந்த அளவுக்கு கீழே இறங்கியிருக்கிறார்கள் என்று.

ஆகவே, இலட்சக்கணக்கான மக்கள் தமிழகத்திற்குக் குற்றுயிரும் குலை உயிருமாக ஓடிவந்தார்கள். கர்நாடக மாநிலத்திலே சென்று பல்லாண்டு காலமாகத் தாங்கள் சேர்த்துவைத்த உடைமைகளை எல்லாம் விட்டுவிட்டு, கண்ணீரும் கம்பலையுமாக அவர்கள் வந்த அந்த நேரத்தில், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு இருந்தார்கள் என்றால் இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாடு என்ன ஆகியிருக்கும் என்பதை, காங்கிரஸ் கட்சியின் மனச்சாட்சியுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும். ஆனாலும் கூட அகதிகளைப் போல வந்த இலட்சக்கணக்கான தமிழர்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் சொல்லி, பாதுகாப்பையும் தந்த நிலை தமிழகத்திலே இருந்தது என்று சொன்னால், அது எங்களுடைய கோழைத்தனத்தைக் காட்டவில்லை. இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையிலே செயல்பட்டது இந்த அரசு என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற மனச்சாட்சியுள்ள காங்கிரஸ்காரர்கள் உணரவேண்டும். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கை நிறைவேறவேண்டுமென்ற எண்ணத்திலே அவர்களே முன்வந்து இந்த நாட்டின் நாட்டு மக்களின் உரிமைக்காக உண்ணாவிரதம் இருந்த நேரத்தில், மத்திய நீர் ஆதாரத்துறை அமைச்சர் திரு. சுக்லா அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆயிற்று என்றால் அதில் இதுகாறும் தீர்வு காணும் சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. அதை மறைத்து வைத்திருக்கிற நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது, இருட்டடிப்பு என்ற நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, மத்திய அரசு இரட்டை வேடம் போடுகிறது என்பது நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஒன்று, நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தியிருக்க வேண்டும். நடுவர் மன்றத் தீர்ப்பை கெசட்டில் பிரசுரித்த பிறகும் அந்த மாநிலம் அதை அமல்படுத்தவில்லை என்று சொன்னால், நியாயம் உள்ள

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அரசு என்றால், அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்திருக்க வேண்டும். அதற்குப் பின்னால், இந்த நாட்டு உரிமையைக் கேட்ட மக்களை, இந்திய நாட்டைச் சேர்ந்த தமிழ் மக்களை கர்நாடகத்திலிருந்து விரட்டியடித்த நேரத்திலே இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்ட அந்த நேரத்தில், மத்திய அரசு ஒரு உறுதியான முடிவை எடுத்திருக்க வேண்டும். மத்திய அரசு, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த இரண்டு மூன்று கோஷ்டிகளுக்கிடையே ஒரு பிரச்சினை உருவான நேரத்தில், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரைக் கட்சியிலிருந்து விலக்குகிறது என்று சொன்னால், இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் அடிபட்ட நேரத்தில் கண்டுகொள்ளாமல் இருந்த மத்திய அரசு, தன்னுடைய உள்கட்சி விவகாரத்திற்காக அவரை வெளியேற்றுகிறது என்று சொன்னால், அவர்களுடைய உள்கட்சி விவகாரத்தைக் காட்டிலும் தமிழர்களின் பிரச்சினை சிறியதாகப் போய்விட்டதா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, உணர்ச்சிப்பூர்வமாக உள்ள காங்கிரஸ் நண்பர்கள், உணர்வு உள்ளம் படைத்தவர்களாக இருந்தால், இதை யாராவது தட்டிக் கேட்டு இருக்கலாம். தன்னுடைய தமிழ்நாட்டைச் சார்ந்த, தன்னுடைய பிரஜைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வை ஏதாவது உருவிலே வெளிக்காட்டி இருக்கலாம். ஆனால் இரட்டை வேஷம் தொடர்ந்து போடக்கூடியவர்கள் மௌனம் சாதித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-00

அதேபோல, காவல் துறை இன்றைக்கு விடுதலைப்புலிகளை ஒழித்தது மட்டுமல்லாமல், மேலும் அவர்களுடைய ஆதிக்கம் வரக்கூடாது என்பதற்காக காவல் துறையை சுமார் ரூ.80.45 இலட்சம் செலவிலே நவீனப்படுத்துகிற பணியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருப்பதே மீண்டும் விடுதலைப்புலிகளின் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான். விடுதலைப்புலிகளின் விஷயத்தில் வெளியிலே பேசுகிற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள், அந்தக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், கவர்னர் பேரவையிலே படிக்கிற நேரத்திலே சட்டம் ஒழுங்கு சீர்குலைவு இல்லை என்ற நிலையை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். ஆனால் வெளியிலே பேசுகிற காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அப்படி தெரிவிக்கிறார்கள் என்று சொன்னால், நான் இந்த மாமன்றத்தில் உறுப்பினர்களுக்கு ஒரு அச்சத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்மைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளை தமிழகத்திலிருந்து விரட்டி அடித்துவிட்டோம்.

ஆனால், அவர்கள் மீண்டும் வரக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால், கடல் வழியாகத்தான் வரவேண்டும். அல்லது விமானத்தின் மூலமாக வரவேண்டும். கப்பல் படை மத்திய அரசைச் சார்ந்தது. விமானப் படையும் மத்திய அரசைச் சார்ந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சி நண்பர்கள், அவர்கள் வந்துவிட்டார்கள் என்று சொன்னால், மத்திய அரசினுடைய இந்தத் துறைகளின் மூலமாகத்தான்—கடல் வழியாக, விமானம் வழியாகத்தான் வர முடியும்; அந்த வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கும் ஏற்படுகிறது; இந்த நாட்டு மக்களுக்கும் ஏற்படுகிறது. ஆகவே, விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரை தமிழகத்தில் இல்லாத சூழ்நிலையை நாம் உருவாக்குவோமே தவிர, மீண்டும் அவர்கள் வராமல் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசுதான் அதற்குப் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டுமென்கிற நிலை இருந்துங்கூட, தொடர்ந்து இதே பிரச்சினையை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, இன்னொரு இரட்டை வேஷத்தை மத்திய அரசும் காங்கிரஸ் நண்பர்களும் இன்றைக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இங்கு மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். தன்னுடைய வயிற்றுப் பிழைப்புக்காக கடல் ஓரங்களிலே தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக மீன் பிடித்துக் கொண்டிருக்கிற இந்திய வம்சாவழி மீனவர்கள் அந்த கடலோரப் பகுதி, கச்சத் தீவு போன்ற பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற நேரத்தில், அங்கே இருக்கிற ஸ்ரீலங்காவைச் சார்ந்த இராணுவத்தினரால் கைது செய்யப்படுகிறார்கள்; சில நேரங்களிலே சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். மீனவர்கள் காணவில்லை என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தகவல் கிடைக்கிறது. தகவல் கிடைத்தவுடன், உடனடியாக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொள்கிறார்கள். உடனடியாக தகவல் கொடுத்தால் விட்டுவிடுவார்கள்; இல்லை என்றால் கொன்று குவித்து விடுவார்கள். கொன்று குவித்த மக்களுக்கு நாம் இந்தப் பேரவையின் சார்பாக, அரசின் சார்பாக பல்வேறு நிதி உதவிகளைத் தந்துகொண்டு இருக்கிறோம், ஆனால், போன உயிர் போனதுதான். அதில் சரியான தீர்வை மத்திய அரசு எடுக்காமல் இன்னும் இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே, பாரதப் பிரதமர், ஸ்ரீலங்காப் பகுதியிலே கச்சத் தீவுப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்கிறவர்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் ஏற்படாது என்ற அந்த அறிவுரையை, ஸ்ரீலங்கா, அரசுக்குத் தெரிவித்ததாக காலையிலே சொல்கிறார், ஆனால் மாலையிலே மீனவர்கள் பிடிக்கப்படுகிறார்கள்; இந்த நிகழ்ச்சி தொடர் கதையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டினுடைய பகுதியாக இருந்த கச்சத் தீவை அவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, மீனவர்களைப் பலிகடாவாக ஆக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையை மத்திய அரசு தொடர்ந்து நடத்

திக்கொண்டு இருக்கிறது. இதற்குச் சரியான தீர்வு காணப்பட வில்லை என்று சொன்னால், தமிழகமே கொந்தளிக்கும் நிலைமை உருவாகும். எனவே, அதற்கு இரட்டை வேஷம் போடுகிற மத்திய அரசும் காங்கிரஸ் கட்சி நண்பர்களும் முயற்சியை மேற் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது ஒரு புதிய கோஷத்தையும் ஆரம்பித்து இருக் கிறார்கள், விலைவாசி உயருகிறது என்று. இந்த அரசினுடைய நடவடிக்கையால் விலைவாசி ஏறுகிறது என்ற கோஷத்தை இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பல் வேறு நிலைகளிலே சொல்லிக் கொண்டு இருக்கிற நிலையைப் பார்க்கின்றோம். மிகவும் வேடிக்கையாக இருந்து கொண்டிருக் கிறது. விலைவாசி யாரால் உயருகிறது என்பதைக் கண்ணாடி முன்னால் நின்று பார்த்து தயவுசெய்து சொல்லுங்கள். இன் றைக்கு விலைவாசி உயர்வுக்கு யார் மூல காரணம்? ரேஷன் கடையில் விற்ற அரிசி விலையை உயர்த்தியது மத்திய அரசு. ஆனால், மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியும்கூட நாம் அந்த விலையைக் குறைத்து மக்களுக்கு வழங்கிக் கொண்டு இருக் கிறோம். அதுமட்டுமல்லாமல், டீசல் விலை உயர்வுக்கு யார் காரணம்? பெட்ரோல் விலை உயர்வுக்கு யார் காரணம்? கேஸ் விலை உயர்வுக்கு யார் காரணம்? இரயில் டிக்கெட் கட்டண உயர்வுக்கு யார் காரணம்? சரக்குக் கட்டண உயர் வுக்கு யார் காரணம்? எனவே, விலைவாசி உயர்வுக்கு அடிப் படையாக இருந்துகொண்டிருப்பது மத்திய அரசுதான். மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், இதுவரை எந்த மத்திய அரசிலும் இல்லாத அளவுக்கு, இந்த உர விலை யையும் கடுமையாக ஏற்றி இருக்கிறார்கள். உர விலையை ஏற்றியதன் விளைவாக இன்றைக்கு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உர விலை ஏற்றப்பட்டதன் விளை வாக, கரும்பு நெல்லுக்கு அதிகக் கொள்முதல் விலை தரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கரும்புக்கு அதிக விலை தரும் நேரத் திலே, அஸ்காவினுடைய விலையை ஏற்றும் சூழ்நிலை ஏற் பட்டது. ஆகவே, தொடர்ந்து மத்திய அரசினுடைய நட வடிக்கையால் விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மாநிலம் மாத்திரம் விலைவாசியைக் கட்டுப்படுத்திவிட முடியாது. மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையிலே ஏற்பட்ட குளறு படி காரணமாகத்தான் இன்றைக்கு விலைவாசி உயர்ந்து இருக் கிறது. அதையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், தமிழ கத்தைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அரிசி விலை இங்கு குறைவாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் நிரூபித்துக் காட்டி இருக்கிறோம். விலைவாசியைப் பொறுத்தவரை நாம் நிதானமாக இன்றைக்கு இருந்து கொண் டிருக்கிறோம்.

[திரு. வெ. பழனிசாமி] [1994 மார்ச் 17

அடுத்து, இன்றைக்கு இந்த மாமன்றத்தில் டாக்டர் புரட்சித் தலைவி எங்களுடைய இதய தெய்வம் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆதி திராவிடர்களுக்கு, இந்திய நாட்டினுடைய வரலாற்றிலேயே யாரும் செய்யமுடியாத ஒரு மகத்தான புரட்சி என்று கூட அதைச் சொல்லலாம். அவர்களுடைய பொருளாதார உயர்வுக்காக 200 தொழிற்பேட்டைகளை —கோவை மாவட்டத்தில் எனது தொகுதியான திருப்பூர் தொகுதியில் 106 ஏக்கர் நிலப் பரப்பில் 100 தொழிற்பேட்டைகளையும், பெரியார் மாவட்டத்தில் 100 தொழிற்பேட்டைகளையும் அமைத்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை நண்பர்களே, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த காங்கிரஸ் நண்பர்களே, மனசாட்சி உள்ளவர்களே தயவுசெய்து நெஞ்சத்தைத் தொட்டுப் பாருங்கள். ஆட்டு லோன், மாட்டு லோன் என்ற அளவுக்கு சிலபல ஆயிரம் கடன்களைத் தந்தும் அந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் பொருளாதாரத்தில் உயரவில்லை. இதுவரையில் இதுபோன்று சிறுசிறு உதவிகளைத் தான் வழங்கியிருக்கிறோம். ஆனால் இந்திய நாட்டின் வரலாற்றில் ஒரு மாநில அரசு ஒவ்வொரு தொழில் முனைவருக்கும் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 200 தொழிற்சாலைகள், சுமார் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு உருவாக்கி இருக்கிறது. இதற்கு அடிப்படை காரணம் என்ன? ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்ற ஜாதி மத பேதத்தை ஒழித்துவிட வேண்டுமென்று ஆயிரம் கத்தினாலும் கூட ஒழித்து விட முடியாது. ஒன்று அவர்கள் கல்வித் துறையில், தொழில் துறையில் முன்னுக்கு வந்து அந்தஸ்து பெற்றால் ஓரளவுக்கு அந்த உணர்வு ஒழிக்கப்படுகிறது. இரண்டாவதாக பொருளாதாரத்தில் உயர்ந்தால் அந்த ஜாதி மத பேதங்கள் ஒழிக்கப்படுகிறது. இதை நாம் யதார்த்த நிலையில் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஒரு காவல் துறை அதிகாரி வீட்டிற்கு வருகிறார் என்றால் உள்ளே அழைத்து உட்கார வைத்து சாப்பிட சொல்கிறோம். அதைப்போல பொருளாதாரத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்ற ஒரு பணக்காரனாகிவிட்ட ஆதிதிராவிடர் வருகிறார் என்று சொன்னால் அவர்களை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் சமுதாயத்தில் நலிந்துபோய் குடிசையோடு குடிசையாக புழுக்களைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு ஆதிதிராவிட சமுதாயத்தை சேர்ந்தவன் வருகிறான் என்று சொன்னால் அவனை சமுதாயம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. ஆகவே, பொருளாதாரத்தில் அவர்கள் உயர வேண்டுமென்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நம்முடைய இந்திய வரலாற்றில் ஒரு புரட்சியைச் செய்திருக்கிறார்கள். அதன்மூலமாக 200 பேர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு தொழிலதிபர்களாக மாறுகிறார்கள். அவர்கள் குடும்பம் நல்ல அந்தஸ்தைப் பெறு

1994 மார்ச் 17] [திரு. வெ. பழனிசாமி]

கிறது, பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுகிறது. இப்படி பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதன் மூலமாக சமுதாயத்தில் மதிக்கப்படக்கூடிய நல்ல இடத்தை அவர்கள் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையின் காரணமாக, இன்றைக்கு 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 200 தொழில் பிரிவுகளை அமைத்து இருக்கிறார்கள். அதன்மூலமாக திருப்பூர் நகரின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ள இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தந்தை பெரியார் அவர்கள் கோவிலில் சென்று வழிபடலாம் என்று சொன்னார்கள். கோவிலுக்கு செல்ல வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்கள். ஆனால் அன்றைக்கெல்லாம் முடியவில்லை. இன்றைக்கு அதை நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறார்கள். ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் வேத ஆகம கல்லூரிகளில் படித்து அவர்களும் அர்ச்சகர்களாக ஆக முடியும் என்று வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நல்ல திட்டத்தை உருவாக்கித்தந்தவர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு இந்தித் திணிப்பைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இந்தி திணிப்பு கூடாது என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், அன்னை இந்திரா காந்தி அவர்களும் தெளிவாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் இன்றைக்கு மத்திய அரசு அவ்வப்போது தமிழ் மக்களுடைய உணர்வுகளை மதிக்காமல் இந்தித் திணிப்பை ஆங்காங்கே வெளிகாட்டிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு தொலைகாட்சியைப் பார்ப்போமானால் அதிகமான ஆக்கிரமிப்பு. இந்தித் திணிப்பு என்பது இப்போது அதில் அதிகமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சி என்கிறபோது ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே பல்வேறு வகையில் விலைவாசிகள் உயர்ந்தாலும் மத்திய அரசு தொலைக்காட்சிக்கு மட்டும் சலுகை அளித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் பார்த்தால் தொலைக்காட்சிக்கு சலுகை. இன்றைக்கு தொலைக்காட்சிப் பெட்டியை இலவசமாகத் தருவதற்கு மத்திய அரசு அறிவித்தாலும் ஆச்சரியம் இல்லை. காரணம் தொலைக்காட்சி என்பது காங்கிரஸ் கட்சியின் முழுமையான பிரச்சார சாதனமாக இருக்கிறது என்பதால் அதற்கு ஆண்டிற்காண்டு சலுகை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொலைக்காட்சியின் மூலமாக தன்னுடைய மொழி உணர்வை அவ்வப்போது வெளிக்காட்டிக்கொண்டிருப்பது நீடிக்கக் கூடாது என்பது இன்றைக்கு கவர்னர் உரையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு நிலைமை நீடிக்கப் படுமானால் திராவிட இயக்கம் தொடர்ந்து போராடும் நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு, நீர்வளம் குறைந்திருக்கிற தமிழகம் எதிர்காலத்தில் தொழில் வளத்தில் முன்னேற வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தில் தான் பேசின் பிரிட்ஜ், ஜெயங்கொண்டம் போன்ற மின் திட்டங் களை இன்றைக்கு வேகமாக விரைவாகச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் தொழில் துறையில் முன் னேற்றம் காணவேண்டும் என்று சொன்னால் மின்சாரத் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு இதுபோன்ற திட்டங்களை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு திருப்பூர் போன்ற தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில் நிரந்தர மாக தடையில்லாமல் மின்சாரத்தை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு திருப்பூர் நகரம் 2000 கோடி ரூபாய் அளவுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித்தருகிற நகரமாகும். அந்த நகரத்திற்கு ஒரு கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நூல் விலை ஏற்றதின் காரணமாக நாங்கள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இரண்டு, மூன்று முறைகள் நூல் விலை உயர்ந்துள்ளது. வெளிநாடுகளில் உரிய ஒப்பந்தங் களைச் செய்து ஆர்டர்களைப் பெறுகிற நேரத்தில் நூல் விலை உயர்வின் காரணமாகத் தடுமாற்றம் ஏற்பட்டு பல இலட்சக்கணக் கான தொழிலாளர்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். தொழில் துறையில் இதுபோன்ற தடுமாற்றம் ஏற்படுமானால் வெளிநாடுகளில் ஆர்டர்களைப் பெற்று துணி களைத் தயாரிக்கிற சூழ்நிலையை நாம் இழந்துவிடக்கூடிய நிலைமை, அன்னியச் செலாவணியை இழக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணத்தை இதே மாமன்றத்திலே நான் கூறியிருக்கிறேன். மத்திய நாடாளுமன்றத்திலே சொல்ல வேண்டிய கருத்தாக இருந்தாலும், நான் அங்கம் வகிக்கிற பேரவையின் மூலமாக முதல்வர் அவர்கள் மூலமாகச் சொல்லவேண்டும் என்பதற்காக இதே அவையிலே பேசியிருக்கிறேன். நூல் விலை உயர்வுக்கு அடிப்படைக் காரணம் அடிக்கடி பஞ்சு ஏற்றுமதிதான். தொடர்ந்து மத்திய அரசு பஞ்சு ஏற்றுமதி செய்கிறது. மத்திய அரசினுடைய தொழில் கொள்கையிலே ஏற்பட்ட கோளாறின் காரணமாக ஏற்றுமதியில் ஏற்பட்டகோளாறின் காரணமாக இன்றைக்கு தமிழ்நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்ட தோடு மட்டுமல்லாமல், இந்தியாவே பாதிக்கப்படுகிற நிலைமை உருவாகியிருக்கிறது.

பிற்பகல் 1.10

இந்த நாட்டிலே எவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கின்றன, எவ்வளவு மில்கள் இருக்கின்றன, எவ்வளவு லட்சக்கணக்கான ஸ்பின்டில்கள் ஓடுகின்றன, எவ்வளவு பஞ்சு தேவை என்கிற

புள்ளிவிவரக் கணக்கு மத்திய அரசிடம் இல்லை. ஆனால் மத்திய அரசு நினைத்தால் ஏற்றுமதி செய்கிறது. பஞ்சு தட்டுப்பாடு ஏற்படுகிற நேரத்திலே பஞ்சினுடைய விலை உயர்கிறது. பஞ்சினுடைய விலை உயர்கிற நேரத்திலே நூலினுடைய விலை உயர்கிறது. நூலினுடைய விலை உயர்ந்ததன் காரணமாக, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற பனியன், காடா போன்ற துணியினுடைய ஏற்றுமதிக்கு இடையூறு ஏற்படுகிற நிலைமை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கூர்ந்து கவனித்து மத்திய அரசு கடுமையான நடவடிக்கையின் மூலமாக இதைச் சீர்படுத்த வேண்டும்.

இன்றைக்கு உலகத்திலே இந்தியா இரண்டாவது மிகப் பெரிய நாடு. இந்தியா தனத்திலே மிகப் பெரிய நாடு. இந்த நாட்டிலே மூலப் பொருளை ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியமே நிச்சயமாகக் கிடையாது. பஞ்சு ஒரு மூலப் பொருள். பஞ்சைக் கொண்டு நாம் உற்பத்தி செய்து, காடாவாக ஏற்றுமதி செய்யலாம், துணியாக ஏற்றுமதி செய்யலாம், பனியனாக ஏற்றுமதி செய்யலாம். அந்தப் பஞ்சை ஏற்றுமதி செய்கிறார்கள். இங்கேயிருக்கிற தொழிலாளி வர்க்கத்திற்கு வேலைவாய்ப்பு தந்து, இதே துணி வெளிநாடுகளுக்குச் செல்லுகின்ற நேரத்திலே வேலைவாய்ப்பும் தருகிறோம். அதேநேரத்தில் அன்னியச் செலாவணியை அதிகமாகப் பெறுகிற வாய்ப்பும் இருக்கிறது. இருந்தும்கூட, மத்திய அரசு தொடர்ந்து பஞ்சினுடைய ஏற்றுமதியை அதிகரித்துக் கொண்டிருப்பதன் மூலமாக இங்கே தடுமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு நல்ல நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை திட்டமிட்ட தொழில் கொள்கை இல்லாததன் காரணமாக, இது மாதிரியான தடுமாற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏற்றுமதி செய்கிறார்கள். திடீரென்று ஏற்றுமதிக்கு தடை விதிக்கிறார்கள். பிறகு இறக்குமதி செய்கிறார்கள். இவை அத்தனையும் தவறான தொழில் கொள்கை என்பதை இந்த நேரத்திலே நான் இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் திருப்பூரைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச்செலாவணியை ஈட்டித் தருகிற தொகுதியாகும். அந்தத் தொகுதியில் அடிப்படை வசதிகள்

இல்லாத நிலைமை இருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால்தான் இன்றைக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 10 ஆண்டு காலமாக இருந்த குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கியிருக்கிறோம். பாதை நெருக்கடியைப் போக்குவதற்காக ரயில்வே மேம்பாலத்தை இன்றைக்குக் கட்டியிருக்கிறோம்.

அதேபோல் திருப்பூர் நகரத்திலே இன்னொரு பேருந்து நிலையம் தேவை என்பதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கோயில் பூமியைத் தந்து இன்னொரு பேருந்துநிலையம் அமைக்கிற பணியை உருவாக்கியிருக்கிறார்கள். 40 கோடி ரூபாயில் தொழில் பேட்டை அமைக்கிற பணியை உருவாக்கியிருக்கிறார்கள். தாயே, உங்களுடைய காலத்திலே தான் திருப்பூர் நகரத்திற்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் என்கிற அளவிற்கு திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இந்த திருப்பூரைப் பொறுத்தவரையில் அன்னியச் செலாவணியைப் பெறுகிற மத்திய அரசு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற இராணிப்பேட்டை, சிவகாசி, திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு தனிச் சிறப்பு மானியம் கொடுக்க வேண்டும் என்ற உரிமை இருக்கிறது. ஆனால் கொடுக்க மறுக்கிறார்கள். நான் உதாரணத்திற்கு வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் திருப்பூர் நகரத்திலே உற்பத்தி ஆகிற பனியனில் 75 சதவீதம் ஏற்றுமதிக்கான பனியன். ஏற்றுமதிக்காக செய்யப்படுகிற பனியனுக்கு நாம் விற்பனை வரி போடுவதில்லை. காரணம் அது அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. ஆனால் உள்நாட்டினுடைய பனியன்களுக்கு இந்திய நாட்டிலே விற்பனை ஆகிற பனியன்களுக்கு நாம் விற்பனை வரி போடுகிறோம். 75 சதவீதம் விற்பனை வரி போடாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக இன்றைக்கு அன்னியச் செலாவணியைப் பெறுகிறோம். அன்னியச் செலாவணி இல்லாமல் தங்கத்தை லண்டன் மாநகரத்திலே கொண்டு போய் அடமானம் வைத்தவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே உண்டு. ஆனால் அப்படிப்பட்ட தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படாத சூழ்நிலையிலே அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற நகரங்களுக்கு சிறப்பு மானியத்தை மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல் கவர்னர் உரையிலே பேசிய நேரத்திலேயும் சரி, என் ஞாபகம் சரியாக இருக்குமானால் முதன் முதலாக இந்திய நாட்டினுடைய பாரதப் பிரதமரைச் சந்திக்கின்ற நேரத்திலேயும் சரி, சிவகாசி இராணிப்பேட்டை போன்ற

1994 மார்ச் 17] [திரு. வெ. பழனிசாமி]

பகுதிகளுக்கு சிறப்பு உதவி தேவை, அடிப்படை வசதிகள் தேவை என்று அங்கே எடுத்துக் காட்டி டெல்லியிலே பத்திரிகைகளிடத்திலே பேசியதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்படியிருக்குமானால் மத்திய அரசோடு பேசி இந்த சிறப்பு மானியத்தைப் பெறுவதற்குண்டான முயற்சியை மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் தொடர்ந்து செய்து பெற்றுத்தருகிற சூழ்நிலையை உருவாக்கித்தரவேண்டும். காரணம் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற பல்வேறு பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் எல்லாம் இல்லாமல் இருப்பதால் வெளிநாடுகளிலேயிருந்து வரக்கூடியவர்கள் பார்த்து கேவலமாகப் பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. ரோடுகள் சரியில்லை, தெருவிளக்குகள் பராமரிப்பு இல்லை, பல்வேறு பிரச்சினைகள் முடங்கிப்போய் இருக்கின்றன. ஆகவே லாபம் அடைவது மத்திய அரசு. லாபம் அடைகிற மத்திய அரசு அதற்குண்டான சிறப்புச் சலுகைகளையும் தராமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொழிற்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு மகத்தான திட்டமாக தொழிற்துறையிலே அரசின் சாதனையாக சிங்கப்பூர் வர்த்தகத்திற்கு தூண்டுதலாகத் தொழில் பூங்கா திட்டத்தை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். மிக அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக தொழிற்துறை மட்டுமல்லாமல் ஏற்றுமதியைச் செய்கிற வாய்ப்பை மிக அதிகமாக தமிழ்நாடு பெறுவதற்குண்டான வழிவகை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தொழில்மயமான திருப்பூர் தொகுதிமக்களின் சார்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தென்னக எரிவாயத் திட்டத்தை பல்லாண்டு காலமாக மத்திய அரசிடம் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதுகாறும் மத்திய அரசு செவி சாய்க்காத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

ஆகவே மீண்டும் அதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்றைக்கு எதற்கெடுத்தாலும் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் நண்பர்களே, உங்களுக்கு உண்மையிலேயே தமிழகத்தின் மீது விசுவாசம் இருக்குமேயானால் அதற்கான முயற்சிகளை தயவுசெய்து எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்திய நாடே இன்றைக்கு தலை நிமிர்ந்து நின்று பாராட்டக்கூடிய அளவுக்கு, இங்கே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்

பட்டிருக்கிறது, காவல் துறை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது உதாரணத்திற்கு சொல்லப்பட வேண்டுமானால்: இந்த நாட்டிலே பாபர் மசூதி சம்பவம் நடைபெற்ற நேரத்திலே, கொலைக்களமாக இல்லாத ஒரே மாநிலம் தமிழகம் என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அதையெல்லாம் மறந்துவிட்டு, ஏனோ தானோவென்று இந்த அரசை இழிவுபடுத்தும் முயற்சியிலே ஈடுபட்டு வருகிறார்கள். நான் மீண்டும் அவர்களுக்குச் சொல்லுகிறேன். காங்கிரஸ் இயக்கம் இருக்கும் அனைத்து மாநிலங்களும் ஜம்மு காஷ்மீரை எடுத்துக் கொள்ளுங்கள் மகாராஷ்டிராவை எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது கர்நாடக ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொள்ளுவோமேயானால் எங்கு பார்த்தாலும் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து இருக்கிறது. ஆனால் இவைகளையெல்லாம் பார்க்காமல், தமிழகத்தினுடைய சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருப்பதாக வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய ஒவ்வொரு தலைமுறையையும் எடுத்துக்கொண்டாலும் இரட்டை வேடம் போடுவதே அவர்களுடைய தொடர் நடவடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. 1977-லேயும், 1980-லேயும் ஆட்சியைக் கலைத்தார்கள். அன்றைக்கு தி.மு.க. வினுடைய தோளிலே சென்றார்கள். ஆனால் அவர்களே கொண்டு வந்த சர்க்காரியா கமிஷனுடைய தீர்ப்புகளை முடக்கி வைத்தார்கள் அது தோழமை கட்சி என்ற ஒரே காரணத்திற்காக தி.மு.க.வை காப்பாற்றினார்கள். அதற்குப் பிறகு அண்ணா தி.மு.க,வினுடைய தோழமையை கொண்டார்கள் 'தொடர்ந்து, இப்படி இரட்டை வேடம் போட்டார்கள். தமிழக மக்கள் மத்தியிலே அவர்களுக்கு நியாயமான உணர்வு இருக்குமானால் அவர்களுடைய குற்றங்குறைகளை நேருக்கு நேர் விவாதிக்க தகுதி இருக்குமானால் விவாதிக்கலாம். ஆனால் ஏதோ வர வேண்டியது ஏதாவது சர்ச்சையை கிளப்ப வேண்டியது வெளியே போக வேண்டியது என்று இருக்கிறார்கள். இன்றைக்குக் கூட பாருங்கள் அப்படித்தான் செய்தார்கள். அண்ணா தி.மு.க வினுடைய தோழமையை காட்டி வந்தவர்களோடு எங்கள் தலைவியினுடைய பெயரைச் சொல்லி அவர்களுடைய பேராதரவால் ஓட்டு வாங்கி இங்கே அமர்ந்தவர்களோடு இந்தச் சட்டப் பேரவையிலே அமைச்சராக இருந்தவர்கள் இங்கே அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விட்டதால் அவர்களோடு சேர்ந்து போர் முழக்கம் செய்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அமைச்சர் பதவியிலேயிருந்து விலக்கப்பட்டவர்கள் எதிர் வரிசையிலே அமர்ந்து கொண்டு இந்த அரசுக்கு ஆதரவை தருவதற்கு பதிலாக கருங்காலிகளாக துரோகிகளாக மாறி அவர்களோடு கூட்டு சேர்ந்து கொண்டு லஞ்ச ஊழல் பட்டியல் தருகிறார்கள். காலையிலே கவர்னர் பேசுகிறார்கள். இங்கே பேசும்போது சட்டம் ஒழுங்கைப் பாராட்டுகிறார் மாலையிலே சந்திக்கிறார்கள். லஞ்ச ஊழல் பட்டியல் தருகிறார்கள். லஞ்ச ஊழல் பட்டியலை

1994 மார்ச் 17] [திரு. வெ. பழனிசாமி]

யார் தருவது ? காங்கிரஸ் கட்சி நண்பர்களா தருவது ? தயவு செய்து கண்ணாடியிலே முகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஊழலை இந்த நாட்டிலே உற்பத்தி செய்த நிறுவனம் யார் என்று சொன்னால் அதற்கு மூலம் யார் என்று சொன்னால் அது காங்கிரஸ் கட்சிதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு தலைமுறையும் காங்கிரஸ் கட்சியிலே செய்த ஊழலை சொல்லட்டுமா ? காங்கிரஸ் கட்சியினுடைய * * * உலக நாடு முழுவதிலும் இன்றைக்கு கேலி ஆகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி * * என்பது எல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. இந்தமாதிரி சொற்றொடர்களைக் குறிப்பி வேண்டாம்.

திரு. வெ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹர்ஷத் மேத்தா ஊழலைப் பற்றி உலக நாடுகள் முழுவதும் தெரிந்ததே. ஒரு மாநிலத்தினுடைய பட்ஜெட் தொகைக்கு ஈடாக அவர்கள் ஊழல் செய்திருக்கிறார்கள் அந்த ஊழலுக்குக் காரணம் யார் அதற்கு தொடர்பு யார் என்பதற்கு அவரே எடுத்து காட்டியிருக்கிறார்கள். அதற்காகத்தான் தனிப்பட்ட பெயர்களை குறிப்பிட வேண்டி வந்தது. உங்களுடைய நிலையை தெளிவாக உணர்ந்து பார்க்கவேண்டும். இன்று உலக நாடுகளே வெட்கித் தலை குனியும் அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிப்பதோடு, தொடர்ந்து, நண்பர்களாக, தோழமை உணர்வோடு கடந்த ஆண்டுகளிலே செயல்பட்டவர்கள் திடீர் மாற்றத்திற்கு உள்ளாகி, அந்த மாற்றத்தின் பிரதிபலிப்பாகத்தான் அவர்கள் சுயலாபம் கருதி அந்த அடிப்படையிலே செயல்படுகிறார்கள் என்பதை இந்தப் பேரவையிலே தெரிவித்துக் கொள்வதோடு, கவர்னர் உரையிலே நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே பேசுவதற்கு வாய்ப்பு தந்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

பிற்பகல் 1–20

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கிலே தமிழக மக்களை அமைதியோடும், பாதுகாப்போடும் காக்கின்ற ஒரு காவல் துறையை பெற்று இருப்பதை அந்த காவல் துறைக்கு தலைமை பொறுப்பு ஏற்று வழிகாட்டியாக நடத்துகின்ற மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்திலே பாராட்டாமல் இருக்க முடியாது. அதேபோல தமிழகத்தில் சமூக நீதி காக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வேலை வாய்ப்புகளில் இதுகாறும் பெற்று வந்த 69 சதவீதம் இட ஒதுக்கீடு நீடிக்க வேண்டும் என்று அந்த சமூக நீதியை காப்பதற்காக இந்த மாமன்றத்திலே ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து, இந்தத் தமிழக மக்களின், பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதுகாவலாக இருக்கின்ற இந்த அரசை பாராட்டாமல் இருக்க முடியாது. அதே போல திருக்கோயில் பராமரிப்பு. கோயில் இருக்க குடி வாழும் என்ற நம்முடைய சமுதாயத்தினுடைய பாரம்பரிய நம்பிக்கைக்கு அடிப்படையாக இருக்கின்ற தமிழகத்தினுடைய, கலை, கலாச்சாரங்களின் பொக்கிஷமாக இருக்கின்ற அந்த திருக்கோயில்கள் பராமரிக்கப் பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அந்த நல்ல நோக்கிலே அந்த கோயில்களில் ஒரு கால பூஜையாவது ஒழுங்காக நடக்க வேண்டும் என்பதற்காக, திருக்கோயில் வாரியத்தின் மூலமாக கோயில் பராமரிப்புக்காக பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. அது போல இன்றைக்கு மத்திய அரசோடு வாதாடிப் போராடியதன் விளைவாக தமிழகத்திற்கு சென்ற ஆண்டை விட 30.84 சதவீதம் அதிகமாக 2,805 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடாகப் பெற்று இந்த தமிழகத்தினுடைய வளர்ச்சியை இன்றைக்கு பேணுவதினாலே இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைக்கு பல்வேறு வகையிலே தமிழக அரசு தொழில் துறையை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக, வேளாண்மையை சிறக்க வைக்க வேண்டும் என்பதற்காக மின்சார உற்பத்திக்கு வேறு எந்த மாநிலத்திலும் கொடுக்காத ஒரு முன்னுரிமையை கொடுத்து இருப்பதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். மின்சார உற்பத்தி என்றால் புனல் மின்சாரம், அனல் மின்சாரம், இந்த இரண்டு மின்சாரங்களைத் தான் நாம் அதிகமாக இதுவரை உற்பத்தி செய்து வந்தோம். அடுத்தது அணுசக்தி மின்சாரம் என்ற மின்சார உற்பத்தி அணுசக்தியிலே செய்யப்பட்டது. இன்றைக்கு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே மரபுசாரா எரிசக்தியை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஒரு புரட்சிகரமான முடிவிலே தமிழகத்தில் காற்றாலை மின்சாரம், கடல் அலை மின்சாரம், எரிவாயுவிலே மின்சாரம் ஏன் வீணாகப் போகின்ற

1994 மார்ச் 17] [திரு. நா. சா. பழனிசாமி]

நகர கழிவு, குப்பைக் கூளங்களில் கூட மின்சாரம் தயாரிக்க முடியும் என்று அந்த மின்சார உற்பத்திக்கு மட்டும் இன்றைக்கு கிட்டத்தட்ட 10,000 கோடி ரூபாய் செலவிலே பல மின் உற்பத்தித் திட்டங்களை 1970 மெகாவாட் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை வரவேற்காமல் இருக்க முடியாது. இப்படி இந்த மின்சார உற்பத்தி என்பது இன்றைக்கு நாட்டினுடைய உயிர்நாடியாக இருக்கின்ற விவசாயத்திற்கும் மிக முக்கியமாக இருக்கின்ற ஒன்று. தொழில் துறைக்குத்தான் மின்சாரம் என்று இல்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இயற்கை வளம், நீர் வளம் குறைந்த ஒரு மாநிலமாக இருக்கின்ற காரணத்தால் நாம் இயற்கையான ஆறுகளிலே, கால்வாய்களிலே வருகின்ற நீரைப் பெற்று உற்பத்தி செய்வதைவிட நிலத்தடி நீர் மூலமாக வேளாண் உற்பத்தியை நாம் அதிகமாக செய்து வருகிறோம். இந்தியாவிலேயே 15 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகள் இயங்குகின்ற ஒரு மாநிலம் தமிழகம் தான். எனவே இந்த 15 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கும் இன்றைக்கும் இலவசமாக மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு மாநிலம் என்ற வகையில் இன்றைக்கு தமிழகத்தில், அந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருப்பதால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை என்றென்றும் இந்த உழவர் சமுதாயம் நன்றியோடு நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

இந்த இலவச மின்சாரத்தைப் பெறுவதைப் பொறுத்தவரையில் அது எவ்வளவு என்ற கணக்கில் முந்தைய தி.மு.க. அரசுக்கும் இன்றைய இந்த அரசுக்கும் கணக்குக் கொடுப்பதிலே சில முரண்பாடுகள் இருக்கின்றன. முந்தைய தி.மு.க. அரசு இந்த இலவச மின்சாரத்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பு என்பது வெறும் 40 கோடி ரூபாய், 70 கோடி ரூபாய் என்ற ஒரு கணக்கைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் எந்தக் கணக்கு சரி என்றால் இந்த இலவச மின்சாரம் கொடுப்பதற்கு முன்பாக ஒரு எச்.பி.க்கு 50 ரூபாய் என்ற மின் கட்டண முறைஅமல் செய்த நேரத்தில் அந்த விவசாயிகள் மின்சாரக் கட்டணமாகக் கட்டிய தொகை 40 கோடி ரூபாய். அந்த 50 ரூபாயை எடுத்துவிட்டு இலவசமாக தருகின்றபோது இழப்பு அந்த 40 கோடி ரூபாய். ஆனால் ஒரு யூனிட்டுக்கு மின்சார உற்பத்திச் செலவு ஒரு ரூபாய் 50 காசு, ஒரு ரூபாய் 60 காசு. ஒரு ரூபாய் 60 காசு அடிப்படையில் வேளாண்மைக்கு 4 ஆயிரம் மில்லியன் யூனிட் விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள் என்று கணக்குப்

[திரு. நா. சா. பழனிசாமி] [1994 மார்ச் 17

போட்டோமானால் அந்தக் கணக்கின் அடிப்படையில் அரசுக்கு ஏற்படுகின்ற செலவு 650 கோடி ரூபாய். ஆக மொத்தமாக விவசாயிகளுக்காக இன்றைக்கு 650 கோடி ரூபாய் அளவுக்கு மேலாக செலவை ஏற்று இலவச மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். மொத்த மின்சார உற்பத்தியில் 24 சதவீதத்தை வேளாண்மைத் துறைக்கு வழங்கிக் கொண்டிருக்கிற ஒரு மாநிலம் தமிழகம் என்று சொன்னால் உலகத்திலேயே இந்த இலவச மின்சாரத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அமல் ஆக்கிக் கொண்டிருக்கிற மாநிலம்— நான் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைக் கூட உதாரணம் காட்ட விரும்பவில்லை—உலகத்திலேயே இன்றைக்கு இலவச மின்சாரத்தைத் தந்து கொண்டிருக்கிற ஒரு மாநிலம் இந்த தமிழகம். இந்த இலவச மின்சாரத்தைத் தரக்கூடாது, ஒரு யூனிட்டுக்கு 50 பைசா கட்டணமாக விதிக்கவேண்டும் என்று மத்திய அரசு சென்ற 2 ஆண்டுகளாக தமிழக அரசை நிர்பந்தம் செய்து கொண்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள், விவசாயிகள் உட்பட அனைவரும் அறிவார்கள், ஏன் என்றால் இந்த இலவச மின்சாரத் திட்டத்தை அமல் ஆக்கி வருகின்ற இந்தத் தமிழக அரசுக்கு விவசாயிகளுடைய 100 சதவீத ஆதரவு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆதரவைக் குறைக்க வேண்டும்; விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை உருவாக்கவேண்டும் என்பதற்காக இன்றைக்கு மத்திய அரசு ஒரு யூனிட்டுக்கு 50 பைசா கட்டணமாக விதிக்கவேண்டும் என்றும் மின்சார வாரியம் அதனால் நஷ்டம் அடைகிறது என்றும் சொல்லி நிர்பந்தத்தை உருவாக்கியிருப்பதை அறிகிறோம். இன்றைக்கு தமிழக மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்கலாம். ஆனால் இலவசமாக மின்சாரம் தராத, ஒரு யூனிட்டுக்கு 50 பைசா என்று விதித்துக் கொண்டிருக்கிற வட மாநிலத்தில் இருக்கின்ற மின்சார வாரியங்கள் எல்லாம் எவ்வளவு லாபத்தில் இயங்குகின்றன. அப்படி அவர்கள் லாபம் காட்டியிருப்பார்களானால் நாம் இந்த விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் தமிழகம் நஷ்டம் அடைகிறது என்று கூட ஒத்துக் கொள்ளலாம். இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் உள்ள மின்சார வாரியங்கள் நஷ்டத்தில்—தமிழக மின்சார வாரியத்தை விட அதிகமான நஷ்டத்தில்—இயங்குகின்றபோது இன்றைக்கு தமிழக விவசாயிகள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த விவசாயிகளின் உண்மையான கஷ்டத்தை உணர்ந்து இந்த இலவச மின்சாரத்தை மீண்டும் தந்து உதவிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை என்றென்றும் இந்த விவசாயிகள் சமுதாயம் நன்றியோடு பாராட்டும், வாழ்த்தும் என்பதை நான் இந்த நேரத்தில் விவசாயிகளின் பிரதிநிதி என்ற முறையில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இந்த மின்சாரக் கட்டணத்திலே இன்றைக்கு ஒரு சிறு குழப்பம் உருவாகியிருக்கிறது. அண்மையில் தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்திய நேரத்தில் ஒரு எச்.பி.-க்கு 1,500 ரூபாய் என்ற அளவுக்கு இந்த 25 ஆயிரம் ரூபாய் பணம் கட்டி மின்சார இணைப்புப் பெறுகின்ற அந்த மின் இணைப்புக்கு மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அந்தக் கட்டண உயர்வு என்பது சற்று அதிகமாக, கூடுதலாக இருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் மத்தியில் எதிர்க்கட்சியினர் செய்கின்ற ஒரு பிரச்சாரம் 'இன்றைக்கு அந்த 25 ஆயிரம் ரூபாய் பணம் கட்டி மின் இணைப்புப் பெறுகின்றவர்களுக்கு மின் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றாகள். இனிமேல் எல்லா விவசாயிகளுக்கும் மின் கட்டணத்தைப் போட்டு விடுவார்கள், எல்லா விவசாயிகளுக்கும் மின் கட்டணத்தை உயர்த்தி விடுவார்கள், என்ற ஒரு அச்சத்தை விவசாயிகள் மத்தியில் பரப்பி வருகிறார்கள்.

இன்றைக்கு நிச்சயமாக இந்த மின் கட்டணத்தை, 25 ஆயிரம் ரூபாய் செலுத்தி மின் இணைப்பு பெற்றுக்கொண்டு இருப்பவர்கள் கொஞ்சம் வசதி படைத்த விவசாயிகள். அவர்கள் இந்த 25 ஆயிரத்தைச் செலுத்திப் பெற முடியும் என்ற, அந்த சக்தி படைத்தவர்களுக்கு கொஞ்சம் கட்டணம் விதிப்பது சரியாக இருந்தாலும்கூட, இந்த அபரிமிதமாக 1,500 ரூபாய் ஒரு ஹார்ஸ் பவருக்கு என்று உயர்த்தி இருப்பதை கொஞ்சம் குறைத்து பழைய அளவிற்கே அந்தக் கட்டணத்தை விதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்தின் சார்பிலே நான் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

அதேபோல, விசைத்தறித் தொழில் மிகவும் சிறிய தொழில்; குடிசைத் தொழில். கோவை, பெரியார் மாவட்டங்களிலே எல்லாம் விவசாயம் செய்ய முடியாத, வறண்ட பகுதிகளில் விவசாயிகள் தங்களது தோட்டத்திலே செய்து கொண்டிருக்கின்ற ஒரு சிறுதொழில் இந்த விசைத்தறி தொழில். அந்தத் தொழிலுக்கு 40 பைசா கட்டணத்தை இந்த ஆண்டு திடீரென்று உயர்த்தி இருப்பது, அந்த விசைத்தறியாளர்கள் மத்தியில் ஒரு கலக்கத்தை, அவர்கள் அந்த விசைத்தறியை நடத்த முடியாத ஒரு சூழ்நிலையை, பிரச்சினையை உருவாக்கி இருக்கிறது. இந்த அரசு தயவு கூர்ந்து அந்த விசைத்தறியாளர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்ற அந்த மின் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

பொது விநியோகத் திட்டத்தில் இந்தியாவிலேயே குறைந்த விலைக்கு இன்றைக்கும் உணவுப் பொருள்களை, அரிசியை வழங்கி கொண்டிருக்கின்ற மாநிலம் தமிழகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத்

தட்டும் ஒலி) 27 இலட்சம் குடும்ப அட்டைகள் இந்த ஆண்டு வழங்கப்பட்டு உள்ளதாக அரசு அறிவிப்பிலே வந்திருக்கிறது. அதிலே ஒன்றை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு எங்கள் மாவட்டத்தில் பல பகுதிகளில், பொள்ளாச்சி தாலுகாவிலே கூட குடும்ப அட்டைகளுக்கு வேண்டிய, அடையாளச் சீட்டை மட்டும் கொடுத்துவிட்டு இன்னும் குடும்ப அட்டைகள் பல கிராமங்களிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு வழங்கப் படாமல் இருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. கே. சின்னசாமி) : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 27 இலட்சம் குடும்ப அட்டைகள் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள்; ஆனால் சில இடங்களிலே குடும்ப அட்டைகள் இன்னும் கொடுக்கப் படவில்லை என்ற ஒரு கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். யார் யாரிடமிருந்து எந்தெந்த குடும்ப அட்டைகள் தரவேண்டுமென்பதோ அல்லது கொடுக்கப்பட வேண்டுமென்பதற்கு அவர்களிடத்திலேயிருந்து வருகின்ற அந்த குறிப்புகளை வைத்துக்கொண்டு வரிசையாக முறைப்படுத்தி அந்த குடும்ப அட்டைகளை விநியோகித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதிலே காலதாமதம் ஆகலாமே தவிர, இல்லை என்று சொல்வதற்கு இடமே இல்லை என்று நான் இந்தப் பேரவை மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் ஏழையெளிய மக்கள் இந்த பொது விநியோக முறையிலே, உணவுப் பொருள்களை வாங்கவேண்டுமென்ற நிலைமையிலே உள்ள மக்கள் மட்டு மல்லாமல், இன்றைக்கு எதற்கெடுத்தாலும் குடும்ப அட்டை யைக் காட்டவேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்ட காரணத்தினால் வசதி படைத்தவர்களும் இந்தக் குடும்ப அட்டையைப் பெறவேண்டுமென்று அவர்கள் ஏழையெளியவர் களையெல்லாம் முந்திக்கொண்டு அந்தக் குடும்ப அட்டையைத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்கிறார் கள். ஏழையெளிய மக்கள் உண்மையிலேயே அந்த குடும்ப அட்டையை உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு பயன் படுத்தவேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்திலே இருப்பவர் களுக்கு அந்தக் குடும்ப அட்டைகள் கிடைப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. எனவே, இன்றைக்கு கிராமப் புறங்களிலே செல்கின்றபொழுது ஏழையெளிய மக்கள்

தங்களுக்கு குடும்ப அட்டை கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தை அனுதினமும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்தக் குடும்ப அட்டையைப் பொறுத்தவரையில் பொது விநியோக முறையைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியின் கருத்தாக கூறிக்கொள்ள விரும்புவது, இந்தப் பொது விநியோகத்திலே வாங்கப்படுகின்ற அத்தியாவசியப் பொருள்களை, ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு குறைவாக இருப்பவர்களுக்கு அரிசியைக் கூடுதலாக வழங்கி, இன்றைக்கு ஒரு கார்டுக்கு 13 கிலோ என்றால், அவர்களுக்கு 25 கிலோவாகக் கூட கொடுத்துவிட வேண்டும். வசதிபடைத்தவர்களைப் பொறுத்தவரையில், அநேகமாக ரேஷன் அரிசியை பெரும்பாலும் அங்கே சென்று வாங்குவதில்லை. அவர்கள் அந்தக் குடும்ப அட்டையில் அந்த அரிசியை வாங்காததால் அங்கேயிருக்கின்ற விற்பனையாளர்கள் அந்த அரிசியை கடத்தலுக்குப் பயன்படுத்துவதும், பல்வேறு வகையிலே தவறாக அந்த அரிசியை வெளி மாநிலங்களுக்குக் கடத்துவதும், எங்கள் பொள்ளாச்சி தாலுகாவிலேயிருந்து கேரள மாநிலத்திற்கு, வசதி படைத்தவர்கள் அந்த அரிசியை வாங்காத காரணத்தினால், கடத்தப்படுவதை நாங்கள் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. எனவே, இந்தப் பொது விநியோக முறையிலே வழங்கப்படுகின்ற அந்த அரிசியை ஏழையெளிய மக்களுக்கு மட்டுமே, வருமானம் ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். அதுதான் நியாயம் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குடும்ப அட்டையை வசதி படைத்தவர்களுக்கு வழங்குகின்றபொழுது அவர்களுக்கு சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இந்தப் பொருட்களுக்கு மட்டுமே பயன்படுத்துவதற்காக அதைச் செய்து விட்டால் இந்தக் குடும்ப அட்டைக்கான போட்டி என்பது இவ்வளவு இருக்காது என்பதையும் கருத்தாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

இன்றைக்கு இந்த அரசானது ஏகபோக கொள்முதலை நீக்கியிருக்கிறது. அதாவது ஒருகாலத்தில் தஞ்சை மாவட்டத்திலே செக்-போஸ்ட் லெவி என்று சொல்லி அந்த விவசாயிகள் தங்களது நெல்லை வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாத ஒரு நிலைமை இருந்ததை மாற்றி தமிழகத்தினுடைய எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் கொண்டு சென்று அவர்கள் விளைவித்த நெல்லை விற்கலாம். அந்த ஏகபோகக் கொள்முதலை இப்பொழுது நீக்கிவிட்டு, தடையை நீக்கி எல்லா இடத்திலும் விற்கலாம் என்றாலும் கூட தஞ்சை போன்ற மாவட்டங்களிலே இன்றைக்கு நெல் கொள்முதலிலே தமிழக அரசானது ஏகபோகக் கொள்முதல் செய்கின்றவர்களுக்குப் போனஸ்

53-446—49

என்ற அடிப்படையில் 35 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக் கொடுத்து வந்ததை இப்பொழுது நிறுத்தியிருப்பதை அங்கேயிருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு மீண்டும் தமிழக அரசானது கொள்முதல் செய்கின்ற இந்த நெல்லுக்கு அந்தப் போனஸ் தொகையைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளையும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தமிழகத்திலே 91-ஆம் ஆண்டிலும் 92-ஆம் ஆண்டிலும், 93-ஆம் ஆண்டிலும் கடுமையான புயல், வெள்ளம், மழை என்ற சேதங்கள் விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய உணவு உற்பத்தியின் இலக்காக இந்த ஆண்டு 100 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை எதிர்பார்த்து ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நாங்கள் விவசாயிகளிடம் தெரிந்து கொண்ட அளவிலே, இந்த ஆண்டு ஒரு ஏக்கரினுடைய நெல் மகசூல் 15 மூட்டைக்கும் குறைவாகத்தான் பெரும்பாலான இடங்களிலே இருந்திருக்கிறது. காரணம், இந்த ஆண்டு புயலாலும், வெள்ளத்தாலும், கதிர் பிடிப்பதற்கு முன்பாகப் பயிர்களில் பூப் பிடிக்கின்ற தருணத்திலே கடுமையான வெள்ளம், புயல். மழை இருந்ததால் அந்த மகரந்தம் எல்லாம் கொட்டி, பயிர் விளைச்சலானது கடுமையாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தி என்பது ஒரு ஏக்கருக்கு 15 மூட்டை என்பதே அதிகபட்ச அளவாகத்தான் இருந்திருக்கிறது. எனவே, இந்த 100 மில்லியன் டன் என்பதை இந்த ஆண்டு இலக்காக வைத்து அடைய முடியுமா என்பதை நான் சந்தேகத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே இந்த ஆண்டு உணவு உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயரும் என்று தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள், இந்த ஆண்டு பெய்த மழை, வெள்ளத்தால் வெகுவாக நெற்பயிர்கள் பூக்கின்ற பருவத்திலே அவைகள் உதிர்ந்த கதிர் பால் பிடிக்காத நிலையிலே இருக்கிறது; எனவே, மகசூல் குறைந்திருக்கிறது; இப்படிப்பட்ட சூழ்நிலையில்

TRUTH ALONE TRIUMPHS

ஆளுநர் உரையிலே குறிப்பிட்ட அளவு அரசு அதை நிறைவேற்றுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான் திரு. நா. சா. பழனிசாமி அவர்களுக்குத் தங்கள் வாயிலாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டம் வள்ளலார் மாவட்டத்திலே ஒரு பகுதி, திருச்சியிலே ஒரு பகுதி, இப்பப்பட்ட புயல் அடிக்கப்பட்ட பகுதிகளிலே மட்டும் நெல் மகசூல் சிறிது பாதிக்கப்பட்டு இருந்தது. உண்மை.

ஆனால், அதே நேரத்திலே, வறட்சியான மாவட்டங்கள் என்று சொல்லக்கூடிய திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், வடார்க்காடு - அம்பேத்கார் மாவட்டம், பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், திருநெல்வேலி - கட்டபொம்மன், இராமநாதபுரம், மதுரை, பசும்பொன் போன்ற பகுதிகளிலே தானியங்கள் பயிரிட்டு வந்த நிலங்களெல்லாம் இந்த ஆண்டு புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்கு இயற்கை தந்த வரப்பிரசாதமாக நல்ல மழை பெய்ததால் தானியங்கள் பயிரிட்ட பகுதிகளெல்லாம் நெற்கதிர்கள் பயிரிடப்படடு, இன்றைக்கு நல்ல மகசூல் அதிகமாக உயர்ந்திருக்கிறது. எனவே, அரசு குறிப்பிட்டுள்ள இந்தக் குறிக்கோளை நிச்சயமாக அடையும். அதனுடைய இறுதி வடிவத்தை, வருகின்ற வேளாண்மைத்துறை மானியத் கோரிக்கையின்போது தெளிவாக அறிவிக்கிறேன். என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி, தங்களுடைய பேச்சை சீக்கிரமாக முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். 20 நிமிஷங்கள் ஆகிவிட்டன.

பிற்பகல் 1.40

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தஞ்சை, திருச்சி போன்ற புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மகசூல் குறைந்திருப்பது உண்மை என அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு, விவசாயிகளின் துயரைத் துடைப்பதற்காக அவர்களின் துயரைப் போக்குவதற்காக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு வகைகளிலே நஷ்ட ஈடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்றாலும்கூட, இந்த பெரும் இழப்பிற்கு பத்தியில், அரசு கொடுத்திருக்கிற அந்த நஷ்ட ஈட்டுத் தொகை, அரசு கொடுத்திருக்கிற நிவாரணத் தொகை, ''யானைப் பசிக்கு சோளப் பொரி

கொடுப்பதைப் போல'', இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அது பேருதவியாக, அவர்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பிற்கு நஷ்ட ஈடாக இருந்திருக்க வாய்ப்பில்லை. இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளிடத்திலே கூட்டுறவு, நிலவள வங்கிக் கடன்கள் போன்றவற்றை வசூலிப்பதில் சில பகுதிகளில் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒருசில இடங்களிலே ஜப்தி போன்ற நடவடிக்கைகளில்கூட அவர்கள் ஈடுபடுவதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே, இந்தச் சூழ்நிலையில், இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடனையும், நிலவளவங்கிக் கடனையும் தள்ளுபடி செய்யுங்கள் என்று நான் கேட்காவிட்டாலும்கூட, அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்து வருங்காலத்திலே அந்தப் பகுதி மக்கள் வட்டியோடு கட்டுவது என்பது, கடன் சுமையை மேலும் கட்டுவதாக அமையும் என்ற காரணத்தினால், இந்த ஆண்டிற்கான அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்து, ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்குமாறு நான் இந்த அரசை, மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, தமிழக அரசானது கரும்பிற்குக் கூடுதல் விலை கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். மத்திய அமைச்சர் ஒருவர், தமிழக அரசு கரும்பிற்குக் கூடுதலாக விலை கொடுப்பது என்பது, மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலையைவிட எப்படி கூட்டிக் கொடுக்கலாம் என்ற கேள்வியைக் கூட எழுப்பியிருக்கிறார். இன்றைக்கு மராட்டிய மாநில விவசாயிகள், நீதிமன்றத்திற்குச் சென்று, நாக்பூர் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, கரும்பிற்கு ஒரு டன்னுக்கு ரூ. 740 என்ற விலை கொடுக்கலாம் என்று அந்த நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. இன்றைக்கு, தமிழக அரசு அந்த நீதிமன்ற ஆணையைவிடக் குறைவாகக் கொடுத்தாலும்கூட, மத்திய அரசு பொறாமைப்படுகிற, மத்திய அரசே அதிகம் என்று நினைக்கிற விலையைக் கரும்பிற்குக் கொடுத்திருப்பதை, கரும்பு உற்பத்தியாளர்கள் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு பருத்தியைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே 6 இலட்சம் பேல் உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். தமிழகத்திற்கு 30 இலட்சம் பேலுக்கு மேல் பருத்தி தேவைப்படுகிறது. ஆனால் பருத்தி உற்பத்தி 6 இலட்சம் பேல் என்ற அளவிலேதான் இருக்கிறது. அதற்குக் காரணம், பருத்தி உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைப்பதில்லை. பருத்தி என்பது, மிகவும் அதிகமான

முதலீடு போட்டு, பூச்சி, பூஞ்சாண நோய்த் தாக்குதல்கள் எல்லாம் ஏற்படடு, பாதிக்காத வகையிலே பருத்தி விளைச்சலைப் பெருக்குவது என்பது, மிகப்பெரிய கடுமையான ஒரு சூழ்நிலை. அந்தச் சூழ்நிலையிலேதான், இந்த ஆண்டு பருத்தி விலையானது ஒரு குவிண்டாலுக்கு ரூ. 2,000 எனற அளவுக்கு எட்டியிருக்கிறது, இந்த இரண்டாயிரம் ரூபாய் பருத்தி விலையே பெரிய விலை என்று சொல்லி, பல தரப்பினரும் கூச்சல் போட்டக் காரணத்தினால், மத்திய அரசு நடவடிக்கை எடுத்து, பருத்தி விலையைக் குறைத்திருக்கிறது. ஏற்றுமதியைத் தடுத்திருக்கிறது. பருத்தி விலை ரூ. 2,000 என்பது ஒரு பெரிய விலை அல்ல. இந்தப் பருத்தி விலையை நல்லமுறையிலே பாது காத்துத் தந்தால்தான, தமிழகத்திலே, இன்றைக்கு 6 லட்சம் பேலாக இருக்கிற பருத்தி உற்பத்தி 30 லட்சம் பேலாகப் பெருகும். அவ்வாறு பெருகினால்தான், தமிழகத்தினுடைய தேவைக்குப் போதுமானதாக இருக்கும்.

இன்றைக்கு, நீர்ப்பாசனத்திலே, காவிரிப் பிரச்சினையிலே, தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உயிரைப் பணயம் வைத்து, காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு, பாசனத்தில் உரிமையைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள. ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருந்து வருகிற ஆறுகளை, கிழக்கே திருப்பி விட வேண்டும் என்பதிலே, அந்த மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருந்து வருகிற ஆறுகளினுடைய உரிமையைப் பெறுவதிலே, நாம் நிச்சயமாக உறுதியோடு இருக்க வேண்டும். தமிழக முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், தென்னக எரிவாயுத் திட்டத்தை எப்படிக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தார்களோ, அதேபோல, தென்னக நதிகளை இணைக்க வேண்டுமென்ற திட்டத்தையும், தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேசுகிறபோது, " தென்னக நதிகளை இணைப்பதற்கு மட்டும் ஒப்புதலைப் பெற்றுக் கொடுங்கள் ; அதற்கு வேண்டிய செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன் " என்று ஆணித்தரமாகச் சொன்னதன் மூலம் தென்னக நதிகளை இணைக்கிற திட்டத்தில் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. அதேபோல், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி வருகிற " பாண்டியாறு - புன்னம்புழா திட்டம் " என்பது, கோவை மாவட்ட மக்கள் நீண்டகாலமாகக் கண்டு கொண்டிருக்கிற ஒரு கனவு, அந்தப் " பாண்டியாறு - புன்னம்புழா " திட்டத்தை, மின்சாரத் திட்டமாக மாற்றி அதைக் கேரள அரசு செயல்படுத்துவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாக தெரிய வருகிறது. அதேபோல், " பரம்பிக்குளம் - ஆழியாறு' திட்டத்தைப்பற்றி இன்றைக்குக் கேரள அரசானது

சொல்லும்போது, இந்தத் திட்டத்திலே தமிழகம் கேரளத்தை ஏமாற்றி விட்டது என்பதைப் போல கேரள சட்டமன்றத்திலேகூட ஒரு விவாதம் வந்திருக்கிறது.

இன்றைக்கு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிறது. 10—2—1994-லே திறந்து விடவேண்டிய தண்ணீர் புதிய முதல் மண்டலத்திற்கான தண்ணீராவது — இப்போது விவசாயிகள் இரு பிரிவினராகப் பிரிந்து 3 மண்டலம், 4 மண்டலம் என்று அவர்களுக்குள் நீதிமன்றப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிற காரணத்தால் தண்ணீரானது திறந்துவிடப்படாமல் பரம்பிக்குளம்-ஆழியாறு தண்ணீரானது ஆவியாகிக் கொண்டிருக்கிறது. பொள்ளாச்சி போன்ற தென்னை வளம் மிக்க தாலுக்காவிலே இன்றைக்குத் தென்னம்பிள்ளைகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தண்ணீரை 3 மண்டலமாகத் திறந்துவிடுவதா 4 மண்டலமாகத் திறந்து விடுவதா என்பதில் நீதிமன்றப் பிரச்சினை இருந்தாலும்கூட (குறுக்கிடு)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே தடை விதித்திருப்பதன் காரணமாக இன்றைக்கு அங்கே தண்ணீர் திறந்துவிட முடியவில்லை. தடை நீக்கப்பட்டால்தான் அரசாங்கம் தண்ணீரைத் திறந்துவிட முடியும். அந்தத் தடையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவில் தடை நீக்கப்பட்டுவிடும். தடை நீக்கப்பட்டவுடன் விரைவாகத் தண்ணீர் விடப்படும் என்ற செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்திற்கு நான் இந்த நேரத்தில் ஒரு தெளிவான கருத்தைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு கரும்பு விலைக்கு 8.5 சதவீதம் சர்க்கரைச் சத்துக் கொண்ட 1 டன் கரும்புக்கு மத்திய அரசு விலை நிர்ணயம் செய்தது 345 ரூபாய். புரட்சித் தலைவி அவர்கள் இந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது என்பதை அறிந்து 1 டன் கரும்புக்கு 8.5 சதவீதம் சர்க்கரைச் சத்துக் கொண்ட

கரும்புக்கு 450 ரூபாய் என்று விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதைத்தான் திரு. நா.சா.பழனிசாமி அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். அதே நேரத்தில் 240 ரூபாய்க்கு1 டன் மொலாசஸ் விற்ற நேரத்திலே இன்றைக்கு அந்த மொலாசஸ் கட்டுப்பாட்டைத் தளர்த்தி பொது விற்பனை செய்வதற்கு மத்திய அரசு அனுமதித்ததன் காரணமாக 1 டன் மொலாசஸ் குறைந்த விலையாக ரூ. 2 500 லிருந்து ரூ. 4 000 ஆக வெளிமார்க்கெட்டில் விற்பனையாகின்றது. ரூ. 240–லிருந்து ரூ. 4,000 விற்ற மொலாசஸைப் பார்த்து மத்திய அரசு தமிழக விவசாயிகளுக்கு கொடுத்த தொகை ரூ. 35 மட்டுமே. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் அதை 450 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்த்ததற்குப் பின்னால் மத்திய அமைச்சர் உடனடியாக அகில இந்திய வேளாண்மைத் துறை செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டி இப்படி மத்திய அரசு ஒரு விலையை நிர்ணயிக்கின்றபோது மாநில அரசு விவசாயிகளின் நலனை கருத்திலே கொண்டு மில்களை நசுக்க வேண்டாம் என்று இப்படிக் கூடுதல் விலையை அறிவிக்கக் கூடாது என்றும் அந்தக் கூட்டத்தில்பலர் பேசினார்கள். தமிழகத்தின் முதலமைச்சர் இக்கருத்தை வன்மையாக எதிர்த்ததோடு மட்டுமல்லாமல் தமிழக மாநிலத்தினுடைய விவசாயிகளின் நலனைக் காக்கின்ற பொறுப்பும் கடமையும் எங்களிடத்திலே இருக்கிறது. எனவேதான் மக்கள் எங்களை நம்பி இந்த ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று அங்கே வலியுறுத்தினார் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. நா. சா. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மொலாசஸை டீ-கன்ட்ரோல் செய்ததன் காரணமாக மொலாசஸின் விலை ரூ. 2,000-த்தை எட்டிக் கொண்டிருக்கிற பொழுது அதை விற்பனை செய்துவரும் ஆலை முதலாளிகளுக்கு ஆதாயம் பெற்றுத்தர வேண்டும். சாராய வடிசாலைகளுக்கு இலாபம் தேடித்தர வேண்டும் என்று மத்திய அரசு திட்டத்தைக் கொண்டுவந்த அந்த நேரத்தில் கரும்பை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு மட்டும் அந்த சர்க்கரை சத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு 8.5 சதவீதம் என்று விலை நிர்ணயம் செய்திருப்பது ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் ஒரு கண்ணிலே வெண்ணெயும் வைக்கிற செயலாகத்தான் கருதப்படவேண்டியிருக்கிறது ஆகையால் விலையை நிர்ணயிக்கின்றபோது சர்க்கரைச் சத்துக்கு மட்டும் என்று நிர்ணயிக்காமல் மொலாசஸ்ஸினுடைய விலையையும் சேர்த்து நிர்ணயிக்கின்றபோது இந்த 450 ரூபாய் என்று தமிழக அரசு சேர்த்திருப்பது குறைந்தபட்ச விலைதான். ஆனாலும் இதைக்கூட ஒரு நல்ல நோக்கத்தில் விவசாயிகள் பாதுகாக்கப்படவேண்டும். பாடுபடுகின்ற விவசாயிகள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த கரும்பை விளைவிக்கின்ற விவசாயிகள் கண்ணீர் விடக்கூடாது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி

அவர்கள் மத்திய அரசினுடைய எதிர்ப்பையும் மீறி இன்றைக்கு விலையை அறிவித்திருப்பதை விவசாயிகள் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குப் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திலே நீதிமன்றத் தடையாணை இருப்பதையும் அந்தத்தடையாணையை நீக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் விரைவில் தடையாணை நீக்கப்பட்டு தண்ணீர் விடப்படும் என்ற ஒரு கருத்தையும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

major industrial estates to promote entrepreneurship among Scheduled-Castes in Coimbatore and Periyar districts. 200 units will be established in the above industrial estates to manufacture knit wear This major scheme will promote a new generation of self reliant entrepreneurs among the Scheduled Castes and Tribes.

25. The Chief Minister Dr. J. Jayalalitha has announced the decision to hold the 8th World Tamil Conference at Thanjavur, the renowned city of ancient Tamil culture and learning, in January, 1995. This conference was last held in Tamil Nadu in 1981. The city of Thanjavur has been chosen for its great historical and cultural importance. Preparations are afoot for the conduct of this Conference in a grand and memorable manner.

26. Members of the House may recall how with the initiative and determination of the Chief Minister Dr. J. Jayalalitha, the new Jawaharlal Nehru Stadium at Madras was completed at a cost of Rs. 40 crores in a record time of seven and a half months. This resplendent and magnificent stadium was the venue of the splendid International Invitation Athletic Meet and the 33rd Open National Athletic Championship held in February 1994. 31 countries participated in this Athletic Meet. 91 international athletics and 900 other participants came together for this event. Never has sports activity been given such importance as by this Government. It is a good augury for the future that Tamil Nadu has secured the third place in the National Games held recently at Pune. Plans are being drawn up to host the South Asian Federation Meet at Madas in December 1995. A comprehensive plan for the development of sports facilities, and other infrastructure to eanble the conduct of the games has been drawn up and will be implemented, well in time for the conduct of the prestigious South Asian Federation Meet.

27. This Government has placed the highest emphasis on the quality of performance of the administration. The performance of Government Departments and Public Sector Undertakings has merited several awards. I would, in particular, like to mention the meritorious performance of the State Transport Corporations. They have won awards both in 1992-93 and 1993-94. They have won 5 out of 7 national level awards for various performance indicators. In social welfare, Tamil Nadu has the distinction of winning 22 awards for providing employment service to the hndicapped and women and child welfare. The Department of Agriculture has bagged the certificates of merit given by the Government of India and the National Productivity Council for excellent performance in the fields of agricultural extension and production of bio-fertilizers. Tamil Nadu Minerals Limited, has received a special-export award for the export of granite blocks. It will be the endeavour of this Government to promote all round excellence in the performance

of the various Government Departments and Undertakings and to inspire them to win many more laurels at the national level.

28. This Government extends a variety of benefits to the poor and the needy persons. It is of utmost importance to ensure that these, benefits do in fact reach the poor and the needy persons. In a democracy it is equally necessary to ensure that representations received from the public are given utmost consideration, as expeditiously as possible, and appropriate action taken wherever feasible. Beginning from March. 1992, the Chief Minister Dr. J. Jayalalitha personally received petitions from the public at Madras and gave away benefits to a large number of people as per a programme covering all the districts on specific dates. In the second stage, the Chief Minister decided to visit district head-quarters and personally distribute benefits to the poor and the needy persons. So far the Chief Minister has covered 13 districts. 3,00,377 beneficiaries have been given various benefits amounting to a sum of Rs. 201 crores. This mass contact programme initiated by the Chief Minister Dr. J. Jayalalitha is a notable achievement of this Government Besides ensuring prompt redressal of public grievances, the system has ensured that the beneficiaries do in fact receive the benefits intended for them.

29. The proper functioning of democratic institutions at the grass roots level is one of the Directive Principles of State Policy in the Constitution. Tamil Nadu has a long history of good and efficient local Government at the Panchayat and Panchayat Union levels. The State Government has always insisted that an approach of flexibility should guide the pattern of the local Government in the various States in the country. The 73rd and 74th Amendments to the Constitution of India have now provided the basis and structure for the incorporation of the functioning of the democratic insitutions at various levels in the States. I am glad to announce that necessary legislation incorporating the main features of the 73rd and 74th Amendments will be introudced in this Budget session of the Assembly.

30. Elections to the Co-operatives were notified by this Government on the 11th June, 1992. However, the conduct of the elections was stayed by the High Court in August, 1992. The issues have been referred to a Division Bench of the High Court. This Government will take appropriate action to conduct elections to the Co-operatives soon after the judgement of the High Court.

31. Tamil Nadu has entered a crucial stage in the area of economic development. The policy and measures of liberalisation announced by the Government of India are beignning to make their impact felt in the States and Tamil Nadu will ensure that the benefits of this liberalisation reach the State and help to raise the standard of living of the people. This

1994 மார்ச் 17]

Government will continue to maintain law and order in the most satisfactory manner as this is a precondition for the peaceful and orderly development of the State.

32. Notwithstanding the extremely critical financial situation which this Government has been facing all these years, compounded by the new developing macro economic factors, the State Government has done well to provide a complete safety net for the poor and the needy persons. The Government has courageously tackled every one of the major issues that arose in the wake of macro economic developments, besides ensuring a highly satisfactory law and order situation and handling deftly the critical financial condition, exceeding the approved plan outlays repeatedly. Tamil Nadu has earned well merited appreiciation from various multilateral agencies like the World Bank, UNDP, UNICEF and others for its successful track record in the implementation of new projects and programmes.

33. This Government will maintain strict vigilance to ensure that peace and tranquility is maintained without blemish. This Government will place the highest emphasis on securing for Tamil Nadu its rightful share in national investments ,resource flows to the States and at the same time participate fully in national initiatives.

34. I am sure that the Hon'ble Members of this House will applaud the bold and imaginative steps taken by this Government in many areas. We shall continue to take all stpes to ensure that Tamil Nadu stands out as a model of accelerated economic development, providing for growth as well as betterment in the lives of the poor. I have every confidence that the deliberations in this House will be fruitful in securing for the State prosperity in the future. I also have no doubt that the discussions will be balanced, objective and purposive.

VANAKKAM

(299-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க).

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

1994ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தமிழ்நாடு, 1993ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. ஏழை எளியோர் ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏற்றம் காண இம்முன்னேற்றம் உறுதுணை புரிந்துள்ளது. மேலும் பல வளர்ச்சித் திட்டங்களைச் செயற்

[1994 மார்ச் 17

படுத்துவதன் மூலம், தமிழ்நாடு அனைத்து வகையிலும், தொடர்ந்து சீராக முன்னேற்றம் அடையும் என்று நான் நம்புகிறேன்.

3. 1993ஆம் ஆண்டில், சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்பட்டது. இவ்வரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னர், இங்கு நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கண்டிப்பான விழிப்புப் பணி, உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கை, இடைவிடாத கண்காணிப்பு, பல்வேறு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் பயனாக, வெளிநாட்டுப் போராளிகளினாலும், தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல் வேருடன் களையப்பட்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நேரடியாக, நிலைமை குறித்து அடிக்கடி ஆய்வு செய்து வந்தார். முதலமைச்சர் அவர்களும், மத்திய உள் விவகார இணை அமைச்சர் அவர்களும் 1994ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடத்திய கூட்டு ஆய்வு, மத்திய—மாநில அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பயனுள்ள நடவடிக்கையாக அமைந்தது. தமிழ்நாடு, அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகின்ற மாநிலம் என்ற பெருமைக்குரிய நற்பெயரைக் கட்டிகாத்து, மேலும் பெருமை சேர்ப்பதே அரசின் இடையறா முயற்சியாக இருக்கவேண்டும்.

4. இம்மாநிலத்தில் எழுந்த ஒவ்வொரு நிலைமையையும், தொடர்ந்து தன் கட்டுக்குள் கொண்டு வந்த மாநில காவல் துறையினர், சிறு சிறு நிலைமைகளைத் திறம்படக் கையாண்டனர். மாநில காவல் படையினர் புதிய கண்ணோட்டத்துடனும், குறிக்கோளுடனும் திறம்படச் செயல்படும் வகையில் இப்படையை முற்றிலும் நவீனமயமாக்கும் மாபெரும் பணியில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. ரூ. 80.45 கோடி செலவில், தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான விரிவான தொரு திட்டம் தயாரிக்கப்பட்டு, நிதியுதவி வேண்டி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 1991-92ஆம் ஆண்டில், மத்திய அரசு ரூ. 10 கோடி அளித்தபோதிலும், மேற்கொண்டும் நிதி உதவி எதுவும் கிடைக்கப் பெறவில்லை. ரூ 12 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய கடலோரப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக இவ்வரசு மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளது. இதற்கிடையில், ரூ. 10 கோடி செலவில் காவல் படையை நவீனப்படுத்தும் மாநிலத் திட்டம் ஒன்று இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பரந்தமைந்த தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், ஆயுதங்கள், பயிற்சி வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யும் இப் பல்நோக்குத் திட்டம் காவல் படையின் செயல் திறனைப் பெரிதும் மேம்படுத்தியுள்ளது. 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 16 காவல் நிலையங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன.

எஞ்சிய காவல் நிலையங்கள் 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்குள் செயல்படத் தொடங்கிவிடும். முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் கருத்தில் உதித்த புதியதொரு கோட்பாட்டின்படி அமைந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் மிகவும் வெற்றிகரமான முயற்சி என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பரவலான பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. இவ்வரசு, காவல் படையின் திறமையை மேம் படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். அதே வேளையில், மனிதாபிமானத்துடனும், கருணையுடனும் பிரச்சினைகளை அணுகுவதற்கான பயிற்சிகளையும் அவர் களுக்கு அளிக்கும்,

5. இவ்வரசு நீதித்துறைப் பணி நிலைமைகளை மேம்படுத்து வதில் மிகவும் உறுதியாக உள்ளது. ரூ. 7 கோடி மொத்தச் செலவில், சேலத்திலும், இராமநாதபுரத்திலும் புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதித் துறைக்கு வேண்டிய இன்றியமையாத வசதிகளை செய்து கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை மாநிலத் திட்டத்தில் சேர்ப்பது குறித்த முயற்சிகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள். இத்திட்டப் பணிக்கு தற்போது ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதையும், ரூ. 3.66 கோடி செலவில் நீதித் துறைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும் அறிவதில் அவை உறுப்பினர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைவர். மத்திய அரசு, 1994-95 ஆம் ஆண்டில், இதுபோன்றதொரு திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் என்று நான் நம்புகிறேன். நீதித்துறை அதிகாரி களுக்காக சென்னையில் ரூ. 6.68 கோடி செலவில் பெரும் வீட்டு வசதி திட்டம் ஒன்று இவ்வாண்டில் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூ. 1.5 கோடி செலவில் சென்னை உயர்நீதி மன்றத்தில் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஸ்ரீலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப் படுவது தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு குறைந்தது ஐந்து முறை கடிதம் எழுதியுள்ளார். இது மிகவும் கவலை அளித்து வருகின்ற ஒரு பிரச்சினை ஆகும். அண்மையில் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மத்திய அரசு உடனடியாக ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு, அச்சம்பவத்தில் மரணமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்ய வேண்டுமென, அவர் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது

குறித்து, மத்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுக்கு தன்னுடைய கவலையைத் தெரிவித்ததுடன், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதாகவும் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் பதிலளித்துள்ளார். முதலமைச்சர் அவர்கள் நேரடியாக நிலைமையைக் கண்காணித்து வருகிறார். மீனவர்கள்பால் எங்களுக்கு முழு பரிவு உண்டு. இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்குமாறு இவ்வரசு மத்திய அரசை தொடர்ந்து கேட்டுக் கொள்ளும்.

7. சமூக நீதி மேம்பாட்டுக்கு பெரிதும் தொடர்புடைய சமூகக் கொள்கையின் மற்றுமொரு முக்கிய அம்சம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யும் திட்டமாகும். தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து செயல்படுத்த இயலும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இம்மாமன்றம் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஒருமனதான தீர்மானம் நிறைவேற்றியதை அவை உறுப்பினர்கள் நினைவு கூறலாம். 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்து கட்சிக் கூட்டத்தில், 31பி அல்லது 31சி பிரிவின் கீழ் சட்டம் இயற்றுவது உட்பட, தற்போதைய இட ஒதுக்கீடு திட்டத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த அவை, மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகியோருக்கு மொத்தம் 69 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

8. தமிழ்நாட்டு மக்கள் மீது இந்தி ஒருபோதும் திணிக்கப்பட மாட்டாது என்று மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உறுதி மொழி அளித்தார். நமது மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த இரு மொழிக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், 1981 ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இந்த உறுதிமொழியை மீண்டும் உறுதிப்படுத்தினார். மத்திய அரசு இந்த உறுதி மொழியைக் கட்டிக் காக்கும் என நாம் நம்புகிறோம்.

1994 மார்ச் 17]

9. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், ஆயிரக்கணக்கானவர்களுக்கு, வேலை வாய்ப்பு அளிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோர்களுக்கிடையே 1993ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினை, திரைப்படத் தொழில் முழுவதையுமே ஸ்தம்பிக்கச் செய்ததுடன் தொழிலாளர்களின் பிழைப்புக்கும் பேரிடர் ஏற்படுத்தியது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் 1993ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம் நாளன்று ஆறு மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி பல உதவித் திட்டங்களை அறிவித்து, சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்து திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கு அவர் உறுதுணையாகத் திகழ்ந்தார்.

10. தமிழ்நாட்டின் கோயில்களின் புனரமைப்பு, பராமரிப்பு, நிருவாகம், ஆகியவற்றில் ஒரு புதிய மறுமலர்ச்சி காணப்படுகிறது. 1991ஆம் ஆண்டில், முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கிய முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி, கோயில்களைப் புனரமைத்து, பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 48 கோயில்களுக்கு, புனரமைப்புப் பணியை மேற்கொள்ளுவதற்கும் 512 கோயில்களில் நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒரு கால பூஜை நடத்துவதற்காக சிறப்பு நிதி ஏற்படுத்துவதற்கும் இந்நிதியிலிருந்து மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், மேலும் 2,500 கோயில்களில் அன்றாட பூஜை நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இம்மாநிலத்தின் தென் மாவட்டங்களில் தொடர்ந்து ஏற்பட்ட கோயில் திருட்டை ஒழிப்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 227 கோயில்களில் திருட்டு நடந்ததற்குப் பொறுப்பான கும்பலை, மாநில காவல்துறை வெற்றிகரமாகக் கைது செய்துள்ளது. ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் பொருட்டு, இஸ்லாமியர் இடுகாட்டைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும், முள்கம்பி வேலி போடுவதற்கும் மானியமாக ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில், இந்நோக்கத்திற்காக அளிக்கப்பட்ட கடன்கள், மானியமாக மாற்றப்பட்டுள்ளன. மாநில வக்ஃபு வாரியத்திற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. காவிரி ஆறு, தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடியாகும். தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் அடிப்படைப் பாசனத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, கருநாடக அரசு குறிப்பிட்ட அளவு நீரைத் திறந்து விடுவதற்கு காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு வகை செய்கிறது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி

தன் பொறுப்புகளை நிறைவேற்ற கருநாடக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருந்ததால், இப்பிரச்சினை குறித்து, மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றுமாறு கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வலியுறுத்தியும், முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1993ஆம ஆண்டு ஜூலைத் திங்கள் 18ஆம் நாளிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். நெருக்கடியான இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள், முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த பேராதரவை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். மத்திய நீர் வளத்துறை அமைச்சர் அவர்கள் உண்ணாவிரதமிருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். இடைக்காலத் தீர்ப்பைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, மத்திய அரசு இரு குழுக்களை, அதாவது செயற்பாட்டுக் குழு, கண்காணிப்புக் குழு ஆகியவற்றை அமைக்கும் என்று அவர் அறிவித்தார். இது தொடர்பாக மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. காவிரியாற்றில் போதுமான நீர் இருப்பது மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு, குறிப்பாக வேளாண்மைத் துறைக்கு மிக இன்றியமையாததாகும். வரும் பருவத்தில் கருநாடக அரசு இடைக்காலத் தீர்ப்பின் விதிமுறைகளைச் செயற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

12. கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து, தமிழ்நாடு, புயல், வெள்ளத்தினால், மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து, ரூ. 390.53 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. எனினும், மத்திய அரசு, இடர் நிவாரண நிதியின் கீழ், உதவியாக ரூ. 29.25 கோடி மட்டுமே அளித்தது. ஆனால், மாநில அரசுக்கு ரூ.77.26 கோடி செலவு ஏற்பட்டது. மீண்டும் 1992இல் ஏற்பட்ட கடுமையான புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து ரூ. 530.40 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. இடர் நிவாரண நிதியின்கீழ், முன் பணமாக வழங்கப்பட்ட ரூ. 14.63 கோடி உட்பட, ரூ. 43.88 கோடி நிதி உதவி மட்டுமே வரப் பெற்ற போதிலும் மாநில அரசுக்கு மீண்டும் ரூ. 94.97 கோடி செலவு ஏற்பட்டது. 1993ஆம் ஆண்டில் நவம்பரிலும் டிசம்பரிலும் ஏற்பட்ட இரு கடும் புயலினால் இம் மாநிலம் பாதிக்கப்பட்டது. 2177 பேர் உயிரிழந்தனர். 2.30 இலட்சம் ஹெக்டேரிலிருந்த வேளாண்மைப் பயிர்கள் சேதமடைந்தன. 5.32 இலட்சம் குடிசைகள் நாசமடைந்தன. சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், பாசனப் பணிகள் ஆகியவற்றிற்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரண, மறுவாழ்வுப்

1994 மார்ச் 17]

பணிகளை நேரடியாக மேற்பார்வை செய்தார். ரூ. 666 கோடி நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. மாநில அரசு, நிவாரணப் பணிகளுக்காக ரூ. 75.37 கோடி அனுமதித்தது. இடர் நிவாரண நிதியின்கீழ் மத்திய அரசிடமிருந்து வரப் பெற்ற உதவித் தொகை, 1994–95ஆம் ஆண்டிற்குரிய தொகையிலிருந்து முன்னதாக வழங்கப்பட்ட ரூ. 14.63 கோடி உட்பட ரூ. 29.25 கோடியாகும். கடுமையான நிதி நெருக்கடியும், நிதி ஆதாரப் பற்றாக்குறையும் இருந்த போதிலும், அரசு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. குன்னூருக்குச் செல்லும் முக்கிய நெடுஞ்சாலையில் எல்லைச் சாலைகள் நிறுவனம் பழுதுபார்த்து சீரமைத்ததும், தேசிய நெடுஞ்சாலை 5—ல் குசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள தற்காலிக இணைப்புப் (Bailey Bridge) பாலப் பணிகளை விரைவாக முடித்ததும், வெள்ள நிவாரணப்பணிகளை மிக விரைவாகவும், அர்ப்பணிப்பு உணர்வுனும் மேற்கொண்டதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதியுதவி ஏதும் நமக்கு வரப்பெறாத போதிலும், வெள்ள சீரமைப்புப் பணிகளைப் பெருமளவில் நாம் மேற்கொண்டுள்ளோம். இடர் நிவாரண நிதி ஏற்பாடு நிறைவளிப்பதாய் இல்லை என்பது குறித்து இவ்வரசு பத்தாம் நிதிக்குழுவிற்கு விரிவான அறிக்கை அனுப்பியுள்ளது. 1995–96ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் முறை மேலும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறோம்.

13. தொண்ணூறாம் ஆண்டுகளில் தொடக்கத்தில் இம்மாநிலத்தில் திட்ட ஒதுக்கீட்டில் தேக்க நிலை நிலவியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டை உயரியதொரு வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல இவ்வரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 1991–92ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 1,605 கோடியாக இருக்க, திட்ட சாதனையின் அளவு, அதைவிட ரூ. 120 கோடி அதிகமாக, அதாவது ரூ. 1,725 கோடியாக இருந்தது. 1992–93ஆண்டில் ஆன திட்டச் செலவு, ரூ. 1,935 கோடி ஆகும்; இது ஏற்பளிக்கப்பட்ட ரூ. 1,766 கோடி ஒதுக்கீட்டைவிட ரூ. 169 கோடி அதிகமாகும். 1993–94 ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ரூ. 2,101 கோடி ஒதுக்கீட்டு அளவினை எய்தி முடிக்கும் நிலையில் இம் மாநிலம் உள்ளது. 1994–95ஆம் ஆண்டிற்காக, மிகவும் அதிகமான, அதாவது, ரூ. 2,750 கோடி திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதில் முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, 1993–94ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டைவிட 30.89 சதவீதம் அதிகமாகும். 1994–95ஆம் ஆண்டிற்கான இந்த ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் காரணமாக, தமிழ்நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய நபர்வாரி சராசரி திட்ட ஒதுக்கீட்டு அளவைவிட கணிசமான

அதிகரிக்கும் என்பது மேலும் நிறைவு அளிப்பதாக இருக்கிறது. தமிழ்நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய சராசரி அளவிற்கும் குறைவாக இருந்த நிலையிலிருந்து மீண்டு, தேசிய சராசரி அளவையும் மிஞ்சி, 3 ஆண்டு காலத்திற்குள் உயர்வளர்ச்சிப் பாதையில் கொண்டுவரப்பட்டிருப்பது உள்ளபடியே மிகச் சிறந்த சாதனை ஆகும். மிகப் பெரிய அளவில் நிதி நெருக்கடி நிலவிய சூழ்நிலையில், பல மாநிலங்கள், ஏற்கெனவே அவை ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவுகளைக் குறைக்க வேண்டியிருந்த நிலையில் இருந்தபோது, தமிழ்நாடு, தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவினை மிஞ்சி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஓர் ஒளிரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நமது மாநிலத்திற்குரிய 1994–95ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு பற்றி, மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் முதலமைச்சருடன் விவாதிக்கையில், இச்சாதனைச் சிறப்பான பாராட்டுதலைப் பெற்றுத் தந்தது.

14. 1993ஆம் ஆண்டில் புயலாலும், வெள்ளத்தாலும் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்ட போதிலும், இவ்வரசின் முழு ஆதரவுடன் உழவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக உணவு தானிய உற்பத்தி, முன் எப்போதுமில்லாத அளவாக 100 இலட்சம் டன்னை எட்டும் என்று நம்புகிறோம். 84.50 இலட்சம் டன் என்ற அரிசி உற்பத்தி அளவு இன்னொரு புதிய சாதனையாக இருக்கும். கரும்பு உற்பத்தி 251.10 இலட்சம் டன் ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. பருத்தி உற்பத்தி அளவு, 6 இலட்சம் பொதிகளாக இருக்கும். எண்ணெய் வித்துக்களின் உற்பத்திகூட, 17 இலட்சம் டன் என்ற புதிய சாதனை அளவை எட்டும். மேலும், 2,000 ஹெக்டேர் பரப்பில் எண்ணெய்ப் பனைகளை நடவு செய்திருப்பது, ஒரு புதிய சாதனை ஆகும். உயர் மதிப்புள்ள பயிர்களையும், தோட்டக் கலைப் பயிர்களையும் சாகுபடி செய்வதன் மூலம், வேளாண்மைப் பணியைப் பலதிறப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில், தரிசு நிலங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று பெரிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது. நெல் மற்றும் கரும்பு போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலைகள் கிடைத்ததனால், உழவர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

15. மின் சக்தித் துறையின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் மின்வெட்டுக்கள் இல்லை; மகிழ்ச்சியான இந்த சூழ்நிலை தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்க தொழிலதிபர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளது. இந்த நிலை எதிர்காலத்திலும் தொடர்ந்து நிலவுமாறு பார்த்துக் கொள்வதே இவ்வரசின் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புத் திறனைக் கணிசமாகப் பெருக்க, பல புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெயம்கொண்ட

1994 மார்ச் 17]

ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டத்தை, இணைத் துறையில் செயல்படுத்துவதற்குரிய ஒப்பந்தம் ஒன்று, 1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிவாகியது. இது, 1,500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட, ரூ. 7,500 கோடிக்கும் அதிகமான முதலீட்டுடன் கூடிய ஒரு மாபெரும் திட்டமாகும். விரிவான தொழில் நுட்ப சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குரிய நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட வாயுவை அடிப்படையாகக் கொண்ட பேசின்பாலம் மின் உற்பத்தித் திட்டம், 1994ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம், ஜப்பான் நாட்டின் 'வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதி' (OECF) நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், மாநிலத்தின் மின் உற்பத்தித்திறன் பெருகுவதோடு, சென்னைப் பகுதியில் மின் வழங்கலின் தரம் மேலும் சீரடையும். உலகிலேயே முதன் முதலாக, கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கை முடிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். ரூ. 800 கோடி மதிப்பீட்டுச் செலவில், 100 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிபெறுமாயின், இது நம்மிடத்திலுள்ள பெரும் கடல்வளத்தைப் பயன்படுத்துவதில் குறிப்பிடதக்க சாதனையாக அமையும். மத்திய அரசின் ஒப்புதலின் அடிப்படையில் நெய்வேலியில், தனியார் துறையில், 250 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளது. இம் மின்நிலையத்திற்கு, ஏறத்தாழ ரூ. 1,200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 1997இல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பத்தாண்டில், மின்சக்தித் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து கணிசமான முன்னேற்றம் காணும் வகையில் முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ள பல நடவடிக்கைகளை, அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நான் உறுதியாக நம்புகிறேன். கூடங்குளம் அணு மின் திட்டத்திற்கு நிதியுதவி செய்வதில் பங்கேற்க இவ்வரசு ஏற்கெனவே ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான பணிகளைத் தொடங்குவதைப் பற்றி, விரைவிலேயே ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டுமென இவ்வரசு வலியுறுத்தும்.

16. சிங்கப்பூருடனான வர்த்தக ஏற்பாடு குறித்த கோட்பாட்டுக்கு தூண்டுகோலாக அமையக்கூடிய ''சென்னைத் தொழில் பூங்காத் திட்டம்'' இவ்வரசால் கவனமாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு பெரும் செயல் திட்டமாகும். இப்பூங்காத் திட்டம், பன்னாட்டு முதலீட்டாளர்களைக் கவர்கின்ற வகையில், மாநில அரசு, சிறப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டது. மத்திய அரசுடன் விவாதித்த பிறகு,

புதிய தொழில் பூங்காத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய சில அம்சங்கள், திருத்தப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட அணுகுமுறையின் அடிப்படையில், சென்னை தொழில் பூங்காத் திட்டம் தொடங்கி வைக்கப்பட தற்போது தயார் நிலையில் உள்ளது. இத்திட்டத்தை விரைவில் தொடங்கி செயற்படுத்த இவ்வரசு முயற்சிக்கும். சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த மட்டில், கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், திருவண்ணாமலை-சம்புவராயர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் 5 புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதன் மூலம், தமிழ்நாட்டின் சாதனைக்கு மேலும் வலுவூட்ட முடியும். இப்புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள், மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசு அறிவித்த புதிய திட்டத்தின் கீழ், கும்மிடிப்பூண்டியில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவுப்படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்துவதற்காக, மாநில அளவில் எடுக்கப்பட வேண்டிய சீர்திருத்தப் பணிகளின் அவசியத்தை உணர்ந்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், மாநில அளவில் தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களை விரைவிலேயே அளிப்பது, சிறந்தத் தொழில் உறவு நிலை, போதிய அடிப்படை வசதிகள் ஆகியவை அடங்கும். தமிழ்நாட்டில் தொழில் உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளன. வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய காரணங்களினால் ஏற்படக்கூடிய மனித உழைப்பு நாட்களின் இழப்பு, 1992ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1993இல் 15.56 சதவீதம் குறைந்துள்ளது. தொழில் உறவு நிலைமைகளில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்கள் கடன் கொடுக்கும்போது, வட்டாரத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் வகையில், அனைத்திந்திய நிதியுதவி நிறுவனங்கள் வட்டார அடிப்படையில் சீரமைக்கப்பட வேண்டுமென தேசிய வளர்ச்சிக் குழுவில் முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். தென்னகத்தில், இது போன்ற நிதியுதவி நிறுவனம் ஒன்றை நிறுவ, சென்னை மிகப் பொருத்தமானதோர் இடமாகும். மத்திய அரசு இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளுமென நம்பப்படுகிறது. தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த வேண்டிய தன் அவசியம் குறித்து முதலமைச்சர் அவர்கள், திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளார். தென் மாநிலங்கள் இத்திட்டத்திற்கு கூட்டாக நிதியுதவி செய்யலாமென்றுகூட அவர் யோசனை தெரிவித்துள்ளார். இதற்குக் கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டதைத் தவிர, வேறு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இத்திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டிய தன் அவசியத்தை இவ்வரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

17. 1993ஆம் ஆண்டின் பெரும்பகுதி, சென்னை மாநகரில் நிலவிய கடுமையானத் தண்ணீர்ப் பற்றாக்குறைப் பற்றி அவை உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். முதலமைச்சர் டாக்டர்

1994 மார்ச் 17]

ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒவ்வொரு வாரமும் நிலைமையை நேரடியாக ஆய்வு செய்து, ஒருங்கிணைந்த செயல் திட்டங்களைச் செயற்படுத்த புதிய முயற்சிகளை மேற்கொண்டார். தண்ணீர் பற்றாக்குறையின் கடுமையைத் தணிக்க, நடவடிக்கைகள் பெருமளவில் எடுக்கப்பட்டன. வழங்கப்படும் தண்ணீர் அளவினைப் பெருக்குவதற்கும், கிடைக்கின்ற தண்ணீரைக் கவனமாகத் திட்டமிட்ட முறையில் விநியோகிப்பதற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான முழுத் திட்டமும் ரூ. 64 கோடி செலவில் செயல் படுத்தப்பட்டது. கடும் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, ஒரு கட்டத்தில் சென்னையை விட்டு வெளியேற வேண்டிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த சென்னைவாழ்மக்கள், கடுமையான தண்ணீர்பிரச்சினையை மிகச் சிறந்த முறையில் சமாளித்த இவ்வரசை, குறிப்பாக, முதலமைச்சர் அவர்களை ஏகோபித்த குரலில் பாராட்டியுள்ளனர். முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு நிலவிய இதுபோன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை சென்னையில் இனிமேலும் ஏற்படாதிருக்கவும், இத்தகைய தண்ணீர் பற்றாக்குறையின்போது, போதிய மாற்று ஆதாரத்திற்கு வகைசெய்யவும் வேண்டி, இவ்வரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, நிதியுதவிக்காக உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டை, உலக வங்கி, 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அயராத முயற்சிகளின் பயனாக, சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டுவரும் தெலுங்கு—கங்கை திட்டத்தைச் செயல்படுத்தும் பணியானது, ஆந்திரப் பிரதேச அரசால் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. தெலுங்கு—கங்கை திட்டம், 1995-ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவடையுமென ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். இத் திட்டத்தோடு இணைந்ததும் ரூ. 751 கோடி செலவாகக் கூடியதுமான குடிநீர் வழங்கல், விநியோகம் மற்றும் கழிவு நீரகற்றுதல் திட்டத்தையும் செயல்படுத்த உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது.

18, புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசால் தொடங்கப்பட்ட பெரும் பொருளாதார மாற்றங்கள் பற்றி அவை உறுப்பினர்கள் அறிவர், நிலைப்படுத்தல், அமைப்பு ரீதியிலான சரிக்கட்டல் நடவடிக்கைகள், விலைவாசி வீதங்களில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வழங்கல் விலைகளை அதிலும் குறிப்பாக, பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் வழங்கல் விலையையும், டீசல் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையையும், நிலக்கரி சரக்குக் கட்டண வீதங்களையும் மத்திய அரசு அடிக்கடி

அதிகரித்ததானது, மாநிலங்களுக்கு இக்கட்டானதொரு நிலையை உருவாக்கியுள்ளது. ஏழை எளிய மக்களை காப்பதே எப்போதும் இவ்வரசின் தலையாய கடமையாக இருந்து வந்துள்ளது. மத்திய அரசு, அரிசியின் வழங்கல் விலையை அதிகரித்தபோது, அரிசியின் விலை வீதங்களைத் திருத்துவதைத் தவிர மாநில அரசிற்கு வேறு வழியில்லாமற் போயிற்று. பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப் படும் அரிசியின் விலை வீதங்களைத் திருத்தியமைத்த பிறகும், நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் அரிசி விலை மிகவும் குறைவாக உள்ளது. பொது விநியோக ஏற்பாட்டு முறையானது, விரிவாக்கப்பட்டு இத்திட்டத்தின் பயன் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மக்களின் நீண்ட காலக் குறைகள், இத் திட்டத்தினால் களையப்பட்டுள்ளன. விலையை நிலைப் படுத்துவதற்கான இன்னொரு நடவடிக்கையாக, இவ்வரசு, 1993-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாளிலிருந்து ஏக போகக் கொள்முதலை நீக்கி, நெல் மற்றும் அரிசியை தடையின்றி எடுத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளது. அதே சமயத்தில், உறுதி செய்யப்பட்ட ஆதரவிலை உழவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், இணைக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் சீரான விலையில் அரிசி கிடைக்க இவை பெரிதும் உதவியுள்ளன.

19. புதிய பொருளாதாரக் கொள்கை கொண்டுவரப் பட்ட நிலையில், ஏழை எளியோர் மற்றும் ஒடுக்கப்பட் டோரைப் பாதுகாப்பதற்காக, விரிவான முனைப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்திய மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும். ஏழை எளியோரின் வாழ்க்கைத் தாத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை அறிந்துள்ள இவ்வரசு, இதனைப் போக்க விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த விரிவான திட்ட ஏற்பாட்டின் கீழ், உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்க சுகாதார வசதி, மருந்துப் பொருள்கள், பொதுவான தொடக்கக் கல்வியைப் பெற சிறப்பான அடிப்படை வசதி கள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏழை எளியோ ருக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல், அடிப்படைக் குடிநீர் வசதி, வீடு வசதியற்றோருக்கு வீட்டு வசதி மற்றும் இருப்பிட வசதி செய்து கொடுத்தல், தெரிந்தெடுக்கப்பட்ட நலிந்த பிரிவினர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் ஆகியவற் றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூக நலப் பிரிவின் செலவினம், தேசிய சராசரி அளவிற்கும் மேல் கணிசமாக உயர்ந்துள்ளது. ஏழை எளியோருக்கு குறைந்தளவு வாழ்க்கைத் தரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பது தமிழக அரசின் முக்கிய நோக்கமாகும். நிதி இடர்பாடுகள் நிலவி வந்துள்ளபோதிலும், ஏழை எளியோர்

1994 மார்ச் 17]

நலனுக்காக ஒதுக்கப்படும் தொகைகள், குறைக்காமல் அதிகரிக்கப்படுவதை இவ்வரசு உறுதிப்படுத்தியுள்ளது. பெருமளவிலான பொருளாதார மாற்றங்களினால் ஏற்படக் கூடிய மோசமான பாதிப்புகளிலிருந்து ஏழை எளியோர் பெரும்பாலானோரின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

20, குழந்தை நலனுக்காக விரிவான திட்டம் வகுத்த முதல் மாநிலம் தமிழ் நாடாகும். முதலமைச்சர் அவர்கள், 1993-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கி வைத்த, ''டாக்டர் .ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டம்.'', குழந்தைகளின் ஒட்டுமொத்த நலனைக் கருத்திற்கொண்டு, ஆழ்ந்தாராய்ந்து வகுக்கப்பட்ட ஒரு முழுமையான திட்டமாகும். பல்வேறு திட்டங்களின் கீழ் பல துறைகளின் கூட்டு இடையீடுகள் ஒருங்கிணைந்த ஒரு திட்டமாகும். குறிப்பிட்ட இலக்கைச் சுட்டிக்காட்டி இவ்விலக்குகளை எய்த, மக்களை ஒருங்கு திரட்டுவதே இதன் நோக்கமாகும். குழந்தைகளின் உய்வு என்ற நிலையைக் கடந்து அவர்களின் திடகாத்திரமான வளர்ச்சி, மேம்பாட்டை நோக்கி தமிழ்நாடு பீடுநடை போடுகிறது. புதிய குழந்தை மேம்பாட்டுத் திட்டம் யூனிசெஃப், உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பாராட்டு தலைப் பெற்றுள்ளது. அமைதியின் தூதுவர் அன்னை தெரசா அவர்கள், பெண் குழந்தை, மகளிர், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரின் நலனுக்காக இம்மாநில அரசு ஆற்றியுள்ள திறமையான பணிக்காக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைப் பாராட்டியுள்ளார். மேலும், அவர்கள் இருவருமே ஒரே நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகவும், ஒரே உன்னத இலட்சியத்தை எய்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். தொட்டில் குழந்தை '' திட்டத்திற்கு தன் மகிழ்ச்சியைத் தெரிவித்த அவர் இம்மாநிலத்தின் பெண் குழந்தைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்று பாராட்டியுள்ளார். புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் 6 மாதம் முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாநிலம் முழுவதற்கும் 1994-ஆம் ஆண்டில் நீட்டிக்கப்படும்.

21. தமிழ்நாடு, குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் சிறப்பாக முன்னேறியுள்ளது. பிறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 21 இறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 9 என்னும் தேசிய இலக்கை கி.பி. 2000-ஆம் ஆண்டுக்குள் அடையவேண்டும் என்று நிர்ண

யிக்கப்பட்டிருக்க, இம்மாநிலத்தில் 1992-ஆம் ஆண்டிலேயே பிறப்புவீதம் ஆயிரத்திற்கு 20ஆகவும் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 6.8 ஆகவும் குறைந்திருப்பது மன நிறைவளிப்பதாக உள்ளது. மீண்டும், குழந்தை இறப்பு வீதம் கி.பி. 2000--க்குள் ஆயிரம் பிறப்புகளுக்கு 60 ஆக குறைக்கப்பட வேண்டும் என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, தமிழ்நாடு 1992-ஆம் ஆண்டிலேயே இவ்வீதத்தை ஆயிரத்திற்கு 48 ஆக குறைத்துள்ளது. சுருக்கமாக சொல்வ-தானால் கி.பி. 2000-ஆம் ஆண்டு வாக்கில் எய்தப்பட வேண்டிய தேசிய இலக்கை தமிழ்நாடு ஏற்கனவே எஞ்சி விட்டது. நிகர பிறப்பு விகிதம் ஒன்றாக குறைக்கப்-பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் கிடைத்த வெற்றியும் சுகாதார தரங்களில் ஏற்பட்ட முன்னேற்றமும் உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். இத்தகைய குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியதன் மூலம் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்குச் சிறந்தொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. மகளிர், குழந்தைகளுக்காக சுகாதார முகாம் நடத்தும் புதிய திட்டத்தின் கீழ், இதுவரை 1,315 சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்கள் குறிப்பாக கிராமப் பகுதிகளில் மகளிர், குழந்தைகளின் நோய்க்கான காரணங்களை அறிவதிலும், சிகிச்சையளிப்பதிலும் குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அனைத்து துணைப் பணிகளுக்கும் வகை செய்ததன்மூலம் அவை தரமுள்ளவையாக மேம்படுத்தப் பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு தனி முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

22. தேசிய இலக்கிற்கான காலக் கெடுவிற்கு முன்னதாக, 1998-ஆம் ஆண்டிற்குள்ளாகவே அனைவருக்கும் கல்வி'' என்ற இலக்கை எய்துவதற்கான திட்டத்தை இவ்வரசு வகுத்துள்ளது. இத்திட்டம் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதையும் இடையில் படிப்பை விட்டுவிடாமல் எட்டாம் வகுப்பு வரை அனைவரும் கல்வியைத் தொடர வேண்டும் என்பதையும் உறுதி செய்ய விழைவதால், இது ஒரு பெரும் பொறுப்பான பணியாகும். இளம் குழந்தைகளின் நலன், அனைவருக்கும் தொடக்கக் கல்வி, படிப்பறிவின்மையைக் குறைத்தல்,, கல்வியைத் தொடருவதற்கு வகைசெய்தல் போன்ற பணிகளை விரிவுபடுத்தி மேம்படுத்தும் விரிவான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இம்மகத்தான சமூக நலத்திட்டத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வேலையற்ற இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்விளைஞர்கள், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட குழந்தைகளுக்கு வகுப்புகளை நடத்தும் முக்கியப் பணிகளில் ஈடுபடுவர். மேலும் குடியினால் விளையும் கேடுகளை மக்களிடையே பரப்பும்

1994 மார்ச் 17]

பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையில், அறிவியல் நகரம் ஒன்று அமைக்கும் புதிய திட்டமொன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் செயல்படுகிற பல்வேறு அறிவியல் நிறுவனங்கள், பல பொதுவான திட்டங்களைச் செயற்படுத்தும் பணியில் ஒன்றாக ஈடுபடுத்தப்படும். அறிவியல் கருத்துக்களை கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், அறிவியல் துறையில் ஆராய்ச்சிப் பணியைப் பெருக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும். அறிவியல் நகர அதிகாரி ஒருவர், இத்திட்டத்தை மேற்கொள்வார். உயர்கல்வியில் சிறந்த ஒருங்கிணைப்பு செயல்பாட்டுக்கு உறுதி செய்ய, முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களினால், 1993 மார்ச் திங்களில் மாநில உயர்கல்வி மன்றம் தொடங்கப்பட்டது.

23. ஏழை மக்களுக்கு இலவச சேலைகள், வேட்டிகள், வழங்கும் திட்டம், ஏழைகளின் நலனைக் காப்பதுடன். கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு, இரு நோக்கங்களையும் எய்தியுள்ளது. நிதி இடர்பாடுகள் இருந்தபோதிலும், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு, 62,99 இலட்சம் மகளிருக்கு இலவச சேலைகளும், 62,67 இலட்சம் ஆடவருக்கு இலவச வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன,

24. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சம், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சியேயாகும். ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கான சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. சமூக நீதிக்காகப் பாடுபட்ட அஞ்சாநெஞ்சம் கொண்ட டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நினைவாக சென்னையில், பொருத்தமான நினைவகம் ஒன்று கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தொடக்கத்தில் இவ்வரங்கம் கட்ட ரூ. 1 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த நினைவகத்திற்கான விரிவான திட்ட வரைபடங்கள், வடிவமைப்புகள் முதலியன தற்போது ரூ. 5 கோடி செலவிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் பெயரில் புதிய பேருந்து போக்குவரத்துக் கழகமொன்று தொடங்கப்பட்டுள்ளது. கோயம்பத்தூர், பெரியார் மாவட்டங்களில், ஆதி திராவிட வகுப்பினரிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு இரு பெரும் தொழிற்பேட்டைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பின்னலாடைகள் தயாரிப்பதற்காக மேற்சொன்ன தொழிற்பேட்டைகளில் 200 பிரிவுகள் அமைக்கப்படும் இப்பெருந்திட்டம் ஆதிதிராவிடர், பழங்குடியினரிடையே, தற்சார்புடைய தொழில் முனைவோரின் புதிய தலைமுறையினரை உருவாக்கும்,

[1994 மார்ச் 17

25. பண்டைய தமிழ்ப் பண்பாட்டுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் புகழ்பெற்ற தஞ்சை மாநகரில் 1995 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்த முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இம்மாநாடு, தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டில் கடைசியாக நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பும் கலை முக்கியத்துவமும் வாய்ந்த தஞ்சை மாநகர், தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மிகச் சிறப்பாகவும் நினைவு கூரத் தக்க வகையிலும் இம்மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

26. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் முயற்சியாலும், உறுதியாலும் சென்னையில் புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ரூ. 40 கோடி செலவில், மிகக் குறுகிய கால அளவில் அதாவது ஏழரைத் திங்கள் கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது என்பதை அவை உறுப்பினர்கள் அறிவர். ஒளிர்கிற பிரம்மாண்டமான இவ்விளையாட்டரங்கம், 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பன்னாட்டு அழைப்பு தடகளப் போட்டிகளும் 33 ஆம் திறந்த வெளி தேசிய தடகளப் போட்டி விளையாட்டுகளும் நடைபெறும் களமாக அமைந்தது. இத்தடகளப் போட்டியில் 31 நாடுகள் பங்கேற்றன. இப்போட்டியில் பங்கேற்ற 91 பன்னாட்டு தடகள வீரர்களும் 900 ஏனைய விளையாட்டு வீரார்களும் வருகை புரிந்தனர். விளையாட்டுகளுக்கு இவ்வரசு அளித்தது போன்று முன் எப்போதுமே இத்தனை முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அண்மையில் புனேயில் நடைபெற்ற தேசிய விளையாட்டுகளில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகித்துள்ளது என்பது வருங்காலத்திற்கு ஒரு நற்சகுனமாக அமைந்துள்ளது 1995 டிசம்பர் திங்களில் சென்னையில் தெற்கு ஆசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. விளையாட்டுகள் நடத்துவதற்கு இயலும்வகையில் போட்டி விளையாட்டுவசதிகளையும் ஏனைய அடிப்படை வசதிகளையும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. பெருமைக்குரிய தெற்கு ஆசிய விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக இத்திட்டம் தக்க சமயத்தில் செயற்படுத்தப்படும்.

27. மிகச் சிறந்த நிருவாகச் செயல்பாட்டிற்கு இவ்வரசு, அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசுத்துறைகள் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடு அநேக பரிசுகளை ஈட்டித்தந்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பாராட்டத்தக்க பணியை நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். அவை 1992-93 ஆம் ஆண்டிலும் 1993-94 ஆம் ஆண்டிலும் பரிசுகளை வென்றுள்ளன. இவை பல்வேறு சாதனைகளுக்கான தேசிய அளவிலான 7 பரிசுகளில் 5 பரிசுகளைப் பெற்றுள்ளன, சமூக நல்த்திட்டத்தின் கீழ், உடல் ஊன முற்றோருக்கும் மகளிருக்கும் வேலை வாய்ப்பளித்தற்காகவும்

1994 மார்ச் 17]

குழந்தைகள் நலப்பணிகளை மேற்கொண்டதற்காகவும் தமிழ்நாடு 22 பரிசுகளை வென்றுள்ளது. வேளாண்மை விரிவாக்கப் பணியிலும், உயிரினக் கழிவு உரங்கள் தயாரிப்புப் பணியிலும் மிகச் சிறந்த சாதனை புரிந்ததற்காக மத்திய அரசும், தேசிய உற்பத்திப் பணிக்குழுவும் அளித்த தகுதிச் சான்றிதழ்களை வேளாண்மைத் துறை பெற்றுள்ளது கிரானைட் கற்கள் ஏற்றுமதிக்காக தமிழ்நாடு கனிமநிறுவனம், சிறப்பு ஏற்றுமதிப்பரிசு ஒன்றைப் பெற்றுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனைகள் அனைத்து வகையிலும் சிறந்து விளங்கச் செய்யவும், அவை தேசிய அளவில் மேன்மேலும் பல வெற்றி வாகைகளைச் சூடும் வகையிலும் அவற்றை ஊக்குவிப்பதுமே இவ்வரசின் குறிக்கோளாக இருக்கும்.

28. இவ்வரசு ஏழை எளியோருக்கு பல்வேறு நன்மைகளைச் செய்துள்ளது. இவை, உரியவர்களைச் சென்றடைய வேண்டு மென்பதை உறுதி செய்வதே மிகமுக்கியமானதாகும். மக்களாட்சியில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் இயன்ற விரைவில் பரிசீலிக்கப்பட்டு, சாத்தியமான இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியமானதாகும். 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்தே, முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னையில் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவே மனுக்களைப் பெற்று அனைத்து மாவட்டங்களையும். உள்ளடக்கிய ஒரு திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட தேதிகளில் எண்ணற்ற மக்களுக்கு உதவிகள் வழங்கினார். இரண்டாம் நிலையில் முதலமைச்சர் அவர்கள் மாவட்டத் தலைமையிடங்களுக்குச் சென்று ஏழை எளியோருக்கு நேரடியாகவே உதவிகளை நல்க முடிவு செய்தார். முதலமைச்சர் அவர்கள் இதுவரை, 13 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளார். ரூ. 201 கோடி மதிப்புள்ள பல்வேறு உதவிகள் 3,00,377 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த இந்திட்டம் இவ்வரசின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். பொதுமக்களின் குறைகளை தக்க நேரத்தில் களைவதோடு பயன்கள் உரியவர்களைச் சென்றடைவதை இந்த ஏற்பாடு உறுதிசெய்துள்ளது.

29. அடிப்படை நிலையிலுள்ள ஜனநாயக அமைப்புகள் சரிவர இயங்க வேண்டுமென்பது அரசியலமைப்புச் சட்ட வழிகாட்டிக் கோட்பாடுகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஊராட்சி ஊராட்சி ஒன்றிய நிலைகளில், சிறந்த திறமையான உள்ளாட்சி, அமைப்புகளின் நீண்ட வரலாறு உள்ளது. நாட்டின் பல்வேறு மாநிலங்களிலுள்ள உள்ளாட்சி அமைப்பு குறித்து வழிகாட்டநீக்கு போக்கான அணுகுமுறை பின்பற்றப்படவேண்டியது அவசியமென்று மாநில அரசு எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74 ஆம் திருத்தங்கள் மாநிலங்களில் பல்வேறு நிலைகளிலுள்ள

ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டினை ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை அமைப்பு முறைக்குத் தற்போது வகை செய்துள்ளன 73 மற்றும் 74.ஆம் திருத்தங்களின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய தேவையான சட்டம், சட்டப் பேரவையின் இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படுமென்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

30. இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் குறித்து 1992 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11ஆம் நாளன்று அறிவித்தது. எனினும், 1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தேர்தல்கள் நடத்துவதற்கு உயர்நீதி மன்றம் தடைவிதித்தது. இவ்வழக்குகள் உயர்நீதிமன்றத்தின் ஈராயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு இவ்வரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

31. தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் முக்கியமானதொரு நிலையை எட்டியுள்ளது. மத்திய அரசு அறிவித்த தாராளமயமான கொள்கை நடவடிக்கைகள் ஆகியவற்றின் தாக்கம் மாநிலங்களில் தென்படத் தொடங்கியுள்ளது. இத் தாராளமயமாக்களின் பயன்கள், மாநிலத்தை சென்றடைவதை உறுதி செய்வதுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் தமிழக அரசு உதவி செய்யும். மாநிலத்தின் அமைதியான சீரான வளர்ச்சிக்கு சட்டம் ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிப்பது மிக முக்கியம் என்பதால் இவ்வரசு மிகவும் மன நிறைவளிக்கும் முறையில் சட்டம்—ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிக்கும்.

32.புதிய வளர்ந்துவரும் பெரும் பொருளாதாரக் கூறுகளோடு இத்தனை ஆண்டுகளாக, எதிர்நோக்கி வந்த மிகவும் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் இவ்வரசு ஏழை எளிய மக்களுக்கும், உதவி தேவைப்படுகின்ற நிலையில் உள்ளவர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளித்து வந்துள்ளது. ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு மிகையாக செலவழித்தது. தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான நிதி நிலையை சாமர்த்தியமாகச் சமாளித்தது, சட்டம்-ஒழுங்கு நிலையை மனநிறைவளிக்கத் தக்கவகையில் பேணிக் காத்தது ஆகியவற்றுடன் பெரும் பொருளாதர வளர்ச்சியினால் ஏற்பட்ட முக்கிய பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் அரசு துணிவுடன் சமாளித்துள்ளது. தமிழ்நாடு புதிய திட்டங்கள் திட்டப்பணிகள் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தியதற்சாக உலக வங்கி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் யூனிசெப் போன்ற பல பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

33. இம்மாநிலத்தில் அமைதியும் நல்லிணக்கமும் வழுவின்றி பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய இவ்வரசு மிக கூர்ந்த கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும். தேசிய முதலீடுகளில்,

தனக்குரிய உரிமையான பங்கையும் மாநிலங்களுக்குச் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்களைப் பெறுவதிலும், அதே நேரத்தில் தேசியத் திட்டப் பணிகளில் முழு அளவில் பங்கேற்பதிலும் இவ்வரசு உயரிய முக்கியத்துவம் அளிக்கும்.

34. பலதுறைகளில், துணிவுடனும், மிகுந்த கற்பனைத்திறனுடனும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். வளர்ச்சிக்கும் ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வகைசெய்யும் விரைவான பொருளாதார மேம்பாட்டிற்கு தமிழ்நாடு ஒரு முன் மாதிரியாகத் திகழ்வதை உறுதி செய்ய நாம் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம். இம் மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள், எதிர்காலத்தில் மாநிலத்தை வளம்படையச் செய்வதற்குப் பெரிதும் உதவுமென்று நான் முற்றிலுமாக நம்புகிறேன். இம் மாமன்றத்தில் நீங்கள் முன் வைக்கும் விவாதங்கள் சமநிலையுடையனவாகவும் ஆக்க பூர்வமானவையாகவும் சீரிய நோக்கமுடையனவாகவும் அமையும் எனபதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS